ஆய்வரங்கச் சிறப்பு மலர் - 2014



# திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

## ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2014

தொகுப்பாசிரியர்கள்

**திருமதி. சாந்தி நாவுக்கரசன்**

**திருமதி. தேவகுமாரி ஹரன்**

18.07.2014 - 20.07.2014

சரஸ்வதி மண்டபம் - கொழும்பு 4

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

நூலின் பெயர் :

திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

தொகுப்பாசிரியர்கள் :

திருமதி. சாந்தி நாவுக்கரசன்

திருமதி. தேவகுமாரி ஹரன்

முதற் பதிப்பு : 2014

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,

இலங்கை

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளூமென்டால் வீதி, கொழும்பு – 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : viii + 182

பிரதிகள் : 1000

அளவு : 7½ x 9 ¾

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 300.00

Title:

Thiruvathavurarum Saivathiruneriyum

Compiled By :

Mrs. Shanthi Navukarasan

Mrs. Thevakumary Haran

First Edition : 2014

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No. of Pages : viii + 182

No. of Copies : 1000

Size : 7½ x 9 ¾

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 300.00

ISBN No : 978-955-9233-35-0

# வெளியீட்டுரை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தமது ஆய்வுப்பிரிவின் செயற்பாடுகளில் ஒன்றாகவும், ஆய்வாளர்கள், பேரறிஞர்கள், மாணவர்கள் ஆகியோரால் பெரிதும் விரும்பப்படும் பயன்மிக்க பணியாகவும் அமைவது வருடாந்த இந்துசமய ஆய்வரங்காகும். இவ்வாய்வரங்கு இந்துசமயம், தமிழிலக்கியம், பண்பாடு ஆகிய கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தலைப்புக்களின் கீழ் 1992 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இவ்வருடமும் **"திருவாதவூரரும் சைவத்திருநெறியும்"** என்னும் தலைப்பில் ஜூலை மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகரது அருட்பனுவல்களான திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்களும் அவற்றில் காணப்படும் பக்தி சுவை, இலக்கிய சுவை, சைவசித்தாந்த, தத்துவக்கருத்துக்கள், மாணிக்கவாசகர்கால சைவநெறி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கட்டுரைகள் இவ்வாய்வரங்கில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவ்வாய்வரங்கு தொடர்பாக **திருவாதவூரரும் சைவத்திருநெறியும்** என்னும் தலைப்பில் சிறப்புமலர் ஒன்று வெளியிடுவதை ஒட்டி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச் சிறப்பு மலரானது பல்வேறு நூல்களிலிருந்து திரட்டப்பட்ட பத்துக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. தக்க அறிஞர்களது படைப்புக்களைக் கொண்ட இந்நூலானது அனைவரும் படித்துப் பயன்பெறுவதற்குரிய நூலாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இவ்வாய்வரங்கு சிறப்புமலர் உருவாக்கம் தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கிய எமது மதிப்பிற்குரிய வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களுக்கும், தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு க. இரகுபரன், ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோருக்கும், இந்நூலின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராக என்னுடன் பணியாற்றிய

சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி தேவகுமாரி ஹரன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

ஆய்வரங்கு வருடந்தோறும் சிறப்பாக அமைய சிறந்த வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி எமக்கு பலமாக இருந்து வரும் பிரதமரும் மற்றும் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமாகிய கௌரவ டி. எம். ஜயரத்தன, பிரதி அமைச்சர் கௌரவ எம். கே. ஏ. டி. எஸ் குணவர்த்தன, செயலாளர் திரு. எம். கே. பி. திஸநாயக்க ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

இவ்வெளியீட்டைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய யுனி ஆர்ட்ஸ் பதிப்பகத்தாருக்கும் அதன் ஊழியர்களுக்கும் எனது நன்றிகள் உரியன.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

# Message from the Secretary

## Ministry of Buddhasasana & Religious Affairs

I have the pleasure in forwarding this message for the publication of the Research articles submitted during the Seminar on "Thiruvathavurarum Saivathiruneriyum" which was held in the year 2014, conducted by the Department of Hindu Religious and Cultural Affairs.

The Department of Hindu Religious and Cultural Affairs comes under the Ministry of Buddhasasana and Religious Affairs has been conducting Annual Research Seminars for more than a decade with the participation of Sri Lankan, Malaysian and Indian Scholars for three days in Colombo. In this Seminar attention will be focused on the theology as revealed in the hymns of Manikkavacakar, mythology and beliefs and practice of Saivism.

The presentations made by these Scholars are revised and edited and published as a book and distributed to schools, libraries and colleges all over the Island. This publication contains the research articles which are very useful to the students and teachers.

I congratulate the Director and the members of Staff of this Department for preserving these publications for the use of future generation as well.

**M.K.B. Dissanayaka,**
Secretary
Ministry of Buddhasasana and Religious Affairs

# Message from the Secretary
## Ministry of Buddhasasana & Religious Affairs

I have the pleasure to be writing this message for the publication of the Research Articles submitted during the Seminar on "Thirukkural and Saivasiddhantham" which was held in the year 2014, organised by the Department of Hindu Religious and Cultural Affairs.

The Department of Hindu Religious and Cultural Affairs coming under the Ministry of Buddhasasana and Religious Affairs has been conducting annual Research Seminars for more than a decade with the participation of Sri Lankan, Malaysian and Indian scholars for three days in Colombo. In this Seminar, attention will be focused on the theology as revealed in the hymns of Thirumular, on mythology and beliefs and practices of Saivism.

The presentations made by these scholars are revised and edited and published as a book and distributed to schools, libraries and colleges all over the Island. This publication contains the research articles which are very useful to the students and teachers.

I congratulate the Director and the members of Staff of this Department for preserving these publications for the use of future generation as well.

M.K.B. Dissanayake
Secretary
Ministry of Buddhasasana and Religious Affairs

# பொருளடக்கம்

01. மணிவாசகர் வரலாறு 1
'சித்தாந்த சரபம்' க. கணபதிப்பிள்ளை

02. மாணிக்கவாசகர் காலம் 66
பேராசிரியர் கா. வெள்ளைவாரணன்

03. திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் 83
முரு.பழ. இரத்தினம் செட்டியார்

04. திருவாசகத்தில் இலக்கியச் சுவை 109
முரு.பழ. இரத்தினம் செட்டியார்

05. திருவாசகத்தில் பக்திச்சுவை 119
முரு.பழ. இரத்தினம் செட்டியார்

06. திருவாசக இசை 128
பேராசிரியர்.ஞானாகுலேந்திரன்

07. திருவாசக நிருத்த நாட்டியம் 135
திருவாளர். இசைமணி கா. சங்கரனார்

08. திருவாசக மூலப் பதிப்புக்கள் 142
முனைவர் இரா. சுந்தரமூர்த்தி

09. திருவாசக உரை வரலாறு 146
முனைவர் இரா. சுந்தரமூர்த்தி

10 திருக்கோவையார் 160
பேராசிரியர்.ஆ. சிவலிங்கனார்



# மணிவாசகர் வரலாறு

## - ஓர் அகச்சான்றுக் கண்ணோட்டம்

'சித்தாந்த சரபம்'
க. கணபதிப்பிள்ளை

### 1. வரலாற்று நூல்களுள் முரண்பாடுகள்

திருவாசகம் சிவநெறிக் கருவூலம். அது அந்நெறி நிற்கும் தமிழ்ப் பெருமக்களுக்குக்கிடைத்த அரிய ஜீவாமிர்தம். மேலும், சிவநெறித் தமிழரன்றிப் புறமதத்தவர் நெஞ்சையும் உருக்கி நிற்பது. புறநெறி நிற்போர் நெஞ்சத்தையும் உருக்கி நின்றமைக்குப் பிறமொழியினரும் புறமதத்தவரும் மேலை நாட்ட வருமான ஜி.யூ. போப் என்னும் துறவியாரின் வரலாற்றுப் பகுதியே சான்றாகும்.

திருவாசகத்தை நமக்கு அருள்நோக்கோடு வழங்கியவர் மணிவாசகப் பெருமானே. அவர் ஆளுடை அடிகள் என்றும் சிறப்பிக்கப் பெற்றவர். அவருக்கு மணிவாசகர் என்னும் பெயர் பின்னாள் தோன்றிய சிறப்புப் பெயரன்றி பெற்றோர் இட்ட பிள்ளைத்திருநாமமன்று. பெயர் தெளிவுறத்தெரியாத போதும் அவரது வரலாற்றையும் சிறப்பையும் சொல்லும் நூல்கள் மற்றைய சிவநெறியாளர்கட்கு உள்ளனவற்றைக் காட்டிலும் அதிகமே. அதற்கு அவர் வழங்கிய திருவாசகத் தேனமுதமே காரணம் எனலாம்.

புராணங்கள் என்ற நிரலில் தேவார முதலிகள் மூவருக்கும் பெரிய புராணம் ஒன்றே இருக்கை கொடுத்துள்ளது. பெரியபுராணத்தில் அவர் அமராத போதும் புராணங்கள் பல அவரைத் தாங்கிச் சிறப்படைந்துள்ளன. அவற்றுள் ஆலாகிய மான்மியம், ஆதி கைலாசமான்மியம் என்பன வடமொழியில் தோன்றியவை. ஆதி கைலாச மான்மியத்தைச் சாமிநாதமுனிவர் யார்த்தார் என்று பேராசிரியர் மு. அருணாச்சலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். புலியூர் நம்பிகளின் திருவாலவாயுடையார், திரு விளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், கடவுள் மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பெருந்துறைப் புராணம், கடம்பவனப் புராணம், உத்தர கோசமங்கைப் புராணம் என்பன தமிழ்மொழி வரலாற்றுநூல்கள். இவையன்றிதிருவாசகச்சிறப்பு. திருவாசகத் திருவுள்ளக்கிடை என்பவற்றோடு பின்னர்த் தோன்றிய உரை நூல்களும் பலவாம்.

புராணங்கள் பல இருப்பினும் பலராலும் படிக்கப்படும் சிறப்புக்குரியவை திருவிளையாடற் புராணங்கள் இரண்டும் திருவாதவூரடிகள்புராணம் ஒன்றுமாம். ஆனால் வரலாறு கூறுவதில் அவற்றுள் ஒருமைப்பாடும் முரண்பாடும் முளைத்திருப்பது உண்மை வரலாற்றை மறைப்பதாகும். மணிவாசகர் தோன்றிய ஊர், அவரது பிள்ளைத்திருநாமம், அமைச்சரானமை, குதிரை வாங்கச் சென்றது, உபதேசம் பெற்றமை, நரிப்பரிகள் வந்தமை, வைகைப் பெருக்கால் சொக்கநாதன் மண்சுமந்து அடிபட்டது, பின்னர் மணிவாசகர் துறவுபூண்டு தலயாத்திரை செய்தமை, புத்தரை எதிர்முகவழக்கில் வென்றமை, தில்லைச் சோதியுட் கலந்தமை என்பவற்றில் அவற்றுக்கிடையில் ஒற்றுமை காணப் பட்டாலும் ஏனைய இடைநிகழ்வுகளில் முரண்பாடே பெரிதும் காணப்படுகின்றது. மேலும், முன்னையோர் இருவரும் கூறாத புதிய நிகழ்வொன்றையும் கடவுள் மாமுனிவர் தந்துள்ளார். மணிவாசகர் தில்லைக்குப் புறத்தே இலைக்குடிசையில் தங்கியிருந்த நாளொன்றில் கூத்தப்பிரான் அந்தணர் வடிவில் தோன்றிக் கோவை ஒன்றையும் பாடச்செய்து அதனோடு திருவாசகத்தையும் எழுதிச் சென்று அவற்றைக் கோயிற்படியில் வைத்தார் என்பதே அப்புதிய சம்பவமாகும். இந்த நிலையில் கடவுள் மாமுனிவர் காலத்தாற் பிந்தியவர் என்பதும் சிந்தனைக்குரியது. முரண்படும் இடைநிகழ்ச்சிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. முதல் வாதவூர் பற்றியது. சங்கப்புலவராகிய கபிலருக்கும் ஊர் வாதவூரே என்பதும் வாயு தேவன் வணங்கிய காரணத்தால் ஊர் வாதவூராயிற்று. என்பதும், மானமங்கலமே அவர் வாழ்ந்த அந்தணச்சேரி என்பதும் புலியூர் நம்பிகள் தரும் குறிப்புக்கள். இவற்றுள் வாதவூர் தருக்கம் வல்ல அறிஞர் பலர் வாழ்ந்த பதியாதலின் அதற்கு அப்பெயராயிற்று என்பது இன்றுள்ளார் காட்டும் காரணம். ஆனால் இக்குறிப்புக்கள் பரஞ்சோதியார் கடவுள் மாமுனிவர் புராணங்களில் இடம் பெறவில்லை.

2. காலத்தால் முற்பட்டவர் புலியூர் நம்பிகள். அவர் வாழ்ந்த காலம் கி.பி 1228 வரை என்பர் கால ஆய்வாளர். அதனால் 12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திலும் அவர் வாழ்ந்திருக்கலாம் என்பது முடிபு. மணிவாசகரோடு தொடர்பு கொண்ட பாண்டியன் பெயரைக் காலத்தால் முந்திய நம்பிகளே குறிப்பிடாதபோது காலத்தாற் பிந்திய பரஞ்சோதியார் அரிமர்த்தன பாண்டியன் என்கிறார். இது வியப்புக்குரியது. மேலும் அப்பாண்டியன் தன் மகன் ஜகந்நாதனுக்கு முடிசூட்டிய பின் இறந்தான் என்பது மணி

வாசகர் வரலாற்றோடு இணையாத பகுதி. இது வேண்டப்படாத ஒன்றாம். கடவுள் மாமுனி வரும் பாண்டியன் பெயரைக் கூறாமை நம்பிகள் கருத்தோடு இணைகிறது.

3. மணிவாசகர் குலம் ஆமாத்திய குலம் என்பர் நம்பிகள். கடவுள் மாமுனிவருக்கும் அது உடன் பாடே. ஆனால் பரஞ்சோதியார் குலத்தைக் குறிப்பிடவில்லை.

4. சிவகணத்தவருள் ஒருவரே வாதவூரராக வந்து அவதரித்தார் என்பர் புலியூரார். இது ஏனைய இருவராலும் சொல்லப்படாதது "குட முழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார்" என்னும் நாவேந்தர் வாக்கினால் இது தோன்றியிருக்கலாம் போலும்.

5. ஓர் இலட்சம் குதிரைகள் பாண்டியனுக்குத் தேவைப்பட்டன எனக்கூறியுள்ளார் நம்பிகள். இது உயர்வு நவிற்சியே. உண்மை நவிற்சி யன்று.

6. ஏனைய இருவரும் சொல்லாதபோது, குதிரைகள் வாங்குவதற்குத் தேவையான பொன் நாற்பத் தொன்பது கோடி என்பர் கடவுள் மாமுனிவர். பொன்னைப் பெறுவோர் ஐம்பது அல்லது அறுபதுகோடி என ஒரு மட்டளவில் பெறுவதே முறையாகும். மேலும், குதிரை விலை தீர்மானித்த பின்னரே உண்மை விலை தெரியவரும். அதனைத் தெரியுமுன் நாற்பத் தொன்பது கோடி எனக் கடவுள் மாமுனிவர் நுனித்துச் சொல்லியுள்ளார். காரணம் யாதோ? தெரிந்திலது.

குதிரைகள் வாங்குவதற்குரிய பொன்னை எடுத்துக் கொண்டு பின்னர் ஒப்பமிட்டார் என்பர் புலியூரார். அது ஏற்புடையதே. இந்த நிலையில் பரஞ்சோதியார் எவ்வளவு பொன் எடுத்தார் என்பதைக் கூடக்குறிப்பிடவில்லையே

7. குதிரைகள் வாங்கச் சென்றபோது வாதவூரர் முதற்கண் ஆலவாயை அடைந்து வழிபட்டார் என்பது மூவர்க்கும் உடன்பாடாம். அதில் முதற்கண் விநாயகப்பெருமானை வழிபட்டார் என்பது கடவுள் மாமுனிவர் தவிர்ந்த ஏனைய இருவரதும் கூற்றாகும். ஆனால் திருவாச கத்தில் 'குமரன் தன் தாதைக்கே', 'நல் வேலன் தாதை' என முருகனை ஈர் இடங்களிலாவது நினைவுகூர்ந்த மணிவாசகர் விநாயப் பெரு மானை ஓர் இடத்திலாவது சிந்தியாமை சிந்தனைக்குரியதே. அதனால் விநாயக வணக்கம் அவர் காலத்தில் தோன்றவில்லையா? என்பது ஆய்வு வினா. தோன்றாவிட்டால் மணிவாசகர் விநாயக வணக்க ஆரம்பத்துக்கு முற்பட்டவர் என்பது முடிவு. தேவாரம் பாடிய மூவர்காலத்தும் விநாய வழிபாடு இடம்பெறுவதை அவர் தம் பாடல்கள் வெளிப்படுத்துவது கால ஆய்வுக்கு வழிதருவதாகும். இவ்வாறன்றி மணிவாசகர் விநாயகப் பெருமானையும் சிந்தித்திருக்கலாம். அந்த சிந்தனைப் பகுதிகள் மறைந்த திருவாச கங்களோடு மறைந்திருக்கலாம் என்பதே தேற்றமாகும்.

8. வாதவூரர் ஆலவாயை வணங்கிய பின்னர் இறைவனிடம் "யான் கொண்டுவந்த பொருள் முழுவதும் சிவபரம்பொருளாகிய உனக்கும் உன்னடியார்க்குமே உடைமையாதல் வேண்டும்" என விண்ணப்பித்தார் என்பர் பரஞ்சோதியார். இது மணிவாசகரைப் பொறுப் பற்ற நம்பிக்கைத் துரோகஞ் செய்யும் முதன் மந்திரியாராகக் காட்டுகின்றது.

9. ஆலவாயை வழிபட்ட பின்பு திருக்கானப் பேரூரை வாதவூரர் வழிபட்டார் என்கிறார் புலியூர் நம்பிகள். கானப்பேரூர் மதுரை

மாவட்டத்தைச் சேர்ந்தது. ஆயினும், பூவணம் போலும் பாண்டிநாட்டுத் தலங்கள் பல திருவாச கத்தில் காட்சி தரும்போது கானப் பேரூர் இடம் பெறாமை அவர் கருத்தைச் சிந்திக்கவைக்கிறது.

10. பெருந்துறையை நெருங்கி வரவே வாத வூரருக்கு உள்ளத்தில் உவகை வெள்ளம் நிறைந்தது; கைகள் உச்சிமேற் குவிந்தன; கண்களில் நீர் துளித்தது எனக் கடவுள் மாமுனிவர் தவிர்ந்த ஏனைய இருவரும் கூறுவர்; இக்கருத்து பெரியபுராணத்தில் வரும் கண்ணப்பர், குடுமித்தேவர் எழுந்தருளிய குன்றில் ஏறிச் சென்றபோது அவரது உடற்பாரம் குறைந்து குறைந்து போனது என்னும் நினைப்பினால் அவ்விரு நூலாசிரியர்க்கும் தோன்றியது போலும். ஆனால் கடவுள் மாமுனிவர்க்கு இது உடன்பாடன்று.

வாதவூரர் சோலைக்குப் பக்கலாகச் சென்ற போது வேதாகம ஒலி கேட்டதென்றும் அவ் வொலி யாது? என்பதை அறிந்துவருமாறு ஏவலாளர்களை ஏவினார் என்றும் அவர்கள் சென்றபோது குருந்த மரநிழலில் ஞானாசாரியார் ஒருவரும் அன்பர் கூட்டமும் இருப்பதைக்கண்டு வந்து கூற, அது கேட்ட வாதவூரர் அங்கு சென்று அகத்தே வழிபட்டும் புறத்தே வழிபடாதார் போல நின்றார் என்றும் கூறுவர். இதுவே பெரிதும் உலகநடைக்குப் பொருந்துகிறது என்பதைச் சிந்தையிற் கொள்க.

11. வாதவூரர் ஞானாசாரியரைத் தரிசிப்பதற்கு முன்னமே கோயிலை அடைந்தார் என்றும் பின்பு தம்மோடு வந்தவர்களுக்கு ஆடி மாதத்திற் குதிரைகள் வரமாட்டா; ஆவணி மாதத்தில் அவை வரும் எனப் பாண்டியனுக்குக் கூறுமாறு பணித்தார் என்றும் நம்பிகள் காட்டுவர்; ஆனால் வாதவூரடிகள் புராணமோ உபதேசம் பெற்ற பின்பே ஞானாசாரியர் திருவுள்ளப் பாங்கின்படி ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என வாதவூரார் கூறியதாகச் சொல்லும். இதுவே சிந்தனைக்குப் பொருந்துவதாகும். இக்கருத்து மறைமலையடிகளுக்கும் உடன்பாடாம்.

12. திருவாதவூரடிகள் புராணத்தில் வாதவூரர் பரமாசாரியருக்குரிய வழிபாடு, பூசனை என்ப வற்றைச் செய்த பின்னரே சைவ சித்தாந்த உபதேசமும் திருவடித் தீட்சையும் இடம் பெறுகின்றன. ஆனால், நம்பிபுராணத்தில் பரமாசாரியர் வாதவூரரைக் கண்டவுடனேயே கேசாதிபாதமாக மந்திரத்தோடு நோக்கி நயன தீட்சைசெய்தார்என்றுபேசப்படுகின்றது. இருவர் புராணங்களையும் ஒப்புநோக்கும்போது நம்பிகள் புராணமே பகுத்தறிவுக்குப் பொருந்துமாறு காண்க. இதில் நம்பிகள் கூறும் நோக்கு, பாவகம், பரிசம் என்பன பொருந்துவனவே. இளமையிலேயே 'கல்வி என்னும் பல்கடற் பிழைத்த வாதவூரருக்குச் சைவசித்தாந்தம் புதிய ஞானமாக நிற்க முடியாதன்றோ? மேலும் மணிவாசகருக்குப் பின் தோன்றிய சிவஞானபோதம் என்னும் நூல் பரமாசாரியர் கரத்தில் இருந்தமையும் புனைந்துரையே.

13. குருந்தின் கீழ் உபதேசம் செய்து பாசநீக்கம் செய்தபின் வாதவூரர் நெக்குநெக்குருகி அழுத பொழுதிலே கலைவாணி அவரது நாவில் தங்கியதும் திருவாசகம் பாக்களாக முகிழ்த்தது என்றும் அது கேட்ட பரமாசாரியர் அவருக்கு 'மணிவாசகர்' என்னும் சிறப்புப் பெயரை அப்போது சூட்டினார் என்றும் பரஞ்சோதி முனிவர் புகல்வர். ஆனால் அப்போது அவர் பாடிய திருவாசகங்கள் எவை என்பதை அவர் குறிப்பிடவில்லை. இந்த நிலையில், புலியூர் நம்பிகள் அவர் பாடிய பதிகங்களைக் குறித் துள்ளார். அவை அவ்விடத்துக்குப் பொருந்து

வனவா? என்பதைப் பதிகத் தலங்கள் என்னும் தலைப்பில் ஆராய்ந்துள்ளோம். அதனை அங்கே காண்க.

14. உபதேசம் செய்த பின் ஞானாசாரியர் வாத வூரரைத் திருப்பெருந்துறையில் தங்கியிருக்கு மாறு பணித்து அன்றே மறைந்தருளினார் என நம்பிகளும் பரஞ் சோதியாரும் பேசுவர். கடவுள் மாமுனிவரோ பாண்டியனது கடிதம் வந்த போதும் ஞானாரியர் பெருந்துறையில் இருந்தாரென்றும் சொக்க நாதர் மண்சுமந்து அடிபட்ட பின் வாதவூரர் பாண்டியன் தொடர்பை நீக்கி வந்த போதும் அங்கிருந்தார் என்றும் காட்டுவர். இதுவே சித்தத்துக்குப் பொருந்துவ தாகும். இவற்றில் திருவிளையாடற் புராணங் களை வரவேற்கிறார் மறைமலையடிகள். வாத வூரரை ஆட்கொண்ட ஆசிரியன் இந் நிலவுல கத்து மாந்தருள் ஒருவனாயின் அவன் பல நாள் பெருந்துறையில் தங்கினான் என்றால் பொருத்தமே. ஆங்ஙனம் எழுந்தருளிய குரவ னோ இறைவனாதலின் கடவுள் மாமுனிவர் கூற்றுப் பொருந்தாது என மறுக்கின்றார் மறைமலையார்; இந்நிலையில் ஞானாசாரியார் வடிவில் தோன்றியவன் இறைவன் என்ப தையும் ஒரே நேரத்தில் வேண்டிய வடிவங் களை அவனாற் கொள்ளமுடியும் என்பதையும் வாதவூரர் மீளவும் பெருந்துறைக்கு வந்த போது ஞானாசாரிய வடிவத்தை அவனாற் காட்ட இயலும் என்பதையும் மறைமலை யடிகள் சிந்தித்திலர் போலும். மேலும் உபதேசம் நிகழ்ந்ததும் இறைவன் தொழும்பர் கூட்டத் துடன் அற்றைத்தினத்தே மறைந்திருந்தால் வாதவூரர் எப்பாடுபடுவார் என்பதையும் பாண்டி யனது திருமுகத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஞானாசாரியருக்கே உரியது என்பதையும் அடிகளார் கருத்திற் கொண்டிலர் என்பது தெளிவு.

15. பரமாசாரியர் கட்டளைப்படியே வாதவூரர் பொன் முழுவதையும் சிவப்பணிக்கு வழங்கினார் என்பர் கடவுள் மாமுனிவர். நம்பிகள், பரமா சாரியர் மறைந்த பின் தம் எண்ணப்படியே நற்பணிக்குச் செலவு செய்தார் என்கிறார். இது வாதவூரர் மீது பழிசுமத்துவதாகும்.

16. பாண்டியனது கடிதம் கண்ட பின் வாதவூரர் செய்வது அறியாது பரமாசாரியர்க்கு முறை யிட்டார் எனக் கடவுள் மாமுனிவர் கூற, பாண்டி யனது திருமுகம் கண்டு கலங்கிக் கோயிலுட் சென்று விடியலில் திருப்பள்ளியெழுச்சி பாட 'குதிரைகள் ஐந்தாறு நாள்களில் வரும் என்று பாண்டியனுக்குக் கடிதம் எழுது' என அசரீரி கேட்டதாகவும் பின்னர் அவ்வாறே பாண்டியனுக்குக் கடிதம் எழுதிவிட்டு வாதவூரர் பெருந்துறையிலேயே தங்கியிருந்தார். என்றும் நம்பிகள் கூறுவர். பரஞ்சோதியாரும் அசரீரியை யே காட்டுகின்றார். இதில் கடிதம் கண்டதும் அரசனது ஆணைக்கு அஞ்சி உடனே சென்று முறையீடு செய்யாது உறங்கிய பின் விழித் தெழுந்து புலரிக்காலத்தில் முறையிட்டார் என்பது சிந்தனைக்குப் பொருந்துமாறில்லை. இது பள்ளியெழுச்சி பாடியதற்குக் காரணம் காட்டியவாறாம். அவ்வாறாயின் ஆழ்வார்களும் பள்ளி யெழுச்சிபாடியுள்ளார்களே! அதற்கு யாதோ காரணம், நிற்க. பாண்டியனுக்குக் கடிதம் விடுத்த பின் பற்று நீங்கிய வாதவூரர் தொடர்ந்து பெருந் துறையில் தங்கினார் எனக் கடவுள் மாமுனிவர் கூறுவது அவர் பாண்டியனைப் பின்னர் மதிக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. இது பொருந்தும் கருத்தாகும்.

17. பாண்டியனுக்குக் குதிரைகள் வரும் எனக் கடிதம் எழுதிய பின் வாதவூரர் ஆலயத்துள் இரவு உறங்கியபோது பெருமான் கனவில்

தோன்றி 'பாண்டியனது ஏவலாளர் பெருந் துறைக்கு வருமுன் நீயே சென்று பாண்டியன் மகிழுமாறு உரைக்குக எனக் கூறி மறைந்தார் என்பதும் நம்பிகளின் புதிய கூற்று.

18. இறைவன் கனவிற் கூறியவாறே வாதவூரர் மதுரைக்குச் சென்றார் எனவும் அங்கே அவர் பாண்டியனுக்கு மராட்டகம், காம்போசம், ஆரியம், சைந்தவம் என்னும் நாடுகளின் குதிரைகளையே பெரிதும் விலைக்குக் கொண்ட தாகவும் பின்னர் குதிரை இலக்கணங் களையும் வேறு சிறப்புக்களையும் புகன்றார் எனவும் பின்பு ஆலவாயை அடைந்து அது வரை நிகழ்ந்தவற்றைச் சொக்கநாதருக்கு முறையிட 'நீ அஞ்சாதே' என்னும் அசரீரி கேட்ட பின் தம் மனை சென்று பூசையை முடித்து அமுதுண்டார் எனவும் நம்பிகள் காட்டுவர்.

வாதவூரர் ஆலயஞ் செல்லாது தம்மனைக் கேகினார் என்றும் நரிக்குதிரைகள் வந்த பின்னரே பாண்டியன் அசுவநூல் வல்லோர் மூலம் அவற்றின் இலக்கணங்களை அறிந் தான் எனவும் வாதவூரடிகள் புராணம் பேசும். இதில் கடவுள் மாமுனிவர் கருத்தே வலுவுடைத் தாம்.

19. வாதவூரர் பாண்டியனது கடிதங் கண்டு மதுரையை அடைந்து பாண்டியனுக்கு ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என்று சொல்ல, அரசன் மகிழ்ந்து வாதவூரரை அவருடைய இல்லத்துக் குச் செல்லுமாறு விடுத்தபின், அரசன் தனிமையில் இருக்கும் போது மந்திரிகளில் ஒருவன் அரசனை நோக்கி 'நீங்கள் கொடுத்த திரவியங்கள் அனைத்தையும் வாதவூரர் பெருந் துறையில் சிவப்பணிக்கும் அடியார்களுக்குமே செலவு செய்தாரன்றிக் குதிரைகளை வாங்க வில்லை என உண்மை சொல்ல, அரசன் சினந்து ஏவலாளர் சிலரை அங்கு விடுத்துப் பார்த்த போது குதிரைகளில்லை என்பதை அறிந்த அரசன் வாதவூரரைச் சிறையிலிட்டான் என்பர் கடவுள் மாமுனிவர். இது ஆராய்ந்த பின்னரே தண்டனை வழங்கல் வேண்டும் என்னும் அரசநீதியைப் புலப்படுத்துகின்றது. ஆனால் திருவிளையாடற் புராணகாரர் இரு வரும் அவ்வாறு கூறாமை பாண்டியனை இழிவு படுத்துகின்றது.

20. சிறையில் வளைப்பினூடு நின்ற வாதவூரர் துன்பந்தாங்காது சொக்கனை நினைந்து தம் வருத்தம் போக்கும்படி குழைத்த பத்தையும் அருட்பத்தையும் பாடினார் என்பர் நம்பிகள். இது பதிகம் பாடியதற்கான சமயம் கூறியவாறாம். இதன் பொருந்தாமையைப் பதிகத் தலங்கள் என்னும் பின்வரும் கட்டுரையிற் காண்க.

21. குதிரைகள் குறித்தநாளில் வராமையால் பாண்டியன் சினந்து வாதவூரரைத் தண்டி யுங்கள் எனப் பணிக்க, தண்டஞ் செய்வோர் பாரமான கல்லை அவர்மீது ஏற்றியும் கிட்டி கொண்டு கை, கால்களை நெரித்தும் துன்புறுத்திய போது வாதவூரர் துன்பமின்றி அப்பர் சுவாமிகள் போல நின்றார் என்பர் பரஞ்சோதியார். இந் நிகழ்வில் வாதவூரர் அந்தணரானமையின் கடுந்தண்டனை வழங்காது வெயிலில் வட்டத்துள் நிறுத்தினார் என்னும் ஏனைய இருவர்கருத்தே ஏற்புடையதாம்.

22. வாதவூரரது வருத்தங்கண்ட சொக்கன் அதனைப் போக்க

*"ஒழுக்கம் தருமம் தவம் தானம் உறவு*
*வாய்மை பொறை மற்றும்*
*விழுப்ப முள்ள சூத்திரர்வாழ் மிழலைநாட்டு*
*நரியெல்லாம்"*

அழைத்தார் என்றும் அதனால் இன்றும் அவ்வூர் 'நரிக்குடி' என வழங்கப்பெறும் என்றும் நம்பிகள் காட்டுவர். ஆனால் ஏனைய இருவரும் மிழலையைக் குறிப்பிடவில்லை.

23. வாதவூரர் மதுரையிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள வாதவூரில் தமது மனையில் இருக்கும்போது குதிரை கொண்டு வந்த சொக்க நாதர் வாதவூர் வழியாகவே வந்து அவருக்குப் பாதச்சிலம்பொலி காட்டினார் என்பதற்கு

*"வாத வூரினில் வந்தினி தருளிப் பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும்"*

என்னும் பகுதியைச் சான்றாக மறை மலை யடிகள் காட்டுவர். அது தவறு என்பதை மணிவாசகரது வரலாற்றாகச் சான்றில் நிறுவி யுள்ளோம். அதனை அங்கே காண்க.

24. குதிரைகள் வருகின்றன என்று தூதர் கூறி யதை, சிறை வளைப்பினின்றும் நீக்கப் பெற்ற வாதவூரர் சென்று அரசனுக்குச் சொல்ல, அது உண்மைதானா என்பதை அறிவதற்கு, அரசன் தூதரை ஏவிப் பாப்பித்தபோது குதிரைகள் எவ்விடத்தும் வராமையால் பாண்டியன் சினந்து என் பொருளை அழித்தது மன்றி இப்போதும் வாதவூரன் பொய் சொல்லுகின்றான். எனவே, அவனைப்புளியம் வளாரினால் அடியுங்கள் எனப் பாண்டியன் பணித்தான் என்கிறார் புலியூரார். இவற்றுள் வந்த குதிரைகள் வர வில்லை என்பதும் புளியம் வளாரினால் தண்டிக்கப்பட்டதும் கடவுள் மாமுனிவருக்கு உடன்பாடல்ல.

25. தண்டஞ் செய்வோர் தண்டிக்கத் தொடங்கவே, வாதவூரர் சிவபெருமானை நினைந்து அடைக் கலப்பத்தையும் பின்பு சிறையிலிட்டபோது குயிற்பத்தையும் பாடியருளினார் என்றும் குயிற்பத்துப் பாடியதும் குதிரைகள் வந்தன என்றும் கூறுவர் நம்பியார். வேதனைப் படும் ஒருவர் சிறைக்கூடத்துள்ள சோலைக் குயிலையா பார்த்துப்பாடுவார்? மேலும் அவர் பாடும்போது அது திருவாசகம் என்றறிந்து அதனை ஒருவர் எழுதிக் கொண்டாரா? என்பதும் சிந்தனை வினா. எனவே இது பொருந்து மாறில்லை என்பதைப் பதிகத்தலங்கள் என்னும் தலைப்பிற் காட்டியுள்ளோம்.

26. சொக்கநாதர் குதிரை மீது வர அவர் அழகைக் கண்டு மயங்கிய இளமங்கையர் கூற்றாக வேதமொழியர் என்றெடுத்து அன்னைப்பத்தைப் பாடினார் எனவும், பாண்டியன் விலையுயர்ந்த பட்டாடையைக் கொடுப்ப, இறைவன் செண்டினா லேற்றுச் சடாமுடியிற் சூடியபோது மணிவாசகர் பிடித்த பத்தைப் பாடினார் எனவும் நம்பிகள் பேசுவர். இவை பொருந்தாமையைப் பதிக ஆய்விற் காண்க.

27. குதிரைகள் மீளவும் நரிகளானதும் பாண்டியன் கட்டளைப்படி வாதவூரர் சிறையில் வருந்திய போது திருவேசறவைப் பாடியருள, இறைவன் முகில் நாயகர் மூலம் பெருமழையைப் பொழி வித்தார் என்கிறார் நம்பிகள். இதுவும் பொருந்து மாறில்லை.

28. கரை அடைப்பாரில்லாமையால் வருந்திய செம் மணச்செல்வி ஆலவாய் சென்று முறையிட, பெருமானே கூலியாளாய் ஆலய வீதியில் வந்தருளினார் என்று வாதவூரடிகள் புராணம் கூற, அவள் வீட்டு வாயிலிற் பெருமான் தோன்றி னார் என நம்பி புராணம் கூறும்.

29. கூலியாளர் வந்தியிடம் கரையடைக்கு முன்பே பிட்டு வாங்கிச்சென்றார் என்பர் கடவுள் மாமுனிவர்.

ஆனால் நம்பிகளோ கூலியாளராகிய இறைவன் கரையை அடைக்கும்போதும் முதியவள் பிட்ட வித்துக் கொடுத்தவள் என்கிறார்.

30. கரையை அடைக்காது கூலியாளர் கொன்றை நிழலில் துயில்கொண்டமைக்காக தண்டிக்கப் பட்டார் என்று கடவுள் மாமுனிவர் சொல்ல, நம்பிகள் துயில்கொண்டமை செப்பாது தண்டஞ் செய்வோர் கரையை அடை என்றபோதும் அடையாமை கண்டு கூலியாளரை அடித்தார் என்பர்.

31. இறைவன் அடிபட்டதும் மறைந்தருள, அவரை ஏவல் கொண்ட வந்தியைத் தண்டிக்க ஏவலாளர் சென்றனர் என்றும் அப்போது அம்முதியவள் இளமை பெற்றுச் சிவலோகம் சென்றாள் என்றும் புதியன காட்டுவர் நம்பியார். இதில் இறைவன் மறைந்த அற்புதங்கண்டும் வந்தியைத் தண்டிக்கச் சென்றதும் இளமை பெற்றவள் மேலும் பல்லாண்டு வாழாத சிலோகம் அடைந்ததும் வியப்புக்குரியனவே.

32. அடிபட்டுப் பெருமான் மறைந்ததும் வானில் அசரீரி ஒன்று கேட்டதாகவும் அதில் வாதவூரரை ஆட்கொண்ட சம்பவங்களைச் கூறிய பின்பு, பாண்டியன் வாதவூரருக்கு விடுதலை வழங்க வேண்டு மென அசரீரி பணித்தாகவும் நம்பி புராணம் சொல்லும். இதுவரை நிகழ்ந்த அற்புதங்களே வாதவூரரின் பரிபக்குவ நிலையை வெளிப்படுத்தியிருக்கவும் அசரீரியை இழுத்துக் காட்டுவது வேண்டாக் கருத்தாம்.

33. பாண்டியனை விட்டு நீங்கிய வாதவூரர் மீளவும் பெருந்துறைக்கே வந்து பரமாசாரியர் பணிப்பின்படி ஏனைய அடியார்களுடன் சில நாள்கள் தங்கிய பின்னர் உத்தரகோசமங்கை சென்றார் என்பர் கடவுள் மாமுனிவர். ஆனால் புலியூரார் அசரீரி வாக்கின்படி உத்தரகோச மங்கையிலும் கழுக்குன்றிலும் பரமாசாரியத் திருக்கோலத்தைத் தரிசித்தார் என்றும் திருக் கோவையாரைப் பாடிய பின்பே தில்லையை அடைந்தார் என்றும் பேசுவர்.

34. கடவுள் மாமுனிவர் புத்தரை வாதில் வென்ற சம்பவத்தை மிக விரித்துக்கூறினார். நம்பிகள் தருக்கமும் காட்டாது மிகச்சுருக்கியுள்ளார்.

35. கடவுள் மாமுனிவர் ஈழவேந்தன் மகளே ஊமை நீங்கிய பெண் என, பரஞ்சோதியார் சோழன் மகளே அப்பெண் என்பர்.

மேலே காட்டியவை மணிவாசகர் வரலாற்றில் தோன்றிய முரண்பாட்டு நிகழ்வுகள். அவை தோன்றியதற்கான காரணங்களையும் சிறிது சிந்திப்பாம்.

பெரும்பற்றிப்புலியூர் நம்பிகள் புராணமே தமிழில் தோன்றிய முதற்புராணம். நம்பி தம் நூலுக்கு மூலம் உத்தர மகாபுராணத்தின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சயம் என்கிறார். இதில் உத்தர மகாபுராண ஆசிரியர் யார்? என்பது எவருமறிந்திலர். நம்பி திருவிளையாடலை அடுத்து, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் தோன்றியது. வட மொழி நூலாகிய ஸ்ரீ ஆலாசிய மான்மியத்தின் மொழிபெயர்ப்பே திருவிளையாடற்புராணம் என் கிறார் அவர். இவற்றோடு ஆதிகைலாச மான்மியமும் மணிவாசகர் வரலாறு கூறும் நூலே. அதனைத் தழுவித்தோன்றிய தமிழ்ப்புராணம் எது? என்பதும் தெரிந்திலது. ஆனால் பெருந்துறைப்புராணம் என்னும் பெயரில் மிகப்பழைய புராணம் ஒன்றும் இருந்ததாகப் பேராசிரியர் மு. அருணாச்சலம் அவர்கள் குறிப்பிடுகின்றார். அது இப்போது இல்லை என்பதும் கவலைக்குரியதே. இந்தநிலையில் மணி

வாசகர் ஒரு தமிழ்நாட்டுக் குடிமகனாக இருந்தும் அவருடைய வரலாறு தமிழ்நாட்டில் நிகழ்ந்துமிருக்க, வரலாறுகள் மட்டும் முதன்முதல் வடமொழியில் எழுதப்பட்டது வியப்பாகும்.

மணிவாசகப்பெருமான் ஓர் அந்தணர் என்ற கருத்தில் அவர் மீது பேரன்பு பூண்டு மதுரையிலோ திருவாதவூரிலோ வாழ்ந்த பிராமணராலோ அவரது முத்திப்பேறு கண்ட தில்லைத் தீட்சிதராலோ இவ் வடமொழி வரலாறுகள் எழுதப்பட்டிருக்கலாம் என்பது இதற்குக் காரணமாகலாம். திருவால வாயுடையார் புராணம் எழுதிய நம்பிகளும் ஒரு பிராமணரே. நம்பி என்னும் பெயரே இதற்குச் சான்றாம். அவருக்குத் தில்லை நம்பி என்பதும் மறுபெயர் என்பதை நினைவிற் கொள்க. எனவே இந்த முரண்பாடுகள் வடமொழி வரலாறுகளிலேயே தோன்றிவிட்டன என்பது எமது சிந்தனை.

சிலம்பும் மணிமேகலையும் வரலாற்றை அடுத்துத் தோன்றியது போல மணிவாசகர் வாழ்ந்த காலத்தையடுத்து அவர் வரலாறு எழுதப்பட்டி ருந்தால் முரண்பாடுகள் பெரிதும் தோன்றியிருக்க மாட்டா. அவ்வாறு எழுதப் படாமல் நீண்டகால இடைவெளிக்குப் பின் எழுதியமையும் முரண்பாடு களுக்கு ஏதுவாகலாம். இவையன்றி முதற்கண் தோன்றிய நூல்களில் பொருந்தாதவை என்று தீர்மானித்த சிந்தனைகளைப் பின்வந்தோர் தம் சிந்தனைக் கேற்ப மாற்றியதாலும் மாறுபாடுகள் தோன்றியிருத்தல் கூடும். மேலும் சிலர் மணி வாசகருக்கு மாண்பு சேர்ப்பதற்காகவும் புதிய தொன்றைக் காட்டின் அது தமக்குச் சிறப்புத்தரும் என்னும் நோக்கில் புதிய நிகழ்வுகளையும் புகுத்தியுள்ளார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு எடுத்துக் காட்டு "வாசகம் பாடிய வாயால் கோவையும் பாடுக" என இறைவன் வேண்டினான் என்னும் கடவுள் மாமுனிவர் கூற்றாம். இந்நிகழ்வுஇடம்பெறவில்லை என்பதை 'மணிவாசகர் கோவையும் பாடினாரா?' என்னும் தலைப்பில் நிறுவியுள்ளோம். அதனை அங்கே காண்க.

## 2. மணிவாசகர் வரலாற்றை ஆய்வு செய்தோர் கருத்துக்கள்

மணிவாசகரின் வரலாற்றை ஆய்வு செய் தோர் பலர். அவர்களில் மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை, ஸ்ரீநிவாச அய்யங்கார், அனவரதவிநாயகம்பிள்ளை என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். காலம்பற்றிய ஆய்வில் ஈடுபட்டவரும் பலர். மூன்று புராணங்களும் மணிவாசகரின் ஊர், பிள்ளைத்திருநாமம், குரு உபதேசம் ஆதிய வற்றில் ஒன்றுபட்டும் அவை தவிர்ந்த இடை நிகழ்வுகளில் முரண்பட்டும் நின்றமையால் அவற்றுள் சிந்தனைக்குப் பொருந்துவன இவை, பொருந் தாதன இவை எனத் திருவாசகத்தோடு ஒப்பு நோக்கியும் திருவாசகத்திற் சுட்டிக்காட்டப்பெறாத வாழ்க்கைப் பகுதிகளுக்குப் புராணங்களையே ஏற்றுக்கொண்டும் இவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். திருவாசகத்திற் சுட்டப்பெறாத வரலாற்றுப் பகுதி களுக்கு புத்தரை வாதில் வென்றமை, திருவாசகத்தின் பொருள் இவரே எனக் கூத்தப்பிரானைச் சுட்டிக் காட்டியமை முதலாம் பல நிகழ்வுகள் காட்டுக்களாக அமைவதை நாம் காணலாம்.

மேலே காட்டியது அறிஞர்களது ஆய்வுகளின் சுருக்கப்பகுதி. இனி பதிப்பாசிரியர் ஒருவரது கருத்தையும் கீழே தருகின்றோம். இதுவரை வந்த திருவாசகப் பதிப்புக்களில் சென்னையைச் சேர்நத எஸ். ராஜம் அவர்களது பதிப்பே திருந்திய சிறந்த பதிப்பாகும். இது காலத்தாலும் பிந்தியது. அறுபத்தேழு ஓலைச்சுவடிகளையும் இருபத்தெட்டு அச்சுப் பதிப்புக்களையும் ஒப்புநோக்கிப் பதினைந்து பேரறிஞர்களால் வெளியிடப்பட்டது. அதன் பதிப் புரையில் மணிவாசகர் வரலாறு பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளது. அது வருமாறு.

வரலாற்று முறையில் மணிவாசகருடைய வாழ்க்கை முதலியவற்றுள் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை விளக்கும் ஆதரவுகள் மிகமிகக் குறைந்தனவே ஆகும்.

இப்பேரருளாளர் பாண்டி நாட்டில் பல அறிஞர்களுக்குப் பிறப்பிடமும் உறைவிடமுமாக விளங்கிய 'திருவாதவூர்' என்னும் ஊரில் தோன்றியவர். உலகியல் நூல்களையும் சமய நூல்களையும் தத்துவ நூல்களையும் நன்கு பயின்றவர். பல வேறுபட்ட கருத்து உடையவர்களோடும் கலந்து பயின்று உண்மை காணும் முயற்சியில் இளமையில் ஈடுபட்டவர்; அரசர்களோடு நெருங்கிப்பழகிய உலகியலில் உயர்ந்த நிலைகளிலிருந்து, ஏதோ மாறுபட்டால் அந்த நிலைகளை விடுத்து அடியவர் கூட்டமும் தெய்வ வழிபாடுமே நிலையான பேற்றை அளிக்கவல்லன என்னும் துணிவுகொண்டு, தம் வாழ்க்கையைத் தெய்வத் தொண்டுக்கே உரிமையாக்கியவர்; புறம்பான தோற்றங்களில் புலன்களைப் போகவொட்டாமல் தடுத்து அகத்தே தோன்றும் பேரொளியைக் கொண்டு இறைவனைக்காணும் முயற்சியில் ஈடுபட்டவர்; அவ்வாறு முயலும்போது தாம் பெற்ற இன்பத்தை உலகத்தாரும் பெற வேண்டும் என்னும் பரிவால், சொல்லுக்கு அடங்காதவற்றைச் சொல்லால் வெளியிட முயன்றவர்; எல்லாப் பருவத்தினரும் எல்லா மனநிலை உடையவரும் எல்லாச்செயல்களிலும் தெய்வ உணர்ச்சி கொண்டிருக்க வேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவர்; இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, துயில் எழும்போதும் புனலாடும்போதும் விளையாடும் போதும் பயன்படுத்துவதற்காகப் பலவகையான பாடல்களை அருளியவர்; சிவபெருமான் கோயில் கொண்டருளிய பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கிய பழக்கம் உடையவர். பின்னர் தில்லையிலேயே நிலையாகத் தங்கி, கூத்தப்பிரானை வணங்கி அவன் திருவருளில் கலந்தவர் என்றளவில் தான் நாம் இப்போது வரலாற்றுமுறையிற் கூறலாம்.

இது பேரறிஞர் கருத்து. ஆத்மீக ஞானியர் பலர்க்கும் பொருந்தும் பொதுக் கருத்துக்களை இது பெரிதும் கொண்டிருப்பதால் இவ்வரலாறு மணிவாசகருக்கே உரியதாகாது என்பதை முதலிற் சிந்தையிற் கொள்க. பெரியபுராணம் இல்லையேல் தேவார முதலிகட்டும் இவ் வரலாற்றில் பேரறிஞர்களுக்கு மணிவாசகர் தோன்றிய பாண்டிநாடு, வாதவூர், அவரது இளமைக்கல்வி, அவர் வகித்த உயர்பதவி, அரச தொடர்பு, முத்தித்தலம் என்பவற்றிற்கு ஆதாரம் எவ்வாறு கிடைத்தது? அவற்றிற்குத் திருவாசகம் தரும் அகச்சான்றுகளன்றி வேறெதுவும் அவர்களுக்கு உதவவில்லை என்பது தெளிவு. அவ்வாறாயின் குரு உபதேசம் நரிப்பரிகளின் வருகை பிட்டுக்கு மண் சுமந்தமை, திருப்பெருந்துறை உத்தரகோசமங்கைத் தலங்களில் மணிவாசகருக்கிருந்த அதீத ஈடுபாடு என்பவற்றிற்கும் மணிவார்த்தையில் அகச்சான்றுகள் பல இருந்தும் அவர்களுக்கு அவை தோற்றமளியாமை வியப்பைத் தருகின்றது. மணிவாசகர் வரலாற்றில் இம் முடிபுக்கு வந்த அறிஞர்கள் தேவார முதலிகள் வரலாற்றிலும் இம்முடிபுக்கே வருவர்போலும். இவர்கள் இவ்வாறு எழுதியமைக்குக் காரணம் கால ஆராய்வில் தாம் கண்ட முடிபுகளுக்கு மறுப்புத் தோன்றக்கூடும் எனக் கருதியமை காரணமாகலாம்.

இனிமுன்பு ஆராய்ந்த அறிஞர்களது முடிபுகளில் எவை ஏற்கத்தக்கவை எவை தகாதவை என்னும் இரண்டையும் திருவாசகத்தில் மணிவாசகர் கூற்றோடு ஒப்புநோக்குதலும் புதியன தருதலுமே எமது நோக்கம் என்பதை வாசகர் முன்னிலையில் வைக்கின்றோம்.

## 3. அகச்சான்றில் திருவாசகத்தின் பங்கு

அகச்சான்று தரும் திருவாசகத்தின் பங்கு சொல்லமுன் தமிழராகிய நமது வரலாற்று அறிவையும் சிறிது சொல்லவேண்டும். இன்று,

சுவாமி விவேகானந்தர், நாவலர் பெருமான் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம் என்னும் தலைப்புகளில் துறவியர் பேரறிஞர் வரலாறுகளையும் என் கதை என் சரித்திரம் என்னும் வடிவில் அறிஞர் தாம் எழுதிய சுயசரிதங்களையும் நிரம்பக் காண்கின்றோம். ஆனால் திருவாசகத் தேனை நமக்குத் தந்தருளிய மணிவாசகப்பெருமான் எப்போது தோன்றினார்? எங்கே தோன்றினார்? தாய்தந்தையர் பெயர் யாது? எம் மரபினர்? என்னும் வினாக்களுக்கு விடை தெரியாது நாம் விழிப்பதைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.

மணிவாசகரேயன்றி குறளை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட வள்ளுவனைப் பற்றி யோ இலக்கணக்கருவூலம் வழங்கிய தொல்காப்பி யனைப் பற்றியோ ஏதும் அறியமுடியவில்லை. இதனால் வரலாற்றறிவில் மேலை நாட்டார் சென்றள வுக்குத் தமிழராகிய நாம் எவ்வளவு தூரம் பின் தங்கி நின்றுவிட்டோம் என்பதை இது காட்டுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருக்குறளைப் பேணி வந்திருக்கிறோம். தொல்காப்பியத்தைப் போற்றி வந்திருக்கிறோம். அந்தப்பேணலும் போற்றலும் வேண்டப்படுவனவே. ஆனால், தமிழராகிய நாம் நமது அறிவுச் சான்றோரது வரலாறுகளை எழுதி வரவில்லையே என்பது பெருங்குறையே. அதற்குப் புதியதோர் காரணத்தையும் கண்டுபிடித்துச் சொல்லலாம். நூல் எவ்வளவு சிறப்புடையதாய் இருப்பினும் அந்நூலாசிரியன் சாதி, சமயம், மொழி, நாடு, காலம் என்பவற்றிற்கு உட்பட்டவன். அதனால் ஒரு மதத்தையோ குலத்தையோ சார்ந்த ஒருவர் தம்மினும் வேறுபட்ட சாதியார் சமயத்தாரது நூலைச் சமநோக்கில் வைத்து விரும்பிப் படிப்பதில்லை என்பதை நாம் இன்று வரை காண்கின்றோம். பண்டைநாளில் சிந்தாமணியை ஒதுக்கிப் பெரியபுராணம் தோன்றியதும் இன்றும் வைணவர் சிவநூல்களைப் புறம் வைப்பதும் சிவநெறியினர் வைணவப்பிரபந்தங்களை ஒதுக்குவதும் இதற்கு உதாரணங்களாம். எனவே, சாதி மதம் என்பவற்றைத் தெரிவிக்காத வள்ளுவனைப் போல நூல்களை ஆக்கியிருப்பின் எல்லோரும் சாதி, சமயக்காழ்ப்பின்றி அவற்றை வரவேற்பர் அல்லரோ. அதனால் வரலாறு எழுதாமல்விட்டது நல்லதே என்பதுதான் அக்காரணம். அதுவொரு நொண்டிக்காரணம். இதுஓரளவுக்குப்பொருந்துவது போலத் தோன்றலாம். ஆனால் ஒரு நூலாசிரியரது மதத்தையோ குலத்தையோ சார்ந்தவர்களும் அவர் வரலாற்றை எழுதாமல் விட்டது தவறாதலின் அது காரணமாகாது.

பண்டைநாளில் நாடாண்ட முடியுடை மூவேந் தரும் பல்லவரும் தத்தம் மெய் கீர்த்திகளைத் தத்தம் அரசவைப் புலவர்களைக் கொண்டு பாடுவித்தும் அவற்றைச் செப்பேடு களாகக் கல்வெட்டுக்களாகப் பொறிப்பித்தும் வந்த சாசனங்கள் போல மணிவாசகர் முதலாம் சமயத் தலைவர்களது அருட்கீர்த்திகள் சாசனங்களிற் பொறிக்கப்படாமை வருத்தந் தருவதே.

இனி திருவாசகத்தையே துணையாகக்கொண்டு மணிவாசகரின் வரலாற்றை ஆய்வு செய்வதற்கு முன். திருவாசகப் பாடல்களின் தொகை முழுமை பற்றிச் சிறிது சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று நமக்குக் கிடைத்துள்ள திருவாசகம் 51 தலைப்புக் களையும் 657 பாடல்களையும் கொண்டது. இவற்றுள் 10 பாடல்களைக் கொண்ட தலைப்புக்கள் பதிகம் என்றோ பத்து என்றோ அமைந்துள்ளன. பாண்டிப் பதிகம், அன்னைப்பத்து என்பன இவற்றிற்குரிய உதாரண வடிவங்கள். சில தலைப்புக்கள்பதிகம்அல்லதுபத்துஎனத்தோன்றாது 20 பாடலகளைக் கொண்டும் அதிற் குறைந்தும் சிறப்புச் சொல்லால் முடிவன. திருவெம்பாவை, திருப்பூவல்லி இரண்டும் முறையே இவற்றிற்குரிய வடிவங்கள். சில தலைப்புக்கள் பத்து அல்லது பதிகம்

என்றிருந்தும் அவை 10 பாடல்களிலும் குறைந்தவை. கழுக்குன்றம், எண்ணம், அச்சோ என்னும் மூன்றும் இந்த வகையைச் சேர்ந்தவை. திருப்புலம்பல் மூன்று பாடல்களோடு நிற்கிறது. திருப்படை எழுச்சி இரண்டே பாடல்களைத் தாங்கி மிகக் கூனிக்குறுகி நிற்கிறது. திருப்படையாட்சி எட்டுப்பாடல்களோடு அமைகிறது. சில தலைப்புக்கள் அந்தாதியாய்த் தொடர்ந்தும் முதலும் ஈறும் மண்டலிக்கவில்லை.

மேலே காட்டியவகையில் தலைப்புக்கள் ஆங்காங்கே குறைந்து காணப்படுவதால் திரு வாசகப் பாடல்கள் எங்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்பது ஒப்பமுடிந்த கருத்தாம். இடையறாது நெக்குருகிய மணிவாசகப்பெருமான் திருப்படையெழுச்சிபோல இரண்டுபாடல்களைப் பாடியதும் நெகிழ்வை நீக்கிப் பாடாதொழிந்தார் என்பதை எவர்தாம் ஏற்பார்? மேலும் திருவாசகத்தில் மணிவாசகரால் குறிக்கப்படும் தலங்கள் பல. அவற்றுக்குரிய பதிகங்கள் மணி வார்த்தையில் இடம்பெறவில்லை. எல்லாத் தலங்களுக்கும் பாடாது நின்றார். எனினும் மேலும் சில தலங்களுக்காவது பதிகம் வழங்கியிருப்பார் என்பது ஒப்புக்கொள்ளும் சிந்தனையே. அந்தச்சிந்தனையில் பாடல்கள் முழுவதும் கிடைத்திருப்பின் அவரது வரலாறும் பூரண வடிவம் பெறும் அன்றோ?

இந்தப்பாடற் சிதைவு எப்போது நிகழ்ந்தது என்பதை ஊகிக்கும்போது திருவாசகத்தலைப்புக்கள் இடப்பட்ட பின்னரே அது நிகழ்ந்தது என்பது முடிபாம். தலைப்புக்கள் எப்போது எங்கே யாரால் வழங்கிப்பட்டன என்பதும் தெளியாத ஒன்றாம். இது நிற்க.

இதுவரை, திருவாசகப்பதிப்புக்கள் பல வந்துள்ளன. அவற்றுள் எஸ். ராஜம் அவர்களது பதிப்பு சிறந்த திருத்திய பிந்திய பதிப்பாகும். அது 67 ஓலைச்சுவடிகள், பல பதிப்புகள் என்பவற்றோடு ஒப்புநோக்கி, பேரறிஞர் பலரால் பதிப்பிக்கப் பெற்றது. இதனை முன்பும் காட்டியுள்ளோம். அத்தகைய பதிப்பில் ஓலைச்சுவடிகள் சிலவற்றிற் காணப்பெற்ற மிகைப்பாடல்களை நூலின் இறுதியில் அவர்கள் அநுபந்தம் செய்துள்ளனர். அவற்றைக் கீழே தருகின்றோம்.

திரு அண்டப்பகுதி 120 - 121 க்கு இடையில்

*"ஒளிதரும் உள்ளத்து ஒளிப்போன்போற்றி"*

போற்றித்திரு அகவல் 156 - 157 க்கு இடையில்

*நாகம் அணியும் ஆகா போற்றி*

திருப்பூவல்லி

*மா ஆர ஏறி மதுரைநகர் புகுந்தருளி*
*தே ஆர்ந்த கோலம் திகழபெருந்துறையான்*
*கோ ஆகி வந்து எம்மைக் குற்றேவல்*
*கொண்டருளும்*
*பூ ஆர் கழல் பரவி - பூவல்லி கொய்யாமோ?*

திருவுந்தியார்

*ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்*
*ஆகாசம் காவல் என்று - உந்தீபற*
*அப்பாலும் காவல் என்று - உந்தீபற*

திருத்தோள் நோக்கம்

*பிணக்கு அற்று, அவா அற்று பேதைமையும்*
*பிணியம் அற்று*
*உணக்கிப் பசை அறுத்தான் உயிர் ஒன்றி நின்ற*
*குணக்குன்று வந்து என்னை ஆண்டலுமே*
*என்னுடைய*
*கணக்கு அற்றவா பாடி - தோள் நோக்கம்*
*ஆடாமோ.*

திருக்கழுக்குன்றப்பதிகம்

*விடையனே விடம் உண்டு வேதம்*
*விளைந்த விண்ணவர் வேந்தனே*

*இடையிலே உனக்கு அன்பு செய்து*
*பெருந்துறைக்கு அன்று இருந்திலேன்*
*சடையனே சைவ நாதனே உனைச்*
*சாரும் தொண்டரைச் சார்கிலாக்*
*கடையனேனையும் ஆட்கொள்வான் வந்து*
*காட்டினாய் கழுக்குன்றிலே.*

*நரி எலாம் தெரி யாவணம் இந்த*
*நாடு எலாம் அறியும்படி*
*பரிகள் ஆகப் படைத்து நீ பரிவு*
*ஆக வந்து மெய் காட்டிடும்*
*புரிகொள் நூல் அணி மார்பனே புலி*
*யூர் இலங்கிய புண்ணியா*
*கரிய மால் அயன் தேட நீ வந்து*
*காட்டினாய் கழுக்குன்றிலே*

அச்சோப்பதிகம்

*செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவாது இருந்திடமும்*
*அத்தனையும் அறியாதார் அறியும் அறிவு எவ்வறிவோ?*
*ஒத்த நிலம் ஒத்தபொருள் ஒரு பொருள் ஆம் பெரும்பயனை*
*அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே.*

*படிஅதனில் கிடந்து இந்தப் பசுபாசம் தவிர்ந்துவிடும்*
*குடிமையிலே திரிந்து அடியேன் கும்பியிலே விழாவண்ணம்*
*நெடியவனும் நான்முகனும் நீர் கான்றும் காண ஒண்ணா*
*அடிகள் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே.*

*பாதி எனும் இரவு உறங்கி பகல் எமக்கேஇரை தேடி*
*வேதனையில் அகப்பட்டு வெந்துவிழக் கடவேனை*
*சாதி குலம் பிறப்பறுத்து சகம் அறிய எனை ஆண்ட*
*ஆதி எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே*

சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் திருவாசகம் என்ற தலைப்பிற் காணப்பெறுபவை

*அன்னையும் ஆயமும் கேள்மின்களோ எனது*
*ஆருயிர் ஆய சிவ பெருமான்*
*என்னது யான் என்னும் இவ்விரண்டும்*
*என் உளன் ஆய் இருந்தே கவர்ந்தான்*
*முன்னை உறவும் பிறவும் காணேன்*
*மூ உலகும் பரந்து எங்கும் தான் ஆய*
*இன்னது அளவு என்று இயம்ப ஒண்ணா*
*இன்ப வெள்ளத்து எனை இட்டனனே.*
*வானும் நிலனும் அடையக் கேள்மோ*
*வள்ளல் பெருந்துறை மேய பெம்மான்*
*தானும் தன் தையலும் ஆகி என்தன்*
*சதுரை அழித்து; மால்தந்தபோதே*
*ஊனும் உயிரும் உணர்வும் ஒன்றாய்*
*உரோமம் எல்லாம் சிலிர்ப்பித்தது என்னே !*
*யானும் எனை அறியாதவண்ணம்*
*இன்ப வெள்ளத்து எனை இட்டனனே.*

திருவாசகத்தில் தலைப்புக்கள் பல குறைப்பாடல் கொண்டவை. அவற்றுள் திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திருக்கழுக் குன்றப்பதிகம், அச்சோப்பதிகம் என்பவற்றுக்கே மிகைப்பாடல்கள் கிடைத்துள்ளன. இது வரை வந்த பதிப்புக்களில் திருப்பூவல்லி, திருவுந்தியார் என்னும் இரண்டும் 19 பாடல்களோடு நின்றவை. மிகைப்பாடல்களோடு அவை 20 ஆகிப் பூர்த்தி யாகின்றன. ஏனையவை மிகைப்பாடல் பெற்றும் முழுமை பெறாதவை. முழுமை என்னும்போது தலைப்புக்கள் பத்து, இருபது, ஐம்பது, நூறு பாடல்களைக் கொண்டவை ஆகலாம். ஐம்பது பாடல்களைக் கொண்ட தலைப்புக்கு நீத்தல் விண்ணப்பம் காட்டாகும்.

இனி மிகைப்பாடல்களைப் பிறர்பாடிச் சேர்த் திருக்கலாம் எனவும் பலர் சிந்திக்கக் கூடும். அப்படியென்றால் குறைந்த தலைப்புக்கள் அனைத்துக்கும் அவர்கள் பாடி இணைந்திருக் கலாமே. அவ்வாறு நிகழாமையின் அச்சிந்தனை பொருந்துமாறில்லை. இந்த நிலையில் திருவாசகப்

பாடல்கள் ஆங்காங்கே குறைந்தமைக்குக்காரணம் யாதென அறிதல் சிரமத்தின் பாற் பட்டதே. எனவே தேவாரங்களைப் போலவே திருவாசகமும் எங்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்பது முடிபாம்.

மேற்காட்டிய மிகைப்பாடல்களையும் மணி வாசகர் பாடினாரா? என்னும் ஐயமும் சிலருக்கு எழலாம். ஒரு கவிஞனது பாடல்களுக்கு முத்திரைகள் அவனுடைய சொற்பிரயோகம் பொருள், ஓசை, நடை, உணர்வுநிலை (மெய்ப்பாடு, பாவம்) என்பனவே. அந்தவகையில் மிகைப்பாடல்கள் திருவாசகத்தினின்றும் இம்மியும் வேறுபடவில்லை என்பதைப் பிறரைக் காட்டிலும் கவி எழுத வல்லோர் விரைந்து ஏற்றுக்கொள்வர்.

இனி, மிகைப்பாடல்கள் இடைச்செருகல் இல்லை யெனில் அவை எவ்வாறு ஓலைச் சுவடிகளில் இடம் பிடித்தன? என்னும் வினா எழலாம். அடியார்க்கு நல்லார் சிலம்புக்கு உரை தந்தவர். அதில் பல மேற்கோட் செய்யுள்களை அவர் வழங்குகின்றார். அது போலவே, இன்று நமக்குக் கிடைத்துள்ள முத்தொள்ளாயிரம், அசதிக்கோவைச் செய்யுள்கள் என்பனவும் மேற்கோட் செய்யுள்களே. அசதிக் கோவையில் எட்டுப்பாடல்களே கிடைத்துள்ளன. என்பதை நினைவிற்கொள். அவைபோலவே மிகைப் பாடல்களும் திருவாசகம் என்ற தலைப்பில் உரைநூல்களில் வந்து குடிபுகுந்திருக்கலாம். பின்பு அவை திருவாசகச் சுவடிகளில் குடியுரிமை பெற்றிருத்தல் வேண்டும் என்பது எமது சிந்தனை.

## 4. திருவாசகம் தரும் மணிவாசகர் வரலாறு

### மணிவாசகர் தோன்றிய நாடு

மணிவாசகர் தோன்றிய நாளில் தமிழ்நாடு மூவேந்தர்க்குரிய சேர, சோழ, பாண்டிய மண்டலங் களாய்ப்பிரிந்திருந்தது என்பது உண்மை. அதற்கு "பெருந்துறை மேய தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கள் வரக்கூவாய்" என்னும் குயிற்பத்து வரிகள்சான்றாம். இதில்பெருந்துறைப்பெருமானை முடிமன்னர்மூவராகக்காண்கின்றார்மணிவாசகர். இது அவருக்கே உரிமையான பக்திநிலை. இந்த மூவேந்தர் காலம் சாளுக்கிய பல்லவர் ஆட்சிக்கு முன்னோ பின்னோ என்பது ஆய்வுக்குரியது. ஆனால் திருக்கோவையார் காட்டும் வரகுணன் காலத்தில் மணிவாசகர் வாழவில்லை என்பதை இறுதியில் நிறுவியுள்ளோமாதலின் அவர் வாழ்ந்த காலம் பல்லவராட்சிக்குப் பிந்தியது என்பது எமது சிந்தனை.

மூவேந்தர் மண்டலங்களில் பாண்டிநாட்டு வாதவூரினில் மணிவாசகர் தோன்றியருளினார் எனப் புராணங்கள் யாவும் கூறும். இதனை வலியுறுத்தும் வகையில் அவர் சேரசோழ நாடுகளை மீண்டும் கூறாது பாண்டி நாட்டையும் வாதவூரையுமே மேற்காட்டிய குயிற்பத்துப்பகுதியில் பதித்துள்ளார். மூவரில் தென்னவனாகிய பாண்டி யனை முதற்கண் நினைவு கூர்ந்ததும் இதற்கு மேலும் ஆதாரமே.

*"தென்பாண்டி நாட்டானே"* - சிவபுரா - 90

*"பாண்டி நாடே பழம்பதியாகவும்"* - கீர்த்தி - 118

*தென்னாடுடைய சிவனே போற்றி* - போற்றி - 164

*அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த*
- அம்மானை

*தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை*
- அம்மானை

*பாண்டிநல் நாடரால் அண்ணே என்னும்*
- அன்னைப்பத்து

*பாண்டிநல் நாடுடையான் படையாட்சிகள்*
- திருப்படையாட்சி

*தென்பாண்டி நாடே தெளி* - திருத்தசாங்கம்

என வரும் திருவாசகப்பகுதிகளும் பாண்டிப் பதிகமும் கொண்டு பாண்டிநாட்டையே தம் நாடாக உறுதி செய்கிறார் ஆளுடைய அடிகள். மேலும்

| | |
|---|---|
| அட்டமா சித்தி உபதேசித்தது | - கீர்த்தி - 63 |
| மெய்க்காட்டிட்டது | - கீர்த்தி - 67 |
| விருதத குமார பாலரானது | - பூவல்லி - 19 |
| பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது | - போற்றி - 166 |
| புலிமுலை புல்வாய்க்கு அருளியது | - போற்றி - 207 |
| தண்ணீர்ப்பந்தல் வைத்தது - கீர்த்தி | - 58 - 59 |
| வலை வீசியது - திருவார்த்தை | - 3 |
| வளையல் விற்றது - திருவார்த்தை | - 10 |

என்னும் ஆலவாய்ப்பதி லீலைகளைத் தம் திருவாசகப்பாடல்களில் மிகுதியும் காட்டிச் செல்வதும் அவரது நாட்டுப்பற்றை வலியுறுத்துவதே. மணிவாசகர் பல தலங்களைப் பாடியிருப்பினும் மதுரை குற்றாலம் உத்தர கோசமங்கை திருப்பெருந்துறை, பூவணம் வாதவூரர் எனப் பாண்டி மண்டலச் சிவத் தலங்களைப் பெரிதும் சிந்தையில் இருத்தியதும் அவர் பாண்டி நாட்டவரே என்பதற்குச் சான்றாம்.

மணிவாசகரின் முன்னோர் தெலுங்கு நாட்டினின்றும் வந்து வாதவூரில் குடியிருந்தவர் என்பதை உறுதி செய்ய அருட்பத்தில் அடிதோறும் தோன்றும் 'எந்து' என்னும் சொல்லை ஆதாரம் காட்டுவர் சிலர். எந்து என்ற சொல் இன்று தெலுங்குமொழியிற் காணப்படினும் தெலுங்கும் பண்டைய தமிழ் மொழியை மூலமாகக் கொண்டது ன்பது யாவரும் அறிந்ததே. அதனால் 'எந்து' என்ற சொல் ஆதியில் தமிழ்நில வழக்காகத்தெலுங்கு நாட்டிலும் நிலைத் திருத்தல் கூடும். ஆனால் 'எந்தா' என்ற சொல் மலையாளத்திலும் வழக்கில் இருப்பதா கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கேரளமன்றி, தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் எந்து என்பது 'எந்த' என்ற வடிவில் வழங்குவதை நாம் இன்றும் காண்கின்றோம். எந்து என்ற சொல் என்ன, எப்படி என்னும் பொருள்களைத் தருவது. 'எந்த நிலையிலும்' என்ற தொடர்மொழி அப்பொருள் தருவதே. மணிவாசகரே எந்து என்பதை 'என்ன குறையும் இலோம்' எனத்திருவெம்பாவையில் தந்துள்ளார். அவர் ஒரு சொல்லையே இரண்டு வடிவங்களிற்பிரயோகித்தமைக்குத் திருவாசகத்திற் சான்றுகள் பலவுண்டு. 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்பதும் ஒருத்தனே உன்னை' என்பதும் அதற்குச் காட்டுகளாம். ஆகவே எந்து என்பது மணிவாசகர் பிரயோகித்த திரிபுச்சொல் எனக்கொண்டு அவரது முன்னோர் தமிழ்நாட்டு வாதவூருக்கே உரிமையுடையவர் என முடிபு காணில் பொருத்தமாகும்.

## மணிவாசகர் தோன்றிய ஊர்

மணிவாசகர் வாதவூரினரே என்பதற்கு

*"வாத வூரினில் வந்தினி தருளிப்*
*பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"*

எனவரும் கீர்த்தித்திருவகவல் அடிகளே ஆதாரமாம். வந்து என்பது தன்மை இடத்து வினைச் சொல். இங்கே தன்மை இடத்தவர் மணிவாசகர். அவர் வாழ்ந்த மண்ணாகிய திருவாதவூருக்கு இறைவன் சென்று சிலம்பொலி காட்டினான் என்பதனால் வாதவூர் மணிவாசகர் தோன்றிய ஊரே. வாதவூர் என்பதை "ஊர் வேண்டேன்" என்னும் அவரது திருப் புலம்பற் கூற்றும் வலிசெய்யும். மேலும், கீர்த்தித் திருவகலில்

*"நந்தம் பாடியில் நான்மறையோனாய்*
*அந்தமில் ஆரியனாய் அமர்ந்தருளியும்"*

எனவரும் பகுதியில் நந்தம் பாடி தோற்றந் தருகின்றது. நந்தம் பாடியை ஒரு தலமாகப் பதிப்பாசிரியர் எவரும் ஏற்கவில்லை. பாடி என்பது

ஆயர்பாடி போல் ஊர் குறிப்பது. எனவே நந்தம் பாடியும் மணிவாசகரது திருவாதவூர் போலும்.

## மணிவாசகர் குலம்

சுந்தரர் தம் குலம் பேசும் போது "மறையார் தங்குரிசில் வயல் நாவலாரூரன் என்பர். சம்பந்தப் பிள்ளையார் தம்மை "நான் மறைவல்ல ஞான சம்பந்தன் என்றும் "மறைஞான சம்பந்தன்" என்றும் பலவாறு கூறுவர். இந்த வகையில் மணிவாசகரது குலம் பற்றிய சுவடுகள் அவர்க்குள்ளது போலத் திருவாசகத்தில் தெளிவு பெறவில்லை. ஆனால் மணிவாசகர் ஆதிசைவர் என வடமொழி ஆலாசியம் கூறுவதாம், சுப்பிர மணியபிள்ளை அவர்கள் குறித்துள்ளார். கடவுள் மாமுனிவர் 'அமாத்திய குலம்' என்பர். இவற்றுக்கு அகச்சான்றுகள் இல்லை. ஆனால் திருவாசகத்தில்

*குலம் களைந்தாய்* நீத்தல்விண் - 29

*வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்*
*பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்*
*சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த"*

- கோத்தும்பி - 6

*சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்*
*ஆத மிலி நாயேனை*

- கண்டபத்து - 5

*சாதிவிடாத குணங்கள் நம்மோடு சலித்திடும் ஆகாதே*

- திருப்படையாட்சி - 8

எனவரும் பகுதிகள் மணிவாசகரின் சாதிச் சுவடுகள். இவற்றில் அவருடைய சாதிச் சமரசம் பிரகாசிக்கிறது. இந்தச் சமரசம் அவருக்குத் துறவின் பின் தோன்றியதே. அவ்வாறு தோன்றினும் 'குலம் களைந்தாய்' 'சாதி விடாத குணங்கள் என்பன நம்மைச் சிந்திக்க வைத்துள்ளன.

மணிவாசகர் தாழ்ந்த குலத்தவராயிருந்து துறவின் பின் தமது குலத்தைக் களைந்திருப்பின் அக்களைவினால் அவருக்கு எவ்வித பெருமையும் தோன்ற இடமில்லை. குலத்தால் தாழ்ந்த ஒருவர் தமது குலத்தையோ சாதியையோ களைந்தபோதும் களையாத போதும் உலகம் அவரைத் தாழ்ந்த குலத்தவராகவே கணிக்கும். எனவே அத்தகைய இழிந்த ஒருவர் குலம் களைந்தாய் என்று சொல்லுவதிற் சிறப்பு எதுவும் இல்லை. ஆகவே குலம் களைந்தாய் என்னும் கூற்று அவரை உயந்த மரபுக்கே ஒதுக்குகிறது.

பண்டைய நாளில் உழவன், வணிகன், அரசன், அந்தணன் என்னும் நான்கு குலங்களும் சிறப்புடையனவாய் படிமுறையே உயர்ந்து சென்றவை. இவற்றுள் மணிவாசகர் எக்குலத்தினர் என்பது கேள்வி.

*"யாமார்க்கும் குடி அல்லோம் யாதும் அஞ்சோம்"*

- திருச்சதகம் - 30

என்பது மணிவார்த்தை. அது பெருந்துறைப் பெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற பின் எழுந்த சுதந்திரப் பேச்சு. எனவே அவர் முன்பு ஒரு குடிமகனே என்பது தெளிவு. குடிமகன் எனவே அரச குலத்தவர் அல்லர் என்பது முடிபு. அம் முடிபால் அவர் ஏனைய மூன்று குலங்களுள் ஒருவர் ஆகின்றார். அக்குலங்களுள் எக்குலத்தினர் என்பது ஆய்வுக்குரியது.

திருவாசகம் பெரும்பாலும் வேதியர் சார்பான கருமங்களையும் ஆங்காங்கு தருகின்றது. அவற்றுள் ஒன்று திருப்பொற்சுண்ணம். அது பூவியல் வார்சடை எம்பிரானின் திருமுழுக்குக்கே

உரிமை பூண்டு நிற்பது. ஆனால் இன்று அது தலைதடுமாறி நிற்பது வேதனைக்குரியதே. நிற்க.

சுந்தர நீறு அணிதல், மெழுகுதல் தூய பொன் சிந்தி நிதிபரப்பல், இந்திரன் கற்பகம் நாட்டுதல் (இது இன்று வாழை நடுதல் ஆகலாம்) எழில் சுடர் வைத்தல், கொடி எடுத்தல், தாமம் பூமாலை தூக்குதல், முளைக்குடம் தூபம் நல்தீபம் வைத்தல், உலக்கை எல்லாம் காசு அணிதல் (இது மணிமாலை) கறை உரலுக்குக் காம்பு அணிதல் (காம்பு - பட்டுச்சீலை) அறுகெடுத்தல், மஞ்சள் நிறைய சுட்டுதல் (அட்டுதல் அள்ளி இடுதல்) உலக்கை வலக்கை பற்றுதல் என்னும் கருமங்களை ஆற்றுகின்றனர் சுமங்கலிகள். இவற்றுள் கொடி எடுத்தல் இன்று ஒழிந்து நிற்பது கவனத்துக்குரியது. இக் கருமங்கள் சிவபரம் பொருளுக்குரியன வாதலின் தூய மரபினரான அந்தண குலத்தவர்க்கே உரியவை என்பதை ஆளுடைய அடிகள் குறிப்பால் உணர்த்தியுள்ளார். மேலே காட்டிய அந்தணர் கிரியையாகிய ஆகமக் கிரியை நுட்பங்களை அறியாத ஒருவரால் எவ்வாறு திருப்பொற்சுண்ணம் பாட முடியும்? எனவே மணிவாசகர் குலம் அந்தணர் குலம் என்பது இதனால் ஒருவாறு வெளிப்பட்டு நிற்கிறது.

இது போன்றே, திருவெம்பாவையில் புலரிக் காலத்தே நீராட ஒருவரை ஒருவர் எழுப்பிச் செல்லும் கன்னியரும் பிராமணக் கன்னியராகவே காட்சி அளிக்கின்றார்கள். அவர்களைக் கோதில் குலத்தவர் என்றும் அரன் தன் கோயிற்பிணாப்பிள்ளைகள் என்றும் விதந்து பேசுகிறார் மணிவாசகர். கோயிற் பிணாப்பிள்ளைகள் - கோயிற்பணிக்க உரிமை பூண்ட பிராமணப் பெண்பிள்ளைகளே. பொதுவில் பெண்பிள்ளைகள் என்னாது அந்தணக் கன்னியரை எடுத்துப் பேசியது சிந்தனைக் குரியதாகும். அந்தணக் கன்னிப் பெண்களாக அவர்களை மணிவாசகர் காட்டுவது அவரது குலநினைப்பின் வெளிப்பாடன்றி வேறன்று. வேறு குலத்தவராயின் அந்தணக் கன்னியர்க்கு முதன்மை கொடுக்க மனம் ஒருப்படார் என்பதையும் சிந்தையிற் கொள்க.

அந்தணர்க்குரிய யாகத்தையும் ஆங்காங்கு குறிப்பிடுவதையும் காணலாம். திருப்பொற் சுண்ணத்தில் வேதமும் கேள்வியும் ஆயினார்க்கு எனவும் கோயின் மூத்த திருப்பதிகத்தில் "மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய்" எனவும் காட்டுவது அவரை வேதியர் குலத்துக்கே கூட்டிச் செல்வதாகும். மகந்தான் செய்து வழிவந்தவர்கள் அந்தணர்களே. எனவே இதிலும் அவரது குலப் பற்றுத் தொனிக்கின்றதன்றோ.

வேள்விபோலவே வேதியர்க்கு வேண்டும் ஆகமத்தையும் பல இடங்களில் மலரச்செய்துள்ளார் மணிவாசகர்

*"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்"*
*"மன்னுமாமலை மயேந்திரமதனில்*
*சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்"*

என்னும் திருவாசகப்பகுதிகள் மணிவாசகரை வேதியர் பக்கம் சேர்ப்பனவே.

இவை யாவற்றிற்கும் மேலாக மணிவாசகரை ஆட்கொள்ள வந்த திருக்கோலமே அவரை அந்தணர் குலத்துள் நிறுத்துகின்றது எனலாம். காட்டு விலங்கு ஒன்றை அகப்படுத்துவதற்குத் தம்மால் நன்கு பழக்கம் பெற்ற அதே இனத்தைச் சேர்ந்த விலங்கொன்றைப் பயன்படுத்துவர் வேடர். அந்த மிருகத்தை 'பார்வைமிருகம் எனவும் தீவகம் எனவும்' இலக்கியம் பேசும். அதனை ஒப்பவே தம்மை ஆட்கொள்ள வந்த ஞானாசாரியத் திருக்கோலத்தை அந்தணக் கோலமாகக் காட்டி யுள்ளார் ஆளுடைய அடிகள்.

*"அந்தணன் ஆகி ஆண்டுகொண்டருளி"*

*"மறையோர் கோலம் காட்டி அருள்தலும்"*

*"மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட"*

*"உருநாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்"*

*"திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி*
*அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்"*

*"அந்தணன் ஆகிவந்து இங்கே அழகிய சேவடிகாட்டி எம் தமர் ஆம் இவன் என்று இங்கு என்னையும் ஆட்கொண்டருளும்"*

எனவருவனவும் பிறவும் அந்தணனாய் ஆண்டமைக்குச் சான்றுகளாம். இவற்றுள் 'எம்தமர் ஆம் இவன்' என்பது எம் சுற்றமாகிய அடியவன் என்னும் பொருளோடு அந்தணச் சுற்றம் என்பதையும் புலஞ் செய்தவாரும். அந்தணனுக்கு அந்தணனே குருவாக அமைதல் வேண்டும் என்னும் விதியை மறைஞான சம்பந்தர் தாம்பாடிய சைவசமய நெறியில்

*"அந்தணரே அந்தணர்க்குத் தேசிகரா வாரொழிந்தார்*
*தந்தொகைக்கும் அந்தணரே தாம்."*

எனத் தந்தமையையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். வெண்ணெய் நல்லூர்ப் பெருமான் சுந்தரரை ஆட்கொள்ள வேதியக் கோலத்தில் தோன்றிமையை இவ்விதி நினைவு கூருகின்றதன்றோ. மேலும், மணிவாசகரது வரலாற்று நூல்கள் பல ஆதியில் வடமொழியில் தோன்றியதும் அந்நூலாசிரியர்கள் அந்தணரா யிருப்பதும் அவரை அந்தணர் குலத்தோடு இணைப் பனவே. இணைப்புக்காரணம் அவர் தம் குலப்பற்றே.

## மணிவாசகரது பிள்ளைத்திருப்பெயர்

இனி மணிவாசகரின் தந்தையார் பெயர் என்ன? தாயார் பெயர் என்ன? என்னும் வினாக் களுக்குத் திருவாசகத்தில் விடை ஏதும் இல்லை. திருமுறைகள் பன்னிரண்டில் சுந்தரர் ஒருவரே தம்மைச் 'சடையன் தன் சிறுவன்' இசைஞானி சிறுவன்' எனக் குறிப்பிட்டு பெற்றோர் பெயர்களையும் தந்துள்ளார். மணிவாசகர் தம் பெயரையே வெளிப் படுத்தாதபோது பெற்றோர் பெயரையோ குலத்தை யோ வெளிப்படுத்தாமைக்கு நாம் சிந்திப்பது பயனற்றதே. ஆனால் பெருந்துறைப் புராணம் பாடிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தந்தையார் சம்புபாதாசாரியர் எனவும் தாயார் சிவஞானவதி எனவும் வரைந்துள்ளார். பிள்ளை அவர்கள் ஏனைய புராண ஆசிரியரின் மிகப் பிந்தியவர். நாவலர் காலத்தவர். காலத்தால் மிக முற்பட்ட பெரும்பற்றப்புலியூர் நம்பிகளோ பரஞ்சோதி முனிவரே கடவுள்மா முனிவரோ வெளிப்படுத்தாத நிலையில் பிள்ளை அவர்கள் பேசுவது ஆதார மற்றதே.

மணிவாசகர் வாழ்ந்த போதே அவர்தம் தாய் தந்தையரும் உடன் வாழ்ந்தனரா? என்பது ஆய்வுவினா.

*"போதையர் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்*
*தாதையர் முனிவுறத் தானெனை ஆண்டவன்"*

என்னும் தேவார அடிகளால் தந்தையாரும் உடன் வாழ்ந்தார் என்பதைச் சம்பந்தர் வெளிப்படுத்து கின்றார்.

*"என்னவனாம் அரன் அடியேன் அடைந்திட்ட சடையன்*
*இசைஞானி காதலன் திருநாவலூர்க்கேன்"*

*"எம்மான் எம்மனை யென்றவர் இட்டு இறந்தொழிந்தார்"*

என்பன சுந்தரர் தம் குழந்தைப்பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்து விட்டார்என்பதைக் காட்டும் பகுதிகள். இந்நிகழ்வு பெரிய புராணத்தில்

சேக்கிழாராற் காட்டப்படவில்லை என்பதையும் நரசிங்க முனையர் சுந்தரரைத் தத்தெடுத்தமைக்கு இதுவே காரணம் என்பதையும் கருத்திற்கொள்க. மணிவாசகரும் சம்பந்தர் சுந்தரர் போல வெளிப் படையாகக் காட்டாதபோதும் தாம் வாழ்ந்த காலத்தில் தாய்தந்தையரும் உடன் வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றார் திருப்பூவலல்லியில் அதில்

*"எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய*
*பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட"*

என்னும் பகுதி சிந்தனைக்குரியது. தாய் தந்தையர் முன்னமே மறைந்திருப்பின் அவர் தம் பாசத்தைப் பின்னர் அறுக்க வேண்டிய நிலை மணிவாசகருக்குத் தோன்றாது. பாசம் நீங்கியது ஆட்கொள்ளப்பட்ட பின்னர் என்கையால் அவர் வாழ்ந்த போதே பெற்றோரும் உடனிருந்தனர் என்பது உடன்பாடாம். மேலும் 'அருள்வாதவூரருக்குச் செப்பிய நாலெட்டில் தெய்வீகம்" என்கிறது ஒரு பழம் பாடல். இதில் இவரது இளமை தெரிவதால் பெற்றோரும் உடன் வாழ்ந்தனர் என்பது உறுதி யடைகிறது.

மணிவாசகருக்குப் பெற்றோர் சூட்டிய பிள்ளைத் திருப்பெயர் யாது? என்பதையும் சிந்திப்போம். புராணங்கள் அனைத்தும் வாதவூரர் என்பதே உடன்பாடு. குழந்தை பிறந்ததும் அதற்குத் தம் ஊர்ப்பெயரையே பெற்றோர் இட்டனர் என்பது சிந்தனைக்குப் பொருந்துவதாகத் தெரியவில்லை. மறை மலையடிகளும் பிறரும் வாதவூரர் என்னும் பெயர் பிற்றை நாளில் தோன்றியது என்னும் முடிபுக்கே வந்துள்ளனர். இந்த நிலையில் சுந்தரர் பெயரோடு ஒப்புநோக்குவோம். சுந்தரருக்கு ஆரூரன் என்பது ஒரு பெயரேயாயினும் அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுந்தரர் என்பதே. ஆனால் அவர் பரவையாருடன் திருவாரூரில் வாழ்ந்த நாள்களில் ஆரூர்ப் பெருமான் மீது கொண்ட ஆராக்காதலால் தமக்குத் தாமே ஆரூரன் என்னும் புனை பெயரைச் சூட்டிக் கொண்டார். என்பதன்றி அப்பெயருக்குக் காரணம் வேறு எதுவும் இல்லை இதுபோவே வன்தொண்டன் தம்பிரான் தோழன் சிங்கடியப்பன் வனப்பகையப்பன் ஆதியனவும் பின்தோன்றிய புனைபெயர்களே. இந்த வகையில் வாதவூரர் என்னும் பெயர் அவருக்கு எவ்வாறு அமைந்தது? என்னும் வினா எழுகின்றது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நடமாடியவர் சம்பந்தப்பிள்ளையார். அவர் தந்த பதிகங்களில் ஒன்று க்ஷேத்திரக்கோவை. அதில் ஏழாம் பாடல் சிதைந்து மூன்று அடிகளுடன் காணப்படுகின்றது. "மாட்டூர்மடப் பாச்சிலா கிராமம் முண்டீச்சரம் வாதவூரர் வாரணாசி" என்பது முதலாம் அடி. இதில் வாதவூரர் தெரிகிறது. எனவே வாதவூரர் சம்பந்தர் காலத்துக்கு முன்னரும் இருந்த சிவத்தலம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அத்தலத்து இறைவனுக்குத் திருமறைநாதர், வாதபுரீசர் என்னும் திருநாமங்களும் தாயாருக்கு வேதநாயகி, ஆரணவல்லி என்னும் திருப்பெயர்களும் உண்டு என்பதை இன்று அறிகின்றோம். இவ்வாற்றால் பெற்றோர் தமது ஊர்ச்சிவதலத்திறைவர் மீது கொண்டிருந்த பக்தியினால் வாதவூரர் என்னும் நாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர் எனக் கொள்ளுவதில் தவறு ஏதும் இல்லை. இன்றும் தில்லையம்பலம் அண்ணாமலை பழநி என்னுந் தலப்பெயர்கள் ஆடவர் பெயராக அமைந்து வருவதும் வாதவூரர் என்னும் பெயரை வலிசெய்வதே. நம்பியாண்டார் நம்பிகள் காட்டும் வாதவூர்ச் சிவபாத்தியன் என்பது திருக்கோவையார் ஆசிரியர்க்கே உடைமை என்பதைப் பின்னர் நிறுவியுள்ளோம்.

## மணிவாசகரின் இளமை வாழ்க்கை

"கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்" எனக் கல்விக்கு முற்றுப்புள்ளி

இட்டுக் கொண்டவர் மணிவாசகர். இது பெருந்துறைப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றபின் எழுந்த கல்விப்பாசநீக்கம். அதனால், அவர் பெருந்துறையை அடையும்வரை கற்றுக் கொண்டே நடமாடியவர் என்பது தெளிவு. அவரது அறிவு ஆத்மீகம் என்ற அளவில் நில்லாது அவரையும் அறியாது வேறு துறைகளிலும் பீறிட்டுப் பாய்வதைத் திருவாசகப் பகுதிகள் ஆங்காங்கு வெளிப்படுத்துகின்றன.

திருவாசகம் பக்தி உணர்வு கொப்பளிக்கும் பேரூற்று. அதில் அடிகளாரின் பக்திப் பெருக்கு எத்துணை விரிந்ததோ அத்துணைப் பெரியது அவருடைய அறிவுலகமும் என்பதைப் போற்றித் திருவகவல், திருவண்டப் பகுதி என்பனவும் பிற பதிகங்களும் தந்துள்ளன. "அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம் என்பது கலிலியோவும் கொபர் நிகசும் 15 ஆம் நூற்றாண்டிற் சொல்ல முன் 9 ஆம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ மணிவாசகர் நமக்குத் தந்த வானியற் சொத்து. அந்த உண்டைப்பிறக்கங்கள் "நூற்றொரு கோடியின் மேற்படவிரிந்தன." என்பது விஞ்ஞான மேதை ஐன்ஸ்ரீனோ பிற வானியல் விஞ்ஞானிகளோ காண முடியாத பிரபஞ்ச விரிவு. அதே நேரத்தில் பேர் அண்டமாகிய பருப்பொருளை ஆராய்ந்த அடிகளார்" சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்" என அணு ஆய்விலும் கால்வைத்து நின்றவர் என்பதை அறியும் போது வியப்பு மேலிடுகின்றதன்றோ!

*"மேலை வானவரும் அறியாததோர்*
*கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே*
*ஞாலமே விசும்பே இவைபோம்*
*காலமே உனை என்று சொல் காண்பதே"*

என்பது திருச்சதகப்பாடல், ஊழி - முடிவு என்னும் பொருள் தருவது, அதில் உலகம் அழியும்; அதற்கு ஆதாரமான பரவெளியும் அழியும். இவை தோன்றி அழிந்தாலும் அவற்றிற்கு ஆதாரமான காலம் அழிவதில்லை. அது என்றுமுள்ளது. அதுவே என்றுமுள்ள பரம்பொருள் என இறைவனின் அழியா நிலையைப் பிரபஞ்ச மூலம் கண்டு வியந்தவரும் மணிவாசகப் பெருமானே.

சிவபுராணத்தில்வரும் "புல்லாகிப் பூடாய் என்று தொடங்கி' எல்லாப் பிறப்பும் என முடியும் பகுதிகள் டார்வின் கூறும் உயிர் வளர்ச்சி முறையாகிய கூர்ப்பை விளக்குவது. போற்றித் திருவகவலில் 'மாதா உதரத்து' எனத் தொடங்கும் பகுதி தாய் வயிற்றில் கருவளரும் போது மாசந்தோறும அதற்கு ஏற்படும் பேரிடர்களைக் காட்டுவது. அது இன்றைய விஞ்ஞான மருத்துவத்தையும் கடந்து நிற்பது.

கண்கெட்ட ஊர் ஏறு, செழிகின்ற தீப்புகுவிட்டில், இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு, ஆனை வெம்போரில் குறும்தூறு, எறும்பிடை நாங்கூழ், பெருநீர் அறச் சிறுமீன் துவண்டு, முதலைச் செவ்வாய்ச்சியர், பலாப்பழத்து ஈயின், கறங்கு ஓலை போல்வது ஓர் காயப்பிறப்பு, ஆள்வாரிலி மாடு, வன்பராய் முருடு, பா இடை ஆடு குழல், கிளியீடு, நெய்க்குடத்து எறும்பு, வெள்ளத்துள் நாவற்றி என்னும் உவமைகள் அவரது உலகியலனு பவங்கள், இவற்றுள் வெள்ளத்துள் நாவற்றி என்பது நிரம்பி நிற்கும் மழை நீரில் ஓடித்திரியும் நாவற்றிப் பூச்சி என்னும் பொருள் தருவது. நாவற்றி - பூச்சிவர்க்கம் வற்றி - சிகரவிகுதிவினை முதற் பொருள் தந்தது. மந்தாரத்தில் தாரம் பயின்று என்பது அவரது நுண்இசைப் புலமே.

இவ்வாறு அறிவுத் துறையிற் சென்ற வாதவூரர் அதனாற் பயன் ஏதுமில்லை. என்னும் முடிபால் 'இனி என்னே உய்யுமாறு' என்று எண்ணி ஆன்மீக நெறிக்கே தம்மை இளமையில் திரும்பிக்

கொண்டவர். அதனால் சமயத்துறையிலும் கால் பதித்து, புல்லறிவு கொண்ட பௌத்தம், 'ஒன்று உண்டு இல்லை என்ற அறிவு' கொண்ட சமணம், உலகமேஉண்மைவேறுஎதுவும்இல்லைஎன்னும் ஒண்திறல் பாம்பாகிய உலோகாயதம், மிண்டிய மாயாவாதம் முதலாய மதப்பிரிவுகளையும் ஐயந்திரிபுற ஆய்ந்து நின்றவர். முத்திநெறியறியாத மூர்க்கரொடும் பழகியவர். இறுதியில் உவலைச் சமயங்களோ ஒவ்வாத சாத்திரங்களோ தமக்குப் பயன் செய்யவில்லை என்ற முடிபுக்கும் வந்தவர். அதனால் மெய்ப்பொருளைக் காண்பதில் முனைந்து நின்றவர்.

பெருந்துறைப் பெருமானால் ஆட்கொள்ளப் படு முன் தமது இளமைப்பருவத்தில் சிவவழிபாடு, பூசை என்பவற்றில் தாம் அழுந்தி நின்றதையும் மணிவாசகர் வெளிப்படுத்துகின்றார்.

*அ. பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்*
*பற்றும் ஆறு அடியனேற்கு அருளி*
*பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து*
*பூங்கழல் காட்டிய பொருளே*

- பிடித்த - 7

*ஆ. கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்*
*செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேற்கு*

- குலாப்பத்து - 10

*இ. பல் நாள் பரவிப் பணி செய்யப் பாதமலர்*
*என் ஆகம் துன்னவைத்த பெரியோன்*

- பூவல்லி - 9

என்பன அவரது முன்னைய வழிபாட்டு முத்திரைகள். பூசனை செம்மை மனத்தால் திருப் பணிகள் செய்தல் என்பன புற வழிபாடுமாய் இணைந்துள்ளன. மேலும், வாதவூரனாய் பிறப் பதற்கு முன்னும் தமக்கு மனிதப்பிறவி கிடைத்த தென்றும் அவற்றுள் கடைசிப்பிறப்பில் தாம் செய்த தவமே ஆட்செய்ய வைத்ததென்றும் ஓர் உவமை யால் வெளிப்படுத்துகின்றார் மணி வாசகர்.

*"பாழ்ச் செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்*
*கீழ்ச்செய் தவத்தால் கிளியீடு நேர்பட்டு"*

என்பது குலாப்பத்துப் பகுதி. கிளி பாழான வயல்களிலும் இறங்கும். ஆனால் அங்கே அதற்குப் பயன் ஒன்றும் கிடையாது. பின்பு பல வயல்களுக்கும் பறந்து பறந்து சென்று ஈற்றில் செழித்து முற்றிய வயலொன்றைக் காணும். அங்கே வேண்டிய நெற்கதிர்களைக் கொய்து சென்று தன் பொந்தினுள் வைக்கும். பொந்தினுள் வைப்பது எதிர்காலச் சேமிப்பே.

இங்கே கிளி மணிவாசகர். பாழ்ச்செய் - பாழான வயல்கள்; அது பயனின்றி அலைய வைத்த பிறவிகள்; கீழ்ச்செய்தவம் - கடைசிப் பிறப்பிற் செய்து கொண்ட தவம்; கிளியீடு - கிளி பொந்தினுள் இட்டு வைத்த நெற்கதிர்ச் சேமிப்பு; இதனை அவர் "நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" என்னும் திரு ஏசறவுப் பகுதியிலும் காட்டியுள்ளார்.

முன்னைப் பிறப்புக்களில் ஒன்று கூடிய இத்தகைய பக்குவ நிலையால் தாய் வயிற்றுள் குடியிருந்தபோதே தம்மனத்துள் இறைவன்தானே வந்து குடிபுகுந்தான் என்பதை

*உருத்தெரியாதக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்*
*கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட"*

என்னும் கண்டப்பத்துப் பகுதி புலஞ் செய்கின்றது. இங்கே உருத்தெரியாக் காலம் என்பது தமது தோற்றம் வெளிப்பட்டு வாராது கருவாய்க் கடந்த காலம். இதனையே அப்பர் சுவாமிகளும்

*“கருவாய்க்கிடந்துன் கழலே நினையும்*
*கருத்துடையேன்*
*உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்.”*

என்கிறார்.

மணிவாசகர் இந்தப்பக்குவ நிலையில் நின்ற போது வாதவூரில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

*“வாதவூரினில் வந்து இனிது அருளிப்*
*பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்.”*

என்பது கீர்த்தித்திருவகவல். இதில் பாதச் சிலம்பொலி வாதவூரில் காட்டப்பட்டது என்பது தெளிவு. ஆனால் யாருக்குக் காட்டப்பட்டது என்பது தெளிவில்லை. இறைவன் சிலம்பொலியை வேறொருவருக்கு காட்டினான் எனக் கொண்டால் அதனால் மணிவாசகருக்கு வந்த நன்மை எதுவு மில்லை. இந்தச் சிலம்பொலியைத் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்

*“சோதிசேர் வருள நீழற் சிலம்பொலி காட்டும் தெய்வ*
*வேதநா யகனார் வாழும் வியன்திரு வாதவூர்”*

என நம்பிகளும் குறித்துள்ளார். சிலம்பொலி மகிழ மரநிழலிற் காட்டப்பட்டது என்பது தெரிகிறது. மணிவாசகர் அல்லாத வேறொருவருக்குக் காட்டப் பெற்றிருந்தால் அவரை மணிவாசகரோ நம்பி களோ சொல்லியிருப்பார்களே. அவர் பெயர் சுட்டப்படாத வகையால் அச்சிலம்பொலி வாத வூரருக்கே இறைவன் காட்டியதாகலாம்.மேலும் கீர்த்தித்திருவகவலில் “நரியைக் குதிரையாக்கிய நன்மையும்” என்பதுதொடங்கி “கருவார்சோதியில் கரந்த கள்ளமும்” என்பது வரை தொடரும் பகுதிகள் முழுவதும் மணிவாசகரோடு சம்பந்தமுறும் பகுதியே. அவற்றுள் ஒன்றாகவே சிலம்பொலிக் காட்சியும் அடங்கிய வகையில் அச்சிலம்புக் காட்சியே எனக்கருதுவதில் தவறேது மில்லை. இந்தச் சிலம்பொலியைத் தாம் கேட்க அவாவுற்று நின்றதையும் பின்னரும் அது நிறைவுற்றதையும் அவர் முறையே தந்துள்ளார்.

*“சீர் ஆர் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே*
*ஆராத ஆசை அதுவாய் அடியேன் அகம் மகிழ*
*தேரார்ந்த வீதிப் பெருந்துறையான்திரு நடஞ்செய்*
*பேரானந் தம்பாடி - பூவல்லி கொய்யாமோ”*

- (பூவல்லி - 8)

*“திருந்து சேவடிச் சிலம்பு அவை சிலம்பிடத்*
*திருவொடும் அகலாதே*
*அருந்துணைவனாய் ஆண்டுகொண்டு அருளிய*
*அற்புதம் அறியேனே”*

(அற்புதம் - 4)

என்பன சிலம்பொலிக்கும் கூறுகள். மேற்காட்டிய விளக்கங்கள் அவர் சிலம்புக் காட்சியை இரு முறை தரிசித்தார் என்பதை வலியுறுத்துகின்றன.

இறைவனது சிலம்பொலிக்காட்சி இரண்டு வகை. ஒன்று யோகக்காட்சியில் காண்பது. மற்றொன்று தெய்வம் தானே கூத்திற் காட்டுவது. கம்பனது வரலாற்றில் சேரன் அரண்மனையில் திரையிடப் பெற்ற மண்டபம் ஒன்றில் கலைவாணி தோன்றிக் கம்பனுக்குக் காட்டினாள் என்னும் செய்தி தெய்வம் நேரே காட்டியதாகும். இந்த இரண்டில் வாதவூரில் நிகழ்ந்தது யோகக்காட்சியா? தெய்வக்காட்சியா? என்னும்போது “வாதவூரினில் வந்து” எனவும் “இனிது அருளி” எனவும் வரும் பகுதிகள் தெய்வம் தானே சென்று நேரில் தோன்றிக் காட்டியதை உறுதி செய்கின்றன.

இந்தநிலையில். பின்னர் காட்டியது எங்கே? எப்போது? என வினாக்கள் எழுகின்றன பெருந்துறை நாதரால் ஆட்கொள்ளப் பெற்ற பின் வாதவூரில்

அக்காட்சி நிகழவில்லை என்பதை "உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்" என்னும் திருப்புலம்பற் பகுதியும் பந்தம் போக்கியதைக் காட்டும்போது வேறு திருவாசகக் கூறுகளும் நிரூபிக்கின்றன. அதனால் அவர் துறவு பூண்ட பின் தமது சொந்தவூராகிய வாதவூரருக்குச் செல்லவில்லை என்பதும் உபதேசம் பெற்றபின்பு வைகைப் பெருக்கு வரையும் அவர் மதுரையில் அரண்மனைச் சூழலில் தங்கியிருந்தார் என்பதும் தெளிவாம். அமைச்சராயிருக்கும் ஒருவர் பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள வாதவூரில் இருப்பதை அரசனான பாண்டியன் அனுமதிக்க மாட்டான் என்பதை அவர் மதுரையிலேயே தங்கியிருந்தார் என்பதற்கு ஆதாரமாகக்கொள்க. எனவே பின்னர் கண்ட காட்சி பெருந்துறையாகலாம் அல்லது வேறு திருப்பதிகள் ஆகலாம் எனக் கொள்க.

முன்பு வாதவூரில் சிலம்புக்காட்சியைக் கண்ட பக்குவநிலையில் வாதவூரர் பாண்டியன் கீழ் மந்திரிப் பதவியை ஏற்றாரா? என்னும் ஐயம் ஒன்றும் தோன்றலாம். ஆனால் அவரது பக்குவ நிலையறியாத அரச கட்டளை பணிக்கும்போது அவரால் யாது செய்ய முடியும்? மேலும் வாதவூரர் தம் நிலையை எவருக்கும் வெளிக்காட்டாது நடமாடி ஓடும் புளியம்பழமும் போற் சிலகாலம் அமைச்சர் பதவியைத் தாங்கினார் என்றும் கொள்ளலாம். காரைக்காலம்மையார் சிவனருளால் மாம்பழம் பெற்ற பின்னரும் கணவன் பரமதத்தனுக்காக இல்லறம் மேற்கொண்டதும் தாயுமானவர் பற்றின்றி அரசசபையில் கணக்கப்பிள்ளையாய் அமர்ந்தமையும் இதற்கமைந்த எடுத்துக்காட்டுக் களாம்.

வாதவூர்ச் சிலம்பொலிக் காட்சிக்கான சமயத்தை மறைமலையடிகள் வேறாகக் கூறுவர். ஆவணி மூல நாளில் நரிக்குதிரைகள் மதுரைக்கு வந்தபோது அவை வாதவூர் வழியாக வந்தன என்பதும் அப்போது குதிரை வணிகராகிய பெருந்துறைப் பெருமானது பாதச் சிலம்பொலி வாதவூரருக்குக் கேட்டது என்பதும் மறைமலையாரின் கருத்துக்கள். குதிரைகள் வந்தபோது வாதவூரர் தம்மூரில் தங்கி யிருக்கவில்லை. மதுரையிலேயே இருந்தார் என்பதை முன்பு காட்டியுள்ளோம். மேலும் பாடலில் சிலம்பொலிகேட்டதுஎன்னாது "சிலம்பொலிகாட்டிய பண்பும்" என்றமையாலும் ஆயிரக்கணக்கான குதிரைகள் கழுத்திற் கட்டிய மணிகளோடு வரும் ஆரவார ஒலியில் இறைவன் திருவடிச்சிலம்பொலி மட்டும் கேட்டது என்பது பொருந்தாமையாலும் அடிகளாரின் கற்பனை ஏற்புடைத்தன்று.

## மணிவாசகரின் மந்திரிப்பதவி

வாதவூரருக்கு உலகியல் அறிவும் தத்துவம் முதலாய பிற அறிவுகளும் பிரகாசித்து இருந்ததை முன்னர்ச் சுருக்கிக் காட்டியுள்ளோம். அந்தப்பிரகாசம் வாதவூரையுங் கடந்து மதுரை இராஜதானியையும் தொட்டு நின்றது என்பதில் ஐயமெதுவும் இல்லை. அதனால் அவர் பாண்டியனுக்கு அமைச்சர் ஆயினார் என்பதும் நாம் வரவேற்க வேண்டியதே. இதற்குரிய குறிப்பையும் சிறிதே வழங்கியுள்ளார் மணிவாசகர்.

*"மண் ஆள்வான் மதித்துமிரேன்"*

என்பது திருச்சதகப்பகுதி. இவ்வாக்கியம் நாடு ஆண்டவனாகிய பாண்டியனை நான் பொருள் செய்யவில்லை எனவும் பாண்டிநாட்டை அரசு செய்ய நினைக்கவில்லை எனவும் இரு பொருள் தருகின்றது. எங்கள் சிந்தனைப் பொருட்டு இந்த எண்ணங்கள் ஆட்கொள்ளப்படுமுன் அவர் நெஞ்சிற் கிடந்தவை என வைத்துக் கொள்வோம். இந்த நிலையில், மணிவாசகர் சாதாரணக்குடிமகனாக இருந்திருப்பின் பாண்டியனைத்தாம் மதிக்க வில்லை என்பதும் நாடாள எண்ணவில்லை

என்பதும் அவர் உள்ளத்தே தோன்றமாட்டா என்பது உறுதி. ஆனால் அவர் இந்த எண்ணத்தை ஈங்கு வெளிப்படுத்தியமையால் அவர் அமைச்சராய் இருந்தார் என்பது வலுவடைகிறது. மேலும் "மண் ஆள்வான்" என்னும் தொடர் சிந்தனைக் குரியது. மண்ணை ஆள்வது அரசனுக்கு உடைமையாயினும் முதன் மந்திரியார்க்கே அதில் பெரும்பங்கு உண்டு என்பது யாவரும் அறிந்த ஒன்றே. எனவே, இதனாலும் மணிவாசகர் அமைச் சராய் இருந்தார் என்பது பெறப்படுகின்றது.

அப்பர் சுவாமிகள் தமக்கும் மகேந்திரப் பலல்வனுக்கும் இருந்த தொடர்பை

*"வெள்ளிபோல் புள்ளி உழை மான்தோல் சார்ந்த*
*உடையுடையான் நம்மை உடையான் கண்டீர்*
*உம்மோடு மற்றும் உளராய் நின்ற*
*படையுடையான் பணிகேட்கும் பணியோம் அல்லோம்*
*பாசமற வீசும் படியோம் நாமே"*

என்னும் தாண்டக அடிகளாற் காட்டுகின்றார். அதுபோல மணிவாசகரும்

*"யாம் ஆர்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்*
- திருச்சதகம்

*"மன்னரோடு உறவும் அஞ்சேன்"* - அச்சப்பத்து.

என்னும் திருவாசகத் தொடர்களால் தமக்கும் பாண்டியனுக்கும் இருந்த நட்புறவை வெளிப் படுத்தியுள்ளார். இவையன்றி மணிவாசகரது குல மேம்பாடும் செல்வப் பெருக்கும் அவர் அமைச்சர் பதவி வகித்தமைக்குத் துணை செய்வனவே.

*"பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்*
*மெய்யாக் கருதிக்கிடந்தேனை"*
- கோத்தும்பி - 17

*வேண்டேன் புகழ்; வேண்டேன் செல்வம்*
- உயிருண்ணி

என்பனவும் பிற தொடர்களும் மணிவாசகரின் செல்வச்செழிப்புக்குச் சான்றுகளாம். இங்கே புகழ் என்பது முதன்மந்திரிப் புகழை ஒதுக்கி வேறுயாதாய் இருக்க முடியும்?

வாதவூரர் முன் மந்திரிப் பதவி ஏற்கச் சென்றதை நினைவுகூரும் முகமாக இன்றுவரை ஆண்டுதோறும் ஆவணித்திங்களில் வாதவூரிலிருந்து அவரது திருவுருவம் அனைத்து வரிசைகளோடும் அங்குள்ள மணிவாசக தாசர்களால் பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள மதுரைக்கு எடுத்துச் செல்லப் படுவதும் அவரது மந்திரிப் பதவியை உறுதி செய் கின்றது.

## மணிவாசகர் மணவாழ்க்கை

பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்த வாதவூரர் தம் வாழ்நாளில் மணவினை மேற் கொண்டு இல்லறத்திலும் இருந்தாரா? இல்லையா? என்பதற்குத் தெளிந்த விடையைத் திருவாசகம் தரவில்லை. ஆனால் அவர் மிக இளமையோடு நடமாடியபோது ஆட்கொள்ளப் பட்டவர் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

*"நோயுற்று மூத்துநான்நுந்துகன்றாய் இங்கிருந்து*
*நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெலாம்*
*தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட"*
- கோத்தும்பி

*"முடைவிடா தடியேன் மூத்து அற மண்ணில்*
*முழுக்குரம்பையிற் கிடந்து*
*கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட*
*கடவுளே"*
- பிடித்த பத்து.

*"பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப் பென் றிவை*
*இரண்டும்*
*உறவினொடும் ஒழியச்சென்று உலகுடைய ஒரு*
*முதலை."*
- கண்ட பத்து.

என்பன மூப்பின்றி நடமாடியதைக் காட்டுவன. மேலும் பெற்றோரும் வாழ்ந்த போதே வாதவூரரும் வாழ்ந்தார் என்பதை முன்னரும் காட்டியுள்ளோம். அதுவும் வாதவூரரது இளமை வாழ்க்கைக்குத் துணைசெய்வதே. "அருள் வாதவூரருக்குச் செப்பிய நாலெட்டில் தெய்வீகம்" என்பதும் அவரது இளமைக்கு ஆதாரமாகும்.

இத்தகைய காளைப்பருவத்தோடும் செல்வ வளத்தோடும் வாழ்ந்த ஒருவர் பெண் மயக்கத்தை ஒதுக்கினார் என்பதும் ஏற்குமாறில்லை. ஆனால் மணிவாசகர் ஆட்கொள்ளப்படுமுன் தமக்கிருந்த பெண்மயலை இருபதுக்கு மேற்பட்ட பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுள்,

அ. *"வணங்கும் இப்பிறப்பு இறப்பு இவை நினையாது*
*மங்கையர் தம்மோடும்*
*பிணைந்து வாய்இதழ்ப்பெருவெள்ளத்து அழுந்திநான்*
*பித்தனாய்த் திரிவேனை."*

- அற்புதப்பத்து

ஆ. *"பொச்சை ஆன இப்பிறவியில் கிடந்து நான்*
*புழுத்து அலை நாய் போல*
*இச்சை ஆயின ஏழையர்க்கே செய்து அங்கு*
*இணங்கியே திரிவேனை."*

- அற்புதப்பத்து

இ. *"மாடும் சுற்றமும் மற்றுள போகமும்*
*மங்கையர் தம்மோடும்*
*கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு*
*குலாவியே திரிவேனை."*

- அற்புதப்பத்து

என்பன அவர் பெண் இன்பத்தில் அழுந்தியவர் என்பதை வலிசெய்து மேலும் அவரது இளமையைப் புலப்படுத்துவன. ஆனால் இப்பெண்கள் யார்? மனைவியாரா? பிற பெண்களா? மனைவியார் என்றால் ஒருமையிற் கூறியிருப்பாரே. அப்படி இல்லாது அவர் எங்கும் பன்மையிற் கூறிச் செல்வது பிற பெண்களையும் தழுவினார் என்பதைக் காட்டுகின்றது. அதனால் மணிவாசகர் பிற மகளிரோடு மண வாழ்க்கையையும் தழுவினாரா? என்பது சிந்தனைக் கேள்வி.

*"வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்*
*பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்*
*சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த*
*வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ*

என்கிறார் திருக்கோத்தும்பியில். இதில் வைத்த நிதி பெண்டிர், மக்கள், குலம், கல்வி என்பன உலகப்பித்துக்கள. பித்து - மயக்கம் உலகம். எனவே, அதனுள் தாமும் ஒருவர் என்பது வெளிப்படை. வேறுபல பாடல்களில் நிதி குலம், கல்விப்பித்துக்களைப்பதித்த மணிவாசகர் இதில் நினைவு வரப்பெற்றுப் பெண்டிர் மக்கள் என்னும் இரண்டையும் இணைத்துள்ளமை விலக்கன்று. இங்கே மக்கள் எனவே மனைவியாரையும் கொண்டு வாழ்ந்தார் என்பது புலனாகும். இந்நிலையில் இல்லறத் திவ்நிற்கும் ஒருவருக்கே அமைச்சர் பதம், தகுதி என்பதும் பாண்டியன் அதனை வற்புறுத்தியிருப்பான் என்பதும் நாம் கருத்திற் கொள்ளவேண்டியவை. எனவே அவர் மணவாழ்க்கையை ஏற்றவர் என்பதை நாமும் ஏற்போமாக. இது மறைமலை யடிகளுக்கும் உடன்பாடே.

மணிவாசகர் மனைவியாரோடு பிறமகளிரையும் தழுவினார் என்னும்போது அவருக்கு இழிவு வந்ததே என எவரும் எண்ணிவிடக்கூடாது. அவ்வாறு எண்ணின் பெரியபுராணம் போற்றும் திருநீலகண்டக் குயவனாருக்குத் தாம் அடியேன் எனச் சுந்தரர் பேசுவதும் அருணகிரிநாதரைத் திருவருணை முருகன் ஆட்கொண்டதும் பிழை படும் என அறிக. ஆலால சுந்தரருக்கிருந்த பெண்

மயக்கம் போக்கக் கயிலாயநாதர் அவரை மண்ணுக்கே விடுத்தது தவறாகாதெனின் இறைவன் சித்தப்படி மணிவாசகரும் பெண்ணின்பம் நுகர்ந்து துறவை மேற்கொண்டார் என்பதே முடிவாம்.

இதுவரை கூறியவை மணிவாசகள் பெருந் துறை இறைவரால் ஆட்கொள்ளப்படுமுன் அவருக்கு இருந்த உலகியல் வாழ்க்கை. ஆனால் அவர் ஆட்கொள்ளப்பட்ட பின் பெண்மயக்கத்தை வென்ற மைக்கும் பல பாடல்களில் சான்று தருகின்றார்.

*“ஈர்க்கிடை போகா இளமுலை மாதர் தம்*
*கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்.”*
*“வெருவரேன் வேட்டை வந்தால்”*
*“வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்”*
*“கிளி அனாக் கிளவி அஞ்சேன்”*

என்பன அவர் பெண் மயல் வென்ற முத்திரைகள். எனவே இது வரை சொல்லியவற்றிலிருந்து பக்தி யோடு மயக்கமும் இருந்த நிலையில் இறுதியில் பக்தியே வென்றது என்னும் முடிபுக்கு வருதலே உண்மையாகும்.

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பின் நிகழ்ந்த விசித்திரமான பெண்மயல் ஒன்றையும் மணிவார்த்தையார் திருச்சதகத்தில் தந்துள்ளார். பெண்மயல் என்னும் தலைப்பில் அதனையும் இங்கே கருத்திற்கொள்ளுதல் தவறாகாது.

*“முடித்த ஆறும் என் தனக்கே*
*தக்கதே முன் அடியாரைப்*
*பிடித்த ஆறும் சோராமல்*
*சோரனேன் - இங்கு ஒருத்தி வாய்*
*துடித்த ஆறும் துகில் இறையே*
*சோர்ந்த ஆறும், முகம் குறுவேர்*
*பொடித்த ஆறும் இவை உணர்ந்து*
*கேடு என்தனக்கே சூழ்ந்தேனே.”*

என்பது அப்பாடல். இது கவனத்துக்குரியது. ஒரு பெண்ணால் மணிவாசகருக்கு வந்து சூழ்ந்த கேடு ஒன்றை விபரிக்கின்றது. அவரோடு உரையாடு வதற்கு ஒருத்தி வாய் துடித்து நிற்கிறாள். அவளது ஆடையும் சிறிதே தளர்ந்துவிட்டது. அவனது முகத்தில் குறுவேர்வை துளித்துக் கிடக்கிறது. எனவே. இந்த மோகநிலையில் இருந்த பெண் யார்? அவள் எங்குள்ளவள்? என்னும் வினாக்கள் எழுகின்றன.

இதற்கு மறைமலையடிகள் பொருந்தாத் தொடர்பு ஒன்றை இணைக்கின்றார் அது. பெருந் துறையில் உபதேசம் பெற்ற பின் மணிவாசகர் தம் இல்லத்துக்கு வந்தபோது அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் இந்தநிலையில் இருந்தார் என்பதே.

*“இணை ஆர்திருவடி என் தலைமேல்*
*வைத்தலுமே*
*துணையான சுற்றங்கள் அத்தனையும்*
*துறந்தொழிந்தேன்.”*
*“எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம்*
*என்னுடைய*
*பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட”*

*“கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்*
*எனைக்கலந்து ஆண்டலுமே*
*அயல் மாண்டு அருவனைச் சுற்றமும் மாண்டு”*

என்பன அவர் பந்த மறுத்தமையைக் காட்டும் சுவடுகள். இவற்றுள் அவர் தம் மனைவியார் விலகி நிற்கின்றாரா? இனி அவர் தம் இல்லத்துக்குச் சென்றார் என்பதைச் சிந்தனைக்காக ஏற்றுக் கொள்வோம். உபதேசத்தின் பின் மணிவாசகரது கோலம் தவக்கோலமன்றி வேறு யாது? அவர் தவக்கோலத்திற் சென்றிருந்தால் மனைவியாருக்கு வியப்பும் வேதனையுமே தோன்றியிருக்கும். இந்த நிலையில் தமிழ்ப் பண்பாடு மிக்க துணைவியார்

மோகம் மோலோங்கிப் பாடலிற் காணும் இழிந்த பக்குவத்தில் இருந்தார் என்பதை எவர்தாம் ஏற்பர்? எனவே, இதற்கமைந்த சந்தர்பப்ம் எதுவாகலாம் என்பதைச் சிந்திப்போம்.

பெருந்துறைத் தொடர்பு மணிவாசகப் பெருமானுக்குப் பூரணத்துறவை வழங்கியது என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்த கருத்தாம். அதனால் துறவுக்குரிய கோலம் எது? கோவண உடையும் விரிசடையுமல்லவா? இக்கோலத்தை மணிவார்த்தையில் தருகின்றார் மணிவாசகர்.

*"ஓடும் கவந்தியுமே உறவு என்றிட்டு உள்கசிந்து*
*தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து"*

என்பது குலாப்பத்து அடிகள். இதில் அவரது துறவுக்கோலம் தெரிகின்றது. இங்கே ஓடு என்பது திருவோடு. அது பிச்சைப்பாத்திரம்; துறவிகளுக்கே உரியது. கவந்தி என்பது கோவணம் அல்லது கந்தை உடையே. அவர் கந்தையையே தரித்து நடமாடினார் என்றால் கிழியாத புத்தாடை ஒன்று கிடைத்திருப்பின் அதனை விரும்பி ஏற்று அணிந்திருப்பார் என்னும் கருத்துத் தோன்றவும் இடமுண்டு. அவர் புத்தாடையில் விருப்புற்றிருப்பின் அவரது கோலம் உண்மைத் துறவாகாது. எனவே அவர் கௌபீனதாரியாகவே தலந்தோறும் சென்றார் என்பது உண்மை. அவர் தலைமயிரை மழிக்காது விரிசடையராய்த் திரிந்தார் என்பதை

*"இருதலைக் கொள்ளியின் உள் எனும் பொத்து*
*நினைப்பிரிந்த*
*விரிதலையேனை விடுதி கண்டாய்"*

என்னும் நீத்தல் விண்ணப்ப அடிகள் உறுதி செய்கின்றன. ஆகவே அவர் திருவோடு தாங்கிக் கோவணதாரியாகவே பிச்சையேற்று நின்றவர் என்பது தெளிவு. இக்கோலத்துடன் ஆளுடைய அடிகள் "ஊரூர் திரிந்து" தலதரிசனம் மேற்கொண்ட நாள் ஒன்றில் அவர் சென்ற வழியில் அமைந்த மடத்திலோ சத்திரத்திலோ கோயிற் புறத்திலோ தனிமையில் இருந்த கூடா ஒழுக்கமுள்ள பெண் ஒருத்தி அடிகள் மீது மோகங்கொண்டு இந்த இழிந்த பக்குவத்தில் அமர்ந்திருந்தாள் எனத் தருணம் கொள்வதே பொருத்தமாகும்.

இங்கு ஒருத்தி மோகங்கொள்வதற்கு கோவணம் தரித்த தமது அந்தணக் கோலம் ஏதுவாய் நின்றதே என்பதுதான் மணிவாசகரின் வருத்தம். பாடலில் மனையாள் என்னாது ஒருத்தி என முன்பு அறியாத தொலைவிலுள்ள பெண்ணாகக் கூறியதனால் இப்பெண் அவர் தம் துணைவியார் அல்லர் என்பது புலனாகும். அப்பெண் வேட்கை கொள்ளுவதற்குத் தமது கோலம் காரணமாயிற்று. அதனால் இறைவன் தன் தொடர்பை நீக்கி முடித்துக் கொண்டான் என்பதே மணிவாசகரது பெருங் கவலை.

## உபதேசம் பெற்றது

வாதவூரர் பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்தவர் என்பதை மேலே சிறிது காட்டினோம். ஆனால் அவர் சோழநாட்டின் தெற்கெல்லையில் கடற்கரையை அண்டிய திருப்பெருந்துறைக்குச் சென்றதற்கான காரணம் எதுவும் திருவாசகத்தில் இல்லை. திருவருட்செல்வரான மணிவாசகர் ஒரு பரிபூரணத் துறவி. அவர் வேண்டேன் புகழ் என நின்றவர். அவரது பாடல்கள் அவரது உயர்ந்த பக்தியின் வெளிப்பாடுகளே. அதனால் மணிவாசகர் வழங்கிய திருவாசகம் அவரது நிறைவு வரலாற்றை வெளிப்படுத்தும் சுயசரித்திர நூலன்று. ஆகவே மணிவார்த்தையில் அவருடைய முழு நிறைவான வரலாற்றை நாம் எதிர்பார்ப்பது பயனற்ற சிந்தனையே. இருப்பினும் பெருந்துறைக்கு அவர் போந்தமையை அருத்தாபத்தியாற் காண்போம்.

*"ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே"*
*"என்னையும் பூதலத்தே வலிந்து ஆட்கொண்டான்."*
*"தேடி நீ ஆண்டாய்"*

*"- முன்வினைமிகக்*
*கழறியே திரிவேனை*
*பிடித்து முன்நின்று அப்பெருமறைதேடிய*
*அரும்பொருள் அடியேனை*
*அடித்து அடித்து அகங்காரம் தீற்றிய*
*அற்புதம் அறியேனே"*

என்பன கயிலைநாயகர் வாதவூரரை வலிந்து ஆட்கொண்டமையைக் காட்டும் சான்றுகள். இறைவன் பக்குவான் மக்களை ஆட்கொள்ளும் வகை இரண்டு. அவற்றுள் ஒன்று. இறைவனே வலிய வந்து ஆட்கொள்ளுவது இதனை மார் சாலசம்பந்தம் என்பர். மார்ச்சாலம் - பூனை; பூனைதானே வந்து தன் குட்டிகளை வாயாற் கௌவி எடுத்துச் செல்லும். அதனால் இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளுவதற்கு அது உவமை யாயிற்று. மற்றொன்று பக்குவான்மா தானே சென்று இறைவனை அடைதல். அதனை மற்கட சம்பந்தம் என்பர். மற்கடம் - குரங்கு; இதில் குட்டியே சென்று தாயைத் தழுவிச் செல்லும். அதனால் பக்குவான்மா இறைவனைச் சென்றடைதற்கு மற்கட சம்பந்தம் உவமையாயிற்று.

மேலே காட்டிய திருவாசகப் பகுதிகள் இறைவனே வலிய வந்து ஆட்கொண்ட மார்ச்சால சம்பந்தங்கள், "ஈர்த்தென்னை ஆட்கொண்ட" என்னும் தொடரில் ஈர்த்தல் - இழுத்தல் எனப் பொருள் தரும். முன் சம்பந்தமில்லாத ஒருவர் நாட்டமில்லாத ஒருவரை வலிந்திழுத்து ஆட் கொண்டார் என்பதே இதன் விளக்கம். ஆகவே ஈர்த்தல் என்பதில் பெருந்துறைக்கடவுளே பாண்டியன் நெஞ்சத்தில் குதிரை வாங்கும் எண்ணத்தை உதிப்பித்ததும் அதனால் பாண்டியன் தகுதி அறிந்து முதன் மந்திரியாராகிய வாதவூரரிடத்தில் அக் கருத்தை ஒப்படைத்த பின்னர் வாதவூரரைப் பெருந்துறை மார்க்கத்தில் வரச் செய்ததும் அடங்கும். இந்தளவில் அகச்சான்று ஒன்றையும் மணிவாசகர் உய்த்துணருமாறு தந்துள்ளார்.

*"பாண்டியன் தனக்குப் பரிமா விற்று*
*ஈண்டு கனகம் இசையப் பெருஅது'*

என்பது கீர்த்தித்திருவகவற்பகுதி. இதில் பெருந் துறை வணிகர் குதிரை விற்றதும் பாண்டியன் அவற்றை வாங்கியதும் வெளிப்படை. இதற்கு முன் பாண்டியன் ஒருவனுக்கு இறைவன் குதிரை விற்ற சம்பவம் எங்கும் கூறப்படாமையால் இந்நிகழ்வு மணிவாசகர் வரலாற்றுக்குரியதே என்பது உறுதி. பெருந்துறையானே குதிரை வணிகர் என்பதற்கு "பெருந்துறையான் கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி" என்னும் அம்மானைப் பகுதி ஆதாரமாம். பாண்டியனுக்கும் பெருந்துறை வணிகருக்கும் முன்பு தொடர்பு எதுவும் இருந்ததில்லை என்பதால் புதிய தொடர்பை உண்டாக்கியவர் குதிரை வாங்கச் சென்ற வாதவூரரை என்பதிலும் ஐயமில்லை. ஆகவே வாதவூரர் சோழநாட்டுக் கடற்கரை நோக்கிப் பெருந்துறையை வழியாகக் கொண்டு அங்குச் சென்றார் என்பது வரலாற்றுக்கு உடன்பாடாம்.

மணிவாசகர் பெருந்துறைக்குச் சென்ற போது அங்கே கோயில் இல்லை என்றும் குருந்த மரச்சோலையிலேயே அவர் ஞானாசாரியாரைத் தரிசித்தார் என்றும் கூறுவர் மறைமலையடிகள். அவர் அங்கே கோயில் இல்லை என்பதற்குக் கூறும் காரணம் கோயிலுள் இன்று வரை சிவலிங்கம் இல்லை என்பதே. ஆனால் மணி வாசகப்பெருமான்

*"திருப்பெருந்துறை உறைகோயிலும் காட்டி"*
- திருப்பள்ளி

*"தேர்ஆர்ந்த வீதிப் பெருந்துறையான்"*

- பூவல்லி

*"புலையனேனை உன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய்"*

- திருச்சதகம்

எனவரும் மணிவார்த்தைகளால் அங்கு முன்னமே கோயில் இருந்தது என்கிறார். இங்கே தேர் ஆர்ந்த வீதி இறைவன் எழுந்தருளிவரும் வீதியல்லாது இராஜவீதியையா? குறிக்கும்.

மணிவாசகர் வாய்மொழியல்லாது கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தப் பெருமான் பெருந்துறைக்குப் பதிகம் பாடிய தோடு க்ஷேத்திரக் கோவையிலும் பெருந்துறையைத் தொட்டுக் காட்டி யுள்ளார். அங்கே "பேணுபெருந்துறை என்கிறார். அவர் மணிவாசகரும் திருவம்மானைப் பத்தாம் பாடலில் பேணு பெருந்துறை என்கிறார். சம்பந்தர் அன்றி நாவேந்தரும் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை காம்பீலி" என வைப்புத்தலமாகப் பொறித்திருத்தலையும் மறை மலையடிகள் மறந்தார் போலும்.

பெருந்துறையில் முன்னரே கோயில் இருந்தது என்பதற்கு மேலும் ஆதாரமுண்டு. பரமாசாரியர் ஆட்கொண்ட பின் அவர் கட்டளைப்படி குதிரைகள் வாங்குவதற்காகக் கொண்டு வந்த பொன் சிவப் பணிக்கும் அறப்பணிக்கும் செலவு செய்யவேண்டிய தாயிற்று. அந்நிலையில் அந்தப் பொன் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது? என்னும் கேள்வி எழுகின்றது. பரமாசாரியருடன் வந்த அடியவர்கள் மானுடரோ எனில் அவர்கள் சில நாள்கள் பெருந்துறையில் தங்கியிருந்து நீங்க வந்த சிவகணத்தவர்கள். எனவே அப்பொன்னைப் பெற்றுக் கொண்டவர்கள் பெருந்துறையில் நெடிதே வாழ்ந்திருந்த அவ்வூர் மக்களே. மக்கள் வாழ்ந்தனர். எனவே அங்கே கோயிலும் இருந்தது என்பது தெளிவாம். அதனால் அந்தப் பொன் கோயில் ஆதீனத்தாரிடத்தோ மெய்யடியார் கையிலோ வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கொள்ளல் ஏற்புடையதே. இச்சமயத்தில் மணிவாசகரே அப்பொன்னைச் செலவு செய்தார் எனக் கொள்ளின் "உன் கோயில் வாயிலில் பிச்சன் ஆக்கினாய்" என்னும் திருச்சதகப்பகுதியும் பிறவும் அவர் செயலிழந்து நின்றமையை வெளிப்படுத்தி அவர் பணியை மறுக்கின்றன.

பொன் செலவு செய்யப்பட்டது என்பதற்கும் மணிவாசகர் ஆதாரம் தந்துள்ளார்.

*"அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ"*

என்கிறார் குழைத்த பத்தில். இதில் அவரது உடைமை தெரிகிறது. உடைமை பாண்டியனுக்கே உரிமையாயினும் அந் நிகழ்வில் அது மணிவாசகர் கையில் இருந்த வகையால் அதனைத் தம் உடைமை யாக்கி அவர் கூறினார்போலும்.

இனி வரலாற்றுக்கு வருவோம். மணிவாசகரை ஈர்த்த கடவுள் யார்? பெருந்துறைப் பெருமானா? தில்லைக்கூத்தனா? கயிலைக் கடவுளா? வேறு தலத்துத் தெய்வமா? என்பன வினாக்கள்.

*"நாயி னேனை நலம்மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருக என
ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி"*

என்பது மேலும் நீண்டு பெருந்துறைச் சம்பவங்கள் பல சொல்லி

*"பொலிதரு புலியூர்ப் புக்கு இனிது அருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே"*

என நிறைவெய்துகின்றது கீர்த்தித் திருவகவலில். இங்கே வினை முதல் கைலைக் கிழவோன். எனவே ஈர்த்து ஆட்கொள்ள வந்தவர் கயிலைக் கடவுளே என்பது தெளிவு.

*"மால் அயன் வானவர்கோனும் வந்து*
*வணங்க அவர்க்கு அருள்செய்த ஈசன்*
*ஞாலம் அதனிடை வந்திழிந்து"*

எனவும்

*"எம்புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து"*

எனவும்

*"நிலம் தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி"*

எனவும் வரும் மணிவார்த்தைப் பகுதிகள் உள்ள இழிந்து என்னும் பதம். ஈர்த்தபெருமான் உயர்ந்த தானத்தில் உள்ளவன் என்பதை உறுதி செய்துள்ளது. எனவே அந்த உயர்ந்த இடம் திருக்கயிலையன்றி வேறுயாதாகும். "மால் அயன் வானவர்கோன்" ஆதியோர் எனப் புராணங்கள் அனைத்தும் பேசுவதும் இந்த அகச்சான்று நோக்கிப்போலும்.

கயிலைப் பெருமான் மணிவாசகரை ஆட் கொள்ள வந்தமை மேலும் சிந்தனைக்குரியது. சிவனடியார் வரிசையில் சுந்தரருக்கு மட்டும் முன்னைய திருக்கயிலைத் தொடர்பு சொல்லப் பட்டுள்ளது. அத்தகைய தொடர்பு மணிவாசகருக்கும் இருந்ததோ? என்னும் ஐயத்தைத் தோற்றுவிக்கு மாறு மணி வார்த்தையில் முளை ஒன்று சிறிதே தெரிகிறது.

*"நீக்கி முன்எனைத் தன்னொடும் நிலாவகை*
*குரம்பையிற் புகப்பெய்து"*

என்பது அதிசயப்பத்துப்பகுதி. இங்கு "முன் எனைத் தன்னொடும் நிலாவகை நீக்கி"என்பது மணிவாசகர் கயிலை நாதரோடு முன்பு வாழ்ந்தார் என்பதையும் ஏதோ சிறு தவறு நிகழ்ந்தமையால் பெருமானால் நீக்கப்பட்டுக் குரம்பையுட் புகவேண்டி வந்தது என்பதையும் நினைக்கச் செய்கிறது.

கயிலை நாதர் மானிட வடிவந் தாங்கி வந்தார் என்றும் அந்த வடிவமும் அந்தண வடிவே என்றும் புராணங்கள் கூறும்

*"ஈறு இலாத நீ எளியை ஆகிவந்து*
*ஒளிசெய் மானிடம் ஆகநோக்கியும்*

- திருச்சதகம்.

*"பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து*
*பார்ப்பான் என"*

- சென்னிப்பத்து

*"உருநாம் அறியவோர் அந்தணனாய்*
*ஆண்டு கொண்டான்*

- திருத்தெள்ளேணம்

என்பன இச்செய்திக்குச் சான்றுகளாம்.

கயிலைச்சிவன் மணிவாசகரை ஆட்கொள்ள அடியார் கூட்டத்தோடும் எழுந்தருளி வந்தார் என்பது நாம் நன்கு அறிந்ததே. அதனையும் பல இடங்களில் வழங்கியுள்ளார் மணிவாசகர்.

*"அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும் நீயும்*
*அங்கு எழுந்தருளி இங்கு எனை இருத்தினாய்*

- திருச்சதகம்

*"கட்டு அறுத்து எனை ஆண்டு கணஆரநீறு*
*இட்ட அன்பரொடு யாவரும் காணவே*
*பட்டி மண்டபம் ஏற்றினை"*

- திருச்சதகம்

*"பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து*
*பார்ப்பான் என"*

- அற்புதப்பத்து

*"கலந்து நின்னடியாரோடு அன்று வாளா
களித்திருந்தேன்"*

- பிரார்த்தனை

என்பன அதன் வெளிப்பாடுகளே. இப் பாடல் களில் தோன்றும் அங்கு, அன்று என்னும் சுட்டுக்கள் பெருந்துறையையும் இறந்த காலத்தையும் கொண்டு ள்ளன என்பதைக் கருத்திற் கொள்க. கயிலாயநாதர் மண்ணிடை இழிந்து வந்த படியால் அவருடன் வந்த அடியார்களும் சிவகணத்தவர் என்பது தெளிவாம். அக்காலத்தில் தமிழ் மண்ணில் வாழ்ந்த அடியார்கள் எனக் கொள்ளல் சிந்தனைக்குப் பொருந்துவதன்று. இறைவனோடு வந்த அடியார்களைப் பூத கணநாதர் என்கிறார் கடவுள் மாமுனிவர்.

அடியார் சூழ வந்த பெருமான் பெருந்துறைக் கோயிலுக்குப் புறத்தேயுள்ள சோலையின் நடுவே நின்ற குருந்த மர நிழலில் தங்கினார் என்பதை அருட்பத்து வெளிப்படுத்தியுள்ளது.

*"செல்வத் திரும்பெருந்துறையில்
நிறைமலர்க்குருந்தம் மேவியசரி
ஆதியே"*

எனப் பதிகப்பாடல் ஒவ்வொன்றிலும் குருந்த மரத்தை நினைக்கின்றார் மணிவாசகர். மேலும், அவர் ஞானாசாரியரைத் தரிசித்தபோது குருந்த மலரால்நிறைந்திருந்த காட்சியையும் பாடல்தோறும் தந்துள்ளமை அவரால் அதனை மறக்க முடிவில்லை என்பதையும் புலப்படுத்துகின்றது. ஆட்கொள்ள வந்த பெருமான் கோயில் இருக்கவும் உள்ளே சென்று தங்காது புறத்தே சோலையில் தங்கிச் சிவாகமங்களை ஓதியமை அவ்வழியே வந்த வாதவூரரின் செவிகளில் அவ்வொலி சென்று விழல் வேண்டும் என்னும் திருவுள்ளம் போலும். இறைவன் எழுந்தருளி வந்து குருந்தின் கீழ் அமர்ந்தமையால் அதுவே பெருந்துறைக் கோயிலின் பண்டைய தல விருட்சமாவதுடன் இன்றும் தலவிருட்சமாய் நிற்பதையும் நாம் அறிகின்றோம்.

சிவபிரான் இதற்கு முன்னரும் பழவடியார் தொகையை "ஓதஉலவா ஒரு தோழம்" எனக் கொண்டவர். தோழம் என்பது ஒரு பேரெண்: அந்த வரிசையில் தம்மைப் புதியவன் என்கிறார் மணிவாசகர்.

*"இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னில் அல்லால்
விருந்தினனேனை விடுதிகண்டாய்"*

- நீத்தல்

*"அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை
இருத்தினாய் முறையோ? என் எம்பிரான்
வம்பனேன் வினைக்கு இறுதியில்லையோ?"*

- திருச்சதகம்.

என்னும் பகுதிகளில் தம்மைப் புதியவனாகக் காட்டுகின்றார் அவர். இங்கு விருந்தினன், வம்பனேன் என்னும் பதங்கள் புதியவன் என்னும் பொருள் தருவன. இதனையே திருவெம் பாவையிலும் நீராடச் செல்லும் பெண்கள் வாய்மொழியில்,

*"புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற்
பொல்லாதோ"*

என்கிறார் அடிகளார்.

இனி உபதேசம் நிகழ்ந்தமையைக் காண்போம். குருந்த மரநிழலில் சிவஞானபோத உபதேசம் நிகழ்ந்ததாகக் காட்டுவர் கடவுள் மா முனிவர். ஆனால் அது நிகழவில்லை என்பதைப் புராண முரண்பாடுகள் என்ற தலைப்பில் முன்பு தந்துள் ளோம். இருப்பினும் சிறியதோர் உபதேசமும்

பிறவும் நிகழ்ந்தமையைத் திருவாசகப்பாடல்கள் ஆங்காங்கு தெரிவிக்கின்றன.

"ஆண்டவாணரும் பிறரும்
மற்று யாவரும் நின் மலரடி காணா
மன்ன! என்னை ஓர் வார்த்தையுள் படுத்து
பற்றினாய்."

- செத்திலாப்பத்து

"நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன் செய்த பொய்யறத் துகள் அறுத்து
எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி"

- அதிசயபத்து

என்னும் மணிவார்த்தைகள் தரும் "ஒரு வார்த்தையுள் படுத்துப் பற்றினாய்" நுண்ணிய நொடியன சொற்செய்து" என வரும் கூற்றுக்களால் நீண்ட உபதேசம் நிகழவில்லை; மற்று சிறிய உபதேசமே நிகழ்ந்தது என்பது வெளிப்படை. ஒரு வார்த்தையுட்படுத்து" என்பதால் வாசிக தீட்சையும் 'நோக்கி' என்பதால் நயன தீட்சையும் இடம்பெற்றவாறாம். மேலும் திருச்சதகத்தில் தோன்றும்.

"காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை"

என்பதும் நயன வாசிக தீட்சைகளுக்கான சுவடே. நீண்ட உபதேசம் இடம் பெறாவகையால் மணிவாசகரது பரிபக்குவநிலையும் தோன்றி நின்றது. மேலே காட்டிய ஒரு வார்த்தை எது என்பதையும் மணிவாசகப்பெருமான் சில இடங்களில் தொட்டுக் காட்டியுள்ளார்.

"ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே"

என்பது அச்சோப் பதிகம். இதில் ஓங்காரமே ஒரு வார்த்தை. உபதேசப்பொருள் ஓங்காரமே என்பதை

"பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப்பிரமம் வெளிப்படுத்த
அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே."

என்னும் திருவார்த்தை மேலும் வலி செய்கிறது. பிரணவம் எனவே அதனுள் அடங்கி நிற்கும் தூல சூக்கும பஞ்சாக்கரங்கள் தரும் மெய்யுணர்வையே அடிகள் பெற்றார் என்பது கருத்தாம். பஞ்சாக்கர மெய்யுணர்வு இதயத்தில் அழுந்தி நின்றதை

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"

"போற்றி ஓ நமச்சிவாய புயங்கனே
மயங்குகின்றேன்."

"எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும்
"நமச்சிவாய என்று உன் அடி பணியாப்பேயன்"

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்"

என்பன புலப்படுத்தியுள்ளன.

பக்குவ நிலையில் நிற்கும் சீடர் ஒருவரது மும்மலங்களையும் ஒரு சேரப்போக்குவன ஞானாசாரியரது அருள் நோக்கும் பரிசமுமே. பரிசம் - மெய் தீண்டுதல். அவ்விரண்டினாலும் தம்முனைப்படங்கியமையையும் மணிவாசகர் தந்துள்ளார்.

"கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்
கலந்தாண்டலுமே

*அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு*
*அவனியின்மேல்*
*மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு*
*என்னுடைய*
*செயல் மாண்ட வாபாடி - தெள்ளேணம்*
*கொட்டாமோ"*

*"வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர்*
*மணகெடினும்*
*தான் கெட்ட லின்றிச் சலிப் பறியாத்*
*தன்மையனுக்கு*
*ஊன்கெட் டுயிர்கெட்டு உணர்வுகெடடு என்*
*உள்ளமும் போய்*
*நான் கெட்ட வாபாடி - தெள்ளேணம்*
*கொட்டாமோ"*

என்பன திருத்தெள்ளேணப் பாடல்கள். கலந்து ஆளுதல் என்பது பார்வை, பரிசம் என்னும் இரண்டுமாம். பர்வை - நயனதீட்சை.

திருவடித்தீசை பெற்றதையும் அவர் வழங்கி யுள்ளார்

*"என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்*
*சென்னியில் வைத்த சேவக போற்றி"*

*"இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே*
*துணையான சுற்றங்கள் அத்தனையும்*
*துறந்தொழிந்தேன்"*

என்பன திருவடித்தீட்சையைக் காட்டுவன. மணிவாசகர் போலவே அப்பர்சுவாமிகளும் தாம் திருவடித்தீட்சை பெற்றதை

*"வானோர்*
*இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற*
*இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி*
*நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்*
*நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே"*

எனக் காட்டியுள்ளார்.

குருதேசிகர் தம் சீடனது நெற்றியில் தமது திருக்கரந் தீண்டி விபூதி சாத்தலும் ஒரு தீட்சை யாகும். இது சிவகஸ்த மத்தக சம்யோகம் எனப்படும். சிவகஸ்தம் - சிவனது திருக்கரம்; மத்தகம் - நெற்றி; சம்யோகம் - இணைதல்; பெருந்துறையான் தமக்கு நீறு சாத்தியதை

*"முன் ஈறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்*
*பல்நூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத்*
*தன் நீறு எனக்கருளி"*

- திருப்பொன்னூசல்

*"திருநீறே பூசப்பட்டேன்"*

- திருச்சதகம்

என்னும் பகுதிகளால் வழங்கியுள்ளார். பூசப் பட்டேன் என்பது செயப்பாட்டுவினை. அது பரமாசாரியர் திருநீறு சாத்தியதை வெளிப்படுத்துகிறது. அதனால் பெருந்துறையே நீறு பூசப்பட்டதலம் என்பதும் பெற்றாம். இதுவரை கண்ட முடிபுகளால் மணி வாசகர் பெருந்துறையில் ஞானாசாரியரிடத்தில் சிறியதோர் உபதேசம், நயனதீட்சை, திருவடித் தீட்சை, பரிசதீட்சை என்னும் நான்கையுமே பெற்றார் என்பது தெளிவாம்.

உபதேசம் தீட்சை என்பவற்றை வழங்கி ஆட்கொண்ட பின் பெருந்துறை இறையவர் தம் முடன் வந்த அடியார் கூட்டத்தோடு தம்மையும் கூட்டியதை அதிசயப்பத்தில்

*"ஆண்டு தன் அடியாரில் கூட்டிய*
*அதிசயம் கண்டாமே"*

எனப் பாடல்தோறும் தந்ததோடு அமையாது

*"அறவை என்று அடியார்கள் தங்கள்*
*அருள் குழாம் புகவிட்டுநல்*
*உறவுசெய்து எனை உய்யக் கொண்டபிரான்"*

சென்னிப்பத்திலும் பதித்துள்ளார் அவர் இங்கு அறவை என்பது திக்கற்றவன் என்னும் பொருளாம்.

ஆட்கொள்ளப்பெற்ற பின்பு அடிகளார் நிலை தம்வசம் இழந்த நிலையாம். அதனை பித்தர் குழந்தைகள் பேய்க் கோட்பட்டோர் நிலை என்பர் சித்தியார் ஆசிரியர். இது

*"எனை நான் என்பது அறியேன்*
*பகல் இரவு ஆவதும் அறியேன்*
*மனவாசகம் கடந்தான் எனை*
*மத்த உன்மத்தன் ஆக்கி"*

- உயிருண்ணி

*"உன்கோயில் வாயிலில் பிச்சன் ஆக்கினாய்*

- சதகம்

என்னும் அடிகளில் வெளிப்படுத்துகின்றது. குதிரைகள் வாங்கியமை சார்பாகப் பாண்டியன் எழுதிய முடங்கல் கண்ட வாதவூரர் *"நாம் சிவனுக்கும் அவன் அடியார்க்குமே அடியவர்கள் வேறு எவருக்கும் அடிமையர் அல்லோம்"* எனக் கூறியதாகப் புராணம் கூறும். அக்கருத்தும் *"யாம் ஆர்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்"* என்னும் வரிகளில் சிறியதே அரும்பி நிற்பதையும் நாம் காணலாம். அஃதன்றேல் முன்னைய குடிமைநிலை பின்னர் நினைவுக்கு வந்தபோது அடிகள் இவ்வாறு பாடியுமிருக்கலாம் எனக்கொள்க.

## நரிப்பரிகள் மதுரைக்கு வருதல்

பெருந்துறை உபதேசத்தை அடுத்து மணி வாசகர் வரலாற்றில் நிகழ்ந்த அருள் நிகழ்ச்சிகள், இறைவன் குதிரைச்சேவகனாக வந்ததும், அவன் கொண்டு வந்த குதிரைகள் மீளவும் நரிகளாக மாறியதும் வைகையில் வெள்ளம் பெருகவே இறைவன் அதனை அடைத்து அடிபட்டு மறைந்ததும் ஆகும். இவற்றுள் முதலில் இறைவன் குதிரை வணிகனாக வந்ததைச் சிந்திப்போம்.

இதுவரை நமக்குக் கிடைத்த திருவாசகத்தில், கீர்த்தித்திருவகவலிற் பெரும்பகுதி மணிவாசகரது வரலாற்றை ஓரளவு வாய்விட்டுக் கூறும் பகுதியெனலாம். அதனையும் இரண்டு பகுதி களாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்று இறைவன் நேரே தோன்றி அவருக்குக் காட்சி கொடுத்த திருவிளையாடல்களைக் கூறுவது. மற்றொன்று அவர் தலயாத்திரை செய்து வழிபட்ட கோயில்களை விபரிப்பது. திருவிளையாடற் பகுதியில்

*"அரியொரு பிரமற்கு அளவு அறி ஒண்ணான்*
*நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்*
*ஆண்டுகொண்டு அருள் அழகுறு திருவடி*
*பாண்டியன் தனக்குப் பரிமா விற்று*
*ஈண்டு கனகம் இசையப் பெறாஅது*
*ஆண்டான் அங்குஓர் அருள்வழி இருப்பத்*
*தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்*

*அந்தணன் ஆகி ஆண்டுகொண் டருளி*
*இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்*
*மதுரைப் பெருநல் மாநகர் இருந்து*
*குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்"*

என்பது நரிக்குதிரைகள் வந்த வரலாறு குறிப்பது.

*"ஆங்கு அது தன்னில் அடியவட்கு ஆக*
*பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசு"*

என்பது வந்திக்காக மண்சுமந்த வரலாற்றுப் பகுதி. இவை போக எஞ்சியவை மணி வாசக ருடைய தல தரிசனத்தோடு பரம்பொருளின் ஏனைய கீர்த்திகளையும் தருவது. மேலே காட்டிய அகவலில்

*"பாண்டியன் தனக்குப் பரிமா விற்று*
*ஈண்டு கனகம் இசையப் பெறாஅது"*

என்னும் அடிகள் சிந்தனைக்குரியவை. இங்கே ஒருவர் குதிரையை விற்றவர். மற்றொருவர் வாங்கியவர்; குதிரை விற்றவர் கூத்தவள்ளல்; வாங்கியவன் பாண்டியன்; பாண்டியனுக்கும் கூத்தனுக்கும் முன்பு தொடர்பு எதுவுமில்லை. அந் நிலையில் தொடர்பை ஏற்படுத்தியவர் வாதவூரரே என்பது எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். எனவே, இந் நிகழ்வு மணிவாசகரோடு சம்பந்த முடையதே. இதனை இடம்நோக்கி முன்பும் கூறியுள்ளோம்.

இங்கே குதிரை விற்றவர் அதற்குரிய பொன் னைப் பாண்டியனிடமிருந்து பெறவில்லை என்பது முன்னரே அப்பொன் வாதவூரரிடம் ஒப்படைக்கப் பட்டதைக் காட்டுவதோடு நரிக் குதிரைகளுக்குப் பொன் பெறுவது தகாது என்பதையும் குறிப்பால் உணர்த்துகின்றது.

பெருந்துறைக்கு நேர் மேற்கில் இருப்பது மதுரை. பெருந்துறையிலிருந்து குதிரைகள் மேற்கு நிலமாகிய மதுரைக்கு வந்தமையை

*"குதிரையைக் கொண்டு குடநாடதன்மிசைச்*
*சதுர்படச் சாத்தாய்த் தான் எழுந்தருளியும்"*

என்பது புலப்படுத்துகின்றது. சதுர்-சாமர்த்தியம்; அது பெருந்துறையான் தன்னை இறைவன் எனக் காட்டாது குதிரை வணிகன் எனக்காட்டிய சாமர்த்தியம். அது போலவே குடநாடும் கிழக்கேயுள்ள பெருந் துறைத் திசையைக் காட்டியவாறாம். மேலும் குதிரையைக் கொண்டு வந்தவர் பெருந்துறையானே என்பதை

*"வண்சாத்தினோடும்*
*சதுரன் பெருந்துறை ஆளி அன்று*
*மாங்கையர் மல்கு மதுரை சேர்ந்த*
*வகையறிவார்"*

- திருவார்த்தை - 10

*"மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறைமேய தென்னவன்"*

- குயிற்பத்து - 7

என வருபவற்றோடு வேறு பலவும் வலியுறுத்தும். இங்கு பெருந்துறை வள்ளலே மணிவாசகருக்காகக் குதிரைகளைக் கொண்டு வந்தாரன்றி வேறு தலத்துக் கடவுளர் அல்லர் என்பதும் பெறப்பட்டது. தேவர்களே ஏனைய வணிகக் கூட்டத்தவர் என்பதை 'சாத்து' என்னும் சொல் புலப்படுத்தியுள்ளது. சாத்து - வணிகக் கூட்டம்

குதிரைகள் எல்லாம் மாயம்வல்ல நரிகள் என்பதை

*"மாய வனப்பரி மேற் கொண்டு"* - பாண்டிப்பதிகம்
*"நரியைக் குதிரைப்பரியாக்கி* - ஆனந்தமாலை
*" நரிகள் எல்லாம்*

*பெருங்குதிரை ஆக்கியவாறு என்னே உன்பேரருளே"*

- திருவேசறவு

என்பனவும் பிறவும் வெளிப்படுத்துகின்றன. காட்டு நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டு வந்தமை குறும்புச் செயல். அத்தகைய குறும்பன் ஒருவன் சட்டையும் அணிந்து தாவிச் செல்லும் குதிரை மீது வந்தான் என்பதை

*"பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேற் கொண்டு"*

- அன்னைப்பத்து

என்னுந் தொடர் தருகின்றது. பள்ளி - குறும்பன் என்னும் பொருளாம்.

பெருந்துறைப்பெருமான் தமக்காகவே குதிரைகளைக் கொண்டு வந்தான் என்பதையும் அப்போது அந்த வணிகக் கோலத்தைத்தாம் நேரில் தரிசித்ததையும் தருகின்றார் மணிவாசகர்.

*"ஞாலம் மிகப் பரிமேற்கொண்டு நமை ஆண்டான்"*

- திருப்பொன்னூசல்

*"சீரார் பெருந்துறையான்*
*பந்தம் பறியப் பரிமேற்கொண்டான் தந்த*
*ஆனந்தம்*

- திருவம்மானை

என்பன அடிகளாரை ஆட்கொள்ளவே இறைவன் பரிமேல் வந்தான் என்பதற்குச் சான்றுகளாம்.

*"பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்*
*கொற்றக்குதிரையின்மேல் வந்தருளி"*

- திருவம்மானை

*"மா அர ஏறி மதுரைநகர் புகுந்தருளித்*
*தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்*
*கோவாகி வந்து எம்மைக் குற்றேவல் கொண்டருளி*

- திருப்பூவல்லி

*"நன்பொன் மணிச்சுவடு ஒத்த நற் பரிமேல் வருவானை*

- குயிற்பத்து

*"மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறையான்*

- குயிற்பத்து

என்பனவும் பிறவும் மணிவாசகர் நேரில் தரிசித்த காட்சிகள். இங்கே, போந்தருளி சென்றருளி என்னாது வந்தருளி, வந்து, வருவான், வந்த எனக் கூறியமை தன்மை இடத்தைக் காட்டுவதாம். இங்கு தன்மை இடத்தில் நின்றவர் மணிவாசகரன்றிவேறு எவருமல்லர். மேலும் பெருந்துறையானையும் அடிகள் தோறும் காட்டும் வகையால் பிறர் வாய்க்கேளாது தாமே அங்கு நின்று தரிசித்தார் என்பது மறுக்கொணா உண்மை.

இறைவனே குதிரை வணிகனாய் வந்தவன் என்பதைப் பாண்டியன் அறிந்தானல்லன் என்பதை

*"ஈண்டிய மாய இருள்கெட*
*எப்பொருளும் விளங்கத்*
*தூண்டிய சோதியை மீனவனும்*
*சொல்ல வல்லான் அல்லன்"*

என்பதைத் திருப்பாண்டிப் பதிகம் தந்துள்ளது. பின்னரும் பாண்டியனுக்கும் நேரே தரிசனம் கொடுத்தமையால் அவனுக்கு மறுபிறப்பு இனியில்லை; அது ஓடிவிடும் என்பதோடு அவனது முந்திய பிறப்பின் தவச்சிறப்பையும்

*"கதிரை மறைத்தன்ன சோதி*
*கழுக்கடை கைப்பிடித்துக்*
*குதிரையின் மேல் வந்து கூடிடுமேல்*
*குடிகேடு - கண்டீர்*
*மதுரையர் மன்னன் மறுபிறப்பு*
*ஓட மறந்திடுமே"*

என்னும் வரிகளால் காட்டுகின்றார் மணிவாசகர்.

இறைவன் கொண்டு வந்த குதிரைகள் இராக்காலமானதும் முன்போல் நரிகளாகி மதுரை மக்களுக்கு அளவில்லாத் தொல்லைகளைக் கொடுத்தன என்பதையும் கண்கூடாகக் காட்டியுள்ளார்.

*நரியைக் குதிரைப் பரியாக்கி*
*ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்*
*பெரிய தென்னன் மதுரை எல்லாம்*
*பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்"*

என்பது ஆனந்தமாலை. இங்கு மதுரையெல்லாம் பிச்சது ஏற்றும் என்னும் தொடர்மொழி இறைவன் நடத்தி வந்த குதிரைகள் திரும்பவும் நரிகளாகி, பந்திகளில் முன்னரே கட்டப்பட்டு நின்ற குதிரைகளைக் கொன்றும் பின்னர் வீதிகள் தோறும் வருவார் போவாரை எதிர்த்தும் தம்மைத் தாக்க வந்தவர்களைத் தாமும் தாக்கியும் மதுரைப்பதி முழுவதையும் பித்தநிலைக்குக் கொண்டு வந்தமையைப் புலப்படுத்துகின்றதன்றோ.

தேவாரம் பாடிய மூவரும் பிறரும் சிவபெருமான் எழுந்தருளும் ஊர்தி இடபமே என்பர். ஆனால் மணிவாசகரோ குதிரையையே திருத்த சாங்கத்திலும் ஊர்தியாகக் கொள்வதோடு ஏனைய இடங்களிலும் அவரைப் பரிமேலழகராகக் காணுகின்றார். எனவே, பெருந்துறையான் குதிரைகளைக் கொண்டு வந்தது மணிவாசகர் பொருட்டே என்பது தெளிவாம்.

இனி நரிகளே குதிரைகளாக வந்தது பற்றிச் சிறிது சிந்திப்போம். பெருந்துறை நாதர் மதுரைக்குக் குதிரைகள் வரும் என்று சொன்னாரன்றி நரிகளே குதிரைகளாக வரும் என்று புகன்றாரல்லர். நரிகளே குதிரைகளாக வரும் என்று வாதவூரருக்கு உண்மை சொல்லியிருப்பின் அவர் செய்வது யாது? எனத்தெரியாது கலங்கியிருப்பார். ஆகவே, வாதவூரருக்குக் கலக்கம் கொடுக்காமலும் பாண்டியனே வாதவூரரின் திருவருள் மலர்ந்த பக்குவநிலையை அறியும் பொருட்டும் இறைவன் திருவுளத்திருந்த ஒரு திருவிளையாடல் என அதனைக் கொள்வோம்.

பெருந்துறைப் பெருமான் நரிகளுக்குப் பதிலாக வேறு விலங்குகளைக் குதிரைகளாக மாற்றுதல் சாலுமே. ஏன் அவ்வாறு அவர் செய்யவில்லை என்னும்போது எந்த மிருகமும் குதிரையாக மாறிய பின் அது இலாயத்திற் சங்கிலியாற் கட்டப்படாது தோல்வார்க்கயிற்றினால் கட்டப்படும். இந்த மதுரை நிகழ்வில் இரவு வந்ததும் அக்கயிறு அறுக்கப்படல் வேண்டும். அது இறைவன் சித்தம். எனவே அக்கயிற்றை அறுத்துக் கொள்ள நரிகளுக்கே இயலும். அதனால் நரிகளே இறைவன் தேர்வாயின.

இதற்கு நாய்களும் பொருந்துமெனின் அவை ஊருடன் தொடர்புறுதலால் வேண்டாவாயின. புலி முதலாய கொலை விலங்குகளைத் தேர்வு செய்திருக்கலாமேயெனின் அவற்றால் விளையும் பேராபத்தும் அவலமும் சொல்லில் அடங்காவாதலின் அவையும் திருவுள்ளத்துக்கு வேண்டாவாயின எனத் தெளிவோம். மேலும் இந்த நரிக்குழாம் சிவபிரானால் நவமாகச் சிருட்டிக்கப்பட்டவையல்ல; காட்டு நரிகளே குதிரைகளாயின என்பதையும் 'மாயவனப்பரி' என்னுந்தொடர் வெளிப்படுத்துமாறும் காண்க.

## சொக்கநாதர் மண் சுமந்தமை

மீளவும் கீர்த்தித் திருவகவலுக்கே செல்வோம்

*"மதுரைப் பெருநல் மாநகர் இருந்து*
*குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்*
*ஆங்கு அதுதன்னில் அடியவட்கு ஆகப்*
*பாங்காய் சுமந் தருளிய பரிசும்."*

என்பது மணிவாசகரின் வரலாற்றுப் பகுதி. இதில் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. முதலில் நிகழ்ந்தது சொக்கநாதர் மதுரையில் குதிரைச்சேவகனாக வந்தமை. அடுத்தது மண் சுமந்த செயல். இரண்டையும் அடுத்தடுத்து மதுரையில் ஒருவரே நிகழ்த்தினார் என்பதை 'ஆங்கு அது தன்னில்' என்னும் சுட்டுக்கள் புலப்படுத்துகின்றன. இவற்றில் 'அது தன்னில் என்பது மதுரையாகிய இடம் சுட்டியது. 'ஆங்கு'

என்பது காலச்சுட்டு. அப்பொழுது என்பது பொருள். ஆங்கு என்பது காலம் சுட்டுவதை வேறு இலக்கியங்களிலும் காண்க. எனவே, இரு நிகழ்வுகளும் தொடர்ந்து நிகழ்ந்தவை என்பதும் அவற்றை மணிவாசகப்பெருமான் நேரில் தரிசித்தார் என்பதும் பெற்றாம். சொக்கன் மண் சுமந்தது, பிட்டினையே கூலி கொண்டது. அவர் அடிபட்டது என்பவற்றைக் காண மேலும் சான்றுகள் தருகின்றார் மணிவாசகர்.

*"பிட்டு நேர்பட மண்சுமந்த*
*பெருந்துறைப் பித்தன்"*

என்கிறது திருக்கழுக்குன்றப் பதிகம். இதில் வேறு கூலியைக் கேளாது அற்ப பிட்டுக்காக மண் சுமந்த படியால் சொக்கனைப் பித்தன் என்னாது பெரும்பித்தனாகக் காண்கின்றார் அடிகளார். நேர்படுதல் - பிட்டுக்கும் உடன்படுதல்;

*"மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளித்*
*தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட"*
- திருப்பூவல்லி

*"கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*
*மண்சுமந்த கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு*
- திருவம்மானை

என்பன சொக்கன் அடிபட்ட சுவடுகள். இங்கு, சோமசுந்தரருக்கு அடித்தது யார்? என்பதில் புராணங்கள் முரண்படுகின்றன. நம்பி திருவிளையாடலும் வாதவூரடிகள் புராணமும் பாண்டியனின் ஏவலாளர்களே அடித்தனர் எனக்கூறும். ஆனால் பரஞ்சோதியார் பாண்டியனே அடித்தான் என்பர். அதனால் பரஞ்சோதியார் கூற்றே அகச்சான்றுடன் நிற்கிறது.

வைகை பெருகி மதுரையில் பேர் அவலம் விளைந்ததையும் இங்கே குறிப்பிடுகின்றார் மணிவாசகர். கலி என்னும் சொல் அதற்குத் துணை செய்வதாம். கலி என்பது ஒலி. வருத்தம் என இரு பொருள் தரும். அது மதுரை மாந்தரின் அவல ஒலி துன்பமன்றி வேறன்று. அடிபட்டதும் இறைவன் மறைந்தமையும் பிட்டினையே முற்கூலியாகப் பெற்றுக் கொண்டமையை வலி செய்வதாம்.

திருவார்த்தையிலும் அடியவளாகிய வந்தியை நினைவுகூறுகின்றார் மணிவார்த்தையார்.

*"மால் அயன் வானவர் கோனும் வந்து*
*வணங்க அவர்க்கு அருள் செய்த ஈசன்*
*ஞாலம் அதனிடை வந்திழிந்து*
*நல் நெறி காட்டி, நலம் திகழும்*
*கோல மணி அணி மாடம் நீடு*
*குலாவும் இடவை மட நல்லாட்குச்*
*சீலம் மிகக் கருணை அளிக்கும்*
*திறம் அறிவார் - எம்பிரான் ஆவாரே"*

இப்பாடலில் இடவை என்பதற்குத் திருவிடை மருதூர் எனப் பொருள் கொண்டு அங்குள்ள ஒருத்திக்குக் கருணை வழங்கிய பெருமான் என்பர் உரையாசிரியர் சிலர். அதனோடு அந்தப் பெண் யார்? என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. மருது என்னும் பெயரில் வடக்கிலும் இடையிலும் தெற்கிலும் என மூன்று சிவத்தலங்கள் பாரதத்திலுண்டு. அவற்றைத் தேவாரத்தலங்களிற் காண்க. அவற்றில் இடையிலுள்ளதே திரு இடைமருதூர். எனவே, அச்சொல் 'இடவை' ஆகாது 'இடைவை' என்றே நிற்கும். பாடலில் அவ்வடிவம் பெருவகையால் இடவை என்பது பொருளை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு இடம் என்பதே சாலப் பொருந்துவதாகும். இது மணிவாசகரது மரூஉ மொழி. இதுபோல் பிறப்பு - பிறவு எனவும் சிறப்பு - சிறவு எனவும் அவர் உபயோகிக்கும் மரூஉச் சொற்கள் பலவற்றை மணிவார்த்தையில் ஆங்காங்கு பரக்கக் காண்க.

இனிப் பாடலுட் புகுவோம். *"ஈசன் ஞாலம் அதனிடை வந்து இழிந்து நல்நெறி காட்டி"* என்பது வாதவூரனாய் நின்றவனை ஆட்கொண்டு மணி வாசகனாக மாற்றியதைக் குறிப்பது. மாடம் நீடு குலாவும் இடவை - மதுரையே. எனவே அங்குள்ள மட நல்லாள் அடியவளாகிய செம்மனச்செல்வியே யாகும். ஆகவே தம்மோடு வந்திக்கும் வழங்கிய சிவனின் பெருங்கருணைத் திறத்தையே அடிகள் மீளவும் சிந்திக்கின்றார் எனக்கொள்ளாது பொருந்து வதே.

இதுவரை இடம்பெற்ற சம்பவங்களிலிருந்து மணிவாசகர் வரலாற்றில் மேலும் இருவர் ஆண்டவன் திருவருளுக்கு ஆளானவர் என்பது உண்மை. பாண்டியனும் செம்மனச் செல்வியுமே அவ்விருவரும். வாதவூரரை ஆட்கொள்ளுவது இறைவன் திருவுள்ளத்தில் முன்னமே முதன்மை பெற்றிருந்தமை வெளிப்படை. அது இருப்பினும் பாண்டியனுக்கும் பரமுத்தி வழங்கும் திருவுள்ளம் பரம்பொருளுக்கு இருந்தது. அதனை

*"நரகொடு சுவர்க்கம் நல்நிலம் புகாமல்*
*பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி - போற்றி"*

*"கதிரை மறைத்தன்ன சோதி*
*கழுக்கடை கைப்பிடித்துக்*
*குதிரையின் மேல்வந்து கூடிடுமேல்*
*குடிகேடு - கண்டீர்*
*மதுரையர் மன்னன் மறுபிறப்பு*
*ஓட மறிந்திடுமே."*

- பாண்டிப்பதிகம்

என்னும் வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார் அடிகளார். வாதவூரர் இல்லையென்றால் பாண்டி யனுக்கு எங்ஙனம் பரகதி கிடைக்கும்? அதனைத் திருவுள்ளத் தடைத்தே பாண்டியனுக்கு முதல் அமைச்சராக வரல்வேண்டும் என்னும் நியதி வாதவூரருக்கு இறைவனால் கருவிலேயே அமைக்கப் பட்டது என்பது தெளிவு. இவ்விருவரோடும் செம்மனச் செல்விக்கும் அருளபாலிக்கும் திருவுள்ளம் ஆலவாயரனுக்கு இருந்தது. அதனைப் பூர்த்தி செய்ய சொக்கநாதர் பாண்டியனைக் கொண்டு வாதவூரரை வைகைக்கரையில் சுடுமணலில் நிற்கச் செய்து சிறிது வருத்தமும் கொடுக்கின்றார். வாதவூரருக்கு வழங்கிய இந்தச் சிறுபொழுது வருத்தம் முன்னைப் பிறப்பிலோ ஆட்கொண்ட பிறப்பிலோ அவர் செய்து கொண்ட கன்ம நீக்க மாகவும் அமையக்கூடும். இதற்கு இராமதாசர் வரலாற்றோடு அப்பர் சூலைநோயால் வருந்தி யதையும் நினைவிற் கொள்க. நிற்க.

வாதவூரரை நெடிதே துன்புறுத்த விரும்பாத இறைவன் தண்டனையிலிருந்து அவரை விடுவிக்க வைகை நதியைக் காலமல்லாக் காலத்தில் பெருகச் செய்தும் செல்விக்காக தான் கூலியாளாய் வந்து அடியும் பட்டு மறைகிறான். எனவே இந்நிகழ்வுகள் யாவும் மணிவாசகரன்றி பாண்டியனையும் வந்தி யையும் ஒருசேர ஆட்கொள்ளப் பரம்பொருள் ஆடிய அருட்கூத்தே என்பது உறுதி.

பாண்டியனை மேலும் சிந்திப்போம். சோம சுந்தரப்பெருமானை அடித்தவன் பாண்டியன் அல்லனோ? அவன் அடித்தான் என்பதை

*"தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட*
*புண்பாடல்"*

- தெள்ளேணம்

*"மண்சுமந்த கூலி கொண்டு அக்கோவால்*
*மொத்துண்டு"*

- அம்மானை

என்னும் அடிகள் தருகின்றன. எனவே, பாண்டியனுக்கு எவ்வாறு பரகதி கிடைக்கும்?

என்னும் வினா எழலாம். பாண்டியன் சிவபிரானைக் கூலியாளாகவே கண்டானன்றி இறைவனாகக் கண்டிலன் என்பது உண்மை. எனவே அது தவறாகாது. இதற்குச் சான்றாக இன்னார் என்று தெரியாத நிலையில் அருச்சுனன் சிவபிரானை வில்லால் அடித்ததையும் சுந்தரர் 'பித்தா' என ஏசியதையும் காண்க.

### மணிவாசகர் மதுரையைவிட்டு நீங்கியபின்

மாய வனப்பரிகள் வந்தமையும் வைகைக் கரையில் நிகழ்ந்த அற்புதங்களும் வாதவூரரின் பரிபக்குவ நிலையைப் பாண்டியனுக்கு எடுத்துக் காட்டின. இந்தநிலையில் தன் பிழையுணர்ந்த பாண்டியன் பிழை பொறுக்க வேண்டியதோடு நாடாள வேண்டுமெனவும் இரந்து நின்றான். அதற்கு அடிகள் திருப்பெருந்துறைக்குச் செல் வதற்கு நீ அனுமதி வழங்குவதே அரசவாழ்வு தந்ததற்குச் சமம் எனக்கூறிப் பெருந்துறைக்குக் கற்றாவின் மனம் போலக் கசிந்துருகிச் சென்றார் எனப் புராணங்கள் கூறும். அதற்குத் திருவாசகத்தில் அகச்சான்றில்லை. எனினும் முன்பின் தொடர்பு நோக்கும்போது அது பெருந்துமாறு காண்க.

மணிவாசகர் அமைச்சர் பதவி துறந்து பாண்டியன் தொடர்பையும் நீக்கிப் பெருந்துறை அடைந்த நாளில் பரமாசாரியர் அங்கு இருந்தாரா? என்பது கேள்வி. கடவுள் மாமுனிவர் இருந்தார் என்பர். புலியூர் நம்பிகள் உபதேசம் நிகழ்த்தி ஆட்கொண்ட அன்றே அடியாருடன் பெருமான் மறைந்தருளினான் என்பர். இவற்றில் எது பொருந்தும் என்பதற்கு அகச்சான்று பார்ப்போம்.

*"நாயினேனை நலம்மலி தில்லையுள்*
*கோலம் ஆர்தரு பொதுவினில் வருக என*
*ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி*
*அன்று உடன்சென்ற அருள் பெறும் அடியவர்*
*................................. அடியவரோடும்*
*பொலிதரு புலியூர்ப் புக்கு இனிது அருளினன்*
*ஒலிதரு கைலை உயர்கிழ வோனே."*

எனக் கீர்த்தித்திருவகவல் முடிவெய்து கின்றது. இதிலும் மணிவாசகர் வரலாறு சிறிதே ஒளிர்கிறது. மணிவாசகரைத் தில்லைக்கு வருமாறு பணித்த இறைவன் அவரையும் உடன் கூட்டிச் செல்லாது பெருந்துறையில் சில நாள்கள் தங்குமாறு பணித்து அருள்பெறும் அடியவருடன் பொன்னம்பலத்தே புகுந்தான் என்பது இப்பாடல் தரும் வரலாறு. இப்பாடல் அடிகளில் தோன்றுமன்று. ஏல, ஈங்கு என்பன வரலாற்றாய்வுக்கு உதவுவன. ஏல - முன்னமே என்பது பொருள். அன்று என்பதும் அதனை வலியுறுத்துவதே. ஈங்கு என்பது சுட்டிநிற்கின்றது. பரமாசாரியர் பணிப்பின்படி பெருந்துறையில் தங்கிய மணிவாசகர் உத்தரகோசமங்கை சென்று திரும்பவும் பெருந்துறைக்கு வந்த பின்னரே கீர்த்தித்திருவகவலைப் பாடியருளினார் என்பது நன்கு தெரிகிறது. கீர்த்தித்திருவகவலில் உத்தரகோசமங்கையும் பேசப்படுவதே வித்தக வேட தரிசனத்தின் பின் பெருந்துறை வந்து பாடினார் என்பதற்கு ஆதாரம்.

இங்கே ஏல, அன்று என்னும் சொற்கள் குறிக்கும் நாள் எது?. அது உபதேசம் பெற்ற முதல் நாள் அல்லது மணிவாசகர் வைகைப் பெருக்கின் பின்பு பாண்டியன் தொடர்பை நீக்கித் திரும்பவும் பெருந்துறை அடைந்த நாளாதல் வேண்டும். பரமாசாரியர் அடியவரோடுதில்லைபுகுந்தபின் அவர் கட்டளைப்பிரகாரம் மணிவாசகர் பெருந்துறையிலே தங்கியிருந்தவர் என்பது நாம் நன்கு அறிந்ததே. அதனால், அந்தநாள் வாதவூரர் பாண்டியன் உறவை நீக்கிப் பெருந்துறைக்கு வந்த நாள் என்பது தெளிவு. ஆகவே மணிவாசகர் இரண்டாம் முறையும் பெருந்துறையைச் சேர்ந்தபோது

பெருமான் அடியவரோடும் அங்கிருந்தார் என்பது முற்றாம். ஆனால் ஆட்கொண்ட முதல் நாளிலேயே இறைவன் வாதவூரரைப் பெருந்துறையில் விட்டுச் சென்றார் என்பர் புலியூர் நம்பிகள். அதனையே மறைமலையடிகளும் வரவேற்றுள்ளார். அது பொருந்தாது என்பதை வேறு காரணங்களால் முன்னரும் காட்டியுள்ளோம். மேலும் காட்டுவோம். புலியூரார் கருத்தின்படி இறைவன் முதல் நரிலேயே வாதவூரரைப் பெருந்துறையில் தங்குமாறு பணித்துச் சென்றால் பின்னர் நிகழ்ந்த நரிப்பரிகள் வந்த சம்பவத்திலும் சொக்கநாதர் மண் சுமந்த நிகழ்விலும் மணிவாசகர் எவ்வாறு பங்கு கொண்டிருத்தல் இயலும்? எனவே அவருரை பொருந்தாதெனக் காண்க.

பெருமான் உபதேசம் செய்த அற்றைத் தினமே மறைந்தான் என்பதற்கு மறைமலையடிகள் காட்டும் அகச்சான்றுகள்,

*"தாயிலாகிய இன்னருள் புரிந்த*
*தலைவனை நனிகானேன்"*

- திருச்சதகம்

*"தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்*
*கண்டும் கண்டிலேன் என்னகண் மாயமே"*

- திருச்சதகம்

*"அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும் நீயும்*
*அங்கு எழுந்தருளி இங்கு எனை இருத்தினாய்*
*முறையோ"*

- திருச்சதகம்

என்பன இங்கு 'நனிகாணேன்', 'கண்டும் கண்டிலேன்', 'இங்கு எனை இருத்தினாய்' என்னும் வார்த்தைகளே மறைமலையடிகளை அவ்வாறு சிந்திக்க வைத்தன. எனவே இதற்கு யாது சமாதானம்.'

மதுரைத்தொடர்பை நீக்கிய மணிவாசகர் மீளவும் பெருந்துறைக்கு வந்தபோது முன்னர் போலவே ஞானாசாரியரையும் தொண்டர் கூட்டத்தையும் காண்கிறார். அப்போது பரமாசாரியர் ஏனைய அடியார்களுக்குச் சில கடமைகளைப் பணித்துப் பின்னர் மணிவாசகரை அங்கு தங்குமாறு கட்டளை யிட்டுப் பெருந் துறையை நீங்கிச் செல்கிறார். பின்பு அடியார்களும் சில நாள் இருந்து பொய்கையில் அக்கினி தோன்றவே அதில் வீழ்ந்து இறைவனை அடைகின்றார்கள். அந்த நிலையில் மணிவாசகருக்குப் பெருந்தனிமை ஒன்று தோன்றுகிறது. அந்தத் தனிமை, பரமாசிரியரைத் தொடர்ந்து காணவில்லையே என ஏங்க வைத்திருக்கும். அப்போது நனிகாணேன்', 'கண்டுங் கண்டிலேன்' என அடிகள் நெக்குருகியிருக்கலாம். மேலும் மணிவாசகரின் பக்திக்கு எமது பக்தியை ஒரு சிறிதேனும் ஒப்பிடலாகாது. அது கடந்த நிலை. அவருக்குப் பரம்பொருளின் ஞானாசிரியத் திருக்கோலக்காட்சி தெவிட்டு நிலையன்று. அவரது நிலைகன்றைக் காணாது கதறும் புனிற்றாவின் நிலை என்னும் போது முதல் கண்டு பின்னர் காணவில்லை என்னும் மறைமலையடிகளின் சிந்தனை பொருந்து மாறில்லை.

இஃதன்றி மற்றுமொரு சந்தர்ப்பமும் பொருந்துமாறு உள்ளது. மணிவாசகர் பெருந்துறையிற்சில நாள்கள் தங்கிய பின் திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று ஞானாசாரியத் திருக்கோலத்தைத் தரிசிக்கிறார். அதற்கு

*"உத்தர கோச மங்கையுள் இருந்து*
*வித்தக வேடம் காட்டிய இயல்பும்"*

என்னும் கீர்த்தித்திருவகவல் சான்றாம். மேலும் அங்கே அட்டமாசித்திகளையும் பெற்றார் என்பதை

*"எண்இலி ஆகிய சித்திகள் வந்தெனை எய்துவது ஆகாதே"*

என்னும் திருப்படையாட்சி வரி சிறிதே புலப் படுத்துகிறது. இதன்பின்பு மணிவாசகர் திரும்பவும் அங்கிருந்து வடக்கு நோக்கித் தலயாத்திரை செய்வதை அவர் பாடிய பதிகங்கள் வெளிப்படுத்து கின்றன.

உத்தரகோசமங்கை பெருந்துறைக்கு நேர் தெற்கில் தனுஷ்கோடி, இராமநாதபுரப்பகுதியைச் சார்ந்திருக்கிறது. அது மிக வறண்ட பிரதேசம். இராமநாதபுரம் ஜில்லாவுக்குரியது. அங்கிருந்து மீண்டும் வடக்கு நோக்கித் தல யாத்திரையை மேற்கொண்ட அடிகள் கழுக்குன்றம் அண்ணா மலை வரையும் தரிசித்தமை பதிகங்களில் தெரிகிறது. அந்தத் தலயாத்திரை மார்க்கம் பெரும்பாலும் நேர் கோட்டில் வடக்கு நோக்கி அமைவதை இன்றைய இந்தியதேசப்படத்து நகரங்களைக் கொண்டு அறியலாம். ஆகவே அந்தத்திசையில் திரும்பவும் மணிவாசகருக்குப் பெருந்துறைப்பாசம் தோன்றி யிருக்கும் என்பது உறுதி. அதனால் அவர் அங்கே வந்தபோது பரமாசாரியரது முன்னைய திருக் கோலம் காணாத நிலையில் இவ்வாறு' நனிகாணேன்' என வருந்தி யிருக்கலாம் என்பதும் பொருந்துவதே. எனவே, மணிவாசகர் பெருந்துறையில் மூன்று முறை தங்கியிருந்தார் என்பதும் பெற்றாம. உத்தர கோசமங்கையையும் உள்ளடக்கிப் பெருந்துறையில் இருந்தே கீர்த்தித் திருவகவல் பாடினார் என்பதை முன்னரும் காட்டியுள்ளோம்.

## பரமாசாரியரைப் பிரிந்தபின்

பரமாசாரியர் பெருந்துறை நின்று நீங்கிய பின் சில நாள்கள் கழித்துப் பெருந்துறையிலுள்ள 'திருத்தமாம் பொய்கை' யில் பரமாசாரியர் புகன்ற வாறே அக்கினி வடிவான சோதி தோன்றியது. அதனுள் மணிவாசகர் தவிர்ந்த ஏனையோரில் சிலர் இறைவன் முன்னரே சொன்ன பணிப்பின்படி பிரவேசம் செய்து மறைந்தனர். இந்நிகழ்வை.

*"எமக்கு வெளிப்படாய் என்ன*
*வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்"*

- அருட்பத்து

*"எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்"*

- கீர்த்தி

என்பன வெளிப்படுத்தியுள்ளன. எரியிற் பாய்ந்தோர் சிலர் போக வேறு சிலர் இறைவனோடு அன்றே சென்று கலந்தனர் எனவும் மற்றுஞ் சிலர் அவ்வாறில்லாது பூமியிற் புரண்டு விழுந்து அலறி அடைந்தனர் எனவும் அடிகள் குறிப்பிடுகின்றார்.

*"அன்று உடன் சென்ற அருள்பெறும் அடியவர்*
*ஒன்ற ஒன்ற உடன்கலந்தருளியும்"*

*"பூதலம் அதனில் புரண்டு வீழ்ந்து அலறியும்*
*கால் விசைத்து ஓடிக் கடல்புக மண்டி*
*நாத நாத என்று அழுது அரற்றிப்*
*பாதம் எய்தினர் பாதம் எய்தவும்"* - கீர்த்தி

என்பன அவற்றிற்குச் சான்றுகளாம். திருவாத வூரடிகள் புராணம் எல்லோரும் சோதியுட் புகுந்தனர் எனக் கூறுவது மணிவாசகர் வாய்மொழிக்கு முரண்படுகிறது. பொய்கையிற் சோதி தோன்றிய காரணத்தால் இன்றும் அப்பொய்கை 'அக்கினி தீர்த்தம்' என்னும் பெயர் தாங்கி இருப்பதை நாம் அறிய முடிகிறது.

சோதியுள் அடியார்கள் புகுமுன் தாம் அவர்களோடு கலந்து மகிழ்ந்திருந்ததைப் பிரார்த்தனைப்பத்தில்

*"கலந்து நின் அடியாரொடு*
*அன்று வாளா களித்திருந்தேன்"*

என்கிறார் மணிவாசகர். மேலும், அடியவர்கள் தம்மைப் பிரிந்து இறைவன் பாதம் எய்திய பின்னர் தமக்குள்ள தனிமையை

*"அருள்பெற்ற*
*சீர்ஏறு அடியார் நின்பாதம் சேரக்கண்டும் கண்டுகெட்ட*
*ஊர் ஏறுஆய் இங்கு உழல்வேனோ"*

என்னும் சதகப் பகுதியாலும் பிறபதிகங்களாலும் புலப்படுத்துகிறார்.

ஞானாசாரியரின் நெடுநாட்பிரிவு மணி வாசகரை மிகவும் வருத்தியதைத் திருவாசகம் முழுவதிலும் நாம் காணலாம்.

*"மான் அன நோக்கி தன் கூறனைக் குறுகிலேன்*
*நெடுங்காலம்*
*"என்தலைவனை நனிகாணேன்"*
*"கண்டும் கண்டிலேன் என்ன கண்மாயமே"*
*"கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு*
*காணேன்"*

என்னும் திருச்சதகப்பகுதிகள் ஞானாசாரியரின் நெடுநாட்பிரிவை வெளிப்படுத்துவன. திருச்சதகம் பெருந்துறையிற் பாடப்பட்டதாகப் பலரும் கணித் துள்ளனர். அது தவறு என்பதைப் பின்னர் 'திருவாசகப் பதிகத் தலங்கள்' என்னும் தலைப்பில் காட்டியுள்ளோம்.

பரமாசாரியரது நெடுநாட்பிரிவு அடிகளின் சரீரத்தை மெலியவைத்ததை

*"பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்று ஆக்கையைப்*
*போக்கப்பெற்று*
*மெலிகின்ற என்னை விடுதிகண்டாய்"*

எனவரும் நீத்தல் விண்ணப்பம் வெளிப்படுத்து கிறது. அத்தகைய உடல் மெலிவோடு விரிசடை யராய்க் கோவணதாரியாய்ப் பிச்சை ஓட்டுடன் ஊர்கள் தோறும் சென்று தலதரிசனஞ்செய்தார் என்பதை

*"விரிதலையேனை விடுதிகண்டாய்"*
- நீத்தல் விண்ணப்பம்

*"ஓடும் கவந்தியுமே உறவென்றிட்டு உள் கசிந்து*
- குலாப்பத்து

*"மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்*
*வளர்ந்துள்ளுருகத்*
*தெருவுதொறும் மிக அலறிச் சிவபெருமான்*
*என்றேத்தி*
- திருவேசறவு.

என்னும் பகுதிகள் காட்டுகின்றன. கவந்தி - கோவணம்; தெருவுதொறும்மிக அலறி என்பதனால் யாத்திரையிலும் திருவாசகப் பாடல்கள் முகிழ்த்தன என்பது உண்மை. பாடல்களை இறைவனே பாடப்பணித்தான் என்கிறார் அடிகள்.

*"நாயேனைத்தன் அடிகள் பாடுவித்த நாயகனை"*

என்னும் கோத்தும்பியும் பிறவும் அதற்குச் சான்றாம்.

பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் பெருமானைத் தாம் மறந்ததாகவும் ஏதோ கொடுமை பேசியதாகவும் தலையால் நடந்ததாகவும் அவர் வருந்துகிறார்.

*"சிறியேன் பிழைபொறுக்கும் கோனே*
*சிறிதே கொடுமை மறைந்தேன்*
- சதகம்
*"புலையனேனையும் பொருள் என நினைந்து*
*உன் அருள்*
*புரிந்தனை புரிதலும் களித்துத் தலையினால்*
*நடந்தேன்*
- செத்திலாப்பத்து

*"அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளித்த*
*அருளினை மருளினால் மறந்த*
*வஞ்சனேன்"*

- வாழாப்பத்து

என்பன அவற்றிற்குத் துணைசெய்வன. இவை எப்போது எங்கே நிகழ்ந்தன? என்பது தெரியவில்லை. இவை உண்மை நிகழ்வா? என்பதும் ஐயப்பாடே. இல்லையேல் ஆட்கொள்ளப் பட்ட பின்பு பரமாச்சாரியரின் நெடுநாட் பிரிவுக்குக் காரணம் தாம் பிழைசெய்திருத்தல் கூடுமோ என்று மணிவாசகர் எண்ணியதாகவும் கொள்ளலாம்.

இவ்வாறு வருந்தியும் உருகியும் பல தலங்களை வழிபட்ட அடிகளாருக்கு இறைவன் தன் திருக்கோலம் காட்டிய தலங்களையும் மணிவார்த்தையுள் அவர் தந்துள்ளார். அவற்றுள் உத்தரகோச மங்கையிற் கண்டமைக்கு

*"உத்தரகோச மங்கையுள் இருந்து*
*வித்தக வேடம் காட்டிய இயல்பும்"*

என்பதும், கழுக்குன்றிற் கண்டமைக்கு

*"கணக்கிலாத் திருக் கோலம் நீ வந்து*
*காட்டினாய் கழுக்குன்றிலே"*

என்பதும் சான்றுகளாம். இவையன்றி

*"கழுமலம் அதனிற் காட்சி கொடுத்தும்"*

என்பதும் அவர் கண்ட திருக்கோலக்காட்சியே. இதில் யாருக்குக்காட்சி கொடுத்தார் என்பது தெளி வில்லை. அதனை வெளிப்படுத் தாதுவிடினும் அதற்குப் பதிகம் பாடியிருப்பின் காட்சி கொடுத்த மையை ஏற்றுக் கொள்ளலாம். பிடித்த பத்துச் சீர்காழியிற் பாடப்பட்டது என்பர் கடவுள் மாமுனிவர் ஆனால் பிடித்த பத்தில் ஒரு பாடலிலேனும் சீர்காழி தோன்றவில்லை. எனவே அவர்கூற்றுப் பொருந் தாது எனவிடுக.

சீர்காழி போன்றே திருப்பூவணக்காட்சியும் ஆய்வுக்குரியதே

*"பூவணம் அதனில் பொலிந்து இனிது அருளித்*
*தூவண மேனி காட்டிய தொன்மையும்"*

என்பது கீர்த்தித்திருவகவல். இதிலும் யாருக்குக் காட்டியது என்பது தெரியவில்லை. கீர்த்தித்திருவ கவலில் 'அரியொடு பிரமற்கு' எனத் தொடங்கி 'திரு ஆர் பெருந்துறைச் செல்வன் ஆகி கரு ஆர் சோதியில் கரந்த கள்ளமும்" என்பது வரையுள்ள பகுதி முழுவதும் தம் வரலாறு சொல்லும் பகுதியாம். அதனுள்

*"உத்தர கோச மங்கையுள் இருந்து*
*வித்தக வேடம் காட்டிய இயல்பும்*
*பூவணம் அதனில் பொலிந்து இனிது அருளித்*
*தூவண மேனி காட்டிய தொன்மையும்*
*வாத வூரினில் வந்து இனிது அருளிப்*
*பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"*

என்னும் பகுதி சிந்திக்கத்தக்கது. இதில் உத்தரகோசமங்கைக் காட்சிக்கும் வாதவூர்ச் சிலம்பொலிக்காட்சிக்கும் இடையில் பூவணக்காட்சி இடம்பெறுவதனால் அதுவும் மணிவாசகர் கண்ட காட்சி ஆகலாம். பூவணம் சம்பந்தராற் பாடப்பெற்ற தலம் என்பதோடு அது பாண்டிநாட்டுத்தலம் என்பதும் அக்கருத்தை வலிசெய்வதே. இதில் மேனி காட்டியும் என்பதும் அதற்குத் துணை செய்வதாகும். பூவணம் போன்றே ஈங்கோய் மலையும் காட்சித்தலமே.

*"ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்"*

என்பதும் கீர்த்தித்திருவகவல். மேலும் போற்றித்திருவகவலில்

*"ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி"*

எனச் சிந்திப்பதும் காட்சிக்குச் சார்புபோலும். *'திருவாய் மூருக்கு வா'* என அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் பணித்தது போன்று மணிவாசகரையும் தில்லைக்கு வா எனக் கட்டளையிட்டதை

*"நாயி னேனை நலமலி தில்லையுள்*
*கோலம் ஆர்தரு பொதுவினில் வருகஎன*
*ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி."*

எனக் கீர்த்தித்திருவகவல் தருகிறது. அதன்படி அவர் தில்லையைத் தரிசித்ததை "அணி கொள் தில்லை கண்டேனே" எனவரும் கண்டப்பத்துப் பகுதிகளும் பிறவும் வெளிப்படுத்தும்.

இனி ஆளுடைய அடிகள் பௌத்தரோடு எதிர்முக வழக்கை நிகழ்த்தியமைக்கே ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமைக்கோ தில்லைக் கூத்தனே அந்தணனாகி வந்து திருவாசகம் திருக்கோவையார் என்பவற்றை எழுதியதற்கோ திருவாசகத்திற் சான்றுகள் இடம்பெறவில்லை. எனவே, அவற்றை செவி வழிச் செய்தியாகவே ஏற்போமாக. இவற்றுள் புத்தமதத்துடன் பிறமதங் களை அவர் வெறுப்பதை

*"புத்தன் முதலாய புல்லறிவிற் சில்சமயம்*
*தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க"*

எனத் திருத்தோணோக்கம் காட்டுகின்றது. பௌத்தருடன் எதிர்முக வழக்கு நிகழ்த்தி வென்றமைக்குத் திருச்சாழலைச் சான்றாகக் காட்டுவர் கடவுள் மாமுனிவர். சைவசமயத்தில் புறமதத்தவருடன் எதிர்முக வழக்கு நிகழ்த்தி யவர்களாக இருவர் பேசப்படுபவர். அவருள் ஒருவர் சம்பந்தப்பிள்ளையார். மற்றொருவர் மணிவாசகர். காழிப்பிள்ளையார் சமணருடன் வழக்கிட்டவர். அவர் சமணருடன் வழக்காடு முன் ஆலவாய் அப்பனின் திருவுள்ளம் காண நின்றவர் அவர் அவ்வாறு காண நின்றதை

*"வேட்டு வேள்வி செய்யா அமண் கையரை*
*ஓட்டிவாது செயத்திரு வுள்ளமே"*

எனவரும் ஆலவாய்ப் பதிகங்கள் பல வெளிப் படுத்தும். இத்தகைய ஆதாரங்களைச் சாழலில் நாம் காணுமாறில்லை. சாழல் வினாவும் விடையுமாக அமைந்துள்ளது. அந்த வினா விடையைப் புத்த குருவும் ஊமைப்பெண்ணும் நிகழ்த்தியிருக்கலாம். என்னும் கடவுள் மாமுனிவரின் ஊகிப்புச்சாழலாக மலர்ந்துள்ளது போலும். உண்மையில் மணி வாசகர் வழக்கில் வென்றிருக்கலாம். ஆனால் அதற்கமைந்த பாடல்கள் அழிந் திருக்கலாம் அல்லது பாடாது விட்டிருக்கலாம் என்பதே நடுவு நிலைச் சிந்தனை யாகும். சாழல் அமைப்பை நோக்கும்போது அவர் பாடிய ஏனைய மகளிர் விளையாட்டுக்களைப் போல அதுவும் வினாதலும் விடையிறுத்தலும் தழுவிய ஒரு விளையாட்டு என்றே கொள்ளக்கிடக்கின்றது. அன்றேல் அதனை வினாவுத்தரமாகக் கொள்க.

## 5. திருவாசகப்பதிகத் தலங்கள்

மூவர் பாடிய தேவாரங்களில் பொதுப்பதிகங்கள் தவிர்ந்த பிற பதிகங்கள் ஒவ்வொன்றும் பாடல் தோறும் தலப்பெயரைக் காட்டிநிற்கும். அதனால் அவற்றுள் இப்பதிகம் எத்தலத்திற் பாடப்பெற்றது? என்னும் வினாவுக்கு இடமேயில்லை அந்நிலையில் திருவாசகத்திலோ ஒரு சில பதிகங்கள் ஒதுங்கி நிற்கப் பெரும்பாலனவை ஐயத்துக்கு இடந்தந்து நிற்கின்றன. இது பற்றிப் புராணங்களேயன்றி திருவாசக ஆய்வாளருக்குள்ளேயும் ஒரு மித்த

முடிபு தோன்றவில்லை. பதிகங்களும் தலங்களும் ஊகிப்பில் நின்றபடியால், பரஞ்சோதி முனிவர் பதிகங்களையும் தலங்களையும் இணைத்துப் பேசாது விட்டதும் இந்தச்சிக்கல் கருதிப்போலும்.

தேவார முதலிகளுள் காலத்தால் முற்பட்டவர் அப்பர். அவருக்குப் பின் தோன்றியவர் பாலறவாயர். அவ்விருவருக்கும் பின் எழுந்தவர் சுந்தரார். அப்பரும் சம்பந்தரும்சமகாலத்தவராயினும்அப்பரின்தோற்றம் முந்தியது என்பதைக் கருத்திற் கொள்க. இம்மூவரில் பின்தோன்றியவர்கள் முன்தோன்றியவரின் தலங் காட்டும் பதிக அமைப்பைத்தாமும் பெரும்பாலும் தழுவிப் பாடியிருப்ப, மணிவாசகர் அதனைத் தழுவாது பதிகத்தலங்களை ஐயந்தோன்ற வழங்கி யிருப்பதும் வெண்பா அகவல் முதலாம் பல்வேறு பாவினங்களாற் பாடியிருப்பதும் பண்ணிசையைத் தவிர்த்திருப்பதும் ஆய்வுச் சிந்தனைக்குரியனவே.

திருவாசகத்தில் தலப் பெயர்களோடுள்ள பதிகங்கள் மூன்று. அவை கோயின் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், திருக்கழுக் குன்றப் பதிகம் என்பன. கோயில் - சிதம்பரம். அவ்வாறிருந்தும் கோயில் திருப்பதிகம் சிதம்பரத் தோடிணையாது திருப்பெருந் துறையையே பாடல்தோறும் கொண்டுள்ள காரணம் தெளிவாக வில்லை. சில பதிகங்களில் தலப்பெயர் பாடல்தோறும் இணைத்திருந்தும் அத்தலப்பெயரைப் பதிகத்துக்குச் சூட்டாது வேறு சிறப்புப் பெயர்களையே இணைத் திருப்பதும் சிந்தனைக் குரியனவே. குலாப்பத்தினை இதற்குக் காட்டாகக் கொள்க.

இந்நிலையில் பதிகங்கள் ஒவ்வொன்றும் எத்தலத்திற் பாடியிருக்கலாம் என்பதை நாமும் சிந்திப்போம்.

### சிவபுராணம்

மணிவாசகரை இறைவன் 'ஒரு வார்த்தை' யுட்படுத்தியவர். அவ்வார்த்தை 'நமசிவாய' என்பதே. அந்நினைவோடு 'நமச்சிவாய வாழ்க' எனத்தொடங்குவதாலும் 'நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி' என்பதனாலும் "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்" என்பதனாலும் *"கோகழி ஆண்ட"* என்பதனாலும் *"சீர் ஆர் பெருந்துறை நம்தேவன்"* என்பதனாலும் சிவபுராணம் பெருந்துறைக்கேயாகும். இவற்றுள் பொன்அடிகள் கண்ட முதல் நாளை 'இன்று' என்பது சுட்டி நிற்பது பெருந்துறையையே வலி யுறுத்துவதாகும்.

இங்கு கோகழியோடு பெருந்துறையும் அங்கம் வகிக்கிறது. அதனால் அவையிரண்டும் ஒன்றா? வேறா, என்னும் ஐயம் உரையாசிரியர் பலர்க்கும் எழுந்ததுண்டு. சிலர் ஒன்று என்பர்; வேறு சிலர் வேறு என்பர். ஆனால், பேராசிரியர் மு. அருணாச்சலம் அவர்கள் வேறாகக் கண்டவர் களது முடிபுகளிலுள்ள பொருந்தாமைக்குப் பல்வேறு காரணங்களைக்காட்டி மறுத்த முடிபுகள் யாவற்றாலும் வரவேற்கக் கூடியன. அவர் தாம் எழுதிய "திருவாசகக்குறிப்புக்கள்" என்னும் நூலில் பெருந்துறையை ஒரு சிற்றூர்என்றும் கோகழியே அங்குள்ள சிவத்தலம் என்றும் நிறுவியதோடு திருவெண்ணெய் நல்லூர் - அருள்துறை, சாத்தமங்கை - அயவந்தி, கருவூர் - ஆநிலை, புள்ளமங்கை - ஆலந்துறை, திலதைப்பதி - மதிமுத்தம், நறையூர் - சித்தீச்சரம் எனவரும் தேவாரப்பதிக ஊர்களையும் கோயில்களையும் இணைத்துச் சான்று காட்டியுள்ளமை புது விருந்தாகும்.

சிவபுராணத்தில் 'தில்லையுட்கூத்தனே' என்பதும் இடம்பிடித்துள்ளதே. அதனால் சிவபுராணம் தில்லைக் குரியதோ? என்னும் ஐயமும் எழலாம் தில்லை - கோயில் என்னும் சிறப்பைத்தழுவி நிற்பதாலும் அதுவே மணிவாசகரின் முத்தித் தலமாய் நின்ற தாலும் அவருக்கு அதன் நினைவு தோன்றியதன்றி

வேறன்று எனக் கொள்க. சிவபுராணம் தில்லைக் கேயுரியது எனக்கொள்ளின் திருவாசகத்தில் பெருந்துறையை அடுத்துத் தில்லையே அதிக தானங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளது. எனவே தில்லை தோன்றும் பதிகங்கள் அனைத்தையும் தில்லைக்கே ஒதுக்குதல் இயலாதன்றோ? ஆதலின் அதனை நெகிழவிடுவோம். சிவபுராணம் பெருந் துறைக்கே யுரியது என்பது கடவுள் மாமுனிவர்க்கும் உடன் பாடாம்.

## கீர்த்தித்திருவகவல்

இது தில்லையில் அருளிச் செய்யப்பெற்றது என கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் வாதவூரடிகள் புராணத்துக்கு உடன்பட்டு நிற்பர். இவருடைய இந்த முடிபுக்குக் காரணமாயிருப்பது "தில்லைமூதூர் ஆடிய திருவடி" என்னும் தொடக்கமே. ஆனால்,

*"நாயினேனை நலம்மலி தில்லையுள்*
*கோலம் ஆர்தரு பொதுவினில் வருகஎன*
*ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி*
*அன்று உடன்சென்ற அருள்பெறும் அடியவர்"*

என்னும் பகுதி தில்லையை மறுத்துப் பெருந் துறையைச்சார்ந்து நிற்கிறது. இதில் 'அன்று' என்பது ஆட்கொள்ளப்பெற்ற முதல் நாளைக் காட்டி நிற்ப, ஈங்கு என்பது பெருந்துறையாகிய இந்தத்தலமாய் நிற்கிறது. ஒழித்தருளிய இடம் பெருந்துறை என்பது யாவரும் ஒப்புக்கொள்ளுவதே. அதுவே ஈங்கு எனச் சுட்டப்பட்டது.

உத்தரகோசமங்கையுள்வித்தகவேடம்காட்டிய இயல்பும் 'கீர்த்தித்திருவகவலிற் பேசப் பெறுவதால் மணிவாசகர் உத்தரகோச மங்கையினின்றும் திரும்பவும் மூன்றாம் முறையாகப் பெருந்துறைக்கு வந்தபோது இதனைப்பாடியருளினார் எனக் கொள்ளுவதேபொருந்துகிறது. மூன்றாம்முறையும் அவர். பெருந்துறைக்கு வந்ததை முன்பும் குறிப் பிட்டுள்ளோம். இச்சம்பவம் புராணங்களில் இடம் பெறவில்லை.

## திரு அண்டப்பகுதி

திருவண்டப்பகுதியில் தலம் எதுவும் சொல்லப் படவில்லை. ஆனால் கடவுள் மாமுனிவர் தில்லையிற் பாடப்பட்டது என்பர். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தில்லை அல்லது பெருந்துறை ஆகலாம் என்பர். ஆனால் திருவண்டப்பகுதியில் அடிகள் தரும் சில குறிப்புக்கள் பெருந்துறைக்கே துணை நிற்கின்றன.

*"இன்று எனக்கு எளிவந்து அருளி*
*அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்*
*இன்று எனக்கு எளிவந்து இருந்தனன்."*

என்பதை நோக்குவோம். இத்திருவண்டப் பகுதியில் அன்று என்னாது 'இன்று' என்பதை இருமுறை சொல்லியிருப்பது நம் கவனத்தை ஈர்ப்பதாம். அன்று எனச் சொல்லியிருப்பின் அது உபதேசம் பெற்ற முதல் நாளையே நினைவு செய்வதோடு பாடல் அருளிச் செய்த தலத்தையும் பெருந்துறையாகக் காட்டாது தில்லையையும் தழுவலாம். ஆனால் இங்கு 'இன்று' என்னும் அண்மைக்காலச்சுட்டு அவர் நேரில் தரிசித்த அந்த முதல் நாளை குறித்தும் தலத்தையும் தழுவி நிற்பதால் திருவண்டப்பகுதிப் பெருந்துறைக்கே உரியதாம்.மேலும்

*கண்ணால் யானும் கண்டேன் காண்க.*
*புவனியில் சேவடி தீண்டினன் காண்க*
*சிவனென யானும் தேறினன் காண்க*
*அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க."*

என்பதும் திருவண்டப்பகுதியே. இதில் இறைவன் தம்மை ஆட்கொண்டமையால் தோன்றிய மகிழ்ச்சியைத்

தந்துள்ளார் மணிவாசகர். இங்கே தோன்றும் காட்சிகள் நேரில் தரிசித்த ஆட்கொண்ட காட்சிகள். இவற்றோடு 'சிவனென யானும் தேறினன் காண்க' என்பது சிந்தனைக்கு உரியது. குருவாக வந்த ஒருவரைச் சிவனெனத் தேறிய தலம் பெருந்துறை எனக்கொள்வதன்றித் தில்லை எனக்கொள்ளல் சாலாது. அதுவுமன்றிச் சிவனெனத் தேறிய நினைப்பு நாள்பல கடந்து தில்லைவரைக்கும் சென்று தோன்றுதல் வியப்புக்குரியதே. எனவே திருவண்டப் பகுதி பெருந் துறைக்கே உடைமையாகும்

*"நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்*
*ஆற்றேன் காண்க"*

என்பது அவரின் பிரிவுத்துயர் ஒன்றைப் புலப்படுத்துவது. அதனால் இச்சந்தர்ப்பம் பெருந் துறையில் மணிவாசகரைப் பரமாசாரியர் தங்கு மாறு செய்து எழுந்து மறைந்த வேளையில் பாடியதாகலாம்.

## போற்றித்திருவகவல்

*"நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்*
*பரகதி பாண்டியற்கு அருளினைபோற்றி"*

என்பது பாண்டியனுக்கும் சிவகதி அருளியதைத் தெரிவிப்பது. அதனால் பாண்டியனது தொடர்பு நீங்கிய பின்னரே போற்றித் திருவகவல் அருளிச் செய்யப்பெற்றது என்பது தெளிவாம். போற்றித் திருவகலின் முற்பகுதியில் மணிவாசகர், மெய்யடி யார்களுடன் தம்மையும் இணைத்து மாதா உதரத்துத் தோன்றியது தொடக்கம் தமது பக்தி முதிர்ச்சி ஈறாக நிகழ்ந்த இடர்ப்பிழைப்புக்களைக் கூறிய பின் இறைவனை விளிக்கின்றார். அவ்விளிப்பில்

*"ஆடக மதுரை அரசே போற்றி*
*கூடல் இலங்கு குருமணி போற்றி"*

என்னும் பகுதியே முதற்கண் நிற்கிறது. இதில், முதலில் அவரது இதயத் தலங்களாகிய பெருந்துறையையோ தில்லையையோ நினைவுக்குக் கொண்டு வாராது ஆலவாய்க் கடவுளையே குருதேசிகராகத் தியானித்தமை சிந்திக்கவேண்டிய ஒன்றாம். பாண்டியனது உறவு நீங்கிய பின் பெருந் துறை செல்லவிருந்த மணிவாசகர் மதுரையில் உள்ள சொக்கநாதக் பெருமானையே முதற்கண் வழிபட்டிருப்பார் என்பது யாவரும் ஏற்கக்கூடியதே. அமைச்சராய்க் குதிரை வாங்கச் சென்றபோது அவர் ஆலவாய் தரிசனத்தையே முதற்கண் கொண்டார் என்னும் புராணங்களின் கூற்றும் இதற்கு ஆதாரமே. இதில் ஆலவாய்க்குப் பின்னரே தில்லையும் கோகழியும் துதிக்கப் படுவதும் இதற்குச் சான்றாம். எனவே, போற்றித்திருவகவல் ஆலவாயுடன் இணைவது தவறாகாது. ஆனால் வாதவூரடிகள் புராணம் தில்லையுடன் சேர்த்துள்ளது.

## திருச்சதகம்

இது பெருந்துறையிற் பாடப்பெற்றது என்பர் பலரும். சதகம் நூறு பாடல்களையுடையது. அவற்றில் ஒரு பாடலிலேனும் பெருந்துறை தோன்றவேயில்லை. பதிலாகப் பொன்னம்பலமே எட்டுப்பாடல்களில் தென்படுகிறது. மேலும்

*"அரத்த மேனியார் அருள்செய் அன்பரும்*
*நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை*
*இருத்தினாய்; முறையோ."*

என்பது தொண்ணூற்று மூன்றாம் பாடற் பகுதி. இது சிந்திக்க வைக்கிறது. 'அருள் செய் அன்பரும் நீயும் அங்கு எழுந்தருளி இங்கு எனை இருத்தினாய்" என்பதில் அங்கு சேய்மைச் சுட்டு; இங்கு - அண்மைச்சுட்டு. அதனால் தலங்கள் வேறுபடுகின்றன. அதனால் எழுந்தருளிய இடம் சேய்மைச் சுட்டாய்ப் பெருந்துறைக்காகிறது.

இருத்திய இடம் அண்மைச் சுட்டாய்த் தில்லைக் காகிறது. மேலும் பெருந்துறையை நீக்கி எட்டுப் பாடல்களில் தோன்றும் தில்லைப் பெயர்க்கு இங்கு என்பது உரிமை கோரி நிற்பதால் சதகம் சிதம்பரத்தலத்துக்கே சொந்தமாகும். இக் காரணத் தோடு

*"மான் அன நோக்கிதன் கூறனைக்குறுகிலேன்*
*நெடுங்காலம்*
*"என் தலைவனை நனிகாணேன்"*
*கண்டும் கண்டிலேன் என்ன கண்மாயமே"*
*கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு*
*காணேன்"*

என்னும் திருச்சதகப்பகுதிகள் ஞானா சாரியரின் நெடுநாட் பிரிவை வெளிப்படுத்தி மணிவாசகரைச் சிதம்பரத்துக்கே கூட்டிச் செல்வதும் மற்றுமொரு காரணமாகும். நெடுநாட் பிரிவு பெருந்துறைக்கு ஆகாது என்பதைக் கருத்திற்கொள்க.

## நீத்தல் விண்ணப்பம்

நீத்தல் விண்ணப்பம் முழுவதும் உத்தர கோசமங்கையில் அருளிச் செய்யப் படவில்லை. முதல் இருபது பாடல்களே அங்கு அருளிச்செய்யப் பெற்றன. ஏனையவை வேறு தலங்களில் அருளிச் செய்யப்பட்டன என்பர் மறைமலையடிகள். ஆனால் நீத்தல் விண்ணப்பம் அந்தாதித் தொடையாய்ச் செல்வதும் மீளவும் நாற்பத் தெட்டாம் பாடலில் உத்தரகோசமங்கை தோன்று வதும், வேறு தலங்கள் ஒன்றுதானும் அதில் இடம்பெறாமையும் அவர் கூற்றை மறுத்து உத்தரகோசமங்கையையே பதிகத்தலமாக நிறுவுகின்றன. மேலும் மறை மலையார் கூற்றின் படி அந்தாதித் தொடையாய்ச் செல்லும் பாடலை வேறு தலங்கள் பொருட்டுக் காலந்தோறும் அவர் இடையிடையே நிறுத்தினார் என்பதும் முதல் இருபது பாடல்களுடன் அவரது பக்திக் கவிதைப் பெருக்குத் தலந்தோறும் வற்றி வற்றிச் சென்றது என்பதும் வியப்புக்குரியனவாம்.

## திருவெம்பாவை

இது அண்ணாமலையில் அருளிச்செய்யப் பெற்றது என்பது புராணங்களுக்கும் ஆய்வாளர்க் கும் உள்ள கருத்தாம். கழுக் குன்றமடைந்து காட்சி தரிசித்த மணிவாசகர் அதற்கு அண்மையிலுள்ள அண்ணாமலையையும் தரிசித்தார் என்பது ஏற்கக் கூடியதே. திருவாசகத்தில் மூன்றே இடங் களில் அண்ணாமலை தோன்றி நிற்கின்றது. அவற்றுள் ஒன்று போற்றித்திருவகவல்; மற்றொன்று அம்மானை; மேலும் ஒன்று திருவெம்பாவை. இவற்றுள் முன்னைய இரண்டும் பாவைக்கு ஆகாமையின் அவற்றை விடுக்க. எனவே பாவையில் வரும் அண்ணாமலையே ஆய்வுக் குரியது. பாவையில் சிற்றம்பலம் மூன்று பாடல் களில் இடம்பெற அண்ணாமலை ஒரே யொரு பாடலில் தோன்றுவதோடு இறுதியில் பதினெட்டாம் பாடலையே கொண்டுள்ளது. அவர் இரண்டாம் பாடலிலேயே சிற்றம்பலத்தை சிந்தித்துள்ளார். எனவே முதல் நினைப்புச் சிற்றம்பலமாயிருப்பதால் திருவெம்பாவை தில்லைக்குரியது போலும்.

பரமாசாரியார் பணிப்பின்படி தில்லையை அடைந்த மணிவாசகருக்குப் புத்தரோடு எதிர்முக வழக்காட வேண்டிய நியதியொன்று இறைவனால் விதிக்கப்பட்டிருந்தமையால் அவர் தமது முத்தி நாளாகிய ஆனி மகம் வரைக்கும் தில்லையில் இலைக்குடிசையில் தங்கியிருந்தார் என்பது உண்மையாகும். அவர் அங்கே தங்கி இருந்தார் என்பதைக் கடவுள் மாமுனிவரும் புலியூர் நம்பிகளும் வலியுறுத்தியுள்ளனர். அவ்வாறு அவர் தங்கிய மாதங்களில் மார்கழித் திருவெம்பாவை தொடங்கியபோது இதை அவர் பாடியிருக்கலாம் போலும். மார்கழியிற் பாடப்பெற்றமைக்கு "மார்கழி

நீர் ஆடு" என்னும் அவர் வாய்மொழியே சான்றாம். தில்லை நாட்டம் அவருக்கு மிக்கிருந்த படியால் அண்ணாமலையை நீங்கிக் கடிதே தில்லையை அடைந்திருப்பார் என்பதும் சிந்தனைக்குப் பொருந்து வதே. மார்கழித் திருவெம்பாவை அண்ணா மலையினும் சிதம்பரத் தலத்துக்கே சிறப்புடையது என்பதும் யாவர்க்கும் ஒப்ப முடிந்த ஒன்றாம். மணிவாசகர் அண்ணாமலைக்குப் பதிகம் அருளியிருக்கலாம். அது அழிந்த பாடல்களுடன் இணைந்திருக்கவும் கூடும்.

## திரு அம்மானை

"பெருந்துறையான் கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி" என்பதால் அம்மானைப்பாடல் குதிரை மீது பெருந்துறையான் வந்த பின்பே பாடப்பட்டது. இதில் பதினான்கு பாடல்கள் பெருந்துறையைத் தாங்கி நிற்க, தில்லை திருவானைக்கா, திருவை யாறு என்பன ஒவ்வொரு பாடலையே கொண்டு ள்ளன. ஒரு பாடலே பெருந்துறையோடு அண்ணா மலையையும் காட்டி நிற்கிறது. எனவே, அம்மானை அண்ணாமலையிற் பாடப்பெற்றது என்னும் வாதவூரடிகள் புராணக்கூற்றுப் பொருந்து மாறில்லை. மேலும் குதிரை நினைப்புப் பெருந் துறையைச் சாருமன்றி, நாள் பல கடந்து அண்ணா மலையைச் சாராது என்பதையும் கருத்திற் கொள்ளுங்கால் அம்மானை பெருந் துறைக்கே உடை மையாகும்.

## திருப்பொற்சுண்ணம்

இதில் தில்லைக்கு ஆறும் பெருந்துறைக்கு ஒன்றும் திருவேகம்பத்துக்கு இரண்டும் திருவை யாற்றுக்கு ஒன்றும் எனப்பாடல் அமைவதால் பொற்சுண்ணம் தில்லையிற் பாடப்பெற்றதே. இது எல்லார்க்கும் உடன்பாடாம்.

## திருக்கோத்தும்பி

இதில் பிற தலங்கள் எதுவுமின்றி நான்கு பாடல்கள் தில்லைக்கே அமைவதால் கோத்தும்பி தில்லையிலேயே அருளிச் செய்யப்பெற்றதாகும். இதுவும் யாவர்க்கும் ஒப்பமுடிந்த கருத்தாம்.

## திருத்தெள்ளேணம்

பெருந்துறைக்கு இரண்டும் தில்லைக்கு இரண்டும் ஆரூருக்கு ஒன்றும் என இப்பதிகத்தில் பாடல்கள் அமைகின்றன. அவ்வாறு அமையினும் மணிவாசகர் தென்னா என்றும் தென்னன் என்றும் பலமுறை விளிப்பதோடு பரமசாரியார் தம்மை ஆட்கொண்டவகையையேபாடல்ஒவ்வொன்றிலும் வெளிப்படுத்தி வியந்தும் மகிழ்ந்தும் நிற்பதால் இது தில்லையைச்சாராது பெருந்துறையையே சார்ந்து நிற்கிறது என்பது தெளிவாம். ஆனால் கடவுள் மாமுனிவரும் ஆய்வாளரும் தில்லை எனக்கொள்வர். அவர்கள் தம்முடிபுக்குத் தந்த ஆதாரம் எதுவுமில்லை என்கையால் தெள்ளேணம் பெருந்துறைக்கேயாகும்.

## திருச்சாழல்

இங்குள்ள இருபது பாடல்களில் பிறதலங்கள் எதுவுமின்றி மூன்று பாடல்கள் தில்லையைக் காட்டுவதால் சாழல் தில்லையிற் பாடப்பட்டது எனப் பலரும் கூறுவது பொருந்தும்.

## திருப்பூவல்லி

இங்கே தில்லைக்கு நான்கும் பெருந்துறைக்கு மூன்றும் இடைமருது ஏகம்பம், உத்தரகோச மங்கைத் தலங்களுக்கு ஒவ்வொன்றுமாகப் பாடல்கள் அமைவதோடு தில்லையே முதற்கண் நினைப்பதாலும் பூவல்லி தில்லைக்கேயுரியதாம். இதுவும் எல்லார்க்கும் உடன்பாடாம்.

## திருவுந்தியார்

இதில் ஏகம்பம் ஒன்றே இடம்பெறுகிறது. தில்லையோ வேறு தலமோ இடம்பிடிக்கவில்லை. அவ்வாறிருந்தும் தில்லையையே புராணம் ஏற்றுள்ளது. கழுக்குன்றம் தரிசித்த மணிவாசகர் அதற்கு அண்மையிலுள்ள ஏகம்பத்துக்கும் சென்றி ருப்பார் என்பதில் ஐயமில்லை. திருவுந்தியார் தவிர்ந்த பிற பதிகங்கள் ஆறில் ஏகம்பம் மேலும் தோன்றுவதால் உந்தியார் ஏகம்பத்திற் பாடப் பெற்றதாகலாம்.

## திருத்தோள் நோக்கம்

இதில் பதினான்கு பாடல்களேயுள்ளன. அதனால் மேலும் ஆறு பாடல்களோ அவற்றினும் அதிகமோ அழிந்திருக்கலாம். முழுமை கிடைக்காத வகையால் தல நிச்சயம் செய்வது கடினமே. இருப்பினும் முதல் இரண்டு பாடல்களிலும் தில்லை தெரிவதால் தேணோக்கம் அதற்கேயுரியது போலும்.

## திருப்பொன்னூசல்

இதில் பத்து அல்லது இருபது பாடல் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இப்போது ஒன்பது பாடல்களேயுண்டு. பாடல் முழுவதிலும் உத்தரகோச மங்கை இணைந்திருப்பதால் பொன்னூசல் திருவுத்தரகோசமங்கையிற் பாடப்பட்டதே.

## அன்னைப்பத்து

"பாய்பரிமேற் கொண்டு என்னுள்ளம் கவர் வராய்" என்னுந்தொடர் இங்கு இடம் பெறு வதால் அடிகள் மதுரையைவிட்டு நீங்கிய பின் அன்னைப்பத்து பாடப்பட்டதாகும். இங்கு 'தென்னன் பெருந்துறை அத்தர், பாண்டிநல்நாடர் என்னுந் தொடர்களின் பின் உத்தரகோச மங்கையரும் காணப்படுகின்றார். அதனால் மணிவாசகர் உத்தரகோசமங்கையை விட்டு நீங்கி மீளவும் மூன்றாம் முறை பெருந்துறைக்கு வந்தபோது அன்னைப்பத்துப் பாடியிருக்கலாம் போலும். அவர் மூன்றாம் முறையும் பெருந் துறைக்கு வந்தார் என்பதைச் சிந்தனையிற் கொள்ளாதபடியால் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் அன்னைப்பத்து உத்தரகோசமங்கையிற் பாடப்பெற்றதென்பர். கடவுள் மாமுனிவரோ தில்லை என்பர். முதல் நினைவு பெருந்துறையாய், பாண்டிநல் நாடராய் அமைவது பெருந்துறையைச் சாருவதாகும்.

## குயிற்பத்து

இதிலும் நல்பரிமேல் வருவானை', பரிமிசை வந்த வள்ளல்' என்னுந்தொடர்கள் தோன்றுவதால் மதுரைத்தொடர்பு 'நீங்கிய பின்பே குயிற்பத்துப் பாடப்பட்டதாகும். உத்தரகோசமங்கை பதிக நடுவில் ஓர் பாடலில் மட்டும் வந்துள்ளது. அவ்வாறிருப்பினும் 'பெருந்துறை மேயபிரான்' என்பதே முதல் நினைப்பாகி மீண்டும் பெருந்துறை மேய தென்னவன்' என்பதோடு பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்து எனை ஆண்ட ... அமுது" எனவும் அந்தணன் ஆகி வந்து இங்கே அழகிய சேவடி காட்டி' எனவும், 'எம் தமர் ஆம் இவன் என்று இங்கு என்னையும் ஆட்கொண்டருளும் ...பிரான்" எனவும் வரும் பகுதிகள் பெருந் துறையையே நிலைநிறுத்துகின்றன. இவை ஆட்கொள்ளப்பெற்ற நினைவுகள். இதில் 'இங்கு' என்பது இருமுறை வந்து பெருந்துறையையே சுட்டிநிற்பதால் குயிற் பத்து பெருந்துறைக்கே உடைமையாகும். உத்தர கோச மங்கையும் தோன்றுவதால் அதனை நீங்கிப் பெருந்துறை அடைந்தபோது இது பாடப்பட்டது என்பது தெளிவாம். வாதவூரடிகள் புராணம் இதனைத் தில்லைக்கு ஒதுக்கும். தில்லை பதிகத்தில் இடம்பெறாமையால் அது பொருந்துமாறில்லை.

### திருத்தசாங்கம்

தசாங்கம் பத்து உறுப்புக்களைப் பாடுவது. அவ்வுறுப்புக்களில் நாடும் ஊரும் இணையும். இதில் நாடு - பாண்டிநாடு என்கிறார். ஊர் - உத்தரகோசமங்கை என்கிறார். உத்தரகோச மங்கையை ஊராகச் சொல்லிய மணிவாசகர் பெருந்துறையையும் எட்டுப்பாடல்களில் தந்துள்ளார். அதனால் இது பெருந்துறைக்கேயுரியது என நிச்சயம் செய்யலாம். செய்யினும் பெருந்துறையில் நின்று பாடும் ஒருவர் எவ்வாறு உத்தரகோச மங்கையை ஊராகக் கொள்ளமுடியும்? எனவே தசாங்கம் பெருந்துறையிற் பாடப்படவில்லை என்பது முற்றாம். மேலும் பெருந்துறை சோழநாட்டுத் தலம். சோழநாட்டுடன் பாண்டி நாட்டு ஊராகிய உத்தரகோசமங்கை இணையுமா? அது கூடா தாகையால் தசாங்கம் உத்தரகோச மங்கைக்கே சொந்தமாகும். பெருந்துறை மிகுதியும் தோன்றுவது தம்மை ஆட்கொண்ட இதயத்தலம் என்னும் கருத்தாகலாம். இத்தல நிச்சயத்தில் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பெருந்துறை என்பர். கடவுள் மாமுனிவர் தில்லை என்பர். தில்லை பதிகத்தில் காணப்படவில்ல என்பதைக் கருத்திற்கொள்க. இதில் ஊர்தி புரவியாகத் தோன்றுவதால் மணிவாசகர் மதுரை நீங்கிய பின்னரே இதனைப் பாடியருளினார் என்பது பெறப்படும்.

### திருப்பள்ளி எழுச்சி

பாடல் முழுவதிலும் பெருந்துறை பேசப் படுவதால் பள்ளி எழுச்சி பெருந்துறைக்கே யுரியது. இதில் மாறுபடும் எவர்க்குமில்லை.

### கோயில் மூத்த திருப்பதிகம்

இப்பதிகம் அந்தாதியாய் மண்டலித்துள்ளது. அதனால் இப்பதிகம் பூரணம் என்பது பெறப்படும். எல்லாப் பாடல்களிலும் பொன்னம்பலமே காணப் படுவதால் இது கோயிலாகிய தில்லைப் பதிக்கே யுரியது. மூத்த திருப்பதிகம் என்ற பெயரில் காரைக்காலம்மையார் பாடியருளிய திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகமும் உள்ளது. காலத்தால் முந்தியது என்பதை அது காட்டுகின்றது. இதுவும் கோயில் மூத்த திருப்பதிகம் என்றிருப்பதால் மணிவாசகரும் தேவாரம் பாடிய மூவரினும் காலத்தால் முந்தியவரோ என்னும் ஆசங்கை யையும் தந்துள்ளது. தேவாரம் பாடிய மூவரும் தில்லைக்குப் பதிகம் தந்திருந்தும் அவற்றிற்கு மூத்த திருப்பதிகம் எனப் பெயர் அமையாமை சிந்தனைக்குரியதே.

### கோயில் திருப்பதிகம்

இதுவும் அந்தாதியாய்ப் பத்துப்பாடல்களுடன் மண்டலித்துள்ளது. கோயில் மூத்த திருப்பதிகத் தோடு கோயில் திருப்பதிகமும் சமாசனம் கொள்ளுவது கூறியது கூறலாம். முன்னாளில் யாரோ ஒருவர் இதற்குக் கோயில் திருப்பதிகம் எனப்பெயரிட்டமை கண்டு கடவுள் மாமுனிவரும் அவ்வாறே அதனையும் கோயிலுக்கு உடைமையாக்கியுள்ளார் போலும். ஆனால் ஒரு பாடலிலேனும் தில்லை அமையாது பெருந்துறையே பதிகம் முழுவதிலும் தோன்று வதால் இது பெருந்துறையிலேயே பாடப்பெற்றதாகும்.

'களித்தனன் உன்னைக் கண்உற கண்டு கொண்டு இன்றே' என்கிறார் மணிவாசகர். இதில் 'இன்று' என்பது அடிமை கொண்ட நாளேயன்றி வேறன்று. அன்றேல் மதுரை நின்று வந்த பின் பெருந்துறையில் திரும்பவும் பரமாசாரியரைத் தரிசித்த நாளும் ஆகலாம். பின்னரும் ஒன்பதாம் பாடலில் "யாது நீ போவது ஓர் வகை எனக்கு அருளாய், வந்து நின் இணை அடி தந்தே" என்பது சிந்தனைக்குரியது. இணையடிதந்தபின்நீஎவ்வாறு போகமுடியும்? என வினவுதலால் இப்பதிகம்

இறைவன் மணிவாசகரை அங்கு தங்குமாறு பணித்து நீங்கிய சமயத்தில் கோயில் திருப்பதிகம் பாடப்பெற்றிருக்கலாம் என்பதும் சாலும்.

## செத்திலாப்பத்து

பெருந்துறையே பதிகம் முழுவதிலும் தோன்று வதால் செத்திலாப்பத்துப் பெருந் துறையிலேயே அருளிச் செய்யப் பெற்றதாகும். ஆனால் பாண்டியன் மணிவாசகரைச் சுடுமணலில் நிறுத்தி வருத்திய வேளையில் இதனை அவர் பாடியதாகக் கொள்வர் புலியூர் நம்பிகளும் மறைமலையடிகளும். செத்திலாப் பத்தில்

*"மன்ன! என்னையோர் வார்த்தையுள் படுத்துப்*
*பற்றினாய்; பதையேன் மனம் மிக உருகேன்*
*பரிகிலேன்; பரியா உடல் தன்னைச்*
*செற்றிலேன்; இன்னும் திரிதருகின்றேன்*
*திருப்பெருந்துறை மேவிய சிவனே."*

என வருவது நோக்குதற்குரியது. இப்பதிகம் முழுவதிலும் பாண்டியன் தம்மை வருத்திய தற்குரிய சான்றாக ஒன்றையேனும் மணிவாசகர் வெளிப்படுத்தவில்லை. அந்நிலையில் ஒரு வார்த்தையுட்படுத்திய உபதேசம். உபதேசம் பெற்றும் உருகாத மனநிலை, உருகாத நிலையில் ஊர்கள் தோறும் அலைந்து திரிதல் என்பவற்றையே அவர் வெளிப்படுத்துவதால் அவ்விருவர் கருத்தும் பொருந்துமாறில்லை

## அடைக்கலப்பத்து

பாண்டியன் வருந்தியபோது மணிவாசகர் அடைக்கலம் கூறினார் என்பர் புலியூர் நம்பிகள். அதற்கு உடன்பட்டு நிற்பர் மறைமலையடிகளும், இதில் தலம் எதுவுமில்லை. ஆனால் வாதவூரடிகள் புராணம் பெருந்துறைக்கே சார்த்தியுள்ளது. பெருந் துறைப் பெயர் நீங்கி நிற்பினும் இன்று, இங்கு என்னும் கால இடச்சுட்டுக்கள் தோன்றுமாயின் இதனைப் பெருந்துறை எனக்கொள்ளலாம். அவை இல்லாவகையால் அடைக்கலப்பத்துப் பெருந்துறை யோடு இணையாதெனக்கொள்க. இந் நிலையில், அடைக்கலப்பத்தில் பெண் மயலையே பெரிதும் கூறி வருந்துவதோடு அடியார் எல்லாரும் சிவன் கழல் சேரத்தாம் சேரவில்லையே எனத் துன்புறுகின்றார் மணிவாசகர். பெருந்துறையை நீங்கித் தல யாத்திரையின் பொருட்டு மணிவாசகர் ஊரூர் திரிந்தபோது தோன்றிய தனிமையில் முன்னைய பெண்மயக்கமும் அடியார் பிரிவும் அவரை வருத்தின எனக் கொண்டு அடைக்கலப்பத்து வழி நடையிற் பாடப்பெற்றிருக்கலாம் என்பதே பொருத்தமாகும். பெருந்துறையாயின் அங்கே பெண்மயக்கத்துக்கு இடம் ஏது? எனக்கேட்டு அதனை மறுக்க.

## ஆசைபத்து

தலம் எதுவும் வெளிப்படவில்லை. இருப்பினும் "உன் பழ அடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன்" என வருவதும் "கருளக் கொடி யோன் காணமாட்டாக்கழல் சேவடி என்னும் பொருளைத்தந்து இங்கு என்னை ஆண்ட பொல்லா மணியே" என வருவதும் அடியார்கூட்டம் பிரிந்த துன்பத்தில் ஆசைப்பத்துபெருந்துறையிற் பாடப்பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன போலும் 'இங்கு' என்பது பெருந்துறையைச் சுட்டி நிற்பதே.

## அதிசயப்பத்து

தலம் ஒன்றேனும் இதிலில்லை. உலக மாயைக்குள் அமிழ்ந்திக் கிடந்த தம்மை ஆட் கொண்டு தன் அடியாரில் கூட்டியதையும் அதுவே அதிசயம் என்பதையும் பாடல்கள் பத்தினும் தந்துள்ளார் மணிவாசகர். இங்கே இறைவனை முன்னிலைப்படுத்தி விளிக்காது. அப்பன், பரம்பரன், அத்தன் எனப் படர்க்கையில் வைத்து தாம்

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பெருமையை பரமாசாரியருடன் வந்த அடியார்களுக்குக்கூறி மகிழ்வது தெரிவதால் அதிசயப்பத்துப் பெருந் துறைக்கே பொருந்துவது ஆகும். " பித்தன் என்ற எனை உலகவர் பகர்வது ஓர் காரணம் - இது கேளீர்" என்னும் தொடரில் படர்க்கைப்பன்மையில் வரும் உலகவர்க்கு கூறாது முன்னிலையில் நிற்கும் அடியார்களை ' கேளீர்' என விளிப்பதும் இதற்குச் சான்றே.

## புணர்ச்சிப்பத்து

இதில் தலம் எதுவும் தோன்றவில்லை. தமக்கும் இறைவனுக்குமிடையில் கிடந்த நீண்ட நாட் பிரிவால் வருந்துவது தெரிகிறது. அது 'முன்னே எனை ஆண்ட பார்ப்பானே" என்னும் பத்தாம் பாடல் வரியால் தெளிவடைகிறது. அதனால் புணர்ச்சிப்பத்துப் பெருந்துறையோடு பொருந்து மாறில்லை. தில்லையிற் பாடினார் என்னில் அங்கே அவருக்கு நீண்ட நாட் பிரிவுத்துன்பம் தோன்ற இடமில்லை. 'தில்லைக்கு வா' எனப்பணித்த இறைவன் அதன் படி தம்மை ஆட்கொள்வான் என்னும் நம்பிக்கை அவர் இதயத்தில் இருக்கும் என்பதே காரணம். அவர் தில்லையில் மகிழ்வோடு தங்கியிருந்தமையை "ஆடும் குலா - தில்லை ஆண்டானைக் கொண்டன்றே" எனப் பாடல் தோறும் வரும் பகுதிகள் வெளிப்படுத்துகின்றன. எனவே புணர்ச்சிப்பத்து வழி நடையிலோ வேறு தலத்திலோ பாடப்பெற்றிருக்கலாம்.

## வாழாப்பத்து

பாடல் யாவற்றினும் பெருந்துறை தெரிகிறது. அதனால் இது பெருந்துறையிலேயே பாடப்பெற்றதாம்.

## அருட்பத்து

இங்கு குருந்த மரம் அதன்கீழ் எழுந்தருளிய பரமாசாரியத் திருக்கோலம் என்பவற்றையே நினைந்து உருகிப்பாடுவதால் அருட்பத்துப் பெருந் துறைக்கே உடைமையாகும். பரமாசாரியர் பிரிந்த பின்னர் அத்திருக்கோலத்தை நெஞ்சில் எழுதிப்பாடு கின்றார் மணிவாசகர். "திருப்பெருந்துறையில் செழுமலர்க்குருந்தம் மேவிய சீர் இருந்தவாறு எண்ணி" என்னும் வரிகள் இதற்குச் சான்றாம்.

## திருக்கழுக்குன்றப்பதிகம்

இதில் "நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என நான்காம் அடிதோறும் சொல்லியிருப்பதால் இது காட்சி கண்டு கழுக்குன்றத்திற் பாடியதேயாம்.

## கண்ட பத்து

எல்லாப்பாடல்களிலும் "தில்லை கண்டேனே" என்கிறார். எனவே இது தில்லையிற் பாடப்பட்டதே.

## பிரார்த்தனைப்பத்து

இது பதினொரு பாடல்களைக் கொண்டு அந்தாதியாய் மண்டலித்திருந்தும் பத்து என்னும் தொகை பெற்றிருப்பதன் காரணம் தெரிந்திலது. மேலும் தலம் ஒன்றுதானும் இடம்பெறவில்லை. ஆயினும் அடியார்ப்பிரிவும் தமது தனிமையும் காட்டுகின்றார் அடிகளார். கலந்து நின் அடியாரோடு அன்று வாளா களித்திருந்தேன் என்பதில் அன்று என்னும் சுட்டால் ஆட்கொள்ளப் பெற்ற முந்திய நாளையும் நாள் நீடிப்பதையும் காட்டியுள்ளார். இங்கு இருத்தல் அழகோ என்பதில் இங்கு என்பது பெருந்துறையாய் நிற்கிறது. அதனால் இது பெருந்துறைக்கு ஆகலாம். கடவுள் மா முனிவரோடு பிறரும் பெருந்துறையாகவே கொள்வர்.

## குழைத்தபத்து

*"அன்றே என்தன் ஆவியும் உடலும்*
*உடைமை எல்லாமும்*

*குன்றே அனையாய் என்னை ஆட்*
*கொண்டபோதே கொண்டிலையோ*
*இன்று ஓர்இடையூறு எனக்கு உண்டோ"*

*"அடியேன் அல்லல் எல்லாம் முன்*
*அகல ஆண்டாய்"*

என்னும் சான்றுகளில் அன்று முன் இன்று என்பன ஆட்கொள்ளப்பெற்ற முந்திய நாளோடு பின்னர் பல நாள்களோ மாதங்களோ கழிந்து குழைத்தபத்துப் பாடிய நாளையும் புலப்படுத்து கின்றன. இப்பதிகத்தில் தலம் எதுவும் பொறிக்கப் படாவிடினும் பரமாசாரியரைப் பிரிந்த தனிமையும் கால நீடிப்பும் தோன்றுவதால் இது பெருந் துறையிலோ யாத்திரையிலோ பாடியது ஆகலாம்.

## உயிருண்ணிப்பத்து

பாடல் யாவற்றினும் பெருந்துறை இடம் பெறுவதால் உயிருண்ணிப்பத்துப் பெருந்துறையிற் பாடப் பெற்றதே. " சென்று சேர்ந்தேன் மன்னுதிருப் பெருந்துறை; இறைதாள் பூண்டேன்: புறம் போகேன்; இனி, புறம் போகல் ஒட்டேன்" என்னும் வரிகள் மணிவாசகர் பெருந்துறை அடைந்தமை; பரமாசாரியரால் ஆட்கொள்ளப்பட்டமை; பரமாசாரி யரை நீங்கித் தாம் புறம் போகாதிருந்தமை; பரமாசாரியரையும் புறம் போகவொட்டாது தாம் தடுத்திருந்தமை என்பவற்றைப் புலப்படுத்தலால் உயிருண்ணிப் பத்து குருதேசிகராகிய இறைவன் முன்னிலையிற் பாடப்பெற்றது என்பது தெளிவாம்.

## அச்சப்பத்து

வேறு தலம் எதுவுமில்லாது அம்பலம் இரண்டு பாடல்களிற் காணப்படுகிறது. அதனால் இது தில்லையிற் பாடப்பட்டிருக்கலாம். எல்லார்க்கும் இது உடன்பாடாம். மேலும் இதில் 'பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்" எனப் புறமதத்தவரின் கொள்கையைச் சாடி நிற்பதும் வெண்ணீறு அணிகிலாதவரை - திருமுண்டம் தீட்டமாட்டாது அஞ்சுவார் அவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' எனப் பயந்து ஒதுங்குவதும் தெரிவதால், நீறணியாப் புத்தர்களைத் தில்லையிற் கண்டபோது அச்சப்பத்துப் பாடியிருக்கலாம் போலும். 'புத்தன் முதல் ஆய புல் அறிவின் சில் சமயம்' எனத் தோணோக்கத்தில் அடிகள் வெறுத்திருப்பதும் இதற்குச் சான்றாம். இது புத்தவாதம் நிகழ்ந்தமையை ஓரளவு வெளிப் படுத்துவதும் ஆகலாம். அச்சப்பத்தில் "மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து எம்மாற்கு அற்றில்லாதவரை' என மிகுதியும் புற மதத்தவரை மணிவாசகர் வெறுப்பது நோக்கத்தக்கது.

## பாண்டிப்பதிகம்

இதில்' தலம் எதுவுமில்லை. ஆயினும் "தெரிவர நின்று உருக்கிப் பரிமேற் கொண்ட சேவகனார் ஒருவரையன்றி உருவு அறியாது என் தன்னுள்ளமதே" எனவும் "கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக் குதிரையின் மேல் வந்து கூடிடுமேல் குடிகேடு கண்டீர், மதுரையர் மன்னன் மறுபிறப்பு ஓட மறித்திடுமே" எனவும் "தூண்டிய சோதியை மீனவனும் சொல்லவல்லன் அல்லன்" எனவும் "பாண்டியனார் புரவியின் மேல் வரப் புந்தி கொள்ளப்பட்ட பூங்கொடியார் மர இயல்கொண்டு தம்மையும் தாம் அறியார் மறந்தே' எனவும் பாடல்கள் மதுரைக் காட்சிகளையே உள்ளுறையாக்கி நிற்பதால் பாண்டிப்பதிகம் இறைவன் பரி மீது வந்தபோது மதுரையிற் பாடினார் எனக் கொள்ளலே ஏற்புடைத்து பிறர் பெருந்துறை என்பது பொருந்துவதன்று.

## பிடித்த பத்து

இது சீர்காழியிற் பாடப்பட்டது என்பர் கடவுள் மாமுனிவர். "கழுமலம் அதனிற் காட்சி

கொடுத்தும்" எனக்கீர்த்தித் திருவகவலில் முன்பு சொல்லியிருந்தும், " காட்டினாய் கழுக்குன்றிலே" என்பதுபோல அமையாமலும் சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களில் ஒன்றேனும் இடம்பெறாதும் பாடல்கள் அமைவதால் பிடித்த பத்துச் சீர்காழியிற் பாடப்பெற்றது என்னும் முடிபு ஏற்கு மாறில்லை. சீர்காழியன்றிப் பிற தலங்களில் ஒன்றுதானும் இங்குத்தோன்ற வில்லை. அதனால் தல நிச்சயம் காண்பது கடினமே. இருப்பினும் பிடித்த பத்தில் 'இனி எங்கு எழுந்தருளுவது; சிக்கெனப்பிடித்தேன்.' என்னும் தொடர்களை நோக்கும் போது மணிவாசகரைப் பெருந்துறையில் இருக்குமாறு பணித்து பரமாசாரியார் எழுந்து சென்றபோது அடிகள் இதனைப் பாடியிருத்தல் கூடும் என்பதே பொருந்தும். இறைவனை மணிவாசகர் முன்நின்று பிடித்த நிலையில் பெருந்துறைப்பெயர் இடம்பெறாமை ஏற்கவேண்டியதே.

## திரு ஏசறவு

இதில் அம்பலம் பெருந்துறை இடைமருது என்னும் மூன்று தலங்கள் உள்ளன. இடைமருது தோன்றிய பாடலில் "மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருகத் தெருவு தொறும் மிக அலறிச் சிவபெருமான் டின்று ஏத்திப் பருகிய நின் பரங்கருணை" என்னும் வரிகளில் மணிவாசகர் பெருந்துறை நீங்கித் தலங்கள் தோறும் ஊர்கள்தோறும் திரிந்தமை புலப்படுகின்றது. அப்பாடலின் இறுதி அடி" அருள் எனக்கு இங்கு - இடைமருதே இடங்கொண்ட அம்மானே" என முடிகிறது. இதில் இங்கு என்பது அண்மைச்சுட்டாய் இடைமருதைக் காட்டுதலால் திருவேசறவு இடைமருதுக்கேயுரியது. கடவுள் மாமுனிவர் பெருந்துறைக்குச் சேர்த்துள்ளார்.

## திருப்புலம்பல்

இது பதிகம் என்றோ பத்து என்றோ தலைப்பு அமையாது திருப்புலம்பல் எனச் சிறப்புப் பெயர் கொள்வதால் இருபது பாடல்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும். எனவே மூன்று பாடல்கள் உயிர் பிழைக்க ஏனைய பாடல்கள் அழிந்து விட்டன என்பது உறுதி. உயிர் பிழைத்த மூன்று பாடல்களிலும் தனித்தனி திருவாரூர் பெருந்துறை குற்றாலம் எனவருவதலால் தல நிச்சயம் காணல் சிரமமாகும். கடவுள் மாமுனிவர் ஆரூர் என்கிறார்.

## குலாப்பத்து

பத்துப்பாடல்களிலும் தில்லை பொறிக்கப் பட்டுள்ளது. எனவே, இது தில்லைக்கே உடைமை யாகும்.

## அற்புதப்பத்து

இதில் தலம் எதுவுமில்லை. ஆயினும் ஆட்கொள்ளப்படும் முன் தமக்கிருந்த பெண் மயக்கம் உலக மயக்கம் முதலான ஆசைகளைப் போக்கி ஆட்கொண்டது வியப்புக்குரியது எனப் பாடல்தோறும் தெரிவிப்பதால் அற்புதப்பத்துப் பெருந்துறைக்கே பொருந்தும்.

## சென்னிப்பத்து

இதில் தில்லை ஒரு பாடலில் மட்டும் தோன்ற நான்கு பாடல்களிற் பெருந்துறை தோன்றுவதாலும் 'எங்கள் பெருந்துறை மேவினான்' என உரிமை பேசப்படுவதாலும் ஆட்கொண்ட திருக்கழலையே சென்னியிற் பதித்துப் பாடல்தோறும் காட்டுவதாலும் இது பெருந்துறைப்பாடலேயாம்.

## திருவார்த்தை

வேறு தலமின்றிப் பெருந்துறையே பேசப்படுவதால் திருவார்த்தை பெருந்துறைக்கே யுரியது. இதில், 'மண்ணிடை வந்திழிந்து',

மண்ணிடை வந்து தோன்றி', 'அவனி வந்த எங்கள் பிரான்' என வருவனவும் 'ஆடல் அமர்ந்த பரிமா ஏறி ஆண்டு கொண்ட" என்னும் குதிரைக் காட்சியோடு" ' கோலமணி அணிமாடம் நீடு குலாவும் இடவை மட நல்லாட்குச் சீலம் மிகக் கருணை அளிக்கும்' எனச் செம்மணச் செல்வியையும் இணைத்துக் காட்டுவதும் பிறவும் பெருந்துறையிலும் மதுரையிலும் அவர் கண்ட முன்னைய காட்சிகளாய்ப் பெருந்துறையோடு இணைவனவே. ஒன்பதாம் பாடலில் 'பெருந்துறை ஆனி அன்று காதல் பெருகக் கருணை காட்டித் தன் கழல் காட்டி கசிந்து உருகக் கேதம் கெடுத்து என்னை ஆண்டருளும்" என வருவது கால நீடிப்பைக் காட்டுகிறது. இதற்கு 'அன்று' என்னும் சேய்மைச் சுட்டை ஆதாரம் கொள்க. அதனால், மணிவாசகர் உத்தரகோசமங்கை நின்று மீளவும் பெருந்துறை அடைந்தபோது இது பாடப்பட்டது எனக் கொள்ளுதலே பொருந்துவதாம்.

### எண்ணப்பதிகம்

இது பதிகம் என்றிருப்பதால் பத்துப் பாடல் களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் இன்று ஆறு பாடல்களேயுள்ளன. தலம் எதுவும் காணப்படவில்லை. பாடல்களில் இறைவனைப் பிரிந்தமை தம்மை வருந்துவதை அடிகள் வெளிப் படுத்துவதால் இது பெருந்துறைக்கு ஆகலாம்.

### யாத்திரைப்பத்து

இதில் தலம் எதுவுமில்லை. அது இல்லை யேனும் சிவபுரஞ்சேரப்பற்று நீக்கிய அடியார் எல்லோரையும் அழைத்ததுடன் செல்லும் யாத்திரை வடிவம் பாடல்களில் தோன்றுவதால் இது மணிவாசகரின் கடைசி வாழ்நாள் தலமான தில்லை எனக் கொள்வதில் தவறில்லை. கடவுள் மாமுனிவரும் தில்லை என்பர்.

### திருப்படை எழுச்சி

இது இரண்டு பாடல்களோடு நின்று விட்டது. அதனால் ஏனைய பாடல்கள் அழிந்து விட்டன என்பது உறுதி. மேலும் தலம் ஒன்றேனு மின்மை யால் தல நிச்சயம் சாலாது.

### திருவெண்பா

பாடல் முழுவதிலும் பெருந்துறை தோன்று வதால் இது அதற்கே உடைமையாம்.

### பண்டாய நான்மறை

இதில் ஏழு பாடல்களேயுண்டு. மிகுதி அழிந் திருத்தல் வேண்டும். பெருந்துறையே மிகுதியும் வருதலால் இதுவும் அத்தலத்துப் பாடலாம்.

### திருப்படை ஆட்சி

தலம் சொல்லப்படவில்லை. பாடற்கருத்துக்கள் மணிவாசகரின் பிற்கால வாழ்வோடு பொருந் துவதால் இது தில்லைக்கு ஆகலாம்.

### ஆனந்தமாலை

இதில் ஏழுபாடல்களேயுண்டு. மிகுதி அழிந்து விட்டது. இங்கு தில்லையுடன் பெருந்துறையும் இணைந்துள்ளது. ஆயினும் நரியைப்பரியாக்கித் தென்னனது மதுரை பித்துக்கொள்ளுமாறு செய்த பெருந்துறையாய் என்றும் பாண்டி வெள்ளமே என நினைந்தும் பாடியிருப்பதால் இது பெருந்துறைக்கு ஆகலாம். வாதவூரடிகள் புராணமும் பெருந்துறை யையே ஏற்றுள்ளது.

### அச்சோப்பதிகம்

இதில் தம்மை ஆட்கொண்டமையையும் ஓங்காரத்தின் உட்பொருள் உபதேசிக்கப்பட்டதையும் சிந்திப்பதால் இதுவும் பெருந்துறைக்காகலாம்.

## 6. மணிவாசகரின் தலயாத்திரை

இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற நினைப்பினாலும் அவன் மெய்யடியார்களுக்கு அருள்பாலித்து அற்புதங்கள் நிகழ்த்திய புனிதத் தலங்களைத் தரிசித்தல் வேண்டும் என்ற பெருவேட்கையாலும் தலயாத்திரை செய்தவர்கள் தேவாரம் அருளிய மூவருமே. அவர்களைத் தொடர்ந்து தலயாத்திரையை மேற்கொண்டவர்கள் மாணிக்கவாசகப் பெருமான், திருமுறையில் இடம் பெறாத பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் என்னும் மூவருமே. இவர்கள் அறுவரும் பரந்தளவில் யாத்திரையை மேற் கொண்டவர்கள் என்பதை அவர்கள் அருளிய தேவாரப்பதிகங்கள் திருவாசகம், திருப்புகழ் ஆதியன புலப்படுத்தியுள்ளன. இவருள் அப்பர் மூர்த்திகள் கயிலை யாத்திரைக்கும் முயன்றதைச் சேக்கிழார் தந்துள்ளார். பன்னிரு திருமுறைகளில் எட்டாந்திருமுறைக்குப் பின் உள்ளவற்றை அருளியவர்களும் தலயாத்திரை செய்திருப்பர் எனக் கொள்ளுதலும் தவறாகாது. கொள்ளினும் அவர்கள் மிகக் குறைந்தளவில் தலயாத்திரை செய்தவர்களே.

இத்தலயாத்திரைக்குத் தமிழகத்து வைணவ ஆழ்வார்களும் புறமல்லர். தேவார முதலிகளைப் போலவே ஆழ்வார்கள் பன்னிருவரும் தல யாத்திரை செய்தமையை நாலாயிர திவ்விய பிரபந்தம் வெளிப்படுத்தியுள்ளது. ஆழ்வார்கள் தல யாத்திரை செய்து பாசுரங்கள் அருளிய தலங்கள் நூற்றெட்டு ஆகும். அவை மங்களாஸாசனத் தலங்கள் எனப்படும்.

தமிழ்நாட்டுச் சிவமதத்தில் மூவர் அருளிய தேவாரங்களில் இதுவரை கிடைத்தவற்றைக் கொண்டு கணிக்கும்போது சம்பந்தப்பிள்ளையார் இருநூற்றுப்பத்தொன்பது தலங்களையும் அப்பரடிகள் நூற்றிருபத்தைந்து தலங்களையும் சுந்தரர் எண்பத்தேழு தலங்களையும் பாடியுள்ளனர். ஆனால் அவர்கள் பாடிய உண்மைத்தொகை என்ற கணிப்பில் சம்பந்தர் பதினாறாயிரமும் அப்பர் நாற்பத்தொன்ப தனாயிரமும் சுந்தரர் முப்பத்தெண்ணாயிரமும் பாடினர் என்ற குறிப்புமுண்டு. அதனால் அவர்கள் சென்ற யாத்திரைத் தலங்களும் முன்னர் காட்டிய வற்றினும் மிக அதிகமாகும் என்பது புலனாகும். மூவரும் பிறரும் பதிகங்கள் அருளிய போதும் அத்தலங்கள் அனைத்தும் அவர்களால் தரிசிக்கப் பெற்றவை எனக் கொள்ளல் சாலாது. அவற்றுள் வடக்கிலுள்ள இமயத்தலங்களும் தெற்கிலுள்ள ஈழத்தலங்களும் அவர்கள் சென்று தரிசிக்கப் பெறாதனவே. இவர்களோடு மணிவாசகப் பெருமானை ஒப்பு நோக்கும்போது அவர் சென்று வழிபட்ட தலங்கள் தெளிவு பெறவில்லை. காரணம் மூவர் முதலிகள் போன்று தலப்பெயர் துலங்கப் பதிகம் முழுவதும் பாடப் பெறாமையே.

திருவாசகத்தில் முப்பத்தொன்பது தலங்களே காட்சி தருகின்றன. திருவாசகம் முழுதும் கிடைத் திருப்பின் தல எண்ணிக்கை மேலும் பலவாகும் என்பதையும் நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். மேற்காட்டிய முப்பத்தொன்பது தலங்களில் ஒரு சில தலங்கள்தவிர ஏனையவைமணிவாசகராற்சென்று வழிபடப்பட்டனவோ என்னும் ஆசங்கையையும் எழுப்புகின்றன. அவரது தல யாத்திரை வாதவூரில் தொடங்கித் தில்லையில் பூர்த்தியாகின்றது. மணி வாசகரோடு தேவார மூவரையும் தலயாத்திரையில் வைத்து ஒப்பிடும்போது மூவர் வழிபாடு தமிழ்நாடு முழுவதும் பரந்து தாமரை இலைபோல் வட்ட மாய்ப் பெரியளவில் அமைகிறது. ஆனால் திருவாசகப் பாடல்கள் தரும் தலங்களைக்கூர்ந்து நோக்குகையில் அவரது யாத்திரை தெற்கிலிருந்து வடக்கு நொக்கி ஏறத்தாழ நேர்கோட்டில் அமைகிறது. அதுவும் அல்லாது கீழைக் கடற்கரைக்குச் சமீப மாகவும் அந்த மார்ககம் நீண்டு கிடப்பதையும் காணலாம்

மணிவாசகர் முதலில் வாதவூரிலிருந்து நேர் மேற்கிலுள்ள மதுரைக்கு அமைச்சராக வந்தவர். பின்னர் ஏறக்குறைய வடகிழக்கிலுள்ள பெருந் துறையில் ஆட்கொள்ளப்பட்டு பரமாசாரியர் கட்டளைப்படி பெருந்துறைக்கு நேர் தெற்கில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள உத்தரகோசமங்கையை வழிபடு கின்றார். அங்கு வழிபட்ட பின் திரும்பவும் அந்த மார்க்கத்தில் வடக்கு நோக்கித் தலயாத்திரையை மேற்கொண்ட அவர் தம்மை ஆட்கொண்ட தலமான பெருந்துறைக்கு மூன்றாம் முறையும் சென்றிருப்பார் என்பது எமது உறுதியான முடிபாகும். அதற்குப் பெருந் துறையோடு உத்தரகோச மங்கையையும் இணைத்துக் காட்டும் கீர்த்தித் திருவகவற் பகுதியும் பிறபதிகங்களும் ஆதாரமாம். கீர்த்திதிருவகவல் பெருந்துறையிலேயே பாடப் பெற்றது என்பதைப் பதிகத் தலங்கள் என்ற தலைப்பிற் காட்டியுள்ளோம்.

அவரது வட திசை யாத்திரையில் பாண்டி நாட்டுத் தலங்களாகிய திருப்பூவணம் குற்றாலம் என்பவற்றையும் அவர் வழிபட்டிருக்கலாம். இந்தத் தலங்கள் இரண்டும் திருவாசகதிற்கு காணப்படு கின்றன. நம்பி திருவிளையாடல் குதிரை வாங்கப் புறப்பட்டபோது கானப்பேரூரையும் அவர் வழிபட்டார் எனச்சொல்லும் கானப்பேரூர் பாண்டி மண்டலத்திருப்பினும் அத்தலம் திருவாசகத்தில் இடம்பெறவில்லை.

பெருந்துறையிலிருந்து மிக வடக்கிலுள்ள கழுக்குன்றத்துக்கும் மணிவாசகர் யாத்திரை செய்ததற்கு "காட்டினாய் கழுக்குன்றலே" என்பது அகச்சான்றாம். கழுக்குன்றம் சென்ற அடிகள் அதற்கு அண்மையிலுள்ள காஞ்சிபுரத்து ஏகாம் பரநாதரையும் காமாட்சியையும் வழிபட்டிருக்கலாம் என்பது அனைவரும் ஏற்கக்கூடியதே. "ஈர் அம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில் என்பது அதற்கு ஆதாரம். பெருந்துறைக்கும் கழுக்குன்றத்துக்கு மிடையிலுள்ள சோழநாட்டுத் தலங்களான திரு வாரூர் திருவிடைமருதூர் சீர்காழி என்பனவும் அந்த மார்க்கத்தில் அமைவதால் அத்தலங்களும் மணிவாசகரால் வழிபடப்பட்டனவேயாம் விருத் தாலம் என்னும் முதுகுன்றத்தையும் அவர் வழிபட்டார் என வாதவூரடிகள் புராணம் கூறும். ஆனால் அத்தலம் திருவாசகத்தில் இடம்பெற வில்லை. எனவே விருத்தாச்சலம் காட்டும் திரு வாசகம் அழிந்திருக்கலாம்.

சீர்காழிக்கு வந்த மணிவாசகர் அண்மை யிலுள்ள சிதம்பரத்தலத்தையும் பின்னர் வழிபட்டார் எனக் கொள்ளல் பொருந்தாது. அவர் சீர்காழியை வழிபட்டு வடக்கிலுள்ள கழுகுன்றம், ஏகம்பம் என்னும் இரண்டையும் வழிபட்ட பின்பே தில்லைக்குத் திரும்பினார் என்பதே சிறந்த முடிபாம். காரணம் தில்லையே அவரது முத்தித் தலமாய் இறுதியில் நின்றமையே. "நாயினேனை நலம் மலி தில்லையுள் கோலம் ஆர் பொதுவினில் வருக" என்பது இதற்குச் சான்றாம். அண்ணாமலையும் திருவாசகத்தில்மூன்று இடங்களில் குறிக்கப்படு வதால் அதுவும் அவர் வழிபட்டதலமே. அதுவுமன்றி அண்ணாமலையில் மாணிவாசகருக்குக் கோயிலும் எடுத்ததுச் சிறப்புவிழாவும் இன்று வரை நிகழ்வதும் இதனை வலிசெய்யும். அண்ணாமலை வழிபாடு பொருந்தும்போது முதுகுன்றமும் அவ்வழி யில் அமைந்த தலமாயிருக்கையில் சீர்காழியில் இருந்து முதுகுன்றையடைந்து அதன் பின்பு அவர் அண்ணாமலை சென்றிருக்கலாம் என்பது எமது கருத்தாம். இவ்வாறு கொள்ளாது வடநாட்டுத் தலங்களை வணங்கி மீண்டுவரும் வழியில் சோழநாட்டுத்தலங்களை அவர் வழிபட்டார் எனக் கொள்ளலும் பொருந்துவதே.

இனி மூவர் பாடிய தலங்களோடு மணிவாசகர் பாடிய தலங்களை ஒப்புநோக்குவோம். மணிவாசகர்

பாடிய தலங்களில் மூன்றே பதிக வடிவம் பெற்று ள்ளன. அவை பெருந்துறை, தில்லை, உத்தர கோச மங்கை என்பன. இம்மூன்றில் தில்லையை மூவரும் பாடியுள்ளனர். பெருந்துறையைத் தேவார முதலிகளில் ஒருவரும் பாடவில்லை என்பர் மறை மலையடிகள். ஆனால் சம்பந்தப்பிள்ளையார் பேணு பெருந்துறை, பெருந்துறை என்னும் பெயர்களை ஒரு பதிகத்திலேயே தந்துள்ளார். மணிவாசகரும் பெருந்துறையென்றே பொறித்துள்ளார். இம்மூன்றில் உத்தரகோசமங்கைக்கு மூவர் பதிகம் வழங்காமை யால் அஃதொன்றே மணிவாசகரது பாடல்பெற்ற சிறப்புத்தலமாம்.

மேற்கூறிய மூன்றும் நீங்கி நிற்க, அண்ணா மலை, அவிநாசி, திருவாரூர், ஆனைக்கா, திருவிடை மருதூர், ஈங்கோய் மலை, ஐயாறு, கச்சியேகம்பம், கடம்பூர், கயிலை, கழுக்குன்றம், சீர்காழி, குற்றாலம், சிராப்பள்ளி, துருத்தி, தேவூர், பழனம், பராய்த்துறை, பனையூர், புறம்பயம், பூவணம், ஆலவாய், திருவாஞ்சியம், வெண்காடு, மயேந்திரம் என்னும் இருபத்தைந்து தலங்களும் தேவாரப்பதிகங்கள் பெற்று நிற்க மணிவாசகருக்கு அவை வைப்புத்தலங்களாக அமைகின்றன. இவற்றுள் மயேந்திரத்தைச் சம்பந்தபிள்ளையார் மயேந்திரப்பள்ளி என்கிறார். இவையன்றி, கல்லாடம், பஞ்சப்பள்ளி நந்தம்பாடி, வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், வாதவூர், பூவலம், பட்டமங்கை, ஓரியூர், பாண்டூர், தேவூர்த்தென்பால் திகழ் தருதீவு, கவைத்தலை, குவைப்பதி, அரிகேசரி என்பனவும் பதிகம் பெறாத மணிவாசகர் பாடிய வைப்புத்தலங்களே. வைப்புத்தலங்களில் பாலை எனவும் ஒரு தலம் தந்துள்ளார். அது சம்பந்தர் அருளிய திருக்கழிப்பாலையும் ஆகலாம்.

சம்பந்தர் தலம் தோன்றியருளியதும் ஆட் கொள்ளப்பெற்றதுமாகிய சீர்காழிக்குப் பதிகங்கள் பல வழங்கியுள்ளனர். ஆனால் மணிவாசகரோ தாம் தோன்றிய ஊரான வாதவூரில் பழைய சிவத்தலம் ஒன்று இருந்தும் அதனை ஓர் இடத்தில் மட்டும் சிந்தித்துள்ளார். அதனால் பெருந்துறையில் ஆட்கொள்ளப் பெற்ற பின் அவர் தமது ஊராகிய வாதவூர்க்குச் செல்லவில்லை என்பதும் பெறப் பட்டது. அந்நிலையில் அவரது நெஞ்சில் ஆழப் பதிந்த தலங்கள் மூன்றாகும். அவை பெருந்துறை சிதம்பரம், உத்தரகோசமங்கை என்பன. அவர் தாம் வழங்கிய திருவாசகத்தில் உத்தரகோச மங்கையை முப்பத்தெட்டு இடங்களிலும் தில்லை யை ஐம்பத்திரண்டு இடங்களிலும் பெருந்துறையை அறுபத்தெட்டு இடங்களிலும் சிந்தித்திருப்பதால் பெருந்துறையே அவரது இதயத்தலமாக அமை கின்றது.

மூவர் பாடிய தலங்களோடு மணிவாசகர் பாடிய தலங்களை ஒப்புநோக்கும்போது மணிவாசகரது தலங்கள் மிகக்குறைந்த தொகையிற் காணப் படுகின்றன. காரணம் யாது? இவர் பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்தார் என்பதும் இளமையிலேயே பெருந்துறைப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றார் என்பதும் நாம் அறிந்தனவே. இதற்கு ஆதாரமாக மணிவாசகர் வாழ்ந்த ஆண்டுகள் முப்பத்திரண்டே எனப்பாடல் ஒன்றும் பேசும். இந்நிலையில் அமைச்சர் பதவியை ஏறக்குறைய முப்பதாம் ஆண்டளவில் துறந்த பின் அவர் பெருந்துறைக் கடவுளால் ஆட்கொள்ளப் பெற்றவராதல் வேண்டும். அதன் பின்னரே அவர் பெருந்துறையிலிருந்து தல யாத்திரையை மேற் கொண்டவர் என்பது முடிபு. இறுதியில் ஒரு சிலமாதங்கள் தில்லையிலும் அவர் தங்கினார் என வாதவூரடிகள் புராணமும் கூறும். எனவே அவர் யாத்திரை செய்த காலம் குறுகி நிற்கவே தலங்களும் குறுகிவிட்டன போலும்.

## 7. மணிவாசகர் கோவையும் பாடினாரா?

மணிவாசகரே கோவையையும் பாடி அருளினார் என்பது தமிழறிஞர் அனைவரதும் தொன்றுதொட்டு

வந்த முடிபு. ஆனால் அந்த முடிபு கிறிஸ்தவத் துறவியான ஜீ. யூ.போப் போன்றோர் காலந்தொட்டு ஊசலாடத் தொடங்கிவிட்டது என்னும் போது அந்தப் பழைய முடிவில் ஊறித் திளைத்தவர்களது நெஞ்சம் புண்படவுங்கூடும். போப் துறவியார் திருவாசகத்தில் தம்மனத்தைப் பறிகொடுத்தவர். நெக்குருகி நின்றவர். உணர்வாற் பொங்கிக் கொப்பளிக்கும் பக்திப் பெருக்கு அமைந்த பாடல்களை அருளிய ஒரு தவமுதியவர். இலக்கணச் செறிவும் பொருட்செறிவும் மிக்க, சிந்தனையில் தோன்றும் சிற்றின்பப்பாடலாகிய மரபுவழிக் கவிதையையும் பாடினார் என்பதை எவ்வாறு ஏற்பது என்பதுதான் போப் அவர்களின் மறுப்புரையாகும். போப் அவர்களது கருத்தோடு நாமும் சிந்திப்போம். பிற்றைநாள்களில் அகப்பொருள் துறைகளுக்கும் பேரின்பப் பொருள் கற்பிக்கப்பட்ட காரணத்தால் மகா துறவியான மணிவாசகரும் சிற்றின்பந் தழுவிய திருக்கோவையாரையும் பாடினார் போலும் என்பர் பலர். அக்கூற்றை அதற்கு உரை எழுதிய பேராசிரியர் அந்தப் பேரின்பப் பொருளை எவ்விடத்தும் வழங்கவில்லை என்பது மறுக்கிறது. அதனால் பெயர் சுட்டப்பெறாத தலைவன் தலை வியரது களவு, கற்பு ஒழுக்கங்கள் நிகழ்வதற்குச் சிற்றம்பலவனது தில்லைப்பதி களமாக அமைந்தே யன்றி அதில் சிற்றம்பலவன் தலைவனாகவும் கோவையாசிரியர் தலைவி யாகவும் அமைய வில்லை என்பதே உரை எழுதிய பேராசிரியர் கருத்தெனக்கொள்க.

மணிவாசகரும் மணிவார்த்தையில் "கேட்டாயே தோழி" என அகப்பொருள் பாடுகிறார். அதில் பல இடங்களில் தம்மைத் தலைவியாகவோ செவிலி யாகவோ தோழியாகவோ வைத்து இறைவனாகிய தலைவனுக்கு நெருக்கமாக நின்று பாடுகிறார். அந்நிலையில் அவர் இறைவனோடு தொடர்பில்லாத வாறு தம்மை வெளிநிறுத்திக் கோவையும் பாடினார் என்பது பொருந்தாக்கூற்றே. மேலும் திருவாசகத்தில் பெரும்பாலும் அவர் சிவத்தோடு பேசுவது முன்னிலைக்குரிய எட்டாம் வேற்றுமை விளியே. அது முன் நிற்கும் நெருங்கிய நிலை. அவ்வாறு இறைவனோடு நெருங்கி நின்ற அணித்தொழும்பர் ஒருவர் தூரத்தே வைக்கும் படர்க்கையில் பரம்பொருளை நிறுத்தி கோவை பாடினார் என்பதும் மறுப்பதற்கான பிறிதொரு காரணமாம்.

இனி ஆய்வுக்கு வருவோம். கோவை ஆசிரியர் யார் என்பதை கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்தில் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் காட்டுகின்றார்.

*"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தொனைவண்*
*டில்லைமன்னைத்*
*திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச்*
*சிற்றம்பலப்*
*பொருளார் தருதிருத் கோவைகண் டேயுமற்*
*றப்பொருளைத்*
*தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே."*

என்பது அப்பாடல். இங்கே கோவை ஆசிரியர் சிவபாத்தியன் என்பதும் ஊர் திருவாதவூர் என்பதும் தெளிவுகள். இங்கே வாசகம் வருகிறதே. அது திருவாசகந்தானே, வேறு அன்று என முற்றுப்புள்ளி வைப்பது போலவும் நிற்கிறது. செய்யுளில் வருவாசகத்தினில் முற்றும் என்பதும் வண்தில்லை என்பதும் கூத்தனுக்குரிய அடைகள். வாசகம், திருவாசகமாயின் அதனை இறைவன் விருப்போடு கேட்டருளுவானேயன்றி உணர வேண்டிய தேவை அவனுக்கில்லை. உணர வேண்டியது வேதமே. உணர்தல் அறிதலாம். மேலும் வருதல், முற்றும் என்பன முறையே தொன்று தொட்டு வருதலையும் வேத முழுமை யையும் தழுவி நிற்பதால் வாசகம் என்பது வேதமன்றி, திருவாசகமன்று. 'எழுத்தறிவித்தவன் இறைவனாவன்' என்பதில் எழுத்து, கல்விக்காதல் போல வாசகமும் வேதமாகி நின்றவாறு காண்க.

வந்த முடிபு. ஆனால் அந்த முடிபு கிறிஸ்தவத் துறவியான ஜீ. யூ.போப் போன்றோர் காலந்தொட்டு ஊசலாடத் தொடங்கிவிட்டது என்னும் போது அந்தப் பழைய முடிவில் ஊறித் திளைத்தவர்களது நெஞ்சம் புண்படவுங்கூடும். போப் துறவியார் திருவாசகத்தில் தம்மனத்தைப் பறிகொடுத்தவர். நெக்குருகி நின்றவர். உணர்வாற் பொங்கிக் கொப்பளிக்கும் பக்திப் பெருக்கு அமைந்த பாடல்களை அருளிய ஒரு தவமுதியவர். இலக்கணச் செறிவும் பொருட்செறிவும் மிக்க, சிந்தனையில் தோன்றும் சிற்றின்பப்பாடலாகிய மரபுவழிக் கவிதையையும் பாடினார் என்பதை எவ்வாறு ஏற்பது என்பதுதான் போப் அவர்களின் மறுப்புரையாகும். போப் அவர்களது கருத்தோடு நாமும் சிந்திப்போம். பிற்றைநாள்களில் அகப்பொருள் துறைகளுக்கும் பேரின்பப் பொருள் கற்பிக்கப்பட்ட காரணத்தால் மகா துறவியான மணிவாசகரும் சிற்றின்பந் தழுவிய திருக்கோவையாரையும் பாடினார் போலும் என்பர் பலர். அக்கூற்றை அதற்கு உரை எழுதிய பேராசிரியர் அந்தப் பேரின்பப் பொருளை எவ்விடத்தும் வழங்கவில்லை என்பது மறுக்கிறது. அதனால் பெயர் சுட்டப்பெறாத தலைவன் தலை வியரது களவு, கற்பு ஒழுக்கங்கள் நிகழ்வதற்குச் சிற்றம்பலவனது தில்லைப்பதி களமாக அமைந்தே யன்றி அதில் சிற்றம்பலவன் தலைவனாகவும் கோவையாசிரியர் தலைவி யாகவும் அமைய வில்லை என்பதே உரை எழுதிய பேராசிரியர் கருத்தெனக்கொள்க.

மணிவாசகரும் மணிவார்த்தையில் "கேட்டாயே தோழி" என அகப்பொருள் பாடுகிறார். அதில் பல இடங்களில் தம்மைத் தலைவியாகவோ செவிலி யாகவோ தோழியாகவோ வைத்து இறைவனாகிய தலைவனுக்கு நெருக்கமாக நின்று பாடுகிறார். அந்நிலையில் அவர் இறைவனோடு தொடர்பில்லாத வாறு தம்மை வெளிநிறுத்திக் கோவையும் பாடினார் என்பது பொருந்தாக்கூற்றே. மேலும் திருவாசகத்தில் பெரும்பாலும் அவர் சிவத்தோடு பேசுவது முன்னிலைக்குரிய எட்டாம் வேற்றுமை விளியே. அது முன் நிற்கும் நெருங்கிய நிலை. அவ்வாறு இறைவனோடு நெருங்கி நின்ற அணித்தொழும்பர் ஒருவர் தூரத்தே வைக்கும் படர்க்கையில் பரம்பொருளை நிறுத்தி கோவை பாடினார் என்பதும் மறுப்பதற்கான பிறிதொரு காரணமாம்.

இனி ஆய்வுக்கு வருவோம். கோவை ஆசிரியர் யார் என்பதை கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்தில் திருமுறை வகுத்த நம்பியாண்டர்ா நம்பிகள் காட்டுகின்றார்.

*"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தொனைவண்*
*டில்லைமன்னைத்*
*திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச்*
*சிற்றம்பலப்*
*பொருளார் தருதிருத் கோவைகண் டேயுமற்*
*றப்பொருளைத்*
*தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே."*

என்பது அப்பாடல். இங்கே கோவை ஆசிரியர் சிவபாத்தியன் என்பதும் ஊர் திருவாதவூர் என்பதும் தெளிவுகள். இங்கே வாசகம் வருகிறதே. அது திருவாசகந்தானே, வேறு அன்று என முற்றுப்புள்ளி வைப்பது போலவும் நிற்கிறது. செய்யுளில் வருவாசகத்தினில் முற்றும் என்பதும் வண்தில்லை என்பதும் கூத்தனுக்குரிய அடைகள். வாசகம், திருவாசகமாயின் அதனை இறைவன் விருப்போடு கேட்டருளுவானேயன்றி உணர வேண்டிய தேவை அவனுக்கில்லை. உணர வேண்டியது வேதமே. உணர்தல் அறிதலாம். மேலும் வருதல், முற்றும் என்பன முறையே தொன்று தொட்டு வருதலையும் வேத முழுமை யையும் தழுவி நிற்பதால் வாசகம் என்பது வேதமன்றி, திருவாசகமன்று. 'எழுத்தறிவித்தவன் இறைவனாவன்' என்பதில் எழுத்து, கல்விக்காதல் போல வாசகமும் வேதமாகி நின்றவாறு காண்க.

வாசகத்தினின் முற்றுணர்தல் என்பது வாசகத்தால் உணரப்படுதல் எனவும் வாசகத்தை உணர்தல் எனவும் இரு பொருள் தந்தது. இவ்வாறால் கோவை பாடியவன் சிவபாத்தியன் எனவே மணிவாசகர் கோவைக்கு உரிமையுடையவர் அல்லர் என்பது முடிபாம்.

கோவைபாடியசிவபாத்தியனே திருவாசகத்தையும் பாடினான் என்றால் மணிவாசகரது வரலாறு கூறிய புராண ஆசிரியர் அனைவருமே அவர் பெயரை வாதவூரர் என்று ஏன் கூறவேண்டும். மணி வாசகருக்கு இளமைப் பெயர் வாதவூரரே என்பதை முன்னர் வலியுறுத்தி உள்ளோம். புராண ஆசிரியர்களுக்கு நம்பிகள் பாடிய கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம் தோன்றாமலா போய்விட்டது. எனவே அவர்கள் கோவை பாடிய ஆசிரியரிலிருந்து திருவாசகம் பாடிய மணிவாசகரை வேறொருலராகவே கணித்துள்ளனர் என்பது தெளிவு. நம்பியாண்டார் நம்பிகளுக்கும் அது தெளிவு என்பது பெற்றாம்.

இவர்களன்றி உமாபதி சிவம் என்பார் கருத்தையும் காண்போம். உமாபதிசிவம் திருமுறை கண்ட புராணம் எழுதியவர். அவர் கி. பி. 940 - 1021 வரை வாழ்ந்தவர். எனவே சிந்தாந்த அட்டகம் எழுதிய உமாபதி சிவாச்சாரியரும் இவரும் ஒருவரல்லர் என்பதையும் சிவாச்சாரியார் கி. பி 1313 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர் என்பதையும் நினைவிற் கொள்க. உமாபதிசிவம் தாம் எழுதிய திருமுறை கண்ட புராணத்தில் நம்பிகள் திருவாசகத்தையே எட்டாந் திருமுறையாக வைத் தாரன்றித் திருக்கோவையாரை அதனோடு இணைக்கவில்லை என்பதை

*"அகவளர் திருமுறை ஏழ் அருள்திருவா சகம் ஒன்று*
*மோகமெறி திருவிசைப்பா மாலைமுறைஒன்று சிவ*
*போகமிகு மந்திரமாம் முறை ஒன்று புகழ்பெறவே*
*பாகமிகும் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்"*

என்னும் பாடலால் வெளிப்படுத்துகிறார்.

திருமுறை வகுத்த நம்பிகன் வாதவூரரையும் சிவபாத்தியனையும் வேறுபட்டவர்களாகவே காண் கிறார். அந்நிலையில் திருக்கோவையாரைத் திருமுறையில் ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்னும் வினா எழுகின்றது. அதற்கு, கோவை யாரை ஒரு பக்தி நூலாகவோ திரு மந்திரம் போலும் தத்துவ நூலாகவோ அவர் கொள்ளவில்லை என்பதே விடையாம்.

திருவாசகம் மூவர் அருளிய தேவாரங்களுக்குச் சமனானது. தேவார திருவாசகங்கள் பாராயணத் துக்கு உரியனவே அன்றி மெய்யறிவில்லாத சாமானிய புலவர்களால் உரைகண்டு படிக்கும் இலக்கியங்களல்ல என்பது சைவ பாரம்பரியக் கொள்கை. அதனால் உரை எழுதல் தவறு என்ற வழக்கும் பண்டு தொட்டு நிலவி வந்திருக்கிறது. வித்துவான் தியாகராஜச் செட்டியார் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு மாணவர். நாவலர் பெருமான் பதிப்பித்த பல நூல்களுக்குத் தம் ஆசிரியரோடு தாமும் ஒருவராக அணிந்துரை வழங்கியவர். அவர் சைவப்பேரறிஞர். அவரை அன்பர் ஒருவர் அணுகி, தேவாரங்களுக்கு உரை எழுதித்தரல்வேண்டும் என்று கேட்டார். செட்டியார் மறுக்கவே அன்பர் மீண்டும் மீண்டும் தொல்லை கொடுத்து வந்தார். அப்போது 'நீங்கள் என்னை ஆபத்தில் வீழ்த்துவீர்களாயின் யான் என்னுயிரைப்போக்குவதன்றி வேறு வழியில்லை" எனச் செட்டியார் சொன்னதும் அன்பர் ஒதுங்கிவிட்டார். என்பது செட்டியார் அவர்களது வாழ்க்கை வரலாற்றின் ஒரு நிகழ்ச்சி. இது உரை எழுதுதல் தவறு என்பதற்குரிய ஒரு சான்றாம்.

திருவாசகத்துக்குப்பின்னாளில் உரைகள் பல தோன்றியிருப்பினும் முன்னாளில் உரை எழுதல் தவறு என்னும் வழக்கால் அதற்கு உரை எழுதப்படவில்லை என்பது பலரும் அறிந்ததே. திருவாசகமும் கோவையாரும் ஒருவரே

பாடியிருப்பின் கோவையாருக்கு மட்டும் பழைய பேருரை தோன்றியதற்குக் காரணம் யாது? எனவே கோவையை மணிவாசகர் பாடவில்லை என்னும் கருத்து அதனால் மேலும் வலுவடைகின்றது.

இனி இருவரதும் சொற்பிரயோகங்களை ஒப்புநோக்குதல் நன்று. எந்தப் புலவனுக்கும் சொற்பிரயோகம், செய்யுளோசை, செய்யுள் நடை, கற்பனை என்பவற்றில் தனிமுத்திரை ஒன்று பிரகாசிக்கும். மணிவாசகப்பெருமானுக்கும் ஓசை நடை கற்பனை என்பவற்றோடு சொற் பிரயோகத்திலும் தனிமுத்திரை ஒன்றுண்டு. மேல் வரும் சொற்கள் அவருக்கே உரியவை.

ஒருத்தன் - ஒருவன்
விதிர்விதிர்ப்பு - நடு நடுக்கம்
சோத்தம் - தாழ்ந்தோர் துதிக்கும் சொல்
விருகம் - மிருகம்
மொக்கணி - குதிரைக்கு உணவிடும்பை
அவிதாஇடும் - முறையிடும்
வேனல் - வேனில்
அண்ணா - தலைவன்
அச்சன் - தந்தை
ஆவ - அஞ்சேல் என் உயர்ந்தோர் சொல்வது
விச்சு - வித்து
பாண் - இனிய பேச்சு
சிறவு - சிறப்பு
பிறவு - பிறப்பு
மிலைத்தல் - மலைத்தல்
உத்துளித்தல் - பரவப்பூசுதல்
சச்சை - உண்மைப்பொருள்
குதுகுதுப்பு - ஆவல்
விதுவிதுப்பு - ஆராத ஆசைகொள்ளல்
மதுமது -
அதும்புதல் - மெய்த்தல்
கோதாட்டல் - செப்பஞ்செய்தல்
கோயிற்பிணாப் பிள்ளை - பிராமணப்பெண்பிள்ளை
ஓட்டுக்கந்த - ஓட்டிமகிழ்ந்த
தெளி - தெளிவு
நறுமுறுத்தல் - பின்நின்று தமக்கு இடமில்லையேயென்று வருந்தி முணுமுணுத்தல்
பத்து -
சட்டு -
உவலை - இழிவு
சவலை - மனக்குழப்பம்
சரடு - முறுக்குநூல்
வயனம் - வசனம்
கோலாலம் - கோலாகலம்
தட்டுளுப்பு - தடுமாற்றம்
குப்பாயம் - சட்டை
பள்ளி - குறும்பன்
தேனிப்பார் - தேன்போற் சுவைப்பவர், களிப்பவர்
நரிப்பு - ஏளன நிலை, சிறுமை
கருளம் - கருடன்
ஊத்தை - அழுக்கு
விளாக்கைத்து - வரம்பு கோலி உழுது உழவு கோலைச் செலுத்தி சேர்த்துப் பூட்டி
அள்ளூறல் - வாயூறல்
செஞ்சவே - செப்பமாக
எந்து - என்ன
ஏசறவு - விருப்பம், துக்கம்
தோனா - தொளைக்கப்படாத
கவந்தி - கோவணம், கந்தைத்துணி
வேசறவு - மனச்சோர்வு (நீத்தல் விண்ணப்பம்)
குமண்டையிடல் - மகிழ்ச்சியாற் கூத்தாடல்
துவந்துவம் - தம்முள் மாறுபட்ட இரட்டைநிலை
அரட்டை - சேட்டை, குறும்பு
விளாவி - சுற்றி
கிளியீடு - கிளியினாற் பொந்திற்சேர்த்து வைக்கப்பெற்ற தானியம் சிறிது சிறிதாகச் சேர்த்தல்

| | | |
|---|---|---|
| பொச்சை | - | புழுக்கூடு |
| பொதும்பு | - | பொந்து |
| விச்சகம் | - | வித்தகம் |
| இத்தை | - | இதை |
| இடவை | - | இடம் (திருவார்த்தை) |
| படவு | - | படகு |
| இலக்கிதம் | - | இலக்கியம் (பண்டாய நான்மறை) |
| அச்சோ | - | வியப்புச்சொல் |
| தோழம் | - | ஒரு பேரெண். |

இவற்றுள் முதற்கண் நிற்கும் ஒருத்தன் விதிர்விதிர்ப்பு சோத்தம் என்னும் மூன்று சொற்களே கோவையிலும் காணப்படுகின்றன. ஏனைய திருவாசகத்துக்கே உரியவை. கோவையன்றி ஏனைய இலக்கியங்களிலும் அவை பெரிதும் தோன்றப்பெறாதவை. எனினும் மிகையன்று. மேற்காட்டிய சொற்களில் ஒரு சில பொருள் தருவதிலும் பின்னிற்கின்றன. மதுமது, சட்டு, பத்து முதலானவை அதற்கு எடுத்துக்காட்டுக்கள். கோவையிலும் இடம் பெறும் அந்த மூன்று சொற்களில் ஒருத்தன் விதிர்விதிர்ப்பு என்னும் இரண்டும் வேறு நூல்களில் அருகிவருவதையும் நாம் காண்கின்றோம். ஒருத்தன் என்பதை அப்பர் சுவாமிகளும் திருக்கன்றாப்பூர்த் தாண்டகத்திறி பெய்துள்ளமையை

*"விருத்தனே வேலைவிட முண்ட கண்டா*
*விரிசடை மேல் வெண்டிங்கள் விளங்கச்சூடும்*
*ஒருத்தனே உமைகணவா"*

என்னும் அடிகளிற் காணலாம். இதுபோலவே விதிர்விதிர்ப்பும் தேவாரங்களில் வருவதைக் காணலாம். எனவே சேர்த்தம் என்னும் சொல் லொன்றே இருவர்க்கும் பங்காம். ஆனால் இந்த இடத்தில் நாம் ஒன்றைச் சிந்தித்தல் வேண்டும்.

கோவை ஆசிரியரான சிவபாத்தியனுக்கும் மணிவாசகப்பெருமானுக்கும் ஊர் திருவாதவூரே. 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' என்கிறார் நம்பி யாண்டார் நம்பிகள். 'வாதவூரினில் வந்தினிதருளி' என்கிறார் மணிவாசகர். எனவே அதற்கு வேறு ஆதாரங்கள் வேண்டா. இருவர்க்கும் ஊர் ஒன்றாகும் போது வாதவூரிலும் அதன் அயலிடங்களிலுமுள்ள அக்கால வட்டாரப் பேச்சு வழக்குச் சொல்லாகிய 'சோத்தம்' என்பதைக் கோவையாசிரியரும் எடுத் தாண்டார் என்பது தெளிவாம். இதுபோலவே ஒருத்தன் விதிர்விதிர்ப்பு என்னும் சொற்களும் இருவர்க்கும் பங்காயின் எனக்கொள்ளுதலும் ஏற்புடைத்தே. மேலே காட்டப்பெற்ற அறுபத்திரண்டு சொற்களில் 'சோத்தம்' என்னும் சொல்லைக் கொண்டு மணிவாசகரே கோவைக்கும் ஆசிரியர் எனநாம் முடிவுகாணுதல் பொருந்தாச்சிந்தனையே. மேலும், ஏனைய நொற்கள் இருவர்க்கும் வேறு படவே அவர்கள் வாழ்ந்த காலங்களும் வேறாகி இருவரும் ஒருவரல்லர் என்பது புலப்பாடாம். கோவையாசிரியர் காலத்தால் முந்தியவர். அதனைப் பின்னர் காட்டுதும்.

தில்லைக்கு மேற்புறத்தே மணிவாசகர் தங்கிய நாளில் நடராசப்பெருமான் வேதியர் வடிவிற் சென்று "வாசகம் பாடிய வாயால் கோவையும் பாடுக" என வேண்டிக்கொள்ளவே அவர் கோவையும் பாடினார் என்பர் கடவுள் மாமுனிவர். இந்நிகழ்வின் படி கோவை திருவாசகத்துக்குப் பின் தோன்றிய தென்பது முடிவு. அவ்வாறாயின் தம்மை ஆட்கொண்ட தலமாகிய திருப்பெருந்துறை, குருந்தமரம், அடியார் கூட்டம், ஞானா சாரியத்தோற்றம், நரிப்பரிகள் வந்தமை, வைகை பெருக்கு, சொக்கநாதர் மண் சுமந்த அடியும் பட்டமை, வித்தக வேடம் தரித்த உத்தரகோசமங்கை, புத்தரை வாதில் வெல்ல இறைவன் அருள்பாலித்தமை முதலாய நிகழ்வு களில் ஒன்றையேனும் கோவை யாரில் அவர் பெய்திருப்பார் அல்லரோ? கோவையில் இவற்றுள் ஒன்றுகூட இடம்பெறவில்லையே. இவையெல்லாம் அவர் நினைவுக்கு வாராது புறம் நின்றனவர்? எனவே இது கடவுள் மாமுனிவரின் புனைந்துரை யன்றி வேறன்று.

இனி ஆட்கொள்ளமுன் கோவையாரை மணிவாசகரே பாடினார் என வைத்துக்கொண்டு சிந்திப்போம். அந்நாளில் பாண்டிநாட்டை அரசு செய்த பாண்டியன் பெயரைக் கோவையாசிரியர் தம் நூலில் இரண்டு இடங்களில் வெளிப் படுத்தியுள்ளார்.

*"- வரகுணணாம்*
*தென்னவன் ஏத்துசிற் றம்பலத் தான்"*
(செய் 306)

என்பதும்

*"சிற்றம் பலம்புகழும்*
*மயலோங் கிருங்களி யானை வரகுணன்"*
(செய் - 327)

என்பதும் அப்பகுதிகள். மணிவாசகரே கோவையையும் பாடியிருந்தால் அந்த வரகுணன் என்பதும் அப்பகுதிகள். மணிவாசகரே கோவையும் பாடியிருந்தால் அந்த வரகுணன் பெயர் உறுதி யாகத் திருவாசகத்திலும் காட்சிளிக்கும். ஆனால் திருவாசகத்தில் வரகுணன் என்ற பெயர் தோன்றவே யில்லை. திருவாசகத்திலும் பாண்டியன் தோன்று கின்றான். எப்படித் தோன்றுகின்றான்? சிறப்புப்பெயர் எதுவுமேயில்லாது பாண்டியன், தென்னவன், மீனவன் எனக் குலப்பெயரளவில் வந்துள்ளான். கோவையில் வரகுணன் எனப் பாடிய மணிவாசகர் திருவாசகத்தில் அவனை மறந்தா போனார்? எனவே கோவையில் வந்துள்ள வரகுணனும் கோவை ஆசிரியரான சிவபாத்தியனும் முற்பட்டவர் என்பதும் மணிவாசகரோடு தொடர்புற்ற பாண்டியன் பிற்பட்டவன் என்பதும் தெளிவாம். மேலும் ஒரு நிகழ்வு எம்மைச் சிந்திக்க வைத்துள்ளது.

கோவையில் அகப்பொருள் துறைகளுக்குக் களமாக அமைந்தது தில்லைத்தலமே. ஆனால் அங்குள்ள நானூறு பாடல்களிலும் அம்பலம் சிற்றம்பலம் புலியூர்த் தில்லை எனக்களம் தோன்று கின்றதன்றி ஒரு செய்யுளிலேனும் 'பொன்னம பலம்' என்ற வடிவில் களம் அமையவில்லை. மணிவாசகர் தாம் பாடிய திருவாசகத்தில் கோயில் மூத்த திருப்பதிகம் முழுவதிலும் "பொன்னம் பலத்து எம்முடியா முதலே" பொன்னம்பலக்கூத்து கந்தானே" எனப் பொன்னம்பலத்தைத் தரிசிப்ப தோடு

*"எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன்*
*பொலிதரு புலியூர்ப் பொதுவினில்நடம்நவில்"*

எனக்கீர்த்தித் திருவனகலிலும் பொன்னம்பலத்தை வழங்கியுள்ளார். இவ்வகையால் அம்பலம் பொன் வேய்ந்த பராந்தகசோழனுக்கு முன் கோவையில் தோன்றும் வரகுணன் வாழ்ந்தான் என்பதும் மணிவாசகரும் அவர் காட்டும் பாண்டியனுகும் அம்பலம் பொன் வேய்ந்த பின் வாழ்ந்தனர் என்பதும் பெறப்படுகின்றன. இதனாலும் மறை மலையடிகளும் பிறரும் வரகுணன் மணிவாசகர் காலத்தவன் எனக் கொண்டு அவர் காலம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டு என்றோ கி. பி. 9ம் நூற்றாண்டு என்றோ கணித்தமை பிழைபட்ட கால ஆராய்வாம் எனக்கொள்க. எனவே காலம் மேலும் ஆராயப்படவேண்டியதே.

தேவார முதலிகள் சிவனைப் போற்றும் அருட்பாடல்களை வழங்குவதையே தொழும் பாகக் கொண்டனரன்றி வேறு எந்த நூலையும் அவர்கள் செய்திலர். அவர் போல மணிவாசகரும் திருவாசகத்தையே பாடினார் என்பது முடிபாம். இதுவரை கண்ட குறிப்புக்களிலிருந்து மணிவாசகர் சிவபாத்தியன் என்னும் இருவர்க்கும் ஊர் ஒன்றாக அமைந்தமை யாலும் மணிவாசகர் புகழ் எங்கும் பரவி மேலோங்கி நின்றமையாலும் மணிவாசகர் பெயரால் கோவையே புகழ்பெற்று நிற்க அதன் ஆசிரியராக சிவபாத்தியனது புகழ் தலைசாய்ந்து மறைந்தொழிந்தது என்பது தெளிவாம்.



# மாணிக்கவாசகர் காலம்

பேராசிரியர் கா. வெள்ளைவாரணன்

திருவாதவூரடிகளாகிய மணிவாசகப் பெருந்தகையார் வாழ்ந்த கால எல்லையைக் குறித்து அறிஞர் பலரும் தமக்குத் தோன்றிய பல் வேறு முடிபுகளை வெளியிட்டுள்ளார்கள் மாணிக்கவாசகர் கடைச்சங்க காலமாகிய கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனத் திருமலைக் கொழுந்து பிள்ளையவர்களும்[1] கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரென மறைமலை யடிகளாரும் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும்[1], கி. பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென K. G. சேஷையர் அவர்களும்[3], கி. பி 792 முதல் 835 வரை ஆட்சி புரிந்த முதல் வரகுணபாண்டியன் காலத்தவரெனத் திருவாளர் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்களும்[4] கி. பி. 862 முதல் 880 வரை ஆண்ட இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தவரெனத் தஞ்சைச் சீனிவாசப்பிள்ளை, தொ. பொ. பழநியப்பபிள்ளை முதலியவர்களும்[5] கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினொராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவரென அறிஞர் கோபி நாதராயரவர்களும்[6] ஆராய்ந்தெழுதியுள்ளார்கள்.

மேற்காட்டிய அறிஞர் பலருடைய முடிபுகளையும் இரண்டு வகையாக அடக்கலாம். ஒன்று தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் பிந்தியவர் மாணிக்கவாசகர் என்பதாகும். பல்லவபுரத்துப் பொதுநிலைக் கழக ஆசிரியர் மறைமலையடிகளார வர்கள் தமது விரிந்த ஆராய்ச்சியின் பயனாக எழுதி வெளியிட்ட **மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்** என்ற ஆராய்ச்சிப் பெருநூலில் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவர் திருவாத வூரடிகள் என்னும் தமது கொள்கையினைப் பலவகைச் சான்றுகளைக் காட்டி நிலைநாட்டி யுள்ளார்கள். தஞ்சைச் சீநிவாச பிள்ளையவர்கள் தாமெழுதிய தமிழ் வரலாறென்னும் நூலில் மணிவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவ ரென்பதனைச் சான்றுகள் காட்டித் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இவ்விருதிற முடிபுகளையும் காய்தலுவத்தலகற்றி ஆராய்ந்து திருவாதவூரடிகள் வாழ்ந்த காலம் இதுவென்ப தனைத் திட்டமாக அறிந்து கொள்ளுதல் திருமுறை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாகும்.

திருவாதவூரடிகள் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவரென்பதற்கு ஆசிரியர் மறை மலையடிகள் முதலியோர் கூறும் சிறப்புடைக் காரணங்களை முறையே ஆராய்வோம்.

1. "மாணிக்கவாசகர் இந்நிலவுலகத்திற் பிறந் தருளுதற்கு முன் சிவபெருமானுக்கு அணுக்கராய் அவர்பாலிருந்தனர். பின்னர் அவரது கட்டளையால் மக்கட் பிறவிக்கு வரலாயினர்.... மேலுலகத்திற் சிவபெருமான்மாட்டு அணுக்கராய் நிற்கும் தூய தொண்டர்கள் 'சிவகணங்கள்' என்று வழங்கப் படுவர். அச் சிவகணங்களுள் தலைவராய் நிற்குஞ் சிலர்க்கு 'நந்திகள்' என்னும் பெயருண்டு. அந் நந்திகளுள் ஒருவரே மாணிக்கவாசகராக இந்நிலவுலகிற் பிறந்தருளினர். அவ்வுண்மை கண்டே மாணிக்க வாசகர்க்குப் பின் வந்த திருநாவுக்கரசு நாயனார் "குராமலரோடு அராமதியஞ் சடைமேற் கொண்டார் குடமுழுநந்தீசனை வாசகனாக் கொண்டார்' என்று அருளிச் செய்தனர்[7],, என்பது.

திருவாதவூரடிகள் வரலாறு கூறும் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல், திருவுத்தர கோசமங்கைப் புராணம், கடம்பவன புராணம் முதலிய நூல்கள் கணநாதர் ஒருவர் வாதவூரடிகளாக வந்து பிறந்தனரெனக் கூறுகின்றனவேயன்றி நந்திகளுளொருவர் மாணிக்கவாசகராக வந்து பிறந்தனரெனக் கூறுகின்றில. நந்தி யென்னும் பெயர் சிவ கணத்தலைவர்களுக்குப் பொதுவாக வழங்குதற் குரியதெனக் கொள்ளினும் நந்தீசன் என்ற பெயரைச் சிவ கணத்தலைவர் பலர்க் குமுரிய பொதுப்பெயராகக் கொள்ளுதல் பொருந்தாது. நந்திகள் அனைவர்க்கும் தலைவராம் பெருமை நந்தீசரொருவர்க்கே யுரியதாகும். மறைமலை யடிகளார் கருதுமாறு பெரிய தேவராகிய நந்தியெம் பெருமானே மணிவாசகரெனப் பிறந்தருளினா ரென்பது உண்மையாயின் அவரது வரலாறு கூறும் தமிழ்நூல்களெல்லாவற்றிலும் இச்செய்தி விரிவாக விளக்கப் பெற்றிருக்கும். நந்தீசரே மணிவாசகராகப் பிறந்தருளினாரென்ற செய்தி தமிழ் நூல்களொன்றிலேனும் கூறப்படாமையால் அதனை உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. நந்திகள் நால்வர் எனத் தொகைகூறிய திருமூல தேவ நாயனாரும் அந்நந்திகள் கணத்தராக இந்நிலவுலகிற் பிறந்த அடியார்களைக் குறிப்பிடு மிடத்துச் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரர் ஆகிய மூவரோடு தம்மையுஞ் சேர்த்துக் கூறிய தன்றி அத்தகைய நந்திகளுள் ஒருவராகத் திருவாத வூரடிகளைக் குறிப்பிடவேயில்லை.[8] ஆகவே திருவாதவூரடிகள் திருமூலர்க்குக் காலத்தால் முற்பட்டவராய்க் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தாரெனக் கூறுதல் ஒரு சிறிதும் பொருந்தாது.

'வாசகன்' என்ற சொல் தூதுவன் என்ற பொருளிலும் புகழ்ந்தேத்துவோன் என்ற பொருளிலும் வழங்கும் சொல்லாகும். தனது திருக்கூத்துக் கேற்பக் குடமுழா முழக்கவல்ல நந்தி தேவரைத் திருக்கயிலைப் பெருமான் தன்னைத் தொழவந்த அடியார்களை இன்னின்னாரெனத் தெரிவித்துத் தனது அருளிப்பாடறிந்த பின் திரு முன்னர் அழைத்துவரும் பணிமேற் கொண்ட தூதுவனாக அமைத்துக் கொண்டாரென்பார்.

*"குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்."*

எனத் திருநாவுக்கரசடிகளார் குறிப்பிடுவாராயினர். இத்தொடரிலமைந்த வாசகன் என்ற சொல், சிவபெருமானது திருமுன்னர் அப்பெருமானைப் போற்றிப் பரவி அவரது திருக்குறிப்பறிந்து ஏவல் செய்யும் தூதுவராய் நிற்கும் பதவிநிலையைக் குறித்த பெயராகும். இதனை ஒருவர்க் குரியதாய் வழங்கும் இயற்பெயரென்றோ சிறப்புப் பெயரென்றோ கொள்ளுதல் சிறிதும் பொருந்தாது. இறைவன் நன்மொழிகளாற் புகழ்ந்து போற்றும் மெய்யடியார் யாவராயினும் அவர்கள் வாசகர் என்ற சொல்லால் வழங்குதற்குரியவரென்பது திருநாவுக்கரசர் பாடியருளிய,

*"குசையும் அங்கையிற் கோசமுங்கொண்ட அவ்*
*வசையில் மங்கல வாசகர் வாழ்த்தவே*
*இசைய மங்கையும் தானுமொன்றாயினான்*
*விசைய மங்கையுள் வேதியன் காண்மீனே"* [9]

எனவரும் திருவிசயமங்கைத் தேவாரத்தால் நன்கு உய்த்துணரப்படுகின்றது. மறைகளை நன்குணர்ந்து கையில் தருப்பையும் புத்தகமும் தாங்கியவர்களாகிய மறைமுனிவர்கள் குற்றமற்ற நன்மொழிகளைச் சொல்லி வாழ்த்தத் திருவிசயமங்கையென்னும் திருப்பதியுள் இறைவன் உமையம்மையாருடன் ஒருங்கு வீற்றிருக்கும் அழகிய காட்சியை விளக்குவது இத் திருக்குறுந்தொகைப் பாடலாகும். இதன்கண் 'அவ் வசையில் மங்கலவாசகர்' எனப்பன்மை கூறியவதனால் இறைவனை நன்மொழிகளாற் புகழ்ந்து போற்றுவோர் அனைவரையும் வாசகர் என்றும் இச்சொல் உணர்த்தி நின்றமை நன்கு தெளியப்படும். எனவே திருநாவுக்கரசர் திருப்பாடலில் வழங்கிய வாசகன் என்ற சொல் மாணிக்கவாசகப் பெருமானைக் குறிப்பதன்றென்பது நன்கு பெறப்படுதல் காண்க. திருவாதவூரடிகளுக்கு வழங்கும் மாணிக்கவாசகர் என்னும் பெயர் வழக்கம் கி. பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாதலின் அதனை முற் காலத்தவரான திருநாவுக்கரசர் வாசகன் என்று முதற்குறையாக வழங்கினாரென்பார் கூற்று சிறிதும் பொருந்தாதென்க.

2. "நரியைக் குதிரை செய்வானும்" எனத் திருவாரூர்த்திருப்பதிகத்திலும் "மணியார்வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்" எனத் திருப்பூவணத் திருத்தாண்டகத்திலும் திருநாவுக்கரசர் குறிப்பிட்ட செய்திகள் முறையே மணிவாசகர் பொருட்டு ஆலவாய்ப் பெருமான் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலையும் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலையும் குறிப்பன என்பர்.

*"நரியைக் றாதிரை செய்வானும் நரகரைத் தேவு*
*செய்வானும்*
*விரதங்கொண்டாடவல்லானும் விச்சின்றி*
*நாறுசெய்வானும்*
*முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந்*
*தன்பர்களேத்த*
*அரவரைச் சாத்தி நின்றாணும் ஆரூரமர்ந்த*
*அம்மானே."*

எனவரும் இத்திருப்பாட்டில் "காட்டில் அலைந்து பிணங்களைத் தின்று திரியும் இழி தொழிலுடைய தாழ்ந்த நரியையும் உயர்ந்தோர் மதிக்கும் பெருமை வாய்ந்த சிறந்த ஊர்தியாகிய குதிரையாகத்

திருத்திப் பணி கொள்ளவல்ல தன்வயத்தனாகத் திகழ்பவனும், துன்பமே நுகர்தற்குரிய நிலையில் நிரயத்து வீழ்ந்த உயிர்த் தொகுதிகளை இன்பமே நுகர்தற்குரிய வானுறையுந் தெய்வங்களாக உயர்த்தி வாழ்விக்கும் பேரருளாளனும், இருவினைப் பாசத்தாற் கட்டுண்டு மயங்கும் மாந்தரைத் தவநெறியிற் புகுத்திச் சிவஞானத்தையளித்தல் கருதி அவர் பொருட்டு எண்ணிலாத விரத நெறிகளைத் தானே மேற்கொண்டு அருள்புரியவல்ல விரதியாக விளங்குபவனும், வித்தாகிய காரணத்தைக்கொண்டு விளைவிப்பார் பிறராக, தான் எதனையும் வேண்டா மலே காரியமாகிய பயிர்களை விளைவிக்கவல்ல முடிவிலாற்றலுடையவனும் திருவாரூரில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒருவனே யென்னும் உண்மையைத் திருநாவுக் கரசடிகளார் இனிது விளக்கியுள்ளார். நரியைக் குதிரை செய்தல், நரகரைத் தேவு செய்தல், விரதங் கொண்டாடுதல், விச்சின்றி நாறு செய்தல் என்பவற்றை முன்னொரு காலத்திற் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களாகத் திருநாவுக் கரசர் கருதவில்லை யென்பதற்கு இச்செயல்களை இத்திருப்பாடலில் எதிர்காலத்தில் வைத்துக் கூறி யருளியதே சிறந்த சான்றாகும். திருநாவுக்கரசர் காலத்திற்கு முன் இறைவன் செய்தருளிய திருவிளை யாடல்களைக் குறிப்பது 'நரியைக்குதிரை செய்வானும்' எனத் தொடங்கும் திருப்பாடலன் றென்பதும் எண்குணத்தானாகிய இறைவனுடைய தன் வயத்தனாதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை முதலிய அருட்பண்புகளை விளக்கு வதே இத்திருப்பாடலென்பதும் இதன்பொருளை ஆழ்ந்துணர வல்லார்க்கு இனிது புலனாகும். இப்பாடலில் "விச்சின்றி நாறு செய்வான்" எனத் திருநாவுக்கரசர் இறைவனது முடிவில்லாற்ற லுடைமையினை விளக்கியவாறே "விச்சதின்றியே விளைவு செய்குவாய்"[10] எனத் தொடங்கும் திருச் சதகப் பாடலில் திருவாதவூரடிகளும் விளக்கிய திறம் இவண் ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும். 'விச்சின்றி நாறு செய்தல்' என்ற தொடர் முன்னர் நிகழ்ந்த திருவிளையாடல்களுள் எதனையும் குறித்து வழங்காமை போன்றே அதனோடு உடன் வைத்து ஓதப்பெற்ற நரியைக் குதிரை செய்தல், நரகரைத் தேவு செய்தல், விரதங் கொண்டாடுதல் என்பனவும் சிவபெருமானால் நிகழ்த்தப்பட்ட திருவிளையாடல்களுள் எதனையும் குறித்து வழங்கியன அல்ல என்பது நன்கு தெளியப்படும்.

இனி "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்" எனவரும் திருப் பூவணத் திருதாண்டகத்தொடர், மதுரையிற் சோம சுந்தரப் பெருமான் வந்தியென்னுந் தவப்பெருஞ் செல்விக்குக் கூலியாளாகி மண் சுமந்து கூலிக் கொண்டு பிரம்படிபட்டு விளையாடிய நிகழ்ச்சியைக் குறித்து நிற்பது தானே? என்பதும் ஈண்டு ஆராயத்தக்கதாகும். "வடிவேறு. திரிசூலம் தோன்றும் தோன்றும்." எனத் தொடங்குந் திருப்பூவணத் திருத்தாண்டகத்தின் ஒன்பதாம் திருப்பாட்டில் "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்." என்ற இத்தொடர் அமைந் துள்ளது. திருவாலவாய்ப் பெருமானை இறைஞ்சிப் போற்றிய திருநாவுக்கரசர் திருப்பூவணத்தை வழி படச் சென்றபொழுது திருப்பூவணத்திறைவர் திருநாவுக்கரசர்க்கு நேரே தோன்றிக் காட்சியளித் தருளினாரென்பதும், அத்தெய்வக் காட்சியைக் கண்ணாரக்கண்டு இறைஞ்சிய தாண்டகவேந்தர் 'வடி வேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்." எனத் தொடங்குந் திருத்தாண்டகத்தைப் பாடிப் போற்றினாரென்பதும் வரலாறு, இச் செய்தி,

*"திருவால வாயமர்ந்த செஞ்சுடரைச்*
*செழும்பொருனூல்*
*தருவானை நேரிசையும் தாண்டகமு முதலான*
*பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து*
*மருவார்தம் புரமெரித்தார் பூவணத்தை*
*வந்தடைந்தார்."*

(பெரிய புராணம், திருநாவுக் - 406)

*“கொடிமாடம் நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினுள்*
*நெடியானுக்! கறிவரியார் நேர்தோன்றக்*
*கண்டிறைஞ்சி*
*வடிவேறு திரிசூலத் தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்*
*பொடிநீடு திருமேனிப் புனிதர்பதி பிறபணிவார்”*
(அடி 407)

எனவரும் பெரிய புராணச் செய்யுட்களால் நன்கு தெளியப்படும். திருப்பூவணத் திருக்கோயில் வைகையாற்றின் கரையிலே அமைந்ததாகும். இத்திருக்கோயிலில் இறைவன் தமக்கு நேர் தோன்றிக் காட்சி வழங்கிய திருவருட்டிறத்தையே “மணியார் வைகை திருக்கோட்டில் நின்றதோர் திறம்” எனக் திருநாவுக்கரசர் இத்திருத்தாண்டகத்தில் போற்றி பரவியுள்ளார். “மணியார் வைகைத் திருக்கோடு” என்பது மணிகள் நிறைந்த வைகை யாற்றின் அழகிய கரை என்னும் பொருள் தருவதாய் அக்கரையில் அமைந்த திருப்பூவணத் திருக்கோயிலை குறித்து நின்றது. திருப்பூவணத் திறைவர் வைகை கரையிலேயே தோன்றித் தமக்குக்காட்சிவழங்கியசெய்தியைதிருநாவுக்கரசர் இத்தொடராற் குறிப்பிடுகின்றாரெனக் கொள்வதே இத் திருத்தாண்டகம் பாடப்பெற்ற செவ்விக்கு பொருத்தமுடையதாகும். இஃதன்றிப் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலைக் குறித்தற்குரிய சொல்லமைப்பெதுவும் இத் தொடரிற் காணப் படவில்லை. ஆகவே இத்தொடரிற் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் குறிக்கப் பட்டதென்பார் கூற்று நாவுக்கரசர் வரலாற்றுக்கு முரண்பட்டதாதல் நன்கு பெறப்படும்.

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியத் திரு தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில் ‘பொய் யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்’ எனப் போற்றி வழிபடப்பெற்ற பொய்யடிமையில்லாத புலவரென்பார் மாணிக்கவாசகரே. மாணிக்க வாசகப் பெருமான் வடக்கிருந்து வந்த வீரசைவ மரபிற்கு உரியராய் அம்மரபினரால் தலைமை ஆசிரியராக வைத்துப் போற்றப்பட்டு வந்தமை கண்டே, தமிழ்நாட்டுச் சைவ சமயத் தெய்வ ஆசிரியரான சுந்திரமூர்த்தி நாயனார் தாம் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையில் அவர் பெயரை வெளிப்படக்கிளந்து ஓதாது “பொய்யடிமையில்லாத புலவர்” என்று அவரைக் குறிப்பால் ஓதினர் என்பர் மறை மலையடிகளார்.

பொய்யடிமையில்லாத புலவர் எனத் திருத் தொண்டத் தொகையிற் போற்ற பெற்றவர், மறை மலையடிகள் முதலியோர் கருதுமாறு தனியடி யாராகிய ஒருவரல்லர். மெய்ம்மை நெறிநின்று இறைவனைப் போற்றிப்பரவும் பெருங்கூட்டத் தினராகிய பலரையும் இத்தொடர் குறித்து நிற்ப தென்னும் உண்மையைத் திருத்தொண்டத்தொகைக்கு வகை நூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பிகளும் விரிநூலாகத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரடிகளும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். குடந்தை நகருக்கு அருகே இப்பொழுது தாராசுரமென மருவி வழங்கும் இராசராசேச்சுரத் திருக்கோயிலிற் சோழமன்னரால் அமைக்கப்பட்ட திருத்தொண்டத் தொகையடியார் களைக் குறிக்கும் சிற்பங்களில் பொய்யடிமை யில்லாத புலவரைக் குறித்த சிற்பத்தில் அடியார் பலர் குறிக்கப்பட்டிருந்தலைக் காண்கின்றோம். ஆதலால் பொய்யடிமை யில்லாத புலவர் என்னுந் தொடர் தனியடியாரொருவரைக் குறித்தன்றென்பதும் நன்கு தெளியப்படும். சிவபெருமானால் வலிய வந்து வழக்குப் பேசித் தடுத்தாட்கொள்ளப் பெற்ற வன்றொண்டர், மாணிக்கவாசகர் பெயரை வெளிப் படக் கிளந்தோதும் மனவலியின்றிப் ‘பொய்யடிமை யில்லாத புலவர்’ எனக் குறிப்பால் உணர வைத்தா ரென்னுங் கூற்று, வன்றொண்டரது மனவியல்புக்கு முற்றும் முரணாகும். சுந்தரர் காலம் முதல் இன்று வரை பொய்யடிமையில்லாத புலவரைத் தொகை யடியாராக வைத்து வழிபட்டுவரும் தொன்னெறி வழக்கிற்கு இது முரண்படுகின்றது. அன்றியும்

பாண்டி நாட்டுத் திருவாதவூரிற் பிறந்தருளிச் சைவ சித்தாந்த மெய்ந்நூலிலக்கியமாகத்திகழும் திருவாசகச் செழுமுறையைத் திருவாய் மலர்ந்தருளிய மணி வாசகப் பெருமானை வடக்கிருந்து வந்த வீரசைவ மரபினரெனத் துணிந்து கூறுதல் சிறிதும் ஏற்புடைய தன்றாம்.

4. மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவராயின் கண்ணப்ப நாயனார், சண்டீசப்பிள்ளையார் ஆகிய அடியார் களைத் தம் பாடல்களிற் போற்றிப் பரவிய அவ்வடிகள் சிவபெருமானது திருவருளை நிரம்பப் பெற்ற தேவார ஆசிரியர் மூவரையும் உளமுருகிப் போற்றியிருப்பார். தேவார ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பெதுவும் திருவாசகத்திலும் திருச்சிற்றம்பலக் கோவையிலும் காணப்படாமையால் மாணிக்க வாசகர் அம்மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவ ரென்பது நன்கு தெளியப்படும் என்பர்.

சோழன் கோச்செங்கணான் என்னும் வேந்தன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவனாவன். இவனது ஆட்சிக்காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதி யாகும். இவ்வேந்தர் பெருமான் ‘இருக்கிலங்கு மொழித் திருவாய் எண்தோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட' செய்தியினைத் திருமாலடியாரான திருமங்கையாழ்வார் திருநறை யூர்த் திருப்பதிகத்திற் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இவ்வேந்தர் பெருமானது சிவபக்தி மாண்பினைத் தேவார ஆசிரியர் மூவரும் சிறப்பித்துப்பாடியுள்ளார் கள். இங்ஙனமாகவும் சைவ சமய குரவருளொரு வராகிய மாணிக்கவாசகசுவாமிகள் தமக்கு முன் வாழ்ந்த கோச்செங்கட் சோழ நாயனாரைத் தம் பாடல்களிற் குறித்துப் போற்றாமைக்குரிய காரணமென்னை? மாணிக்கவாசகர் கோச்செங்கட் சோழரைக் குறிப்பிடாமையால் கோச்செங்கட் சோழர்க்குக் காலத்தால் முற்பட்டவர் மாணிக்க வாசகர் என முடிபு செய்தல் வரலாற்றாராய்ச்சிக்கு முரண் படுமல்லவா? அடியார் பெருமையினை உலக மக்களுக்கு எடுத்துக் கூறுதலையே தமது குறிக்கோளாகக் கொண்ட அருளாசிரியர்கள் தாம் கூற எடுத்துக் கொண்ட நிகழ்ச்சியிற் குறிக்கத்தக்க அடியார்களைக் குறிப்பிடாதிருந்தால் அது பற்றிய ஐயுற்று ஆராய்தல் முறையாகும்.

உலகத்தோரை நோக்காமல் பரமே பார்த் திருக்கும் இயல்பினராய் இறைவனது பிரிவினையே இடைவிடாது நினைந்துருகும் மணிவாசகப் பெருந் தகையார், தமக்குக் காலத்தால் முற்பட்ட அடியார் பலரையும் தம் பாடல்களில் விடாது கிளந்தெடுத்துக் கூறியிருக்க வேண்டுமெனத்துணிதலும், அத்துணிபு கொண்டு அடிகள் காலத்தை நிச்சயிக்க முற்படுதலும் பொருத்தமுடையனவாகத் தோன்றவில்லை. திருவாதவூரடிகள் தமக்கு முன் வாழ்ந்த அருளாசிரி யராகிய சிவனடியார்களையும் அப்பெருமக்களது அன்பின் பெற்றியையும் அன்னோர்க்கு இறைவன் அருள்சுரந்த திறத்தையும் தம்முடைய பாடல்களில் அங்காங்கே பொதுவாகக் குறிப்பிட்டுப் போற்றிய துடன் அப்பெருமக்கள் திருவாய் மலர்ந்தருளிய இயலிசைத் தமிழ் மாலைகளாகிய திருப்பதிகங் களைப் ‘பண்சுமந்த பாடல்' எனப் பாராட்டிப் போற்றியுள்ளார். தேவாரத் திருப்பதிகங்கலமைந்த சொல்லும் பொருளும் திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களிலும் அவ்வாறே அமைந்திருத்தல் இக்கருத்தை மேலும் வலியுறுத்து கின்றது.

5. கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியி லிருந்தே யானைமுகக் கடவுள் வழிபாடு இத் தென்றமிழ் நாட்டின்கண் உளதாயிற்றென்பது துணிபாதலின் இக்குறிப்பொன்றுமே மாணிக்க வாசகப் பெருமான் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவரென்பதை விளக்கும் என்பர் மறைமலையடிகள்.

சைவத் திருமுறையாசிரியர்க ளனைவரும் சிவனெனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி

யெம்மானாகிய சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டவராதலின் விநாயகர், முருகன், கொற்றவை, சாத்தன் முதலிய சைவசமயப் பிரிவிலடங்கிய பரிவார தெய்வங்களைத் தனித் தனியே போற்றி வழிபடும் கொள்கையினரல்லர். இத்தகைய கொள்கை காரணமாகத் தேவார ஆசிரியர் மூவரும் சிவபெருமானொருவனையே வழிபட்டுப் போற்றியதன்றி விநாயகர் முதலிய மூர்த்தங்களைத் தனித் தனித்தெய்வங்களாகக் கொண்டு வணங்காமல் தம்மால் வழிபடப்பெறும் சிவபரம்பொருளால் உலக நன்மை கருதியளிக்கப் பெற்ற துணைத் தெய்வங்களாகவும் அப்பரம் பொருளுக்கு உறவுடையவர்களாகவும் அப்பெருமானைப் போற்றி வழிபட்டு பேறு பெற்றவர்களாகவும் தம் பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார்கள். அம்முறையினை யொட்டிச் சிவபெருமானாகிய தனிமுதற் பொரு ளொன்றையே வழிபடும் பணியில் நின்ற திருவாத வூரடிகள் தாம் பாடிய பாடல்களில் விநாயகப் பெருமானைத் தனிமுதற் கடவுளாகக் குறிப்பிட வில்லை. அதுகொண்டு அவர் விநாயக வணக்கம் இந்நாட்டிற் பரவாத கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவரெனக் கருதுதல் வலியுடைய தாகாது. அங்ஙனங்கொண்டால் விநாயகர் வழி பாட்டைக் குறிப்பிடாத பிற்கால ஆசிரியர் சிலரும் கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரெனத் தவறாகக் கொள்ளுதற்கும் இடமுண்டாம். தேவார ஆசிரியர் மூவரையும் குறித்துப் போற்றிய திருவிசைப்பா ஆசிரியராய பூந்துருத்தி நம்பிகாடநம்பி என்பார் தேவார ஆசிரியர் மூவரையும் கண்ணப்பர், கணம் புல்லர் முதலிய அடியார் சிலரையும் குறித்துப் போற்றியுள்ளார். எனினும் மாணிக்கவாசகரைப் பற்றி அவ்வாசிரியர் எதுவும் குறிப்பிடவில்லை. அது கொண்டு அவ்வாசிரியர் மாணிக்கவாசகர்க்குக் காலத்தால் முற்பட்டவரெனத் துணிதல் முறை யாகுமா? அதுபோலவே விநாயகரைப் பற்றிக் குறிப்பிடாத மாணிக்கவாசகர் விநாயகர் வழிபாடு பரவத்தொடங்கிய கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரெனத் துணிதலும் முறையாகாதென்க.

6. திருச்சிற்றம்பலக் கோவையாரில் வங்கமலி கலி நீர் தில்லை' (செ-85) எனவும், 'கடற்றில்லை' (122, 296) எனவும், 'புலியூர் சுற்றும் போர்க்கடலே' (183) எனவும் மணிவாசகப் பெருமான் கூறுதலால் அவர் காலத்தே தில்லை நகரின் அருகே கடல் நின்றதென்றும் "பாளையுடைக் கமுகோங்கிப் பன்மாட நெருங்கியெங்கும், வாளையுடைப்புனல் வந்தெறி வாழ்வயற்றில்லை" எனத் திருநாவுக் கரசரும் "மையா ரொண்கண்ணார்" மாடநெடு வீதிக், கையாற் பந்தோச்சுங்கழிசூழ்தில்லை" எனத் திருஞானசம்பந்தரும் தில்லைநகர அமைப்பைக் கூறுதலால் அவ்விரு பெருமக்களும் வாழ்ந்த காலத்தே கடல் தில்லையை விட்டு ஒருகல் தெலைவில் விலகிச்செல்ல அது நின்றவிடத்தே உப்பங்கழி நீர் நிற்பதாயிற்றென்றும், இவ்வாறு கடல் விலகிச் செல்லுதற்கு 225 ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டுமென்றும், எனவே மாணிக்க வாசகர் வாழ்ந்த காலம் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாமென்றும் கூறுவர் மறைமலையடிகள்.

திருவாதவூரடிகள் 'வங்கமலி கலிநீர் தில்லை' எனவும் 'கடற்றில்லை' எனவும் கூறியது, தில்லை நகரத்தையொட்டிக் கடல் அமைந்திருந்தது என்பதைக் குறித்தற் பொருட்டன்றாம். கடலுக்கு ஐந்தாறு கல் தொலைவிலமைந்த ஊர்களையும் கடற்கரை யூராகச் சிறப்பித் துரைக்கும் வழக்கம் இலக்கியங் களிற் பெருகிக் காணப்படுகின்றது. சீகாழிப்பதிக்குக் கிழக்கே ஐந்தாறு கல் தொலைவில் கடலமைந் திருப்பினும்,

*"ஒன்னார் புரமூன்று மெரித்த வொருவன்*
*மின்னாரிடை யாளொடுங் கூடிய வேடந்*
*தன்னாலுறை வாவது தண்கடல் சூழ்ந்த*
*பொன்னார்வயற் பூம்புகலிந் நகர்தானே"*

எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அதனைக் கடலொடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். அது

போலவே தில்லை நகரத்தைச் சிறப்பிக்குந் திருவாத வூரடிகளும் கடலுக்கு மூன்று நான்கு கல்தொலை விலுள்ள தில்லையைக் கடல் வளம் உடைய பதியாகக்குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம்மணிவாசகப் பெருமான் தில்லையைக் கடலொடு தொடர்புபடுத்திக் கூறினாற்போலவே கி. பி. 10, 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவிசைப்பா ஆசிரியர்களாகிய கருவூர்த் தேவரும் திருவாலி யமுதனாரும் "ஆர்த்துவந் தமரித் தமரரும் பிறரும் அலைகட லிடுதிரைப் புனிதத் தீர்த்தநீ ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே"[12] எனவும் "சீர்வங்கம் வந்தணவும் தில்லைமா நகர்ச் சிற்றம்பலம்"[13] எனவும் முறையே கடலின் பாங்கர் அமைந்த ஊராகத் தில்லைப்பதியைக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே மாணிக்கவாசகர் காலத்தில் மட்டுமன்றித் திருவிசைப்பா ஆசிரியர்களாகிய கருவூர்ததேவர், திருவாலியமுதர் முதலியோர் வாழ்ந்த பிற்காலத் திலும் தில்லைப்பதி கடலொடு தொடர்புடையதாக வைத்துப் பாடப் பெற்ற தென்பது நன்கு புலனா கின்றது. உண்மையாக நோக்குமிடத்துத் தேவார ஆசிரியர் காலத்தில் மட்டுமன்றி மாணிக்கவாசகர் வாழ்ந்த நாளிலும் சிதம்பரத்தையொட்டிக் கடல் இருந்ததில்லையென்பதும், கடலொடு தொடர்பு டைய உப்பங்கழியே தில்லை நகரின் கீழ்த் திசையில் அமைந்திருந்ததென்பதும், தில்லையின் ஏனைய மூன்று பக்கங்களிலும் காவிரியாற்றின் நீர் கால்வாய் வழியே வளைந்தோடியதென்பதும், அந்நீரால் வளம் பெற்ற தில்லைநகரின் சுற்றுப்புறம் வயலும் சோலையுடைய மருத நிலமாய்த் திகழ்ந்த தென்பதும்,

*"மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில்லை நகர்சூழ்*
*போதுற்ற பூம்பொழில் காள்கழிகாள்"*[14]
*"பொன்னிவளைத்த புனல்சூழ்நிலவிப் பொலிபுலியூர்"*[15]
*"சிறைவான்புனற் றில்லைச் சிற்றம்பலம்"*[16]
*"குருநாண்மலர்ப் பொழில் சூழ்தில்லை"*[17]

எனவரும் சிற்றம்பலக்கோவைத் தொடர்களாலும்[18]
*"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்*
*சிற்றம்பலவன்"*[19]
*"செறிபொழில் சூழ்தில்லை நகர்த்*
*திருச்சிற்றம்பலம்"*[20]

எனவரும் திருவாசகத் தொடர்களாலும் நன்கு விளங்கும். இங்கெடுத்துக் காட்டிய குறிப்புக்களால் தில்லை நகரத்திற்கும் கீழ்கடலிற்கும் உள்ள தொலைவு தேவார ஆசிரியர் காலத்திலும் மாணிக்க வாசகர் காலத்திலும் வேறுபட்ட தில்லை யென்பது தெளிவாகப் புலப்படுதலால் தேவார ஆசிரியர் மூ வர்க்கும் மாணிக்கவாசகர் காலத்தால் முற்பட்டவர் என்பதற்றுகுத் திருக்கோவையாரிலுள்ள நெய்தனில வருணனையைச் சான்றாகக் கொள்ளுதல் பொருந்தாதென்பது புலனாகும்.

7. சாக்கியநாயனார், இடைக்காடர், காரைக் காலம்மையார் முதலிய அடியார்களை எடுத்தோதிய கல்லாடம், தேவார ஆசிரியர் மூவரையும் யாண்டும் குறிப்பிடாமையால் அந்நூல் தோன்றியகாலம் தேவார ஆசிரியர்க்கு முன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கமுமாமென்றும், ஆகவே அக்கல்லாட நூலிற் போற்றிப் புகழப்பட்ட மணிவாசகர் அம்மூ வர்க்கும் முந்தியவரென்பது பெறப்படுமென்றும் மறைமலையடிகள் கூறுவர்.

திருஞானசம்பந்தர் காலத்துப் பாண்டியனுக்கு வெப்புத் தீர்த்த திருவிளையாடல், அக்காலத்துச் சமணர் கழுவேறினது, சேரமான் பெருமாள் நாயனார் காலத்தில் ஆலவாயிறைவன் பாண பத்திரர் பொருட்டுச் சாதாரி பாடியது ஆகிய இத்திரு விளையாடல்களெல்லாம் இறைவன் இயற்றிய அறுபத்து நான்கு திருவிளையாடலுள் அடங்கும் என்பவாதலின் "எட்டெட்டியற்றிய கட்டமர் சடை யோன்"[21] என்ற தொடரால் அவ்வறுபத்துநான்கு

திருவிளையாடல்களையுந் தொகுத்துக் கூறிய கல்லாட நூலானது திருஞானசம்பந்தர் முதலிய தேவார ஆசிரியர் காலத்திற்கும் மிகவும் பிற்பட்ட தென்பதும் துணியப்படும். திருச்சிலம்பொலி கேட்ட வரலாற்றையும் ஆலவாயிறைவர் பாணபத்திரர் பொருட்டு அவ்வேந்தர் பெருமானுக்குத் திருமுகப் பாசுரம் பாடிக் கொடுத்தருளிய செய்தியையும் கல்லாடத்தில் 13ஆம் செய்யுளாக அமைந்த அகவல் விரித்துக் கூறுகின்றது. எனவே கல்லாடம் என்னும் இந்நூல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்குப் பின் தோன்றிய தென்பது நன்கு தெளியப்படும். இந்நூல் சொல்நடையாலும் பொருளமைதியாலும் கி. பி. பத்தாம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டதென்பது இதனை யுற்றுணர்வாக்கு இனிது விளங்கும். ஆகவே இது கொண்டு மாணிக்கவாசகர் காலம் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டதெனத் துணிதல் ஏற்புடையதன்றாம்.

இனி, மாணிக்கவாசகர் புத்தரொடு வாது நிகழ்த்திய நிகழ்ச்சியைக் கூர்ந்து தோக்குங்கால் தமிழ் நாட்டில் புத்தசமயம் தலையெடுத்த கால மாகிய கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முந்தியே திருவாதவூரடிகள் வாழ்ந்திருத்தல் வேண்டுமென்பர் மறைமலையடிகள்.

திருவாதவூரடிகளுடன் வாதஞ் செய்தவர்கள் தமிழ்நாட்டவர்களல்லரென்பதும் தமிழ் நாட்டில் சைவ சமயம் சிறப்புற்றிருந்த நிலையில் அச்சமயத் தின் கொள்கைகள் ஏற்புடையன அல்ல என வாதித்துத் தம் சமயத்தைப் பரப்புங் கருத்துடன் ஈழ நாட்டிலிருந்து வந்தவர்களென்பதும் வாதவூரடிகள் வரலாற்றில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. எனவே வாதவூரடிகள் காலத்தை நிச்சயித்தற்குப் புத்தரை வாதில் வென்ற இந்நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொள்ளுதல் பொருந்தாது.

இருகாறும் ஆராய்ந்த குறிப்புக்களால் மாணிக்க வாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் முற்பட்டவ ரென்பார் கூறுங் காரணங்கள் நடுநிலையாளர் களால் ஏற்கத்தக்கன அல்ல வெனக் கண்டோம். இனி மாணிக்க வாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவ ரென்பதற்குரிய காரணங்களைக் காண்போம்.

1. சைவ சமய குரவர் நால்வருள் மாணிக்க வாசக சுவாமிகளை நான்காமவராக வைத்துப் போற்றும் முறை உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்கிலும் நிலைபெற்று வருகின்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என உலக வழக்கில் வழங்கும் இம் முறைவைப்பு, சைவ சமய ஆசிரியராகிய அந்நால் வரும் ஒருவர் பின் ஒருவராக இவ்வுலகில் திருவவதாரஞ் செய்த கால அடைவினை யொட்டியது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என நூல்களில் வழங்கும் வைப்புமுறை, அவ்வருளாசிரியர் நால்வரும் ஒருவர்பின் ஒருவராகச் சிவபெருமான் திருவடி நிழலிற் கலந்து இன்புற்ற கால அடைவினை யொட்டி யமைந்ததாகும். மேற்காட்டிய திருவவதார அடைவு, திருவடியடைவு என்னும் இரண்டனுள், திருவடியடைவு பெற்ற கால முறையினை யொட்டியேதேவாரத் திருப்பதிகங்கள் முதலேழு திருமுறைகளாகவும், திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையென்பன எட்டாந்திருமுறையாகவும் வகைப்படுத்தப்பெற்றன.

பட்டினத்தடிகள் பாடிய திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

*"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்*
*திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளையும்"*

எனச் சைவ சமய குரவர் நால்வரையும் முறையே குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இவ்வாறே சைவ நூல்களெல்லாவற்றிலும் திருவாதவூரடிகளைச்

சமய குரவருள் நாலாமவராக வைத்துப்போற்றும் முறையினைக் காணலாம். எனவே தேவார ஆசிரியர் மூவர்க்குப்பின் திருவாத வூரடிகளை நாலாமவராக வைத்துப் போற்றும் இம் முறை வைப்பு சமய குரவர் நால்வரும் வாழ்ந்தகால அடைவினையொட்டி ஏற்பட்ட தென்பது நன்கு துணியப்படும். இதனால் தேவார ஆசிரியர்களாகிய மூவர் முதலிகள் காலத்திற்குப் பின்னும் பதினொராந் திருமுறை யாசிரியர்களுள் ஒருவராகிய பட்டினத் தடிகள் காலத்திற்கு முன்னும் அமைந்த காலப் பகுதியே திருவாதவூரடிகள் வாழ்ந்த காலமென்பது தெளிவாகப் புலனாதல் காணலாம்.

2. நம்பியாரூரர் தம் காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களையும் தமக்குக் காலத்தால் முற்பட்ட சிவனடியார்களையும் போற்றுங் கருத்துடன் திருத்தொண்டத் தொகைத் திருப் பதிகத்தைப் பாடியருளினாரென்பது வரலாறு. நம்பியாரூரராற் பெயர் கூறிப் போற்றப் பட்ட தனியடியார்களுள் திருவாதவூரடிகளது பெயர் குறிக்கப் பெறவில்லை. தமக்குத் தெரிந்த சிவனடியார்களெல்லோரையும் போற்றிப் பரவு தலையே நோக்கமாக் கொண்டு திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தை அருளிச் செய்தவர் நம்பியாரூரராவர். அறிவினாற் சிவனே யெனப் போற்றப்பெறுஞ் சிறப்பமைந்த மாணிக்கவாசகசுவாமிகள் ஆரூரர்க்குக் காலத்தால் முற்பட்டி ருந்திருப்பின் அப்பெருந்தகையாரையும் அவர் தமது திருத்தொண்டத் தொகையில் பெயர் கூறிப் பாராட்டிப் போற்றியிருப்பார். அடியார்க்குத் தொண்டுபட்டு அவர்களது பெரும் புகழையே பேசும் விருப்புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில் திருவாதவூரடிகளைக் குறிப்பிடாமையால் அவ்வடிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலோ அன்றி அவர்காலத்திற்கு முன்னோ வாழ்ந்தவரல்லரென்பது சுந்தரர்க்குக் காலத்தாற் பிற்பட்டவரென்பதும் நன்கு துணியப் படும்.

3. தேவார ஆசிரியர் மூவர் காலம் வரையிலும் தில்லை நடராசப் பெருமான் திருக் கோயிலில் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி இருந்ததில்லை யென்பதும், இதனை முதன் முதல் அமைத்தவன் கி. பி. 710 முதல் 775 வரை ஆட்சி புரிந்த பல்லவ வேந்தனாகிய நந்திவர்ம பல்லவ மன்னனேயென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபாகும்.[22]

*"மைப்பொன்னும் முத்தும் மணியுங் கொணர்ந்து*
*படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த*
*செம்பொன்மணி மாடங்கள்சூழ்ந்த தில்லைத்*
*திருச்சித்திர கூடம் சென்று சேர்மின்களே"*

(பெரிய திருமொழி 3-2-3)

எனத் தில்லைத் திருச்சித்திர கூடத்தைப்பற்றி நந்திவர்ம பல்லவ மல்லன் காலத்தவராகிய திரு மங்கையாழ்வார் பாடிப்போற்றியுள்ளார். இங்கு ஆழ்வாராற் பாராட்டப்பட்ட பல்லவ வேந்தனாகிய நந்திவர்ம பல்லவன் முதலில் சைவ வைணவ சமயங்களிற் பொது நோக்குடையவனாக இருந்து பின் பரம வைஷ்ணவனாக மாறியவனென்பது, இவனளித்த காசாக்குடி, உதயேந்திரம், தண்டந் தோட்டம், பட்டத்தாள் மங்கலம் ஆகிய ஊர்களிற் கிடைத்த செப்பேடுகளால் நன்கு புலனாகின்றது. இங்ஙனம் இவன் பரம வைஷ்ணவனாக மாறிய தற்கு இவனாட்சியின் பிற்பகுதியில் சிறந்த திருமாலடி யாராகத் திகழ்ந்த திருமங்கையாழ்வாரது புலமைத் திறமே காரணமாதல் வேண்டும். இவ்வேந்தன் பரம வைஷ்ணவனாக மாறிய காலமாகிய இவனாட்சி யின் பிற்பகுதியிலேயே தில்லை நடராசர் திருக் கோயிலின் முகப்பில் திருச்சித்திர கூடமென்ற பெயருடைய இப்பெருமாள் சந்நிதியை ஏற்படுத்தினா னென்று தெரிகிறது. எனவே தில்லை நடராசர் கோயிலிற் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியேற் பட்ட காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியேயெனத் திட்டமாகக் கூறலாம். இவ்வாறு கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தில்லைக்

கூத்தப்பெருமான் முன்றலின் முகப்பேயமைக்கப் பட்ட இத்திருமால் சந்நிதியை.

*"புரங்கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா*
*திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக்*
*கென்னிரண்டு*
*கரங்கள்தந் தானொன்று காட்டமற்*
*றாங்கதுங்காட்டிடென்று*
*வரங்கிடந் தான் தில்லை யம்பல முன்றிலம்*
*மாயவனே"*

(திருக்கோவை - 86)

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யுளில் திருவாதவூரடிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே அவ்வடிகள் வாழ்ந்த காலம் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னாகாதென்பது நன்கு தெளியப்படும்.

4. திருவாதவூரடிகள் தில்லையம்பலவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாரில் தம்காலத்தில் விளங்கிய வேந்தர் பெருமானாகிய பாண்டியனு டைய வெற்றித் திறத்தையும் சிவபக்தி மாண்பி னையும் குறித்துப் போற்றியுள்ளார்.

*"மன்னவன் தெம்முனை மேற்செல்லுமாயினும்*
*மாலரியே*
*றன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனாந்*
*தென்னவ னேத்துசிற் றம்பலத் தான்மற்றைத்*
*தேவர்க்கெல்லாம்*
*முன்னவன் மூவலன்னாளுமற் றோர்தெய்வ*
*முன்னலளே"*

(திருக்கோவை 306)

*"புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம்பல புகழும்*
*மயலோங் கிருங்களி யானை வரகுணன்*
*வெற்பின்வைத்த*
*கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங்*
*காட்டிவருஞ்*
*செயலோங் கெயிலெரித் தெய்தபி னின்றோர்*
*திருமுகமே"*

(ஷ 327)

எனவரும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய் யுட்களில் 'வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்' எனவும் 'சிற்றம்பலம் புகழும் மயலோங்கு இருங்கனி யானை வரகுணன்' எனவும் மணிவாசகப் பெருமான் தம்காலத்தில் வாழ்ந்த பாண்டியனை உளமாரப் பாராட்டிப் போற்றியுள்ளமை காணலாம். இங்ஙனம் திருவாத வூரடிகளாற் போற்றப்பெற்ற பாண்டிய மன்னன், வரகுணன் என்ற இயற்பெயருடையவனென்பதும், தில்லைச் சிற்றம்பலப் பெருமானை இடைவிடாது ஏத்திப் புகழும் பெருவிருப்புடைய சிவநெறிச் செல்வனென்பதும் மேற்காட்டிய திருப்பாடல் தொடர்களால் நன்கு புலப்படுகின்றன. சிவபக்திச் செல்வம் வாய்ந்த இத்தென்னவர் பெருமானை,

*"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு*
*கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்*
*ஓடும் பல்நரி யூளைகேட் டரனைப்*
*பாடின வென்று படாம்பல அளித்தும்*
*குவளைப் புனலில் தளைவ அரற்ற*
*ஈசன் றன்னை யேத்தின வென்று*
*காசும் பொன்னுங் கலந்து தூவியும்*
*வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய*
*செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு*
*பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன*
*இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்*
*மருதவட்டத் தொருதனிக் கிடந்த*
*தலையைக் கண்டு தலையுற வணங்கி*
*உம்மைப் போல எம்மித் தலையும்*
*கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்*
*கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப*

*வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்*
*காம்பவிழ்ந்த துதிர்ந்த கனியுருக் கண்டு*
*வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்*
*விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று*
*புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த*
*பெரிய அன்பின் வரகுண தேவர்''*[23]

எனப்பட்டினத்தடிகள் வியந்து பாராட்டியுள்ளார். இதன்கண் வரகுணபாண்டியன் செய்தனவாகப் பட்டினத்தடிகள் கூறிய செய்திகளைப் பெரும்பற்றப் புலியூர் நம்பி தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய திருவிளையாடலிற் குறிப்பிட்டள்ளார்.

இவ்வரகுண பாண்டியன், உடல் முழுவதும் திரு நீறணிந்து பகைவருடன் போர் செய்து நின்ற காலத்து, இவன்மேல் பகைவர் குறிபார்த்து எய்த அம்பு, இவனது திருநீறு பூசியமேனியிற் படாது ஆற்றல் குன்றி இவனது பாதத்தில் வந்து வீழ்ந்ததென்றும், அதனைக் கண்டு வியந்த இவ்வேந்தன், 'திருநீறணியும் தகுதிபெறாத என பாதத்தில் அம்பு தைத்தது பொருத்தமுடையதே' என்று சொல்லித் தான் அணிந்த சிவசாதனமாகிய திருநீற்றின் பெருமையை எல்லோர்க்கும் விளங்க எடுத்துரைத்தானென்றும் தெரிகிறது. இச்செய்தியினை,

*''பொடியேர் தருமேனியனாகிப் பூசல் புகவடிக்கே*
*கடிசேர் கணை குளிப்பக்கண்டு கோயிற் கருவியில்லா*
*அடியேபட வமையுங்கணை யென்றே வரகுணன்றன்*
*முடியேதருகழல் அம்பலத் தாடிதன் மொய்கழலே''*[24]

எனவரும் பாடலால் நம்பியாண்டார் நம்பி வியந்து போற்றியுள்ளார்.

பாண்டியன் குடியில் வரகுணன் என்ற பெயருடைய வேந்தர் இருவர் இருந்தனரென்பது கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் இனிது புலனாகின்றது. அவ்விருவருள் முன்னோனாகிய வரகுணன் என்பான் கி. பி. 792 முதல் 835 வரை ஆட்சிபுரிந்தவன். இரண்டாமவன் இம்முதல் வரகுணனது பேரனாவன். கி. பி. 862 முதல் 880 வரை பாண்டி நாட்டை ஆண்டவன் இரண்டாம் வரகுணனாவன். இவ்விருவருள் மாணிக்க வாசகராலும் பதினொராந்திருமுறையாசிரியர்களாகிய பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி என்பவர் களாலும் போற்றப்பெற்ற சிவபக்திச் செல்வம் வாய்ந்த வரகுணன் யாவன் என்பதே இங்கு ஆராயத்தக்க செய்தியாகும்.

இரண்டாம் இராசசிம்ம பாண்டியனுடைய மகனாகிச் சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து ஆண்ட முதல் வரகுண வர்மனே திருச்சிற்றம்பலக் கோவையிலும் பதினொராந் திருமுறையிலும் சிறப் பிக்கப்பட்ட சிவபக்திச் செல்வம் வாய்ந்த வரகுண பாண்டியனாவனென்பது திருவாளர் சதாசிவ பாண்டாரத்தாரவர்கள் துணிபாகும். இக்கொள்கையை வலியுறுத்தற்கேற்ற சான்றுகள் பல இவர்களால் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[25] முதல் வர குணனாகிய இவ்வேந்தனைக் ''கொற்றவர்கள் தொழு கழற்காற் கோவரகுண மகாராசன்'' எனச் சின்ன மனூர்ச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. இவனது ஆட்சியின் நாலாமாண்டுக் கல்வெட்டுக்கள் சோழ நாட்டில் திருவியலூர் திருநெய்த்தானம் என்ற ஊர்களிலும், ஆறு, எட்டு, பத்தாம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் முறையே ஆடுதுறை, கும்பகோணம், செந்தலைஆகிய ஊர்களிலும்பதினொராம்ஆண்டுக் கல்வெட்டுக்கள் திருச்சிராப்பள்ளி, திருக்கோடிகா என்ற ஊர்களிலும் ஆண்டழிந்து போன கல்வெட் டொன்று திருச்சோற்றுத்துறையிலும் இருத்தலால் சோழ மண்டலம் முழுவதும் முதல் வரகுணனது ஆட்சிக்குட்பட்டிருந்ததென்பது நன்குதெளியப்படும்.

கி. பி. 795 முதல் 846 வரையில் அரசுபுரிந்த தந்திவர்ம பல்லவனுடைய கல்வெட்டுக்கள் சோழ

நாட்டிற் காணப்படவில்லை. முதல் வரகுண பாண்டியனுடைய கல்வெட்டுக்கள் சோழ நாட்டிற் காணப்படுகின்றன. இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் தந்திவர்ம பல்லவனது ஆட்சிக்காலத்தில்தான் இவ் வரகுணபாண்டியன் சோழ நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றியிருத்தல் வேண்டு மென்பது நன்கு புலனாகும். இவ்வேந்தன் சோழ நாட்டிலுள்ள வேம்பில்[26] என்னும் ஊரின் மதிலையழித்து நியமம் என்ற ஊரில் தங்கியிருந்த பொழுது திருச்சிராப்பள்ளியிறைவர்க்குத் திருவிளக்கெரிக்க 25 கழஞ்சு பொன் நிபந்த மளித்துள்ளான்.[27] இம்மன்னன் தொண்டைமண்டலத்தில் பெண்ணையாற்றங் கரையிலுள்ள அரசூரில் தங்கியிருந்த பொழுது அம்பாசமுத்திரத் திருக்கோயிலுக்கு நாள் வழிபாட்டிற்கென 290 பொற்காசுகள் நிபந்தமளித்துள்ளான். திருவிடைமருதினையடுத்துக் காவிரிக்கு வடகரையிலமைந்த இடவையென்பது இவ்வேந்தன் காலத்தில் பாண்டியர் தங்கி ஆட்சிபுரிதற்குரிய அரணுடைய ஊராயிற்றென எண்ண வேண்டியுளது. இவ்வூரில் தங்கியிருந்த காலத்தில்தான் இவன் திருவிடைமருதீசர்பால் அளவிலாப் பேரன்பு வைத்து ஒழுகியிருத்தல் வேண்டும்.

பல்லவர் ஆட்சியைச் சோழ நாட்டிலிருந்து விலக்கிய பெருவீரனாகிய இவ்வேந்தன், சோழ நாட்டின் சிறப்புடைச் சிவதலமாகிய தில்லைப்பதியில் எழுந்தருளிய கூத்தப் பெருமானைப் போற்றிப் பரவுதலைத் தனக்குரிய நீங்காக் கடமையாகக் கொண்டிருந்தானென்பது திருச்சிற்றபலக்கோவையில் குறிப்பிடப்பட்டது. "வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" எனத் திருவாதவூரடிகள் நிகழ்காலத்து வைத்து இவ்வேந்தனைச் சிறப்பித்தலால் திருவாதவூரடிகள் திருச்சிற்றம்பலக்கோவை பாடியது இவ்வேந்தன் காலத்திலென்று தெரிகிறது. அன்றியும் இவனாற் போற்றி வழிபடப்பெற்ற இடைமருதினையும் அதன் மருங்கே இவனுக்குரியதாய் விளங்கிய இடவையென்னும் நகரில் வாழ்ந்த மடநல்லாள் ஒருத்திக்கு இறைவன் அருள் செய்த திறத்தையும்[28] திருவாசகத்துள் அடிகள் குறித்துப் போற்றுதலும் இதனை வலியுறுத்தும்.

திருச்சிற்றம்பலக்கோவையாரிற் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் தமிழ் நாட்டில் கல்வெட்டுக்கள் உண்டாவதற்கு முன் அதாவது கி. பி. 4 ஆம் நூற்றாண்டுக்குமுன் இருந்தவன் என்பர் மறைமலையடிகள். கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன்னிருந்த தமிழ் வேந்தரெல்லோரும் தனித் தமிழ்ப் பெயரால் வழங்கப்பெற்றுள்ளார்கள். அவர்களுள் எவரும் வடமொழிப் பெயர்களைத் தமக்குரிய பெயர்களாகப் புனைந்து கொண்டதில்லை. வரகுணன் என்ற பெயர் தமிழும் வடமொழியும் கலப்புற்ற காலத்தில் தோன்றிய பெயர். ஆகவே இப்பெயராற் குறிக்கப்படும் இப் பாண்டியனைப் பாண்டி நாட்டிற் களப்பிரர் ஆட்சிக்குப்பின் தோன்றிய பாண்டியர்களுள் ஒருவனாகவே கொள்ளுதல் வேண்டும்.

இனி, மணிவாசகராற் போற்றப் பெற்ற இவ் வரகுண பாண்டியனைக் கி. பி. 880-ம் ஆண்டில் திருப்புறம்பயப் போரில் தோற்ற இரண்டாம் வரகுண பாண்டியனெனக் கொள்வார் தஞ்சைச் சீநிவாச பிள்ளை முதலியோர்.[29] வரகுணனது சிவபக்தி மாண்பினால் விளைந்த வெற்றித்திறத்தை நம்பி யாண்டார் நம்பி தாம் பாடிய கோயிற்திருப் பண்ணியர் விருத்தத்தில் இனிது விளக்குதலானும், தில்லையம்பல வாணனை இடைவிடாது போற்றும் இயல்புடையவனாகத் தம் காலத்து விளங்கிய தென்னவர் பெருமாள் வரகுண பாண்டியன் என்பதனைத் திருவாதவூரர் தெளிவாகக் கூறுதலானும், பட்டினத்தடிகள் வாய்மொழியானும் பெரிய அன்பின் வரகுணதேவராகிய இவ்வேந்தர் பெருந்தகை நெடுங்காலம் சோழ நாட்டில் தங்கியிருந்த பெருவீர

ரென்பதும் தமிழ் வரலாறுடையார் கருதுமாறு திருப்புறம்பயப்போரில் தோற்றோடிய வரல்லரென்பதும் நன்கு புலனாகும். ஆதலால் 'கொற்றவர்கள் தொழு கழற்காற் கோ வரகுண மகாராசன்' எனப்பாராட்டப் பெற்ற முதல் வரகுண வர்மனே மாணிக்கவாசகர் காலத்து ஆட்சிபுரிந்த பாண்டியன் எனக்கொள்ளுதல் வேண்டும். இம்முடிபினை வலியுறுத்துவதாக அமைந்த மற்றொரு செய்தியும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும். தமிழ் நாட்டிலிருந்து சைவாசாரிய ரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த மன்னனைச் சைவ சமயத்திற்குத் திருப்பினர் என ராஜரத் நாகரியென்ற நூல் கூறுகிறதென்றும், அந் நூலிற் குறித்த காலம் கி. பி. 819-ம் ஆண்டினை யொட்டியதென்றும் நெல்சன் என்பார் மதுரைச் சரித்திரத்தில் (Maduramanual) குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகப் பெருமான் வாழ்ந்த காலத்தில் சிவனடியாரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று 'பொன்னம் பலம்' என்ற திருப் பெயரைச் சொல்லியிரந்துண்டு வந்தாரென்றும், அவரது செய்கையைக்கண்டு பொறாத இலங்கைப்புத்தர்கள் தமது மன்னனிடம் தெரிவிக்க மன்னன் அவ்வடியாரை யழைத்துப் 'பொன்னம்பலம்' என்றதன் வரலாற்றைக் கேட்டறிந்து தனது குருவுடனும் தான் பெற்ற ஊமைப் பெண் ணோடும் தில்லை பொன்னம்பலத்தை யடைந்து அங்கு புத்தமதத்தை நிலை நாட்டுங் கருத்துடன் புறப்பட்டுத் தில்லையை யடைந்தனனென்றும், அப்பொழுது தில்லைப் பதியில் தங்கியிருந்த மணிவாசகப் பெருமான் புத்த குருவை வாதில் வென்று ஊமைப் பெண்ணையும் பேசவைத்து இலங்கை மன்னனைச் சைவனாக்கினா ரென்றும் திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது.[30] இந் நிகழ்ச்சி மேற்காட்டிய ராஜ ரத்நாகரியென்ற இலங்கைச் சரித நூல் கூறும் செய்தியுடன் ஒத்துக் காணப்படுதலால் அந்நூலிற் கூறப்படும் சைவா சாரியரென்பவர் மணிவாசகப் பெருமானை வழி பட்ட அடியார் குழுவினைச் சார்ந்தவரென்பதும் இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததாக ராஜ ரத்நநாகரி யென்ற நூல் குறிப்பிடும் காலப்பகுதியாகிய கி. பி. 819-ம் ஆண்டு. முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக் காலத்துள் அடங்கியதாதலின், மணிவாசகர் காலத்து ஆட்சிபுரிந்த பாண்டியன் முதல் வரகுண பாண்டி யனே யென்பதும் நன்கு தெளியப்படுமென்க.

5. தேவார ஆசிரியர்கள் தம் காலத்து வழங்கிய அறுவகைச் சமயங்களையும் சைவ சமயத்தின் உட்பிரிவுகளாகிய அகச்சமயங்களையும் தம் பாடலிற் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் காலத்தில் ஏகான்மவாதமென்னும் மாயாவாத மதம் தமிழ் நாட்டில் தோன்றி வழங்கியதில்லை. சேர நாட்டிற் பிறந்த சங்கராச்சாரிய சுவாமிகள் தாம் ஏகான்ம வாதத்தைத் தென்னாட்டிலும் வட நாட்டிலும் சிறப்பாக நிலைபெறச் செய்தவரென்பது பலரும் அறிந்த செய்தியாகும். திருவாதவூரடிகள் தம் காலத்தில் மாயாவாதமென்னும் மதம் நாடு முழுவதும் சண்டமாருதம் போல் விரைவிற் பரவி மக்கள் உள்ளத்தைக் கலக்கிய திறத்தை.

*'மிண்டிய மாயாவாத மென்னும்*
*சண்டமாருதம் சுழித்தடித் தார்த்து'*

என்ற தொடரால் தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார். எனவே அடிகள் வாழ்ந்த காலம் ஆதிசங்கரர் வாழ்ந்த காலத்தை யொட்டியதென்பது பெறப்படும். சங்கரர் தாம் பாடிய சௌந்தரியலகரி என்ற நூலில் கவுணிய கோத்திரத்தவராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு உமையம்மையார் ஞானப்பாலளித்த வரலாற்றைக் குறித்துப் பாராட்டியுள்ளார். ஆகவே அவர் வாழ்ந்த காலம் திருஞானசம்பந்தப்பிள்ளை யார் வாழ்ந்த காலமாகிய கி. பி. ஏழாம் நூற் றாண்டிற்குப் பிற்பட்டதென்று உறுதியாகக் கொள்ள லாம். சங்கரரது கொள்கையாகிய மாயாவாதத்தைக் குறிப்பிட்ட மணிவாசகரது காலம் தேவார ஆசிரியர்க்குப் பிற்பட்டதென்பது சொல்லாமலே விளங்கும்.

6. மாணிக்கவாசகப் பெருமான் தேவார ஆசிரியர்களாற் பாடிப் போற்றப்பெற்ற சிவ தலங்கள் சிலவற்றைத் தமது பாடல்களிற் குறிப்பிட்டதுடன் அவ்வாசிரியர்களாற் குறிக்கப்படாத புதிய திருக் கோயில்கள் சிலவற்றையும் குறிப்பிட்டுள்ளார். சிராப்பள்ளியென்ற திருத் தலம் திருநாவுக்கரசர் காலத்திற்கு முன் சமணப்பள்ளியாயிருந்து பின் அவராற் சைவனாக மாறிய மகேந்திர பல்லவனால் சிவன் கோயிலாக மாற்றப்பெற்றதென்பது ஆராய்ச்சி யாளர் துணிபாகும்.[31] "சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி" எனத் திருவாதவூரடிகள் அத்திருப்பதியில் எழுந்தருளிய இறைவனைப் போற்றுதலால் சிராப் பள்ளியைச் சிவன்கோயிலாக மாற்றிய மகேந்திர வர்மனுக்கும் அவனால் வழிபடப்பெற்ற பெருந்தகை யாராகிய திருநாவுக்கரசர்க்கும் காலத்தாற் பிற்பட்டவர் மணிவாசகரென்பது நன்கு தெளியப் படும்.

7. "கலையார் அரிகேசரியாய் போற்றி" என வரும் போற்றித் திருவகவலில் கலையுணர்வு நிரம்பிய அரிகேசரி மன்னன் பெயரால் அமைக்கப் பட்ட ஊரிலே இறைவன் திருக்கோயில் கொண் டெழுந்தருளிய திறத்தை மணிவாசகர் குறித்துப் போற்றியுள்ளார். அரிகேசரி யென்ற பெயருடைய பாண்டியன் திருஞானசம்பந்தரால் வெப்பு நோய் தீர்த்து ஆட்கொள்ளப்பெற்ற நின்றசீர் நெடுமாற னாவன். இவனது பெயராலமைக்கப்பட்ட ஊர் பாண்டி நாட்டிலுள்ள அரிகேசரி நல்லூர் என்பதாகும். இதனை இக் காலத்தார் சின்னமனூர் என வழங்குவர்.[32] அரிகேசரியென்ற சிறப்புப்பெயருடைய நின்றசீர் நெடுமாறன் யெராலமைந்த திருத்தலத்தைத் திருவாதவூரடிகள் குறிப்பிடுதலால் மாறவர்மன் அரிகேசரியாகிய நின்ற சீர் நெடுமாறனுக்கும் அவனை நல்வழிப்படுத்திய திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கும் காலத்தாற் பிற்பட்டவர் மாணிக்க வாசகர் என்பது ஒரு தலை.

தேவாரத் திருமுறைகளில் வழங்கப்பெறாத அஞ்ஞானம், இருதயம், இந்தீவரம், சந்தீவரம், சிந்தாகுலம், சூக்குமம், தூலம், தோயம், துவந்துவம், நந்தீவரம், பயங்கரம், பயோதரம் முதலிய வடமொழிச் சொற்களும், அச்சன், அச்சோ, அந்தோ, அதெந்துவே என்பன போன்ற திசைச் சொற்களும், குது குதுப்பு, விது விதுப்பு, கூவித்து, வேசறுவேன், சட்டோ, தகப்பன், துரை, எத்தன் என்பன போன்ற பிற்காலச் சொற்களும் திருவாதவூரடிகள் திருப்பாடல்களிற் காணப்படுகின்றன.

கோகழி, கல்லாடம், வேலம்புத்தூர், சாந்தம் புத்தூர், உத்தரகோசமங்கை, பூவலம், பட்டமங்கை, அரிகேசரி, ஒரியூர், பாண்டூர், கவைத்தலை, குவைப்பதி முதலாகத் திருவாசகத்திற் குறிக்கப்படும் ஊர்களும் சில தலபுராண வரலாறுகளும் தேவாரத்திருமுறை களிற் காணப்படவில்லை. தேவார காலத்திற்காணப் படாத தசாங்கம் முதலிய பிரபந்த வகைகளும் அவை பற்றித் தோன்றிய புதிய யாப்பு விகற்பங்களிற் சிலவும் திருவாகசத்தில் உள்ளன. திருவாசகத்திற் கூறப்பட்ட பஞ்சமலம், வினையொப்பு முதலிய தத்துவ விளக்கங்கள் சில தேவார ஆசிரியர் காலத்திற்குப் பின் தோன்றியவை யெனத் தெரிகிறது.

இதுகாறும் இங்கு எடுத்துக்காட்டிய ஏதுக்களால் மாணிக்கவாசக சுவாமிகள் தேவார ஆசிரியர்கள் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவரென்னுங் கொள்கையே ஏற்றுக் கொள்ளத்தகுவதென்பதும், அடிகள் வாழ்ந்த காலம் கி. பி. 792 முதல் 835 வரை ஆட்சி புரிந்த முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக் காலமே யென்பதும் தெளிவாகப் புலனாதல் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

1. Date of Manickavasagar by Tirumalaikolunthu Pillai.
2. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்
3. 1904-ல் வெளிவந்த சென்னைக் கிறித்தவ கலாசாலைப் பத்திரிகை.
4. பாண்டியர் வரலாறு (இரண்டாம் பதிப்பு) பக்கம் 61.
5. தமிழ் வரலாறு பிற்பாகம் (நான்காம் பதிப்பு) பக்கம் 85-142
   Date of Manickavasagar, T. P. Palaniyappa Pillai
   Journal of Shri Venkateskvara Oriental Institute
   Vol IV, Part I, Page 152-182
6. சென்னைக் கிறித்தவ கலாசாலைப் பத்திரிகை.
7. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் (மூன்றாம்பகுதி) பக்கம் 2-3.
8. திருமந்திரம் 77
9. திருநாவுக்கரசர் திருவிசையமங்கைத் திருக்குறுந்தொகை 1-ம் பாடல்.
10. திருவாசகம், திருச்சதகம் 96.
11. முதல் திருமுறை 30-ஆம் பதிகம் 2-ஆம் திருப்பாட்டு
12. கருவூர்த்தேவர் திருவிசைப்பா. கோயில் - 8.
13. திருவாலியமுதர் திருவிசைப்பா. கோயில் கோலமலர் 8
14. திருச்சிற்றம்பலக்கோவை 174-ஆம் செய்யுள்
15. திருச்சிற்றம்பலக்கோவை 317-ஆம் செய்யுள்
16. திருச்சிற்றம்பலக்கோவை 20-ம் செய்யுள்
17. திருச்சிற்றம்பலக்கோவை 44-ம் செய்யுள்.
18. திருவாசகம் - திருச்சாழல் 14.
19. திருவாசகம் - கண்டபத்து 6.
20. கல்லாடம் 97-ம் செய்யுள் 14-ஆம் அடி
21. "பரிபுரக் கம்பலை யிருசெவியுண்ணும்
   குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
   மதிமலிபுரிசைத் திருமுகங்கூறி
   அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
   பெறநிதி கொடுக்கென வுறவிடுத்தருளிய
   மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்" - கல்லாடம் 13-ம் செய்யுள் 25-30 வரிகள்

22. திருவாளர் மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்ட 'திருச்சித்திரகூடம்' என்ற கட்டுரை பார்க்க (The Annals of Oriental Research of the Madras University Vol. III (1938-39) Part I.

23. பதினொராந்திருமுறை - திருவிடைமருதூர் மும்மணிக் கோவை 28-ஆம் செய்யுள்.

24. கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 62-ஆம் செய்யுள். இப்பாடலில் கோயிற்கருவி யென்றது சிவசாதனமாகிய திருநீற்றை யெனக் கொள்க.

25. பாண்டியர் வரலாறு (இரண்டாம் பதிப்பு) பக்கம் 58-63

26. வேம்பில் என்ற ஊர் இப்பொழுது திருவிடை மருதூரையடுத்துள்ள வேம்பத்தூரெனக் கருதப்படுகின்றது.

27. Annual Report on Archaeological survery of India for 1903-04 Page 275. Ep Ind. Vol.IX, No.10. (Ins. 105 of 1905)

28. இடைமருதீசன் அருள்பெற்ற இடவை மடநல்லாள் எனத்திருவாதவூரடிகள் குறித்துப் போற்றிய அம்மையார் பட்டினத்தடிகள் கூறிய பெரிய அன்பின் வரகுண தேவரது புரிகுழற்றேவியாகவும் இருத்தல் கூடுமென்று எண்ண இடமுண்டு. இச்செய்தி அறிஞரது ஆராய்ச்சிக்குரியதாகும்.

9. தமிழ் வரலாறு பிற்பாகம் (நான்காம் பதிப்பு) பக்கம் 128-131.

30. திருவாதவூரடிகள் புராணம், புத்தரை வாதில் வென்ற சருக்கம்.

31 திருவாளர் தி. வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் எழுதிய 'திருச்சிராப்பள்ளி' யென்ற கட்டுரை செந்தமிழ் 45-ல் தொகுதி. (பக்கம் 77-82) நோக்குக.

32. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி III பகுதி III 109-ம் கல்வெட்டு, பார்க்க. தொகுதி IV-ல் வெளிவந்த சின்னமனூர்ப் பட்டயத்தில் 'அளநாட்டுப் பிரமதேயம் அரிகேசரி நல்லூர்' என வரும் தொடரும் இதனை உறுதிப்படுத்திகின்றது.



# திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்

முரு.பழ. இரத்தினம் செட்டியார்

### சித்தாந்த சாத்திரங்கள்

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும். அவற்றுள் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் முடிமணி நூலாக விளங்குகிறது திருவுந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும், சிவஞானபோதத்திற்கு முன் எழுந்த நூற்களாகும். அருணந்திசிவமும், மனவாசகங்கடந்தாரும், உமாபதிசிவமும் சிவஞானபோதத்தைப் பின்பற்றியே அதற்கு விளக்கமாகப் பதினொரு சைவசித்தாந்த சாத்திரங் களைஅருளிச்செய்திருக்கின்றனர். சித்தாந்தத்திற்கு இவை பிரமாண நூற்களாக அமைந்துள்ளன.

### மூலநூல்கள் யாவை?

சித்தாந்த சாத்திரங்களுக்கு மூலமாக விளங்கு கின்ற நூற்கள் யாவை? என்பது சிந்தனைக்குரியது. சிவஞானபோதம் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பே என்று நெடுங்காலமாக ஒரு கருத்து நிலவி வருகிறது. இன்றைய அறிஞர்கள் சிவஞானபோதம், தமிழில் தோன்றிய முதல்நூலே எனக் கூறுகின்றனர். வடமொழிச் சிவஞான

போதத்தில் கருத்துக்கள் திட்பமும் நுட்பமும் இல்லாமல் சொல்லப்பட்டிருப்பதால் தமிழ்ச் சிவஞான போதம் அதன் மொழி பெயர்ப்பாக இருக்க முடியாது என்பது பலர் கருத்தாகும். உதாரணமாக முதல் சூத்திரம், "அவன், அவள், அது" எனத் துவங்குகிறது சுட்டப் படும் பொருள் அழியும் என்பதை உணர்த்தவே "அவன் அவள் அது" என்னும் சுட்டுப்பெயர்களால் மெய்கண்டார் சூத்திரத்தை தொடங்கியுள்ளார். வட மொழிச் சிவஞானபோதம் "பெண் ஆண் அலி" எனத் துவங்குகிறது. சுட்டுப் பொருள் அழியும் என்னும் கருத்தை இத் தொடர் உணர்த்தத் தவறிவிடுகிறது. வடமொழிச் சிவஞான போதம் இறைவன் வாக்காக இருக்குமானால் அது மெய்கண்டார் வாக்கை விடத் திட்பமும் நுட்பமும் செறிந்ததாக இருக்கவேண்டும். அவ்வாறில்லாமையால் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பாக தமிழ் சிவஞான போதத்தை சொல்வதற்கில்லை. வடமொழிச் சிவஞான போதமே முதல் நூல் எனச் சொல்பவர்கள் இதற் கொரு சமாதானம் சொல்கின்றனர். மொழிபெயர்ப் பாசிரியர் மூல நூலில் உள்ள கருத்தை விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டுள்ளவர். ஆதலால் அவர் தமிழ் சிவஞான போதத்தைக் கூடுதலான விளக்கத் துடன் அருளிச் செய்திருக்கிறார். விளக்கம் இருப்பது கொண்டு அது வட மொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பாகாது எனச் சொல்வது பொருந்தாது என்பது அவர்கள் கூறும் சமாதானமாகும். விளக்கம் என்பது வேறு, திட்டநுட்பம் என்பது வேறு, 'அவன், அவள், அது' என்பன விளக்கமாக நிற்கவில்லை. அவை திட்பமாக நிற்கின்றன. தமிழ் சிவஞான போதத்தில்வரும்தொடர்களில்உள்ளதிட்பத்தையும் நுட்பத்தையும் நாம் உணர்ந்து சிந்தித்துத் தான் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. வடமொழிச் சிவஞான போதத்தில் இந்த திட்பம் இல்லை. மூல நூல் மொழிபெயர்ப்பு நூலை விடத் திட்ப நுட்பம் செறிந்ததாக இருக்கவேண்டும். வடமொழிச் சிவஞான போதம் திட்ப நுட்பம் இல்லாதிருப்பதோடு முக்கியமான கருத்துக்களைச் சொல்லாமலும் விட்டிருக்கிறது. சிவஞான முனிவர் வடமொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பாகவே தமிழ்ச் சிவஞானபோதத்தை கொண்டிருக்கிறார். ஆனால் வடமொழிச் சிவஞான போதம் விட்டுள்ள முக்கிய மான கருத்துக்களை எடுத்துக் காட்டிப் பல அமைதிகள் சொல்லியிருக்கிறார். அமைதி சொல்வதிலிருந்தே வடமொழிச் சிவஞான போதம் தமிழ் சிவஞான போதத்திற்கு மூலமாகாது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார் என்பது புலனாகிறது. அவர் காலத்தில் வட மொழியிலிருந்து ஒன்று வந்ததாகச் சொன்னால் தான் சிறப்பு என்னும் ஓர் எண்ணம் பரவியிருந்தது. அதனை மீற முடியாத நிலையில் சிவஞான முனிவர் மொழிபெயர்ப்பென ஒப்புக் கொண்டு பல அமைதிகள் சொல்லுகிறார். எனவே சிவஞான போதம் தமிழ் முதல் நூலே என்பது தான் பொருத்தமான கருத்தாக தெரிகிறது.

தமிழ் சிவஞான போதம் தமிழ் முதல் நூலாக விளங்கினாலும் அதன்கண் சொல்லப்பட்டுள்ள கருத்துகளும் ஏனைச் சித்தாந்த சாத்திரங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளும் பல ஆகமங்களிலிருந்து பெறப்பட்டவையே என்பதில் ஐயமில்லை. திருமுறை களில் சித்தாந்த கருத்துகள் மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டு உள்ளன. திருமந்திரம் மட்டும் சிறிது கூடுதலாகச் சொல்லுகிறது. எனினும் முப்பொருள் உண்மை பற்றிய விளக்கமும் முப்பத்தாறு தத்து வங்கள் பற்றிய விளக்கமும் ஆகமங்களில் தாம் விரிவாக சொல்லப்பட்டுள்ளன. ஆகமங்கள் இல்லை யேல் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் முழுமையாக உருவாகியிருக்க முடியாது. இந்த வகையில் தமிழ் சித்தாந்த சாத்திரங்கட்கு மூலம் வடமொழிச் சைவாகமங்களே எனச் சொல்வதில் தவறில்லை.

## ஆகமத்தில் பொருள் வேறுபாடு

தத்துவங்கள் பற்றிய விளக்கம் ஆகமத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருந்தாலும் சித்தாந்த

கொள்கையை உருவாக்குவதில் அவை சிறந்து நிற்கவில்லை. சிலவிடங்களில் ஆன்மா முத்தியில் ஒன்றாய்ப் போகும் என அவை சொல்கின்றன. சில விடங்களில் ஆன்மா பெத்த முத்தி இரண்டிலும் சிவனுக்கடிமை எனச் சொல்லுகின்றன. வேறு சிலவிடங்களில் ஆன்மா முத்தியில் சிவசமம் என்றும், அது முத்தியில் சுதந்தரம் என்றும் சொல்லுகின்றன. இவ்வாறு ஆகமங்கள் சித்தாந்த கொள்கை பற்றி ஒன்றுக் கொன்று முரணாகப் பல்வேறு விதமாக சொல்வதில் அவற்றிற்குப் பொருள் ஒருமை காண்பது அரிதாக இருக்கிறது. ஏதேனும் ஒரு கருத்தை உண்மை எனத் துணிந்து ஏனைய கருத்துக்களை அதற்கேற்ப அமைதி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு பொருளைத் துணிய முடியாமையால் தான் பாடாணவாத சைவம்சுத்த சைவம் சிவசமவாத சைவம் முதலிய அகச் சமயங்கள் தோன்றியிருக்கின்றன. இந்த அகச் சமயங்கள் ஆகமத்தையே பிரமாணமாக கொண்டவையாகும். சித்தாந்த சைவம் இவற்றிற்கு வேறாகத் தனித்து விளங்குகிறது. இவ்வாறு அது விளங்குவதற்கு காரணம் யாது?

## திருமுறைகள் தரும் விளக்கம்

திருமுறை ஆசிரியர்கள் இறைவன் உள் நின்றுணர்த்தச் சித்தாந்தக் கொள்கையைத் தெளிவு செய்து பாடியருளியிருக்கிறார்கள். அவர்கள் வாக்கைப் பிரமாணமாக கொண்டு மெய்கண்டார், அருணந்தி சிவம், முதலிய சித்தாந்த ஆசிரியர்கள் சித்தாந்தகொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள். சித்தாந்தப் பொருள் விளக்கத்தை ஆகமத்திலிருந்து அவர்கள் நிறைய எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சித்தாந்த கொள்கை விளக்கத்தை அவர்கள் திருமுறைகளிலிருந்தே பெற்றிருக்கிறர்கள். திருமுறைகளுக்கு ஏற்ப வருகின்ற ஆகமக் கருத்துக் களை உடன்பட்டும் முரணாக வருகின்ற ஆகமக் கருத்துக்களை அமைதி செய்தும் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களை பாடியருளியிருக்கிறார்கள்.

ஆகமத்தில் ஆன்மா முத்தி நிலையில் சிவபோகத்தை நுகரும் எனச் சொல்லப்பட்டுள்ளது. சில இடங்களில் ஆன்மா முத்தியில் ஒன்றாய்ப் போய்விடும் எனச் சொல்லப்பட்டுள்ளது. இதனைத் தான் சுத்த சைவர்களும் சிவாத்துவ சைவர்களும் தமக்குப் பிரமாணமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திருமுறைகளில் இது பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை சித்தாந்த ஆசிரியர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அப்பர் சுவாமிகள் "இறுமாந்திருப்பன்கொலோ ஈசன் சேவடிக் கீழ் இறுமாந்திருப்பன்கொலோ" எனப் பாடியருளியிருக்கிறார். மணிவாசகர் திருவண்டப்பதியில் "கடைமுறை என்னையும் இருப்பதாகக்கினன்" எனக் கூறியுள்ளார். இத் தொடர்கள் ஆன்ம முத்தியிலும் உண்டு என்பதைப் புலப்படுத்துகின்றன.

*"நாயேனை ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடி"*

என மணிவாசகர் கூறியருளியிருக்கிறார்.

ஆன்மா முத்தியில் சிவபோகத்தை நுகரும் என்பதற்கு இது சான்றாக விளங்குகின்றது. "ஆன்மா முத்தியில் ஒன்றாக கலந்து போகும்: இன்பத்தை நுகர்வதில்லை" என்னும் சுத்த சைவ சிவாத்துவித சைவக் கருத்தை திருமுறை வாக்குகள் மறுத்துள்ளதால், திருமுறைகளுக்கு ஏற்பவுள்ள ஆகம வாக்கியத்தைச் சித்தாந்தக் கொள்கையாக கொண்டு "ஒன்றாய்ப் போகும்" என்னும் ஆகம வாக்கியம் "கலப்பைக்" குறிக்கிறதேயல்லாமல் "இன்மையைக் குறிக்கவில்லை" என அமைதி செய்து சித்தாந்த கொள்கையை மெய்கண்ட நூற்கள் உருவாக்கியிருக்கின்றன. திருமுறைகளை

தவிர இந்த முடிவைச் செய்வதற்கு பிரமாணமாக மதிக்கத்தக்க வேறு நூற்கள் இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆன்ம முத்தியில் சிவசமம் என ஆகமங்கள் பல இடங்களில் சொல்கின்றன. சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியத்தில் இவ்வாறு ஆகமங்கள் சொல்வதை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதனைக் கொண்டு தான் சிவசமவாதம் உருவாகியிருக்கிறது. ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் சிவனுக் கடிமையென்றும் ஆகமங்கள் பல இடங்களில் சொல்கின்றன. இருவகைக் கருத்துக்களையும் ஆகமங்கள் சொல்வதால் அவற்றுள் எது சரி? என்னும் வினா எழும். சிவசமவாதிகள் தாங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்லி ஆகமப் பிரமாணங்கள் காட்டுகிறார்கள். அவர்களை மறுப்பதற்கு ஆகமங்களுக்கு வேறாக ஆனால் ஆகமங்களுக்கு ஒத்த வலிமையுடைய பிரமாண வாக்குகள் இருந்தாக வேண்டும் அப்பர் சுவாமிகள் "தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன் நற் சங்க வெண்குழையோர் காதில், கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க் கொய்மலர்ச் சேவடி யினையே குறுகினோமே" எனக் கூறுகிறார். **"என்றும்** மீளா ஆளாய்" எனக் கூறுவதால் பெத்தம் முத்தி இரண்டிலும் ஆன்மா அடிமை எனப்பெறப் படுகிறது. இதனை ஆதாரமாகக் கொண்டு சித்தாந்த ஆசிரியர்கள் ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் அடிமை எனச் சித்தாந்தம் செய்கிறார்கள். ஆகமத்திற் கொத்த வலிமையுடையனவாகத் திருமுறை வாக்குகள் திகழ்வதால் அவற்றைக் கொண்டு சிவசம வாதத்தைச் சித்தாந்த ஆசிரியர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆன்மா முத்தியில் பிறப்பிறப்பற்ற நிலையை இறைவனைப் போல அடைவதால் அதனைச் சிவசமம் என ஆகமங்கள் சொல்லுவதாக அவர்கள் பொருளமைதி கண்டுள்ளார்கள். இவ்வாறு ஒன்றைத் துணிந்து மற்றொன்றிற்கு அமைதி காணும் நிலை திருமுறை களிலேயே உண்டாகியிருக்கிறது.

## சித்தாந்த கொள்கை விளக்கம்

சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த பெருமன்ற விழாவில் தலைமை ஏற்ற சித்தாந்த பேரறிஞர் அருணைவடிவேல் முதலியயாரவர்கள் சித்தாந்தத்திற்கு மூலம் சைவ ஆகமங்களே என்றும் திருமுறைகள் அவற்றுக்கு மாறாக இல்லை என்றும் கூறியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னால் சித்தாந்த சைவத்தை உருவாக்கிய திறம் திருமுறைகளையே சாரும் என்னும் உண்மை புலப்படாமல் போகும். திருமுறைகளின் முதன்மை வலியுறுத்தப்பட வேண்டும். சித்தாந்தப் பொருள் விளக்கம் செய்வதற்கு ஆகமங்கள் மூலம் என்றும் சித்தாந்த கொள்கையை விளக்கம் செய்வதற்கு திருமுறைகள் மூலம் என்றும் சொல்வதுதான் பொருத்தமாகும். சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய இருபா இருபஃதில் அருணந்தி சிவம் சில நுட்பமான தடைகளை எழுப்பி அவற்றிற்கு மெய்கண்டார் விடை சொல்வது போலத் திருமுறை வாக்குகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதிலிருந்து சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் திருமுறைகளே துணை செய்யும் என்பது போதரும்.

சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியத்தில் சூத்திரத்திற்கு சூத்திரம் திருமுறைகளையே மேற்கோள்களாக காட்டிச் செல்கிறார். அவ்வாறு காட்டும் போது 'அனுபவமுடைய தேசிகர் திருவாக்கான் உணர்க' என எழுதுகிறார். திருமுறை ஆசிரியர்களை அவர் அனுபவமுடைய தேசிகர் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு அவர் ஏன் சொல்ல வேண்டும்? ஆகமங் களுக்கு பொருள் சொல்லுகின்ற அகச்சமயவாதிகள் மெய்ஞான அனுபவமுடையவர்கள் அல்லர். அனுபவமில்லாத அவர்கள் சொல்லும் பொருட்கள் ஏற்கத் தக்கன ஆகா. மெய்ஞான அனுபவமடைய திருமுறை ஆசிரியர்களின் வாக்குகளே ஏற்கத் தக்கன ஆகும். எனவே திருமுறை வாக்குகளை

கொண்டே ஆகமங்களுக்குப் பொருள் காண வேண்டும். இதனை உணர்த்தவே சுவாமிகள் "அனுபவமுடைய தேசிகர்" எனச் சுட்டுகிறார். ஆகமத்திற்கு பொருளொருமை காணத் திருமுறை களையே நாம் பிரமாணமாக கொள்ள வேண்டும்.

வடநூல் வல்ல சமய ஆசிரியர்கள் வேத உபநிடதங்களுக்குப் பொருள் கொள்ளும் போது சைவாகமங்களை மேற்கோள் காட்டுவதில்லை. அவர்கள் அவற்றை ஏற்பதுமில்லை. இதனால் சைவாகமங்கள் வடமொழியில் செய்யப் பட்டிருந்தாலும் அவை தமிழ் மண்ணிற்கே உரியனவாக விளங்குகின்றன என்பது தெளிவு.

## சைவசித்தாந்தம்

திருவாசகத்தில் வரும் சித்தாந்த குறிப்புகளை ஆராயமுன்னர் சைவ சித்தாந்தம் என்றால் என்ன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

"பதி உண்டு; பசுக்கள் உண்டு; அவற்றை பிணித்துள்ள பாசம் உண்டு; இம் மூன்றும் அநாதி" என்பது சைவ சித்தாந்தமாகும். கடவுளுக்கு பதி எனச் சித்தாந்தம் பெயரிட்டிருக்கிறது. பதி- தலைவன். தலைவன் என்றாலே அவனைச் சார்ந்த அடிமைகள் உண்டு என்பது போதரும். 'நான் பிருமம்: நான் பிருமத்திற்கு சமம்' என்னும் கொள்கைகளை உடன்படவில்லை என்பதை காட்டுவதற்காகவே சித்தாந்தம் கடவுளுக்கு பதி எனப் பெயரிட்டுள்ளது. கடவுள் உண்டு என்பதை மெய்ப்பிப்பதற்காகவே மெய்கண்டார் சிவஞான போத முதற்சூத்திரத்தை அருளிச் செய்திருக்கிறார்.

*"அவன் அவள் அதுவெனும் அவை*
*மூவினைமையின்*
*தோற்றியதிதியே ஒடுங்கி மலத்துளதாம்*
*அந்தமாதி என்மனார் புலவர்"*

இச் சூத்திரத்தில் "மூவினைமையின்" என்னும் தொடர் வருவதைக் காண்கின்றோம். "மூவினைமை" என்பது. தோன்றல் இருத்தல் அழிதல் என முத்தொழில்படும் தன்மையைக் குறிக்கும். உதாரணத்திற்காக நம்மையே எடுத்துக் கொள்வோம். நாம் உடலோடு தோன்றுகிறோம்: வாழ்கிறோம்: உடலை விட்டு பிரிந்து போகிறோம். நம் உடல் தோன்றல் இருத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிற்கும் உட்படுகிறது. "தோன்றலும் அழிதலும் இயற்கை. இச் செயல்களை செய்வதற்கு முதல்வன் ஒருவன் வேண்டுவதில்லை" என நாத்திக சமயத்தினர் கூறுகின்றனர். இதுபற்றி சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவம் பின் வருமாறு கூறுகிறார்.

*"இயல்புகாண் தோற்றி மாய்கையென்றிடின்*
*இயல்பினுக்குச்*
*செயலதின்று இயல்பு செய்தி செய்தியேல்*
*இயல்பதின்றாம்"*

தோன்றுவதும் அழிவதும் இயற்கை என்றால் தோன்றுதலுக்கு அழிதல் முரண்பட்ட செயலாகும். முரண்பட்ட இருவகைச் செயல்கள் இயற்கையில் அமைந்திருக்க முடியாது. ஏன் முடியாது? என வினவலாம். இயற்கை அழிவற்றது. அதன்கண் தோற்றுவிக்கும் சக்தி கூடுதலாக இருக்குமானால் அழிப்பிக்கும் சக்தி செயல்பட முடியாமல்போகும். அழிப்பிக்கும் சக்தி கூடுதலான வலிமையுடை யனவாக இருந்தால் தோற்றுவிக்கும் சக்தியை அது செயற்பட விடாமல் அடக்கி விடும். இருவகைச் சக்தியும் சம வலிமையுடையனவாயிருந்தால் ஒரு செயலுமே நடைபெறாமல் போகும். உலகில் இரு வகை செயல்களும் நடைபெறுவதை காண்கிறோம். இயற்கை அறிவற்றதாதலால் தன் சக்தியைஅப்படியே தான் வெளிப்படுத்தும். ஒன்று நடைபெறும் பொழுது மற்றொன்றை அடக்கி வைக்க அதற்கு தெரியாது. இருவகை சக்திகளையும் மாறி மாறி விகற்பித்துச்

செயல்படுத்த வேண்டுமென்றால் இயற்கை அறிவுள்ள தாக இருக்க வேண்டும். இயற்கை அறிவுள்ள தென்றால் அதனையே கடவுள் என சொல்லவேண்டும். ஆனால் நாத்திகர் உட்பட அனைவரும் இயற்கை அறிவுடையதன்று என்றே கொள்கின்றனர். அங்ஙனமானால் அதன் கண் தோற்றுவித்தல், அழிப்பித்தல் ஆகிய முரண்பட்ட செயல்களை மாறி மாறி நிகழ்த்துவதற்கு அறிவுடைய வேறொரு பொருள் இருந்தாக வேண்டும். அந்தப் பொருள் வேறொன்றால் இயக்கப்படுமானால் அதற்குமேல் வேறொரு பொருள் இருந்தாக வேண்டும். இப்படி ஆராய்ந்து கொண்டே போனால் முடிவில் ஒரு பொருள் வேறொன்றால் இயக்கப்படாததாய், தோற்றம் இறுதி இரண்டிற்கும் உட்பட்டதாய் என்றும் உள்ளதாய் இருத்தல் வேண்டும். அதனைத்தான் அநாதி என்றும் பிறப்பற்ற கடவுள் என்றும் சைவ சித்தாந்தம் வரையறை செய்கிறது. இப்படி கொள்வதால் கடவுளை படைத்தவர் யார்? என்றும் வினா எழ இடமில்லாமல் போகிறது. தோற்றமும் ஈறும் அற்ற ஓர் அநாதிப் பொருள் இருந்தால்தான் தோற்றமும் ஈறும் உள்ள உலகியல் இயக்கம் நடைபெறமுடியும். கடவுள் உண்மையைச் சைவ சித்தாந்தம் இவ்வாறு நிலைநாட்டுகிறது.

## மாயை

உலகில் கல், மண், நீர், நெருப்பு, வான், ஞாயிறு, திங்கள், விண்மீன், மலை கடல் முதலியவற்றை பார்க்கிறோம். இவையனைத்தும் அறிவற்ற சடப் பொருட்களாகும். இச்சடப்பொருட்கள அனைத்தும் அழிந்து போகும் இயல்புடையவை. ஞாயிறு மெல்ல மெல்ல தன் ஆற்றலை இழந்து வருகிறதென்றும் ஒரு காலத்தில் அது அழிந்து போகுமென்றும் விஞ்ஞான நூற்கள் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி சொல்கின்றன. ஞாயிற்றுக்கே இக் கதியென்றால் ஏனைய சடப் பொருட்களை பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. அனைத்தும் அழிந்து போகும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இவை அனைத்தும் அழியுமென்றால் இவை எங்கிருந்து எவ்வாறு தோன்றின? என்னும் வினா எழும். சடப் பொருள்களை பகுத்துக் கொண்டே சென்றால் அவையனைத்தும் முடிவில் ஒரு பேராற்றலாக மாறி நிற்கும். இதனை விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது. அணுக்களை பிளந்தால் அவை ஆற்றலாக மாறும் என்பது இன்றைய விஞ்ஞான கண்டுபிடிப்பாகும். சைவ சித்தாந்தம் இதனை அந்தக் காலத்திலேயே ஆராய்ந்து கூறியுள்ளது. எல்லாச் சடப்பொருள்களின் ஆற்றல்கள் திரண்ட மயம் மாயை என அது சொல்லுகிறது. ஆற்றலாக விளங்கி நிற்கும் மாயையிலிருந்து தான் உலகத்துச் சடப்பொருள்களனைத்தும் தோன்றியுள்ளன என்பது சைவ சித்தாந்த கொள்கையாகும். உலகச் சடப்பொருள்கள் அனைத்திற்கும் மூலப் பொருளாய் விளங்கும் மாயையும் அறிவற்ற சடமாகவே இருக்க வேண்டும். சடத்திலிருந்து தான் சடம் தோன்றும்.

## மாயை அநாதி

இந்த மாயை எவ்வாறு உண்டாயிற்று? எனச் சிந்திக்க வேண்டும். கடவுளே மாயையை உண்டாக் கிறார் என எளிமையாக சொல்லி விடலாம். அப்படி யானால் கடவுள் அதனை எதிலிருந்து உண்டாக் கினார் என்னும் வினா எழும். ஒன்றிலிருந்தும் உண்டாக்கவில்லை: அவர் நினைத்தார்: உண்டாகி விட்டது என்று சொன்னால் அஃது அவரிடமிருந்து தோன்றியது என்பதுதான் பொருள். பேரறிவுப் பொருளாகிய அவரிடமிருந்து அறிவற்ற சடப் பொருளாகிய மாயை தோன்ற முடியாது. எனவே மாயையும் கடவுளைப் போல யாராலும் படைக்கப் படாத அநாதிப் பொருள் என்பது சித்தாந்த கொள்கை யாகும்.

## உலகத் தோற்றம்

மாயை அநாதிப் பொருளாக இருந்தாலும் அதிலிருந்து தோன்றுகின்ற இவ்வுலகம் இறைவனால்

படைக்கப்பட்டது என்று நாம் கூறுகின்றோம். காரணம் மாயை சடப்பொருள் நாம் மேலே விவரித்த படி தோன்றுதல் அழிதல் ஆகிய இருவகை முரண் பட்ட தன்மைகள் மாயைக்குள் இயற்கையாக அமைந்திருக்க முடியாது. ஆகவே இறைவன்தான் மாயையில் இருந்து உலகைத் தோற்றுவித்தும் அழிப்பித்தும் செயற்படுகிறான் என்பது தானே பெறப்படும்.

## உயிரும் உடலும்

உயிர் அறிவுடையதாக விளங்குகிறது. உயிர் பிரிந்து போனால் உடல் அறிவற்ற சடமாக மண்ணோடு மண்ணாய் போகிறது. இதிலிருந்து உடல் வேறு உயிர் வேறு என்பது புலனாகிறது. உடல் சடமாதலால் அஃதும் மாயையிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டதென்பது தெளிவு. இந்த உலகத்துச் சடப் பொருள்களையும் உயிர்கள் சார்ந்துள்ள அனைத்து உடல்களையும் இறைவன் மாயையிலிருந்தே தோற்றுவித்து ஒடுக்குகிறான் என்றும், ஆனால் இவற்றிற்கு மூலமாகிய மாயையை அவன் படைக்க வில்லையென்றும் அஃது இறைவனைப் போல என்றுமுள்ள பொருள் என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

## உலகப் படைப்பு ஏன்

உயிர்கள் உலகைக் கொண்டும் உடலைக் கொண்டும் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. உயிர்கள் அறிவு விளக்கம் பெறுவதற்கு உடலும் உலகமும் அவற்றிற்குத் தேவைப்படுகின்றன. கண், காது, மூக்கு முதலியவை இல்லாவிட்டால் உயிர்கள் ஒன்றையும் அறிய முடியாது. உலகம் இல்லாவிட்டாலும் அவை ஒன்றையும் நுகர முடியாது. ஆகவே உயிர்களின் அறிவு விளக்கத்திற்கு உலகமும் உடலும் தேவைப்படுவதால் இறைவன் கருணை காரணமாக அவற்றை மாயையிலிருந்து படைத்தளித்திருக்கிறான்.

## உயிர்கள் அநாதி

உயிர்கள் எவ்வாறு உண்டாயின? என்பதை இனிச் சிந்திப்போம். உயிர்களை இறைவன் உண்டாக்கினான் என்றால் ஏன் அவற்றை உண்டாக்க வேண்டும்? என்ற வினா எழும். உயிர்களால் அவனுக்கு ஆகும் பயன் யாது மில்லை. அவை தன்னை வணங்க வேண்டும் என்பதற்காகப் படைத்தான் என்று சொன்னால், அவனுக்கும் விருப்பு இருக்கிறது என்றாகி விடும். வேண்டுதல் வேண்டாமை இலானாகி அவன், உயிரைப் படைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. உலகும் உடலும் உயிருக்குத்தேவை என்பதால் அவன் அவற்றைப் படைத்தளிக்கிறான். ஆனால் உயிர் அவனுக்கு தேவை இல்லை. இக்காரணத்தால் உயிரை அவன் படைக்கவில்லை யென்றும் அஃதும் அவனைப் போல என்றும் உள்ள அநாதிப் பொருள் என்றும் சித்தாந்தம் கூறுகிறது. இந்தியாவிலுள்ள எல்லாச் சமயங் களுமே இறைவன் உயிரைப் படைக்க வில்லை என்றே கூறுகின்றன. இந்தியாவுக்கு வெளியே தோன்றிய கிறித்தவம் இசுலாமியம் ஆகிய சமயங்களே இறைவன் உயிரைப் படைத்தான் எனக் கூறுகின்றன. அப்படிச் சொன்னாலும் அவை உயிர் நித்தியம் என்பதை ஒப்புக் கொள்கின்றன. தோன்றிய பொருள் அழியும் தோன்றாத பொருள் தான் நித்தியமாக இருக்கும் எனவே உயிர் யாராலும் படைக்கப்படாத என்றும் உள்ள அநாதி நித்தியப் பொருள் என்பது தான் பொருத்தமுடையது.

## ஆணவம் அநாதி

உலகமும் உடலும் உயிர்களுக்குத் தேவை என்றும் அத் தேவை காரணமாகவே அவற்றை இறைவன் படைத்தருளியிருக்கிறான் என்றும் முன்பு சொன்னோம். என்ன தேவை என்பதை இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டும்.

நமக்கு அறிவு இருக்கிறது. இருப்பினும் தீமை யானவற்றையே பெரும்பாலும் நாம் விரும்பு கிறோம். பிறனில் விழைதல் தீமை என்பது யாவர்க்கும் தெரியும் வெறொருவனின் மனைவி பேரழகியாக இருந்தால் ஒருவர் உள்ளம் அவரை அறியாமலே அவள்பால் செல்லுகிறது.

*"சென்ற விடத்துச் செலவிடா தீதொரீஇ*
*நன்றின் பால் உய்ப்ப தறிவு"*

என்று வள்ளுவர் அறிவுக்கு இலக்கணம் சொன்னார். ஆனால் நம்மறிவோ நம்மை அறியாமலே தீமையின் பாற் செல்வதை காண்கின்றோம். இதற்கு காரணம் என்ன? நம் அறிவை இருள் போன்ற ஒரு பொருள் மறைத்திருக்கிறது. அம்மறைப்பின் காரண மாகவே தீமையின் பால் நம் அறிவு செல்கிறது. இருள் போன்ற இம் மறைப்புப் பொருளை "ஆணவ மலம்" எனச் சித்தாந்தம் பெயரிட்டுள்ளது. வேற்றுச் சமயங்கள் மாயை என்னும் பொருளே நம்மை தீமையின் பால் ஈர்க்கின்றது எனச்சொல்கின்றன. மாயையாலான கண், காது, மூக்கு முதலிய பொறிகள் நம் அறிவை விளக்குகின்றனவே அல்லாமல் மறைக்கவில்லை. இதனாற் தீமையின் பாற் செலுத்துகின்ற பொருள் வேறாகவே இருக்க வேண்டும். மாயையை ஒளிப் பொருள் என்றும் ஆணவமலத்தை இருள் பொருள் என்றும் சித்தாந்தம் கூறுகிறது. இருளோடு கூடிய மாயை மயக்கம் செய்யுமேயன்றித் தனித்தநிலையில் அது மயக்கம் செய்வதில்லை. ஆணவமல உண்மையைச் சைவம் ஒன்றே சொல்லுகிறது. ஏனைச் சமயங்கள் மாயை பற்றி மட்டுமே சொல்லுகின்றன.

உயிரின் அறிவை மறைக்கின்ற ஆணவ மலத்தை இறைவன் உண்டாக்கியிருக்க முடியாது. உண்டாக்கியிருந்தால் அஃது அவன் கருணைக்கிழுக்காகும். இதனால் மாயையைப் போல் கடவுளைப் போல ஆணவ மலமும் யாராலும் உண்டாக்கப்படாத என்றுமுள்ள அநாதி நித்தியப் பொருள் எனச் சித்தாந்தம் சொல்கிறது. அஃது என்றும் உள்ள பொருளாதலால் உயிரின் அறிவை அஃது அநாதியே மறைத்திருக்கிறது. என்பது சித்தாந்த கோட்பாடாகும்.

## ஏன் தடுக்கவில்லை

இறைவன் என்றும் இருக்கிறான்: உயிர் என்றும் இருக்கிறது, ஆணவமலமும் என்றும் இருக்கிறது, உயிர் ஆணவமலத்தை என்றுமே பற்றியிருக்கிறது: இப் பற்றுதலால்தான் அது மலத்தால் மறைப்புண்டு அறிவு இச்சை செயல்களின் இயக்கமன்றி அநாதியே கிடக்கிறது. இந்நிலையை "கேவல நிலை' என்று சித்தாந்தம் சொல்லும். மலத்தை அநாதியே பற்றுதலாகிய உயிரின் செயலை "மூலகன்மம்" என அது சொல்லும். இதனால் மூலகன்மமும் அநாதி என்பது பெறப்படும். உயிர் அநாதியே மலத்தை பற்றுதலை இறைவன் ஏன் தடுக்கவில்லை? என வினாவலாம். உயிர் அறிவுடைப் பொருள். அது தன் அனுபவத்தாலேயே அறிவு விளக்கம் பெற வேண்டும். இறைவன் தன் வல்லமையைக் கொண்டு ஆணவமலத்தை பற்றாதவாறு தடுத்தால் அஃது தன் வல்லமையைக் காட்டியதாக ஆகுமேயன்றி உயிருக்குப் பலன் விளைவித்ததாக ஆகாது. உயிரின் அறிவு எளிய தன்மை உடையது. எதனைச் சாருகிறதோ அதன் மயமாகவே அது விளங்கும். படிப்படியாக விளக்கம் பெறுவதுதான் உயிர் அறிவின் இயல்பாகும். உடனே அதற்கு அறிவு விளக்கத்தை கொடுத்தால் அதனால் அதை தாங்க முடியாது. படிப்படியாக உயிர் அறிவு விளக்கம் பெறுவதற்கு ஆணவமல மறைப்பும் ஒரு வகையில் அதற்கு தேவைப்படுகிறது. எனவே இறைவன் அநாதியே அது மலத்தை பற்றுவதை

தடுக்காமல் துணை நின்றிருக்கின்றான் என அறிதல் வேண்டும்.

## அறிவு விளக்கம்

கேவல நிலையில் உயிர் ஆணவ மலத்தால் மறைப்புண்டு. அறிவிச்சை செயல்களின் இயக்கமின்றி கிடப்பதை அறிந்த இறைவன் படிப்படியே அதனை அம்மலப் பிடிப்பினின்றும் விடுவிக்கக் கருதி ஆணவ மலத்திற்கு மாறாக அமைந்துள்ள மாயையிலிருந்து உலகையும் உடலையும் அதற்குப் படைத்தளிக்கிறான். ஒளிப் பொருளாகிய மாயையின் உதவி பெற்றதும் உயிர்களின் அறிவிச்சை செயல்கள் மெல்ல மெல்ல இயங்கத் துவங்குகின்றன. இவ்வாறு இயங்கத் துவங்கியதும் உடலைக் கொண்டு உலகிடை நல்வினை தீவினைகளை புரியும் ஆற்றலை அவை பெறுகின்றன. இறைவன் நல்வினை தீவினைக்குரிய இன்ப துன்ப அனுபவங்களை உயிர்களுக்கு ஊட்டுகிறான். இவ்வனுபவத்தில் உயிர் படிமுறையே அறிவு விளக்கம் பெற்று ஆணவ மலப் பிடிப்பினின்றும் விடுபடுகின்றது. ஆணவ மலப் பிடிப்பு நீங்கியதும் அவை இறைவனைப் பற்றி மாறாத பேரின்பத்தை நுகர்கின்றன. இந்நிலையே உயிர்களுக்கு முடிந்த நிலையாகும். இதனை "முத்திநிலை" என சித்தாந்தம் பேசுகிறது.

## நல்வினை தீவினை

அநாதியே உயிர் மலத்தை பற்றுதலை மூலகன்மம் என்று சொன்னோம். இறைவன் உயிருக்கு உடலையும் உலகையும் வழங்கியதும் அதன் அறிவு இச்சை செயல்கள் மெல்ல இயங்கத் துவங்குவதால் உலகிடை நின்று உயிர்கள் உடலை வாயிலாக கொண்டு நல்வினை தீவினைகளை புரிகின்றன. இவ்வினைகளைக் காரிய கன்மம் என்றும் ஆதி கன்மம் என்றும் சித்தாந்தம் சொல்லும்.

## முப்பொருள் உண்மை

கடவுள் அநாதி என முன்பு நிறுவினோம். அது போல உயிர்களும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும் மலங்களும் அநாதியென மேலே காட்டியுள்ளோம். கன்மம் என்பது மூலகன்மத்தைக் குறிக்கும். கடவுளுக்கு பதி என்று பெயர். மும்மல பாசத்தால் பிணிக்கப்பட்ட உயிர்களுக்கு பசு என்று பெயர். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களுக்கும் "பாசம்" என்று பெயர். இதனால் பதி பசு பாசம் ஆகிய மூன்றும் அநாதி என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடாகும். இதனையே திருமந்திரத்தில்

*"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப் போல் பசு பாசம் அநாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதியணுகிற் பசு பாசம் நில்லாவே."*

எனக் கூறப்பட்டுள்ளது.

இப்பாடலுக்கு ஹவாய் சுப்பிரமணிய முனி என்னும் அமெரிக்கர் வேதாந்த பரமாகப் பொருள் கூறியிருக்கிறார். அவர் சொல்வது வருமாறு:- 'பதி ஒன்றேதான் உள்ளது பசுவும் பாசமும் அதனின்றும் தோன்றியதால் அநாதி என்று கூறப்பட்டன. இதனைத் தன் இரண்டடிகள் தெளிவுறுத்தும். பதியினை பசுவும் பாசமும் சென்றணுக முடியாது. பசு ஒரு தனிப் பொருளாக இருந்தால் பதியினை அஃது அடையும் என்று சொல்லலாம். பசுவும் பாசமும் நில்லா என ஈற்றடியில் சொல்வதால் பதி மட்டும் தான் முத்தியில் இருக்கும் பசுவும் பாசமும் இருக்க மாட்டா. பதியிலிருந்து தோன்றிய அவை பதிக்குள்ளேயே ஒடுங்கி ஒன்றாய் போய்விடும். ஆகவே முப்பொருளும் அநாதி என்பதற்கு இப்பாடல் மேற்கோள் ஆகாது. மூன்றும் அநாதி என்றால் என்றும் இருக்க வேண்டும்.

'முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள்" என்னும் உண்மை விளக்கப் பாடல் முத்தியில் மூன்று பொருளும் உண்டு எனச் சொல்லுகிறது. அது மெய்கண்டார் கண்ட சைவ சித்தாந்த கோட்பாடாகும். திருமூலர் மெய்கண்டாருக்கு முற்பட்டவர். அவர் மெய்கண்ட சித்தாந்தத்தை சொல்லவில்லை. முடிவில் பதி ஒன்றே உளது என்னும் கருத்தில் தான் பதியணுகிற் பசு பாசம் நில்லாவே" எனக் கூறியிருக்கிறார்.

மேற்கண்ட பொருளை அவர் எழுதி அச்சிட்டு தமிழ்நாட்டிலுள்ள சைவ சித்தாந்த சபைகளுக்கும் சைவ ஆதீனங்கட்கும் அனுப்பியிருக்கிறார். திருமுறைகள் சைவ சித்தாந்தத்தையே சொல்லு கின்றன என்பது தெளிவாக இருந்தும் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் சங்கர வேதாந்தக் கருத்தைச் சுட்டுவதாக அவர் கூறுகிறார். அவர் கூற்றுப் பொருந்தாது என்பது திருமந்திரப் பாடலை நன்கு ஆராய்ந்து பார்த்தால் புலனாகும்.

மேற்கண்ட திருமந்திர பாடலில் "பதியினைப் போல் பசு பாசம் அநாதி" என வருகிறது. கடவுளைப் போல பசுவும் பாசமும் அநாதி என்பது இதன் பொருள். கடவுள் எதிலிருந்தும் தோன்றாத அநாதி ஆவார். அவரைப் போலவே பசுவும் பாசமும் அநாதி என்றால் அவையும் எதிலிருந்தும் தோன்றாதனவாகவே இருத்தல் வேண்டும். பதியிலிருந்து பசுவும் பாசமும் தோன்றின என்னும் சுப்பிரமணி முனி கருத்து இதனால் அடிபட்டுப் போகிறது. கடவுள் என்றுமுள்ளவர். அவரைப் போலவேபசுவும்பாசமும்என்றுமுள்ளவையாகவே இருக்க வேண்டும். மூன்றாமடியில் "பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்" என வருவதற்கு பதியினைப் பசுவின் பாசங்கள் சென்றணுக மாட்டா அதாவது பாதிக்க மாட்டா எனக் கொள்ள வேண்டும். "பசுவும் பாசமும்" என உம்மைத் தொகையாகக் கொள்ளாமல் 'பசுவின் பாசம்" என வேற்றுமைத் தொகையாகக் கொள்ளவேண்டும். பாசம் ஈண்டு பால்பஃகா அஃறிணைப் பெயரா கையால் "பாசங்கள்" எனப் பன்மை குறித்து நிற்கிறது. ஈற்றடியில் "பதியணுகில் பசு பாசம் நில்லாவே" என்பதற்கு பதி தரிசனம் கிட்டும் போது பசுவின் பாசங்கள் பசுவைப் பிணிக்க முடியாமல் போய்விடும் என்பது பொருளாகும். இப்படிப் பொருள் கொள்ளாமல் பசு பாசங்கள் முத்தியில் இருக்க மாட்டா எனக் கொண்டால் "பதியினைப் போல் பசு பாசம் அநாதி" என்ற அடி இடிக்கும். பாசங்கள் முத்தியில் பசுவைப் பிணிக்க முடியாமல் போகுமேயன்றி இல்லாமல் போகமாட்டா. சுப்பிர மணிய முனி "பதியினைப் போல்" என வரும் தொடரைச் சிந்திக்காமல் பொருள் எழுதியிருப்பதால் அவர் கருத்துப் பொருந்தாது.

## பதி பசு பாசம்

சைவ சித்தாந்தம் பதி பசு பாசமென முப்பொரு ளுண்மைகூறுகிறது. இதுசைவசித்தாந்தத்திற்குரிய குறியீட்டுத் தொடராகும். திருமுறைகளில் பசு என்றோ பாசம் என்றோ வந்தால் அது சைவ சித்தாந்தத்தைத் குறிக்கிறது என்பது தெளிவு.

## திருவாசகத்தில் மும்மலம்

மணிவாசகப் பெருமான் கீர்த்தித் திருவகவலில்

*"மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்*
*நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்*
*அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்*
*கழுக்கடை தன்னைக் கைக் கொண் டருளியு*
***மூல மாகிய மும்மல மறுக்கும்***
*தூய மேனிச் சுடர்விடு சோதி"*

எனக் கூறியருளியிருக்கிறார்.

இங்கே மூலமாகிய மும்மலம் என ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்றையும் அடிகள்

குறிப்பிடுகிறார். இவை மூன்றும் மூலம் என்பதால் "இவை வேறு எதிலிருந்தும் தோன்றவில்லை அநாதியாக இருக்கின்றன" என்னும் உண்மை புலனாகிறது. மும்மலம் என்பது சைவ சாத்திரங்களில் வரும் குறியீட்டுத் தொடராகும்.

ஞானசம்பந்தப் பெருமான் திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில்

*"விளையாததொர் பரிசில் வரு பசு பாசவே*
*தனையொண்*
*தளையாயின தவிரவ்வரு டலைவன்னது சார்பாம்*
*களையார்தரு கதிராயிர முடையவ் வவனோடு*
*முளைமாமதி தவழும் உயர் மதுகுன்றடை வோமே"*

எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இதில் 'விளையாததோர் பரிசில்" என்றால் எதிலிருந்தும் தோன்றாத அநாதியாகவுள்ள என்று பொருள். பசு - ஆன்மா, பாசம் - ஆணவமலம், வேதனை - இன்ப துன்ப வேதனைகளைப் பயக்கும் கன்ம மலம். ஒண்தளை - ஒளிப் பொருளாகிய மாயா மலம், இங்கே சம்பந்தர் பசுவாகிய ஆன்மாவையும் பாசமாகிய ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறார். மும்மலங்களையும் அவர் ஈண்டு சொல்லியிருந்தாலும் அவர் பாடல்கள் எதிலும் "மும்மலங்கள்" என எண்ணிக்கை சுட்டிய தொடர் வரவில்லை.

அப்பர் சுவாமிகள் திருப்பயற்றூர் திருப்பதிகத்தில்

*"புலன்களைப் போகநீக்கிப் புந்தியை யொருங்க*
*வைத்து*
*இலங்களைப் போக நின்று விரண்டையு*
*நீக்கியொன்றாய்*
***மலங்களை மாற்றவல்லார் மனத்தினுட்***
***போகமாக்கிச்***
*சினங்களைக் களைவர் போலும் திருப்பயற்*
*றூரனாரே"*

எனக் கூறியருளியிருக்கிறார். இதில் மலங்கள் எனச் சுட்டுகிறாரேயல்லாமல் "மும்மலம்" எனச் சுட்டவில்லை. அப்பர் பாடல் எதிலும் 'மும்மலம்" என்னும் எண்ணிக்கை தொடர் வரவில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருச்சுழியல் பதிகத்தில்

*"**மலந்தாங்கிய** பாசப்பிறப் பறுப்பீர்முறைக்*
*கங்கைச்*
*சலந் தாங்கிய முடியான் அமர்ந் திடமாந்திருச்*
*சுழியல்*
*நிலந்தாங்கிய மலராற் கொழும் புகையால்*
*நினைந்தேத்தும்*
*தலந்தாங்கிய புகழாம்மிரு தவமாம் சது ராமே"*

எனப் பாடியருளியிருக்கிறார். இப் பாட்டில் "மலந்தாங்கிய பாசப் பிறப்பு" எனக் கூறுகின்றா ரேயன்றி "மும்மலம்" எனக் குறிக்கவில்லை அவரே வேறொரு இடத்தில்,

*"மலமெலாம் அறும் இம்மையே மறுமைக்கும்*
*வலிவினை சார்கிலாச்*
*சலமெலாம் ஒழிநெஞ்சமே"*

எனக் கூறுகிறார்.

இங்கு "மலமெலாம்" எனப் பன்மையாகச் சொல்லுகிறாரேயன்றி "மும்மலம்" என எண்ணிக்கை குறிக்கவில்லை. மூவர் தேவாரத்திலும் இவ்வாறு எண்ணிக்கை சுட்டாமல் வந்த "மலம்" என்ற சொல் திருவாசகத்தில் மட்டுமே "மும்மலம்" என எண்ணிக்கை சுட்டுகிறது. சைவ சாத்திரங்களில் "மும்மலம்" என்னும் சொல் பெரிதும் பயிலப் படுவதால் திருவாசகத்தில் அவ்வாறு வருவது சிந்திக்கத்தக்கது. மெய்கண்டார் மாணிக்க வாசகருக்குப் பின்னே வந்தவர். அவருக்கு முன்னே இருந்த மணிவாசகர் "மும்மலம்" என எண்ணிக்கை சுட்டுவது கொண்டு அவர் காலத்தில் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றாவிட்டாலும் சைவ சித்தாந்த கருத்துக்கள் வழக்கத்தில் பரவியிருந்தன

என்பது புலனாகிறது. ஆகமங்களில் "மும்மலம்" எனும் தொடர் வருகிறது. அதனை மணிவாசகர் தமிழில் சுட்டியிருக்கிறார் என்று கொண்டாலும் மூவர் காலத்திலும் பார்க்க மணிவாசகர் காலத்தில் சைவ சித்தாந்த அறிவு மேலோங்கியிருந்ததென்றே கொள்ள வேண்டியுள்ளது. மூவர் காலத்தில் சுருங்கிய அளவில் பரவியிருந்த சித்தாந்த கருத்துக்கள் மணிவாசகர் காலத்தில் மெலோங்கி யிருந்ததை நோக்கும் போது "தத்துவவாதம்" மணிவாசகர் காலத்தில் அதிகமாக இருந்ததென்றே முடிவு கட்ட வேண்டுவதாகிறது. இது கொண்டு மணிவாசகர் மூவருக்கும் பின்னே வந்தவர் என பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

மும்மலம் என்னும் சைவ சித்தாந்த குறியீட்டைப் பல இடங்களில் மணிவாசகர் கையாளுகிறார்.

திருத் தசாங்கத்தில்

*"கொற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்*
*பெருந்துறைக் கோன்*
*மாற்றாரை வெல்லும் படைபகரா - யேற்றா*
*ரழுக்கடையா நெஞ்சுருக **மும்மலங்கள்** பாயும்*
*கழுக்கடைகாண் கைக்கொள் படை"*

எனக் கூறுகிறார்.

சிவபெருமான் கையிலுள்ள திரிசூலம் என்னும் ஆயுதம் மும்மலங்களையும் நீக்குவதற்கறிகுறியாக விளங்குகிறது என்பது இதன் பொருள்.

பண்டாய நான்மறையில்,

*"உள்ள **மலமூன்று** மாவுகு பெருந்தேன்*
*வெள்ளத் தரும்பரியின் மேல்வந்த -வள்ளன்*
*மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்*
*வாழ்த்தக்*
*கருவும் கெடும்பிறவிக் காடு"*

என நவில்கிறார்.

"உள்ள மல மூன்றும்" என்பதால் மலங்கள் மூன்றும் என்றும் உள்ள அநாதிப் பொருள்கள் என்பது பெறப்படுகிறது.

இறுதியாகத் திருவாசகத்திலுள்ள அச்சோப் பதிகத்தில் கடைசிப் பாட்டு பின்வருமாறு முடிகிறது.:-

*"செம்மை நலமறியாத சிதடரொடும் திரிவேனை*
***மும்மைமல மறுவித்து** முதலாய முதல்வன்றான்*
*நன்மையுமோர் பொருளாக்கிநாய்*
*சிவிகையேற்றுவித்த*
*அம்மையெனக் கருளியவாறார் பெறுவாரச்*
*சோவே"*

முத்தி நிலையில் மும்மலப் பிணிப்பு அறுபடும் என்பதை இப் பாடல் வாயிலாக அடிகளார் நமக்கு உணர்த்துகிறார்.

## ஐம்மலம்

சித்தாந்த சாத்திரங்களில் மும்மலங்களோடு மாயேயம், திரோதானம் ஆகிய இரண்டையும் கூட்டி ஐம்மலங்கள் எனவும் சொல்லப்பட்டுள்ளது. சிவஞான சித்தியாரில் வருகின்ற பின்வரும் பாடல்கள் இதனை உணர்த்தும்.

*"மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு*
*உமி போல்*
*மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை*
*மறைத்து நின்று*
*பொய்ம்மை செய் போகபந்த போத்திருத் துவங்கள்*
*பண்ணும்*
*இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன்*
*இன்னும்"*
*"மாயையின் காரியத்தை மாயேய மலம தென்றும்*
*ஏயுமும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற*
*ஏவும்*

*தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய*
*தென்றும்*
*ஆய்வம் இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை*
*அணைந்து நிற்கும்."*

சித்தாந்தத்தில் சுத்தமாயை அசுத்த மாயை பிரகிருதி மாயை என மூன்றாக மாயையை வகுத்து சொல்வது வழக்கம். மாயை ஒன்றேயாயினும் ஆணவமல வியாபகத்தின் வன்மை மென்மை பற்றி அஃது இவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது. மாயையின் காரியங்கள் என்பது மாயையிலிருந்து தோன்றிய பொருட்களை குறிக்கும். சுத்த மாயையிலிருந்து தோன்றிய பொருட்களை வைத்தவம் எனச் சொல்லுவர். அசுத்த மாயையில் இருந்து தோன்றிய பொருட்களை மாயேயம் எனச் சொல்வர். பிரகிருதி மாயையிலிருந்து தோன்றிய பொருட்களைப் பிராகிருதம் எனச் சொல்வர். அசுத்த மாயையின் காரியத்திலிருந்தே பிரகிருதி மாயை தோன்றுவதால் அசுத்த மாயாப் பொருட்களையும் பிரகிருதி மாயாப் பொருட்களையும் சேர்த்து மாயேயம் எனச் சொல்வதுமுண்டு. உலகமும் உடலும் மாயேயம் ஆகும். மும்மலங்களிலுள்ள மாயை மாயேயமாக மாறியே நமக்குப் பயன்படுகிறது. இதன் காரணமாக மும்மலங்களோடு மாயேயத்தையும் ஒரு மலமாக சாத்திரம் சொல்லுகிறது.

இறைவன் முத்தி நிலையில் நமக்கு நேரிடை யாக அருள் செய்வான். அப்பொழுது அவன் சக்தி யைத் திருவருள் சக்தி என்று கூறுவர். உலகியலில் நம்மை ஈடுபடுத்துவதற்கும் இறைவனின் திருவருள் சக்தி துணை செய்யும். அப்பொழுது அதனை திருவருள் சக்தி என சொல்லாமல் திரோதான சக்தி என சொல்வதும் வழக்கம். மும்மலங்களையும் பாகப் படுத்துவதற்காக இறைவன் மறைமுகமாக நின்று துணைசெய்கின்றான். மலங்களை பாகப் படுத்துகின்ற இச்சக்தியையும் மலமாக உபசரித்துச் சொல்வது மரபு.

இந்த அடிப்படையில் சித்தாந்த சாத்திரங்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோ தானம் என மலங்களை ஐந்தாக எண்ணிக்கை இட்டுச் சொல்லும். இந்த ஐம்மலக் குறியீடு சித்தாந்த சாத்திரத்தை தவிர வேறு நூற்களில் பெரும்பாலும் காணப்படவில்லை.

திருமுறைகளுள் மூவர் தேவாரத்தில் மும்மலக் குறியீடும் வரவில்லை. மூவர் தேவாரங்களும் ஏழு திருமுறைகளைக் கொண்டதாகும். எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தில் மும்மலக் குறியீடு வருவதை முன்பு கண்டோம். ஒன்பதாந் திருமுறை யிலும் பதினோராந் திருமுறையிலும் மும்மலக் குறியீடோ ஐம்மலக் குறியீடோ வரவில்லை. பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தில்

*"மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்.*
*அம்மெய்ச் சகலத்தர் தேவர் சுரர் நரர்*
*மெய்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்*
*தம்முறை யோனிபுக் கார்க்கும் சகலரே"*

என "மும்மலக் குறியீடு" வந்துள்ளது. திருமந்திரம் திருவாசகத்திற்கு முற்பட்டதாகுமென அறிஞர்கள் கருதுகின்றனர். திருமுறைகளிலேயே திருமந்திரம் ஒன்றில் தான் சித்தாந்த குறியீடுகள் அனைத்தும் வருகின்றன.

மணிவாசகருக்குப் பின்னர் வந்த திரு முறைகளில் பெரிய புராணத்தில் மட்டும்தான் மும்மலக் குறியீடு வருகிறது. கண்ணப்ப நாயனார் புராணத்தில் சேக்கிழார்

*"முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்*
*நோக்கால்*
*இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்*
*யாக்கைத்*
*தன்பரிசும் வினை இரண்டும் **சாருமலமூன்றுமற***
*அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர்கருத்தின்*
*அளவினரோ"*

எனக் கூறுகிறார். சேக்கிழார் மணிவாசகருக்கு பிற்பட்டவர். அவர் திருவாசகத்தைப் பின் பற்றியே இவ்வாறு சொல்லியிருக்கிறார் எனக் கொள்ள வேண்டும்.

ஐம்மலக் குறியீடு இன்னும் அதிக சிந்தனைக் குரியது மணிவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில்

*"குலங்களைந்தாய் களைந்தாயென்னைக்குற்றம்*
*கொற்றச் சிலையாம்*
*விலங்கலெந்தாய் விட்டிடுதி கண்டாய் பொன்னின்*
*மின்னு கொன்றை*
*யலங்கலந்தாமரை மேனியப்பா யொப்பில்லாதவனே*
***மலங்களைந்தாற்*** *சுழல்வன் தயிரிற்பொருமத்துறவே"*

என "ஐம்மலக்" குறியீட்டைக் கையாண்டி ருக்கிறார். திருமந்திரம் தவிர பெரிய புராணம் உட்பட்ட எந்தத் திருமுறையிலும் ஐம்மலக் குறியீடு வரவேயில்லை.

திருமூலர்

*" அனாதி பசுவியாத்தி யாகுமிவனை*
*அனாதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி*
*அனாதியிற் கேவல மச்சக லத்திட்டு*
*அனாதிபிறப்பறச் சுத்தத்து யாகுமோ"*

எனத் திருமந்திரத்தில் திருமூலர் ஐந்துமலங்கள் பற்றிப் பேசுகிறார். திருமந்திரம் சாத்திரமும் தோத்திரமுமாக அமைந்த நூலாதலால் அதன் கண் ஐந்து மலம் பற்றிய குறிப்பு வருவது இயல்பே யாகும். ஆனால் தோத்திரமாக அமைந்த ஏனைத் திருமுறைகள் எதிலும் வராமல் திருவாசகத்தில் மட்டும் ஐம்மலக் குறிப்பு வருவது சிந்திக்கத்தக்கது.

## தத்துவவாதம்

சித்தாந்தம் அநாதியாதலால் அஃது எக் காலத்திலும் உண்டு என்பதில் ஐயமில்லை. சைவம் உணர்த்தும் பக்தி நெறியில் உண்டாகும் ஐயப்பாடுகளை நீக்கி அதனை உறுதிப்படுத்தவே சித்தாந்தம் தோன்றியிருக்கிறது. ஞானசம்பந்தர் அப்பர் காலத்தில் வேற்றுச் சமயங்கள் சைவத்தை தாக்கினவேயல்லாமல் வேற்றுச் சமய தத்துவ வாதங்கள் அளவை முறை கொண்டு அதனை தாக்கவில்லை. இதனால் ஞான சம்பந்தர் உள்ளிட்ட அருளாளர்கள் ஓரளவே சித்தாந்தம் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். ஆனால் மணி வாசகர் காலத்தில் சமய தத்துவ வாதங்கள் குறிப்பாக வியாச முனிவர் செய்த பிரம்ம சூத்திர வாதமும், மீமாஞ்சக வாதமும் நாத்திக வாதமும் அதிகமாகத் தமிழகத்தில் புகுந்து சைவப்பத்தி நெறியை அலைக்கழித்திருக்கின்றன. இதனை மணிவாசகர் பாடியருளிய போற்றித் திருவகவல் வாயிலாக அறியமுடிகிறது.

*"ஆத்த மானார் அயலவர் கூடி*
*நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்*
*சுற்ற மென்னுந் தொல் பசுக் குழாங்கள்*
*பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்*
*விரத மேபர மாகவே தியரும்*
*சரத மாகவே சாத்திரம் காட்டினர்*
*சமய வாதிகள் தத்தம் மதங்களே*
*அமைவ தாக அரற்றி மலைந்தனர்*
*மிண்டிய மாயா வாத மென்னும்*
*சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்*
*துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்*
*கலாபே தத்த கடுவிட மெய்தி*
*அதிற் பெரு மாயை யென்னைப்பல சூழவும்"*

இங்கே மணிவாசகர் குறிப்பிடுகிற மீமாஞ் சகமும். மாயாவாதமும் வேதத்தை அடிப் படையாக கொண்டவையாகும். தர்க்கத்தின் அடிப்படையில் அக்காலத்தில் அவற்றை நிலை நாட்டப் பலர் முயன்றிருக்கின்றனர். நாத்திகரும் அது போலவே தர்க்கத்தை துணையாகப் பற்றி

வாதித்திருக்கின்றனர் இந்நிலையில் சைவமும் அளவை நூல் முறை பிறழாது வாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சித்தாந்த குறியீட்டுச் சொற்களை கையாண்டு தத்துவவாதம் பேசும் சமயிகளை மறுத்திருக்கின்றனர். இது மணிவாசகர் காலத்தில் மிகுதியாக இருந்ததாலேயே சித்தாந்த குறியீடுகளை அவர் இயல்பாகவே தோத்திரப் பாடல்களில் கையாண்டிருக்கிறார்.

### பசு பாசம்

பாசத்தால் பிணிப்புண்ட உயிரைப் பசு என்றும் அப் பசுக்களைப் பிணிக்கும் மலங்களைப் பாசம் என்றும் சைவசித்தாந்தம் பெயரிட்டுள்ளதை முன்பு கூறினோம். பசுபாசம் என்னும் சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களை மணிவாசகர் பல இடங்களில் கையாளுகிறார். உதாரணமாக கண்டப்பத்தில் பின் வருமாறு பாடுகிறார்.

*"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை*
*வல்லாளனாய் வந்து வனப்பெய்திருக்கும் வண்ணம்*
*பல்லோரும் காணவென்றன் **பசுபாசமறுத்தானை***
*எல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே"*

### மூலகன்மம்

சைவசித்தாந்த சாத்திரங்களில் மூலகன்மம் பற்றி இரண்டோர் இடங்களில் மட்டுமே பேசப் பட்டுள்ளது. அதுவும் தெளிவாக விளக்கப் படாமல் குறிப்பாகவே சுட்டப்பட்டுள்ளது. அது பற்றிச் சைவ சித்தாந்த அறிஞர்கள் தம்தம் கருத்திற்கேற்ப விளக்கம் சொல்லி வருகின்றனர். சிவஞானசுவாமிகள் தாம் எழுதிய சிவஞானபோத சிற்றுரையில் "அனாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய் எனச் சொல்வதால், அனாதியே உயிர் மலத்தைப் பற்றிய செயலை மூலகன்மம் என கொள்வதே பொருத்தமாகும். இம் மூலகன்மம் பற்றிய குறிப்பு மணிவாசகத்தில் பேசப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றப் பதிகத்தில்

*"இயக்கிமார் அறுபத்து நால்வரை*
*யெண்குணம் செய்த ஈசனே*
*மயக்கமாயதோர் **மும்மலப்பழ***
***வல்வினைக்கு**ளழுந்தவுந்*
*துயக்கறுத் தெனையாண்டு கொண்டு நின்*
*தூய்மலர்க்கழல் தந்தெனைக்*
*கயக்க வைத்தடியார் முனேவந்து*
*காட்டினார் கழுக்குன்றிலே"*

என வருவது ஆராயத்தக்கது. இப்பாட்டில் மணிவாசகர் மும்மலப்பழவல்வினை என்று கூறு கிறார். மும்மலம் ஆணவம் கன்மம் மாயையைக் குறிக்கும். **பழவல்வினை** என்பது காரிய கன்மத்தை சொல்லி வல்வினை என மீண்டும் கன்மத்தை சொல்வதால் அவை வெவ்வேறு கன்மத்தை குறிக்கும் என்பது புலனாகும். ஆணவம்போல மூலகன்மமும் அனாதியாதலால் மும்மலத்துக்குள் சுட்டப்படும் கன்மம் மூலகன்மத்தையே குறிக்கும். மும் மலங்களால் பின்னர் உண்டாகும் வினை ஆதிகன்மம் என்றும் காரிய கன்மம் என்றும் சொல்லப்படும். காரியகன்மம் பின்னர் தோன்று வதால் மூலகன்மமாகிய கன்மத்தை முன்னர் கூறி அடுத்து வல்வினையாகிய காரிய கன்மத்தை சுட்டியிருக்கிறார். மணிவாசகரை பின் பற்றியே சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்

*"இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்*
*வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட*
*அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்*
*ஒரு கல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ"*

எனப் பாடியருளியிருக்கிறார். ஈண்டு இருவினை என்பது காரிய கன்மத்தையும் மும்

மலத்துக்குள் வரும் கன்மம் மூலகன்மத்தையும் சுட்டுகின்றன.

## இருவினை ஒப்பு

இறைவன் குருநாதனாக வருவதற்கு முன் உயிரினிடத்தே மலபரிபாகமும் இருவினை ஒப்பும் உண்டாகும் எனச் சைவ சாத்திரங்கள் சொல் கின்றன. நல்வினையின் பயனாகிய இன்பத்தையும் தீவினையின் பயனாகிய துன்பத்தையும் சமமாகவே கருதி விருப்பு வெறுப்பற்ற நிலையில் ஒழுகுவது இருவினைக்கு ஒப்பாகும்.

*"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்"*

என்னும் சேக்கிழார் வாக்கு இதனைத் தெளிவுபடுத்தும் மணிவாசகர் திருக்கழுக்குன்றப் பதிகத்தில்,

*"பிணக்கிலாத பெருந்துறைப் பெரு*
*மானுன்னாமங்கள் பேசுவார்க்*
*கிணக்கிலாதோர் இன்பமேவருந்*
*துன்பமே துடைத் தெம்பிரா*
*னுணக்கிலாததோர் வித்துமேல் விளை*
*யாம**லென்வினை யொத்தபின்***
*கணக்கிலாத் திருக் கோல நீ வந்து*
*காட்டினாய் கழுக்குன்றிலே"*

எனப் பாடியருளியிருக்கிறார். இப்பாடலில் 'என் வினை ஒத்தபின் என்பது இருவினை ஒப்பைச் சுட்டும். பிரார்த்தவினை நுகர்ச்சிக் கண்வரும் இருவினை ஒப்பை இது சுட்டவில்லை எனச் சொல்வோரும் உண்டு. அவ்வாறு கூறுவோரும் ஆகாமிய இருவினை ஒப்பு என இதனைச் சொல்வதால் எவ்வாறிருப்பினும் இஃது இருவினை ஒப்பைச் சுட்டுகிறதென்பது தேற்றம்.

## மரம் முந்தியா? வித்து முந்தியா?

சைவசித்தாந்தத்தில் மிக இடர்ப்பாடான ஓர் இடம் உண்டு. நமக்கு இந்த உடல் முன்னை வினையின் காரணமாக அமைகிறது. முன்னை வினை அப்போது நமக்கு இருந்த உடலைக் கொண்டு செய்யப்படுவதாகும். உடலால் வினையும், வினையால் உடலும் வரும். அநாதி கேவலத்தில் ஆன்மாவுக்கு எந்த உடலும் இல்லை. முதன் முதல் ஆன்மாவை உட் பொருந்திய தென்றால் வினை இல்லாமல் எப்படி இவ்வுடலை இறைவன் ஆன்மாவிற்கு அளித்திருப்பான் என்னும் வினா எழும். வினை காரணமாக உடலை அளித்தான் என்றால் அநாதி கேவலத்தில் ஆன்மாவிற்கு வினை செய்வதற்குரிய உடல் இல்லையே? என்னும் வினா எழும். மூல கன்மம் பற்றிய குறிப்பை இவ்விடத்தில் கொண்டு வரக் கூடாது. அஃது எவ்வித உடலின்றிச் செய்யப்படுவதாகும். ஆதி கன்மம் உடல் வாயிலாகச் செய்யப்படுவது. உடலன்றி வினைவராததலால் வினை முதலில் ஆன்மாவை பொருந்தியதா, உடல் முதலில் அதனைப் பொருந்தியதா? என்னும் வினாவிற்கு சிவஞானசித்தியாரும், சிவப்பிரகாசமும் நிறை வான விடையை அளிக்கவில்லை. சிவஞான சித்தியாரில்

*"உடற் செயல் கன்மம் இந்த உடல் வந்தவாறே தென்னில்*
*விடப்படும் முன்னுடம்பின் வினையிந்த உடல்விளைக்கும்*
*தொடர்ச்சியாய் ஒன்றுக்கொன்று தொன்று தொட்ட நாதிவித்தின்*
*இடத்தினின் மரம்மரத்தின் வித்தும் வந்தியையுமா போல்"*

என அருணந்தி சிவம் கூறியிருக்கிறார். இதற்குச் சிவஞான சுவாமிகள் எழுதிய உரை வருமாறு: அங்ஙனம் உடலும் வினையும் வித்தும் மரமும் போலத் தம்முட் காரண காரியமாய்த்

தொன்று தொட்டுப் பிரவாக அநாதியாய் வருதலின் அவற்றிற்குத் தம்முள் முற்பிற்பாடு முடியாது. உடல் முந்தியா வினை முந்தியா என்னும் வினா மரம் முந்தியா வித்து முந்தியா என்பது போல விடை சொல்ல முடியாத அறா வழக்காய் முடியுமாதலால் இவற்றிற்கு முற்பிற்பாடு கூற முடியாது என்பது சிவஞான சித்தியார் கருத்தாகும்.

சிவப்பிரகாசத்தில்

*"மாயைமுத லெனவினையின் பான்மைமுத லெனவே*
*மன்னுபனை விதை மரபின் மயங்கும் மலம் சுத்தற்(கு)*
*ஏயுநெறி யென்சொல் அதன் இயல்பாயின் முத்தி*
*என்பதென்மற் றிவைநிற்க இருங்கலாதி உணர்வாய்*
*மேயபின் நற் றன்னுருவம் விளங்காமை விளக்கும்*
*மிகும் உலகந் தனில் என்னில் இவைவிடுங்கால் உணர்வுகள்*
*தோயு நெறி இலாதான் அறியாமை யெனநீ*
*சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே"*

என உமாபதிசிவம் அருளிச் செய்து இருக்கிறார்.

உடல் மாயாகாரியமாதலால் மாயை முத்தியா? வினை முத்தியா? என்னும் வினாவை உமாபதி சிவம் எழுப்பி அது பனை முந்தியா? அதன் வித்து முந்தியா? என்பது போல அறாவழக்காய் முடியுமென்றும் ஆணவமலத் தொடக்கு ஆன்மாவுக்கு அநாதியாய் இருப்பதால், மாயையும் கன்மமும் அதனைப் பொருந்து மென்றும் அவற்றுக்குள் எது முந்தி? என்னும் வினாவை எழுப்பக் கூடாதென்றும் இப்பாடலில் சொல்லியிருக்கிறார்.

அருணந்தி சிவமும் உமாபதிசிவமும் இக்கேள்விக்கு விடையில்லையென சொல்வது போலவே மரம் முந்தியா? வித்து முந்தியா? கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்பன போன்ற வினாக்களுக்கு விடையில்லை யென்றே அனைவரும் சொல்லி வருகின்றனர். சங்க நூற்களிலிருந்து இன்று தோன்றிய நூற்கள் வரை எந்தத் தமிழ் நூலிலும் இதற்கு விடை சொல்லப்பட வில்லை. ஆனால் மணிவாசகர் திருவாசகத்தில் இதற்கு விடை சொல்கிறார். திருவாசகம் மட்டுமே இதற்கு விடை அளித்திருப்பதை நோக்கும் போது நம் உள்ளம் பேருவகை எய்துகிறது. அவ்விடை சித்தாந்தத்திற்கு மட்டும் விடையாகாமல் விஞ்ஞான நூற்கட்கும் விடையாக அமைந்திருக்கிறது.

மணிவாசகர் திருச்சதகத்தில்

*"விச்சதின்றியே விளைவு செய்குவாய்*
*விண்ணுமண்ணக முழுவதும் யாவையுமாய்*
*வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்*
*புலையனேனை உன் கோயில் வாயிலில்*
*பிச்சனாக்கினாய் பெரியவன்பருக்*
*குரியனாக்கினாய் தாம் வளர்த்ததோர்*
*நச்ச மாமர மாயினுங் கொலார்*
*நானுமங்ஙனே யுடையநாதனே"*

என அருளிச் செய்திருக்கிறார்.

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்றால், வித்து இல்லாமலே மரத்தை உண்டாக்கு வாய் என்று பொருள். "முதன் முதலில் இறைவன் மரத்தைத் தான் உண்டாக்கினான். அதன்பின் மரமும் வித்து மாகிய முறைமை தோன்றிற்று" என்பது மணிவாசகர் கருத்தாகும். மரம் முந்தியா வித்து முந்தியா என்னும் வினாவிற்கு மரமே முந்தியது என்னும் விடையை மணிவாசகர் தருகிறார். இறைவன் திருவருள் உள்நின்று உணர்த்த இவ்விடையை அவர் தருவதால் மரமே முந்தி என்னும் விடை சரியானதென்றே நாம் கொள்ள வேண்டும். வித்து இல்லாமல் மரம்

எப்படி வந்ததென்று வினவினால் "இறைவன் தன் ஆற்றலால் முதன் முதல் வித்து இல்லாமலே மரத்தை உண்டாக்கினான் பின்பு தான் மரமும் வித்துமாகிய முறைமையை ஏற்படுத்தி இருக்கிறான்" என அடிகளார் சொல்கிறார். அவர் வாக்கு அருள் வாக்காதலால் நாம் அதனை ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம். இருப்பினும் இதனை நிலைநாட்ட உலகியல் சான்று யாதேனும் உண்டா! என நம் உள்மனம் கேட்கவே செய்கிறது. அதற்கும் நாம் ஓரளவு விடை காண முடியும்.

வெற்றிலைச் செடியில் எந்த விதையு மில்லை: விதை இல்லாமலே அதன் கொடியை நாம் நட்டோமானால் அது தளைத்து வளர்கிறது. இது போல் விதையில்லாத பல செடிகள் உண்டு. ஆனால் செடியோ மரமோ இல்லாமல் தோன்றிய விதை எங்கும் காணப்படவில்லை. செடியில்லாத விதையை நாம் பார்க்க வில்லையாதலால், செடியே முந்தினதாக இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இது கொண்டு கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்னும் வினாவிற்கும் கோழியே முந்தியது என்றே விடையுறுத்தல் வேண்டும்.

இவ்வாறு உலகியல் விடை சொன்ன மணிவாசகர் இதனுள்ளே நுட்பமாகச் சித்தாந்த விடையும் வைத்திருக்கிறார். உடல் முந்தியா? கன்மம் முந்தியா? எனக் கேட்டால் உடலே முந்தி என விடை கூறல் வேண்டும். உடல் மாயா காரியம் ஆதலால் மாயை முந்தியா வினை முந்தியா என்னும் வினாவிற்கு மாயை முந்தி என்பதே விடையாகும்.

## அநாதி கேவலம்

உயிர்கள் அநாதி கேவலத்தில் அறிவிச்சை செயல்களின் இயக்கமின்றி ஆணவ மலத்தால் மறைப்புண்டு கிடக்கின்றன. அப்பொழுது இறைவன் கருணையே காரணமாக உயிர்களுக்கு மாயையில் இருந்து சூக்கும உடலைப் படைத்து வழங்குகிறான். இந்தச் சூக்கும உடம்பு எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரியாகவே இறைவனால் வழங்கப்படுகிறது. இதில் ஏற்றத் தாழ்வோ வேறுபாடோ இல்லை. இது வினை காரணமாக அமைவதன்று. இறைவனின் கருணை காரணமாகவே அமைவதாகும். இந்த உடம்பு பிறவிக்கு பிறவி மாறுவதில்லை. படைப்புக் காலம் தொட்டு சங்கார காலம் வரை அல்லது முத்தி பெறும் வரை அஃது அழியாமல் இருக்கும். சூக்கும தேகம் பெற்றதும் உயிர்களின் அறிவிச்சை செயல்கள் மெல்ல இயங்கத் தொடங்கும் அப்பொழுது தோன்றுகின்ற விருப்பு வெறுப்புகளை வைத்து இறைவன் உயிர்களுக்கு வெவ்வேறான தூல உடல்களை அமைக்கிறான். முதல் தூல உடல் விருப்பு வெறுப்புக் காரணமாக அமைவதாகும். தூலவுடல் பெற்றதும் உயிர்கள் நல்வினை தீவினைகளை புரியத் துவங்குகின்றன. இதன் பின்னரே உடலால் வினையும், வினையால் உடலும் வருகின்ற முறைமையை இறைவன் உண்டாக்கியிருக்கிறான். மாயாகாரியமாகிய சூக்கும தேகம் வினையின்றியே அமைவதால் தான், "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என மணிவாசகர் அருளியிருக்கிறார். இவ்வாறாக மாயா முந்தியா? வினை முந்தியா? என்ற இடர்பாடான வினாவிற்கு மாயை முந்தி என மணிவாசகர் அளித்துள்ள விடை சித்தாந்தத்திற்கு பெரியதொரு கொடையாக விளங்குகிறது.

## சித்தாந்த சாத்திரங்கள்

மணிவாசகர் அளித்துள்ள இவ்விடையை ஏன் சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் சொல்ல வில்லை? என வினாவலாம். சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் பெரும்பாலான சித்தாந்த

ஐயப்பாடுகளுக்குத் தெளிவான விடை உண்டு ஒரு சில ஐயப்பாடுகளுக்குத் தூலவிடைகளாக கூறிவிட்டுச் சிறப்பான விடைகளை ஏனைச் சித்தாந்த சாத்திரங்களில் அருணந்தி சிவமும் உமாபதி சிவமும் தந்திருக்கிறார்கள்.

உமாபதிசிவம் மணிவாசகர் விடையை மனத்துட் கொண்டு தாம் பாடிய "போற்றிப்ப றொடையில்" பின்வருமாறு தெளிவுபடுத்தி கூறியிருக்கிறார்.

*"பொற்புடைய மாயைப் புணர்ப்பின் கண் - **முற்பால் தனுகரண** மும்புவன முந்தந் தவற்றால்*
*மனமுதலால் வந்தவிகா ரத்தால் - **வினையிரண்டுங் காட்டி** அதனாற் பிறப்பாக்கிக் கைக் கொண்டு*
*மீட்டறிவு காட்டும் வினை போற்றி.*

ஈண்டு "தனு" என்பது சூக்கும உடம்பைக் குறிக்கும். 'கரணம்" என்பது சூக்கும உடம்பில் அமைந்துள்ள மனம் புத்தி, சித்தம், அகங்காரம், என்ற நான்கையும் குறிக்கும். முற்பால் தனுகரணமும் புவனமும் தந்து என்பதற்கு "முதலில் சூக்கும உடம்பையும் அந்தக்கரணங்களையும் உலகையும் தந்து" என்று பொருள். "முதலில் சூக்கும உடலைத் தந்து அதன் கண் உள்ள மனத்தால் தோன்றும் விருப்பு வெறுப்புக்களை வினையாக்கிக் கொண்டு தூல தேகத்தை தந்து இருவினைகளைப் புரியும்படி செய்கின்ற திறம் போற்றி" என்பது மேலே கண்ட பாடலின் கருத்தாகும். முதலில் மாயையின் காரியமாகிய சூக்கும தேகத்தை தந்து அதன்பின் வினையைத் தருகிறான். என உமாபதி சிவம் அதில் சொல்வதால் உடலே அதாவது மாயையே வினைக்கு முந்தியதென்பது அவர் கருத்தாதல் இனிது விளங்கும். சிவப்பிரகாசத்தில் சொல்லாத விடையைப் "போற்றிப்பஃறொடை" யில் உமாபதி சிவம் சொல்லியிருக்கிறார். ஆகவே சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் ஒருங்கே படித்தால்தான் ஐயப்பாடுகள் அனைத்தும் நீங்குமேயன்றி ஓரிரு நூல்களை மட்டும் படித்தால் அவை நீங்க மாட்டா என அறிதல் வேண்டும்.

## சிவஞானபாடியம்

சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தையும் ஒருங்கே கற்றுணர்ந்த சுவாமிகள் சிவஞான பாடியத்தில் மாணிக்கவாசகரையும் ஏனைச் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும் ஒருங்கி ணைத்து எழுதியிருப்பது நினைக்கத்தக்கது. சிவஞானபாடியம் இரண்டாம் சூத்திரம் முதற் பகுதியில் சுவாமிகள் பின்வருமாறு எழுதி யிருக்கிறார். 'அற்றாயினும் முதற்கண் உற்பவம் ஆமாறு இவ்வியல் பிற்றென்பது பொற்புடைய மாயைப் புணர்ப்பின் கண் - முற்பாற் றநுகரண மும்புவன முந்தந்தவற்றான் - மனமுதலாய் - வந்த விகாரத்தால் - வினையிரண்டும் - காட்டி" என்பதனான் அறிக. ஈண்டுத் "தநு" என்றது சூக்கும தேகத்தை "மனமுதலாய்" - மனங்காரணமாய் என்க. "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" எனவும் "விண்ணு மண்ணக முழுவதும் யாவையும் - வைச்சு வாங்குவாய்" எனவும் ஓதிய திருவாக்கானும் இவ்விரு வேறு வகையும் கண்டு கொள்க! மேற்கண்டவாறு சுவாமிகள் எழுதியிருப்பதிலிருந்து சித்தாந்தசாத்திரங்களனைத் தையும் ஒருங்கே கற்க வேண்டியதன் அவசியம் புலனாகும்.

## சித்தாந்த அறிஞர்கள்

சித்தாந்த சாத்திரங்களில் அங்கும் மிங்கும் காணப்படுகின்ற உண்மைகளை ஒருங்கிணைக் காமல் சித்தாந்த பேரறிஞர் சிலர் எழுதுவதாலேயே குழப்பங்கள் நேரிடுகின்றன. உதாரணமாக சித்தாந்தப் பேரறிஞர் ஒருவர் "ஆணவ மலத்தால் விருப்பு வெறுப்புகளை உடையதாய் நிற்கும் உயிர் அவ் விருப்பு வெறுப்புகளுக்கு விடயமாகிய இன்ப

துன்பங்களைத் தருகின்ற கன்ம மலத்தோடு தான் முதற்கண் தொடர்வதாகின்றது. எனவே கன்மம், மாயை என்னும் இரண்டில் கன்மமே முதற்கண் ஆன்மாவைப் பற்றுவதாம் என்க என எழுதியிருக்கிறார். விருப்பு வெறுப்புகள் சூக்கும உடம்பு வழங்கப்பட்ட பின்தான் உண்டாகும். சூக்கும உடம்பு மாயா காரியமாதலால், மாயையே முதற் கண் ஆன்மாவைப் பொருந்தும் என்பது தான் பொருத்தம். இதனை அவரே பின்னர் உணர்ந்து பல பக்கங்கள் கழிந்த பின் 'இறைவன் முதற்கண் சூக்கும தேகத்தையே கூட்டுவிப்பான். சூக்கும தேகத்தினால் சிறிது அறிவும் இச்சையும் செயலும் விளங்கப் பெற்ற ஆன்மாக்கள் தத்தம் தகுதி நிலைக்கேற்பச் செயல்களை அறிந்தும் இச்சித்தும் செய்ய முயலும். அம் முயற்சியே அவைகட்கு வினையாய் அமையும் என்று எழுதியிருக்கிறார். இதில் மாயா காரியமாகிய சூக்கும உடம்பை முதலில் கூறிப் பின்னர் வினையைக் கூறுவதால் மாயையே முந்தி என்பது அவர் கருத்தாதல் பெறப்படும். சித்தாந்த அறிஞர்கள் தடுமாற்றம் எய்தாமல் எழுத வேண்டுமானால், சித்தாந்த சாத்திரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் சிந்திப்பதோடு திருமுறை வாக்குகளையும் புடை புடை வைத்து ஆராய வேண்டும் என்க.

## மும்மூர்த்திகளும் சிவபெருமானும்

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் மும்மூர்த்திகள் எனப்படுவர். புராணங்களும் இதிகாசங்களும் மும் மூர்த்திகளுள் ஒருவராக இருக்கும் உருத்திரனையே சிவன் எனக் கூறுகின்றன. சித்தாந்த சாத்திரங்கள் 'சிவன் உருத்திரன் அல்லன் உருத்திரன் ஆன்மா; சிவனோ கடவுள்; சிவன் வேறு; உருத்திரன் வேறு; சிவனுக்கு உருத்திரன் என்ற பெயர் சிலவிடங்களில் வரும். அப்போது அது மகாருத்திரனாகிய சிவனைக் குறிக்குமென்றும், மூவருள் ஒருவனாக வரும் உருத்திரனைக் குணிருத்திரன் எனக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகின்றன.

திருவாசகத்தில் அடிகள் பிரம்மா, உருத்திரன், விஷ்ணு ஆகிய மூவரும் சிவனை அறிய மாட்டார்கள் எனத் தெளிவாகவே கூறுகிறார். ஏனைய திருமுறைகளில் இக்குறிப்பு ஓரளவு வந்தாலும் இவ்வளவு தெளிவாக வரவில்லை. மணிவாசகர் திருவெண்பாவில் பின்வருமாறு பாடுகிறார்.

*"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த*
*தேவரும் காணாச் சிவபெருமான் - மாவேறி*
*வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க*
*மெய்யகத்தே இன்பம் மிகும்."*

மூவர் - மும்மூர்த்திகள்: முப்பத்து மூவர் - உருத்திரர் பதினொருவரும் ஆதித்தர் பன்னிருவரும், மருத்துவர் இருவரும் வசுக்கள் எண்பரும் ஆவர். மற்றொழிந்த தேவர் - இந்திரன், வருணன், அக்கினி, முதலியோராவர். இவர்க ளனைவராலும் சிவன் அறியப்படாதவன் என மணிவாசகர் கூறுவதால் சிவனை நான்காம் நிலையில் வைத்து அவர் பேசுகிறார் என்பது பெறப்படும்.

சிவஞானபாடியம் முதற் சூத்திரம் முதற்பகுதியில் சிவஞானசுவாமிகள் இவ்வேறு பாடுணராது மகாருத்திரனாகிய பரமசிவனைக் குணிருத்திரனாக வைத்தெண்ணுவோரை நோக்கி "நம்மவரவரே - மூவரென்றேயெம் பிரானோடு மெண்ணி விண்ணாண்டு மண்மேற்- றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந்திரிதவரே என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக" என்று எழுதியிருக்கிறார். சிவஞான பாடிய முதற் பகுதியிலேயே எடுத்த எடுப்பில் மணிவாசகர் திருவாக்கைச் சுவாமிகள் மேற்கோள் காட்டுவது

சிந்திக்கத்தக்கது. சிவன் நான்காம் நிலையினன் என்றும் சித்தாந்த கருத்தை வாதவூரடிகள் திருவாக்கு வலியுறுத்துவதால் தான் அவ்வாக்கை சுவாமிகள் மேற்கோள் காட்டியிருக்கிறார் என அறிதல் வேண்டும்.

## சித்தாந்த சைவம்

பதி, பசு, பாச உண்மைகளைச் சொல்வதால் மட்டும் ஒருவரைச் சித்தாந்த சைவர் என உறுதியாகத் தீர்மானிக்க முடியாது. சைவத்தைச் சார்ந்த அகச் சமயவாதிகளும் இவற்றை ஒப்புக் கொள்ளுகின்றனர். முத்திநிலை பற்றித்தான் அவர்களுக்கும் சித்தாந்த சைவர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. முத்தி நிலையில் ஆன்மா சிவசமம் என்று சிவசமவாதிகளும் அந்நிலையில் ஆன்மா இறைவனோடு கலந்து இல்லாமற் போகுமென்று சிவாத்துவித சைவர் முதலியோரும் கூறுகின்றனர். முத்திநிலையில் ஆன்மா உண்டென்றும் அஃது இறைவனோடு ஒன்றாகக் கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும் பேரானந்தத்தை அனுபவிக்கிறதென்றும் ஆண்டும் அது சிவனுக்கடிமை என்றும் சித்தாந்த சைவர்கள் கூறுகின்றனர்.

மணிவாசகர் சித்தாந்த சைவரா? என்பதை அவர் முத்திநிலை பற்றிக் கூறும் திருவாக்குகளை வைத்தே தீர்மானிக்க வேண்டும்.

*"தந்த துன்தன்னைக் கொண்டதென் தன்னைச்*
*சங்கரா யார்கொ லோ சதுரர்*
*அந்த மொன்றிலா ஆனந்தம் பெற்றேன்*
*யாது நீ பெற்றதொன் றென்பால்*
*சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்*
*திருப் பெருந்துறையுறை சிவனே*
*எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்*
*யானிதற் கிலனோர் கைம்மாறே.*

என மணிவாசகர் கோயில் திருப்பதிகத்தில் பாடியுள்ளார். அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்" என அவர் சொல்வதால் "ஆனந்த அனுபவம் உண்டென்பதும்" பெற்றேன் என்பதால் முத்தி நிலையில் அவர் இருக்கவே செய்வார் என்பதும் பெறப்படுகின்றன. முத்திப் பேற்றில் ஆன்மா உண்டென்றும் ஒன்றாக கலந்தாலும் இல்லாமற் போவதில்லை என்றும், அது பேரானந்தத்தை அனுபவிக்கிற தென்றும் சித்தாந்தம் சொல்லும் கருத்தை மணிவாசகர் இப்பாடல் வாயிலாக உணர்த்துவதால் அவர் சித்தாந்த சைவரே என்பது பெறப்படும்.

*"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்*
*சித்த மலம் அறிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட*
*வத்தனெனக் கருளியவானார் பெறுவார் அச்சோவே"*

எனத் திருவாசகம் அச்சோப்பதிகத்தில் மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். "சிவமாக்கி எனையாண்ட" என அவர் சொல்வதால், இது முத்தி நிலை பற்றிப் பேசப்படும் இடம் என்பது போதரும். 'எனையாண்ட' என வருவதை நாம் சிந்திக்க வேண்டும். முத்தி நிலையிலும் அவன் "என்னை ஆள்கிறான்" என்பது இதன் பொருள் ஆகும். "ஆள்கிறான்" என்றால் ஆண்டு ஆளப்படுபவராகிய இவர் அடிமை என்பது தானே போதரும் ஆண்டான் அடிமைத் திறத்தை "எனையாண்ட" என்னும் தொடர் இனிது புலப்படுத்துகிறது. சுவாமிகள் தாம் அடிமை என்பதைப் பல இடங்களில் புலப்படுத்துகிறார்.

*"கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன்*
*கண்கள் களிகூர*
*வெண்ணாதிரவும் பகலு நானவையே யெண்ணுமது*
*வல்லால்*

*மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்*
*அண்ணா எண்ணக் கடவேனோ வடிமை சால வழ குடைத்தே"*

எனக் குழைத்த பத்தில் அடிகளார் பாடுகிறார். அவர் அடிமை என்பதை இவ்வாறு புலப்படுத்துவதாலும் "எனையாண்ட" என முத்தி நிலையில் உள்ள அனுபவத்தை கூறுவதாலும் ஆன்மா பெத்தம் முத்தி இரண்டிலும் சிவனுக்கு அடிமையே என்பது தெளிவாக உணரப்படும். எனவே மணிவாசகர் சித்தாந்த சைவக் கருத்தையே தம் பாடல்களில் அருளிச் செய்திருக்கிறார் என்பதைக் கூற வேண்டியதில்லை.

"சிவமாக்கி" என இப்பாடலில் வருவதை வைத்துச் "சிவம்" என்பது பிரமத்திற்கு மற்றொரு பெயரே ஆதலால் நான் முத்தியில் பிரமம் ஆகிறேன்" என்னும் கருத்தைத்தான் அடிகளார் இங்கே சொல்கிறார் எனச் சங்கரவேதாந்திகள் கூறுவர். "சிவமாக்குதல்" என்பதால் முத்தியில் ஆன்மா சிவசமம் என்னும் கருத்தையே சுவாமிகள் கூறுவதாகச் சிவசமவாதிகள் சொல்வர்.

*"அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே*
*பவமாயங் காத்தென்னை யாண்டு கொண்டபரஞ்சோதி*
*நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து*
*சிவமானவா பாடித் தெள்ளெணம் கொட்டாமோ"*

எனத் திருத்தெள்ளேணத்தில் சுவாமிகள் பாடியுள்ளார். இதில் "நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து" எனச் சொல்வதால் 'சிவஞானசோதியை இறைவன் வழங்கியதும் "நாம்" என்னும் முனைப்பு ஒழிந்து சிவமா கின்றோம் என்பது புலனாகிறது. இறைவன் முத்தி நிலையில் தன் எண்குணங்களையும் உயிர் மாட்டுப் பதிவிக்கிறான். உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மை உடையது. பெத்தநிலையில் பாசத்தை சார்ந்து பாசமே ஆகிநின்ற உயிர் முத்திநிலையில் சிவத்தை சார்ந்து சிவமேயாகி நிற்கிறது. சிவனின் எண்குணங்கள் பதிவதால் ஆன்மா சிவமாக முடிகிறது. இதனையே "சிவமாக்கி" எனச்சுவாமிகள் கூறுகிறார்.

"நானே சிவன்" என்பது "கருத்தென்றால்" எனையாண்ட அத்தன்" எனும் தொடர் வரக் கூடாது. "நான் சிவசமம்" என்றாலும் அத்தொடர் வரக்கூடாது. ஆள்பவன் ஒருவன் இருந்தால் அடிமையாக ஒருவன் அங்கே இருந்தே ஆக வேண்டும். இதனால் சங்கர வேதாந்திகள் கூற்றும் சிவசமவாதிகள் கூற்றும் ஒருங்கே அடிபட்டுப் போகின்றன.

## சிவமாக்குதல் ஏன்?

முத்தி நிலையில் ஆன்மாவை இறைவன் ஏன் சிவமாக்குகின்றான். என வினவலாம். சிலப்பதிகாரத்தில் வரும் மாலதி கதையை சிறிது விரித்துச் சொன்னோமானால் இக் கருத்துப் புரியும்.

மாலதி ஓர் அந்தணப் பெண். அவள் ஓர் அந்தணனை மணந்து கொண்டாள். பிள்ளை யில்லாமல் மிகவும் வருந்தினாள். அந்த அந்தணன் மறுதாரம் செய்து கொண்டான். அவளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அம்மகவை மாலதி வேற்றுமை பாராட்டாமல் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தாள். சக்களத்தி மகன் என்ற உணர்வே அவளுக்கு இல்லை. ஒருநாள் அந்த அந்தணனும் இரண்டாவது மனைவியும் பிள்ளையை மாலதியிடம் விட்டு விட்டு வெளியூர் சென்றார்கள். மாலதி குழந்தைக்குச் சங்கின் வாயிலாக பாலூட்டினாள். குழந்தை பால் விக்கி இறந்து விட்டது. துடிதுடித்துப் போன மாலதி குழந்தையை தூக்கிக் கொண்டு பூம்புகாரில் உள்ள கோயில்கள் அனைத்திற்கும் சென்று

அதனை உயிர்ப்பித்து தருமாறு வேண்டினாள். ஒரு தெய்வமும் செவிசாய்க்க வில்லை. இறுதியில் அவ்வூர் எல்லையில் உள்ள பாசண்டச்சாத்தன் கோயிலுக்குச் சென்று குழந்தையை கிடத்திவிட்டு பாடு கிடந்தாள். அப்பொழுது ஒரு இடாக்கினி பேய் தோன்றிக் குழந்தையை விழுங்கி விட்டது. "ஓ" என அலறிக் கொண்டு மாலதி உயிர் விடத் துணிந்தாள். இதனைக் கண்ணுற்ற சாத்தான் "பழி வருமே" யென அஞ்சி ஒரு குழந்தை வடிவம் எடுத்துக் கொண்டு புதரில் கிடந்தான். குழந்தை உயிர் பெற்று விட்டதென மாலதி கருதி மகிழ்வோடு அதனை அணைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். வெளியூர் சென்றிருந்த பெற்றோரும் திரும்பி வந்தனர். மூவர் அன்புக்கும் கட்டுப்பட்ட சாத்தன், கோயிலுக்கு திரும்பிச் செல்ல முடியாமல் அங்கேயே வளர்ந்து பெரியவனானான். அவனுக்கு "தேவந்தி" என்னும் பெண்னை மணம் முடித்து வைத்தார்கள். அவள்தான் கண்ணகிக்கு தோழியாக வருகிறாள். மணம் முடித்து வைத்த பின்னர் பெரியதாயும் அந்தணனும் மறுதாரமும் காலமாயினர். வேதந்தியோடு வாழ்ந்து வந்த சாத்தான் இனிக் கோயிலுக்குத் திரும்பி செல்ல எண்ணினான். அவளை அழைத்து பின்வருமாறு அமைதியாக சொன்னான்.

"பெண்ணே! நான் மானுடன் அல்லன்: நான் இவ்வூரிலுள்ள பாசாண்டச் சாத்தன் என்னும் தெய்வம் ஆவேன். பெற்றோர்களின் அன்புக்கு கட்டுப்பட்டு கோயிலுக்குத் திரும்பிப் போக முடியாமல் திணறினேன். உன்னோடும் சில காலம் வாழ்ந்து விட்டேன். இனிக் கோயிலுக்குத் திரும்பிச் செல்லலாம் என நினைக்கிறேன். நீ எப்பொழுது விரும்பினாலும் கோயிலுக்கு வந்து என்னை வேண்டினால் நான் அசரீரியாக நின்று அருள் வழங்குவேன். இவ்வாறு சாத்தன் சொன்னதும் தேவந்தி திகைத்தாள் "உன்னைத் தெய்வம் என்று எப்படி நம்புவது? நீ தெய்வமாக இருந்தால் உன் வடிவத்தை எனக்கு காட்டுக" என வேண்டினாள். "என் வடிவத்தை நான் காட்டினால் உன் மெல்லிய கண்கள் தாங்கமாட்டா" என்று சாத்தன் விடை கூறினான். " நீ தெய்வமாக இருந்தால் என் கண்களை தாங்கும் படியாக செய்து விட்டு நீ ஏன் உன் வடிவத்தை காட்டக் கூடாது" எனத் தேவந்தி மடக்கி கேட்டாள். சாத்தன் மாட்டிக் கொண்டான். தன் அருளாற்றல் கொண்டு அவள் கண்களை தாங்கும் படி விதித்து தன் உருவை அவளுக்குக் காட்டினான். இதனை இளங்கோ,

*"பூவந்த வுண்கண் பொறுக்கென்று மெவித்தன்*
*மூவா இளநலம் காட்டி எங்கோடத்து நீவா என*
*வுரைத்து நீங்குதலும்.*

என அழகுறச் சொல்கிறார். தெய்வ ஒளியை நம் ஊனக் கண்கள் தாங்க முடியாது: பேரொளியைக் கண்டால் அவை அவிந்து போகும். ஊனக் கண்களால் காணவேண்டுமென்றால் இறைவன் அவற்றை தெய்வக்கண்களாக ஆக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை தாங்கும்.

இறைவன் வழங்குகின்ற சிவபோகத்தை ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் அறிந்து விரும்பி அனுபவிக்கும் ஆற்றல் உடையன அல்ல. அவை அனுபவமிக்க வேண்டுமென்றால் இறைவனின் அறிவு இச்சை செயல்களை அவற்றின் மாட்டுப் பதிவித்து அவனாக்க வேண்டும். அப்பொழுது தான் அவை தாங்கும் சிவபோகத்தை நுகர்வதற்காக இறைவன் தன் எண்குணங்களை ஆன்மாவின் மாட்டுப் பதிவித்து அதனைச் சிவமாக்கி நுகர்விக்கின்றான்.

சிவபோகத்தை நுகர்வதற்காகவே ஆன்மா சிவனாகிறது. ஆண்டும் அஃது அடிமையாதலால் இறைவனைப் போல அதனால் ஐந்தொழிலாற்ற முடியாது. இவ்வுண்மையை நாம் அறிந்து

கொண்டால் சிவமாக்குதல் என்னும் சொல்லால் வரும் குழப்பம் நீங்கி விடும். சிவஞான சித்தியார்,

'உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்குரியன் **உயிர்சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்து**' என இதனைத் தெளிவுறுத்துவது காண்க.

## சித்தாந்தமும் வேதாந்தமும்

சிவமாக்குதல் என்றாலே அஃது ஆன்மாவின் தன்னியல்பன்று என்பதும், சிவனாலேயே அஃது அவ்வாறு ஆக்கப்படுகிறது என்பதும் தாமே பெறப்படும். அவ்வாறு ஆக்கப்பட்டதாலேயே "சிவமானவாபாடித் தெள்ளணம் கொட்டாமோ" என அடிகள் கூறியருளியிருக்கிறார். சங்கரவேதாந்தம் பிருமம் ஒன்றே உள்பொருள் என்றும் உயிரும் உலகும் மித்தை என்றும் முத்தி நிலையில் தன்னையேபிருமம்எனஆன்மாஉணருமென்றும் சொல்கிறது. ஆகவே "சிவமாக்கப்படுதல்" என்பது அதன் கொள்கைக்கு மாறானதாகும். 'தத்துவ மசி' என்னும் மகாவாக்கியத்திற்கு 'நீ அதுவாகிறாய்' என்று வேதாந்தம் பொருள் சொல்வதில்லை. 'நீ அதுவாக இருக்கிறாய்' என்றே அதற்கு அது பொருள் சொல்கிறது. இதனால் மணிவாசகர் கொள்கைக்கும் வேதாந்தத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது புலனாகிறது. இருப்பினும் சிலர் திருவாசகப் பாடல்கள் இரண்டொன்றை வைத்து மணிவாசகர் வேதாந்தி எனச் சொல்ல முயல்கின்றனர். திருத்தெள்ளேணத்தில்,

*"வான் கெட்டு மாருதமாய் தழனீர் மண் கெடினும்*
*தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்*
*கூன் கெட் டயிர்கெட் டுணர்வுகெட் டெனுள்ளமும் போய்*
*நான் கேட்ட வாபாடித்தெள்ளேணம் கொட்டாமோ"*

என ஒரு பாடல் வருகிறது. இதில் "உயிர் கெட்டு" என்றும் "நான் கெட்டு" என்றும் வருவதால் முத்தி நிலையில் ஆன்மாவாகிய உயிர் இல்லை என்றும் பிரமம் ஒன்றே உளதென்றும் சிலர் பொருள் கூறுவர். உயிர் என்பது ஈண்டு ஆன்மா என்றால் ஆன்மாவே இல்லாமல் போயின பின் உள்ளமும் "நான்" என்னும் உணர்வும் தாமே இல்லாமல் போய்விடும். எனவே "உயிர் கெட்டு" என்றதன் பின் "என்உள்ளமும்போய்நான்கெட்டு" என்று சொல்லத் தேவையில்லை. மணிவாசகர் "உயிர் கெட்ட பின்" உள்ளமும் போய் நான் கெடும் என்று சொல்வதால் அவர் ஆண்டு உயிர் எனச் சொல்வது ஆன்மாவாக இருக்க முடியாது. அஃது ஆவி எனப்படும் மூச்சுக் காற்றாகிய பிராண வாயுவைக் குறிக்கும். பிராணவாயு போயின பின் சூக்கும உடம்பில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உள்ளம் இருக்கும். முத்தி நிலையில் அந்த உள்ளமும் அஃதாவது சூக்கும உடம்பும் போய்விடுகிறது என்று அடிகள் தெளிவுறுத்துகிறார். "உள்ளமும் போயின பின்" நான் என்னும் முனைப்புப் போய் விடுகிறது. அம்முனைப்புப் போவதற்காக ஆன்மாவே ஆண்டு இல்லை எனக் கொள்வது தவறாகும். ஆன்ம அறிவு இறை வியாபகத்துக்குள் அடங்கித் தன்னை மறந்து நிற்பதையே "நான் என்னும் முனைப்புக் கெடுதல்" என அருளாளர்கள் கூறகின்றனர். இந்தப் பாடல் வேதாந்தத்திற்கு ஆதரவான பாடலாகாது.

ஒரு பாடல் தெளிவின்றி இருந்தால் தெளிவாக வுள்ள மற்றொரு பாடலை வைத்தே தான் அதற்குப் பொருள் கொள்ள வேண்டும்.

*"யாவர்க்கும் மேலா மளவிலாச் சீருடையான்*
*யாவர்க் குங்கீழா மடியேனை - யாவரும்*
*பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென்னம்*
*பெருமான்*
*மற்றறியேன் செய்யும் வகை"*

எனத் திருவெண்பாவில் மாணிக்கவாசகர் பாடுகிறார். "யாவர்க்கும் கீழாம் அடியேனை

யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்" என அடிகள் சொல்வதால் முத்தி நிலையில் பேரின்பத்தை நுகருமாறு இறைவன் அவரை வைத்திருக்கிறான் என்பது புலனாகிறது. பேரின்பத்தை நுகரத்தன்னை வைத்திருப்பதாக அவர் சொல்வதால் அவர் ஆண்டு இருக்கிறார் என்பது தேற்றம். அவரே இல்லை யென்றால் யார் அங்கே இருந்து இன்பத்தை நுகர்வது என்னும் வினா எழும். தன்னை ஆண்டு வைத்தான் என அவர் தெளிவாக கூறுவதால் முத்தியில் பிரமம் மட்டுமல்லாமல் ஆன்மாவும் இருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆன்மா இல்லை என்னும் வேதாந்தக் கொள்கைக்கு இது முரணாகும்.

திருவண்டப் பகுதியில் "கன்றை கனி தேர்களி றெனக் கடைமுறை என்னையு மிருப்பதாக்கினன்" என வரும் அடிகளை முன்னர் எடுத்துக் காட்டியுள் ளோம். இதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர். இறைவன் தன்னை இவ்வுலகில் இருப்பதாக்கி விட்டு அடியார்களை அழைத்துக் கொண்டுவிட்டான் என அடிகளார் வருந்திச் சொல்வதாக இவ்விடத்தில் சிலர் பொருள் எழுதியுள்ளனர். தன்னை உலகிடை வைத்து விட்டுப் போனதற்காக அடிகள் வருந்தி பல விடயங்களில் கூறியிருக்கிறார் என்பது உண்மையேயாகும். ஆனால் இவ்விடத்தில் "என்னையும் இருப்பதாக்கி" என்பதின் பின்னர் "எள்ளில் கருணைவான் தேன் கலக்க அருளொடு பராவமுதாக்கினான்." எனப் பெருமிதமாகக் கூறுவதால், அவர் முத்திநிலையில் மத்தகஜம் போல இறுமாந்து வீற்றிருப்பதையே குறிக்கிறார் என அறிதல் வேண்டும்.

*"இன்றெனக்கருளி யிருள் கடிந் துள்ளத்*
*தெழுகின்ற ஞாயிறே போன்று*
*நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தோன்*
*நீயலாற் பிறிது மற்றின்மை*
*சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்*
*திருப் பெருந் துறையுறை சிவனே*
*ஒன்றுநீயல்லை யன்றி யொன்றில்லை*
*யாருன்னை அறிய கிற்பாரே"*

எனக் கோயில் திருப்பதிகத்தில் ஒரு பாடல் வருகிறது. இப் பாடலுக்கும் வேதாந்தப் பொருள் கொள்ளச் சிலர் முயல்கின்றனர்.

"சென்று சென்றணிவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்" என இப்பாடலில் வருவதால் "ஆன்மா கரைந்து கரைந்து இறைவனோடு கலந்து முத்தியில் ஒன்றாய்ப் போய் விடுகிறது; ஆகவே ஆண்டு ஆன்மா இல்லை" என்பது வேதாந்திகள் இப்பாடலுக்குச் சொல்லும் பொருளாகும். அடிகளார் "நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தோன் நீயலாற் பிறிது மன்றின்மை" எனக் கூறுகிறார். நீயலாற் பிறிது மற்றின்மையை முத்தி நிலையில் நினைப்பற நினைந்தேன் என அவர் சொல்வதை சிந்திக்க வேண்டும். "நினைந்தேன்" என்பதால், முத்தி நிலையில் அவர் இருக்கிறார் என்பது புலனாகிறது. மாயா கருவிகளாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களை கொண்டு நினைக்காமல் இறைவன் திருவருளே கண்ணாகக் கொண்டு நினைப்பதை தான் 'நினைப்பற நினைந்தேன்" எனச் சுவாமிகள் கூறுகிறார். துரியாதீத நிலையாகிய முத்தியில் அவர் நினைத்திருந்த படியே கீழிறங்கி வந்து துரிய நிலையிற் சொல்கிறார். அவர் பெற்ற அனுபவத்தையே இவ்வாறு சொல்வதால் முத்தி நிலையில் அவர் இருந்திருக்கிறார் என்பது தேற்றம்.

சென்று - மாயா கருவிகளாகிய முப்பத்தாறு கருவிகளினின்றும் நீங்கிச் சென்று, சென்று - இருவினைத் தொடக்கினின்றும் நீங்கித் - தேய்ந்து - "எனது" என்னும் செருக்குத் தேய்ந்து தேய்ந்து - "நான்" என்னும் முனைப்புத் தேய்ந்து, அணுவாய் - ஆன்மா தான் என்னும் ஒரு

முதல் புலப்படாவகையில் நின்று. ஒன்றாம் - இறைவனுடன் ஒன்றாய் கலந்து - அவனல்லாது பிறிதொன்றுமில்லை என்னும் உண்மையை. "நினைப்பற நினைந்தேன்" என்பது இப் பாடலின் பொருளாகும். "ஒன்று நீயல்லை" என்றால் எந்தப் பொருளாகவும் நீ இல்லை என்பது பொருள். இது அவர் வேறாகி நிற்கும் நிலையைக் குறிக்கும். "அன்றி யொன்றில்லை" என்றால் "நீ இல்லாமல் ஒரு பொருளும் இல்லை" என்பது பொருள். எல்லாப் பொருள்களுள்ளும் இறைவன் கலந்து நிற்பதையே சுவாமிகள் இவ்வாறு சொல்லுகிறார். இதனால் இறைவனல்லாத வேறு பொருட்களும் உண்டு என்பது பெறப்படும் இந்தப் பாட்டிற்கு வேதாந்தப் பொருள் கொண்டால் "நினைந்தேன்" என்னும் சொல் இடிக்கும்.

ஆன்மா இறைவனுடன் முத்தி நிலையில் இரண்டறக் கலக்கும் என்பதை சுவாமிகள் ஒப்புக்கொள்கிறார். அதனால்தான் 'ஒன்றாம்" என்னும் சொல்லை மேற்கண்ட பாடலில் பெய்திருக்கிறார். ஆனாலும் அவர் ஆண்டு இருந்த பேரின் பத்தை நுகர்கிறார் என்பதை "யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்" என முன்பு காட்டிய பாடலில் அவர் தெளிவாக சொல்லியிருப்பதிலிருந்து நாமறிந்து கொள்ளலாம்.

## பக்தி நெறியும் சித்தாந்தமும்

இதுகாறும் கூறியவற்றால் மணிவாசகர் சித்தாந்த சைவ கருத்துக்களையே தம் பாடல்களில் அறிவுறுத்தியிருக்கிறார் என்பது இனிது புலப்படும். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய அவர் இவ்வாறு சித்தாந்த கருத்துக்களை இடையிடையே சொல்லியிருப்பது நமக்குப் பேருவகை அளிக் கிறது. பக்தி நெறியை ஐயப்பாடற்ற நிலையில் உறுதிப்படுத்தவே சுவாமிகள் இவ்வாறு சொல்லி யிருக்கிறார். வாழ்க வாதவூரடிகள்! வாழ்க சைவ சித்தாந்தம்!!



# திருவாசகத்தில் இலக்கியச் சுவை

முரு.பழ. இரத்தினம் செட்டியார்

## திருமுறைகளில் இலக்கியம்

திருவாசகம் ஞானப்பனுவல் என்பதை யாவரும் அறிவர். ஆனால் மணிவாசகர் தம் ஞான அனுபவங்களை இலக்கிய சுவை குன்றாமல் வெளிப்படுத்துவதில் வல்லவராக விளங்குகிறார்.

மணிவாசகர் மட்டுமல்லாமல் நம் திருமுறை ஆசிரியர்கள் அனைவருமே இலக்கியப் பற்று மிக்கவராக காணப்படுகிறார்கள். உலகப் பற்றை ஒழித்த அவர்கள் இலக்கியப் பற்றை ஒழிக்க இயலாமலிருப்பது வியப்பாகத் தோன்றலாம். இறைவனை இலக்கியச் சுவை ததும்பத்துதிப்பது பெரும் பயன் விளைவிக்கும் என்று அவர்கள் கருதியிருக்கிறார்கள். திருமுறைகளில் தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும், செவிலித்தாய் கூற்றாகவும் நம் அருளாசிரியர்கள் பாடியுள்ள பாடல்கள் பலவாகும்.

## சுந்தரர் பாட்டு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூருக்குச் செல்லும் போது, காதல் புரி கைக்கிளையில் ஒரு

திருப்பதிகம் பாடியதாகச் சேக்கிழார் சொல்லுகிறார். அத்திருப்பதிகத்தில் இறைவனை தலைவனாக வைத்து அவன் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி அக் காதல் மிகுதியால் பறவைகளையும் வண்டுகளையும் நோக்கி கூறும் கூற்றாகச் சிலவற்றை அருளிச் செய்திருக்கிறார்.

*"பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமென் பூவைகாள்*
*அறக்கணென் னத்தகும் அடிகள்ஆ ரூரரை*
*மறக்கில் லாமையும் வளைகள்நில் லாமையும்*
*உறக்கமில்லாமையும் உணர்த்தவல் லீரகளே"*

இங்கே, "பறக்குமெங் கிள்ளைகாள்" எனக் கிளிகளைப் பறக்கும் தன்மையுடையன எனச் சொல்லுகிறார். தன் காதல் நோயை விரைந்து சிவபெருமானிடத்தே சென்று சொல்ல வேண்டும் என்பதற்காகப் "பறத்தலைக்" கிளிகட்கு அடையாக்கி யிருக்கிறார். ஓசை நயத்தோடு சொற்சுத்தமாகப் பாடுவதில் நாகணவாய்ப்புக்கள் கிளிகளை விட வல்லமை வாய்ந்தவை: இனிமையாக இறைவனிடம் போய்ச் சொல்ல வேண்டுமென்பதற்காக "பாடும் எம் பூவைகாள்" எனக் கூறியுள்ளார் சிவபெருமானிடத்துக் கொண்ட நினைவால், "உறக்கமில்லாது துயர் அடைகின்றேன்" என்றும், "அதனால் உடல் மெலிய வளைகள் கழன்று போயின என்றும், இந்நிலையை என் தலைவனிடத்தே நீங்கள் போய்ச் சொல்ல வேண்டு" மென்றும் சுவாமிகள் வேண்டிக்கொள்கின்றார். இவ்வாறு இலக்கியக் கண்ணோட்டத்தில் நின்றே தனக்கு இறைவன் நினைவு மீதூர்திருப்பதை வெளிப்படுத்துகிறார்.

## கிளிப்பாட்டு

மணிவாசகப் பெருமானும் இறைவனிடத்துத் தான் கொண்ட பக்தியை இலக்கியப் பாடலாகவே வடித்து வழங்கியிருக்கிறார்.

*"ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக் கோன்*
*சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்*
*செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்*
*செப்புவபோல்*
*எம்பெருமான் தேவர்பிரான் என்று"*

இப்பாடல் தலைவி கூற்றாகும். தலைவன் வராமையால் துயருற்ற தலைவி அவன் பெயரை பிறர் சொல்லக் கேட்பினும் அவனைக் கூடி மகிழ்ந்தாற் போன்ற இன்பம் உண்டாகும் என்னும் கருத்தில் பிறர் யாராவது அவன் பெயரைச் சொல்வார்களா? என எதிர் பார்க்கிறாள். ஒருவரும் சொல்லாமையால் கிளியை நோக்கி "நீயாவது அவன் நாமத்தைச்" சொல் என வேண்டிக் கொள்கிறாள். இப்பாடலில் "நிலவுலகிலுள்ள நாங்கள் ஆரூரன் என்றும் செம்பெருமான் என்றும் சொல்வோம். வெண்மலரானாகிய பிரமனும், பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பவனுமாகிய திருமாலும், எம் பெருமான் தேவர்பிரான்" என்று துதிப்பார்கள். "அந் நாமங்களையும் சேர்த்து நீ சொன்னால் எனக்கு நிறைவளிக்கும்." என்று தலைவி தெரிவிக்கிறாள். இப்பாடலை பார்க்கும் போது காதல் நோக்கில் பாடிய ஒரு பாடலாகவே தோன்றும். ஆனால் இப் பாடலில் இரண்டு பேருண்மைகளை அடிகள் உணர்த்துகிறார். ஒன்று: இறைவன் நாமங்களை கேட்டால் அடியார்களுக்கு பேரின்பம் உண்டாகும் என்பது. இஃது இறைவன் திருவருளைப் பெறுவதற்கு சிறந்த சாதனம் நாமம் சொல்லுதல் என்னும் கருத்தை உணர்த்துகிறது. இரண்டு: பிரம்மாவும் திருமாலும் சிவனைத் "தேவர் பிரான்" என்று சொல்லுவதால் எல்லாத் தெய்வங்கட்கும் மேற்பட்ட முழுமுதற் பொருள் அவனேயாகும் என்பது. இது தேவர்களால் பெரியவர்களாகிய பிரமாவும் திருமாலும் அவனைத் துதிப்பதால் பல்வேறு தெய்வங்களையும் நாம் வணங்காமல் சிவபெருமான் ஒருவனையே வணங்குதல் வேண்டும் என்னும் கருத்தை உணர்த்துகிறது.

## தத்துவக் கருத்து

அகப்பொருள் போலத் தோன்றுகின்ற இப் பாடலில் சைவ சாதனைகளையும் சிவபிரான் ஒருவனே பதி என்ற உண்மையையும் மணி வாசகர் அறிவுறுத்துவது நினைந்து இன்புறத்தக்கது. மருந்தைக் கருப்புக்கட்டியில் வைத்துக் கொடுப்பது போலப் பிறவிநோய் தீர்க்கும் இவ்வுண்மைகளை அகப் பொருளில் வைத்து மணிவாசகர் நமக்குத் தருகிறார். இலக்கியத்திற் கிலக்கியமாகவும் ஞானத் திற்கு ஞானமாகவும் அவர் பாக்கள் விளங்கு கின்றன.

## யானைப் பாட்டு

இலக்கியமாகிய நங்கைக்கு உவமைகள் சிறந்த அணிகலன்களாக விளங்குகின்றன. பாடு கின்ற புலவன் தன் உள்ளக் கருத்தை உவமை மூலம் படம் பிடித்துக் காட்டிவிடுகிறான். சிறந்த உவமைகள் ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்கப் புதுப்புதுப் பொருட்களை வழங்கிய வண்ணம் இருக்கும் திருச்சதகத்தில்

*"இருகை யானையை யொத்திருந் தென்னுளக்*
*கருவை யான்கண்டி லேன் கண் தெய்வமே*
*வருக வென்று பணித்தனை வானுளோர்க்*
*கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே"*
*எனப் பாடுகிறார்.*

"தும்பிக்கை என்னும் ஒருகையையுடைய யானை உலகில் உண்டு: இரு கை யானை இல் பொருள் உவமையாகும். ஒரு கையுடைய யானை உண்பதே தொழிலாக கொண்டு தன் உடலைக் கொழுகொழுவெனப் பருக்க வைக்கிறது. இது தவிர அதற்கு வேறொன்றும் தெரியாது. நான் அந்த யானையைப் போல உண்டு என் உடலை பருக்க வைத்திருக்கிறேன். என் உள்ளத்திலுள்ள உன்னை நான் காணாமல் வறிதே நாளைப் போக்குகிறேன். கையுடைமையில் எனக்கும் அவ்யானைக்கும் வேறுபாடே தவிர செயலுடமையில் நானும் அதனைப் போலவே வாழ்கிறேன்." என்பது தான் மணிவாசகர் இவ்வுவமையால் நமக்கு உணர்த்தும் பொருளாகும். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் இவ்வுவமை இன்னும் சில அரிய கருத்துக்களை நமக்குத் தருகிறது. ஒரு கை யானை தன் கையால் தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும். இது போலவே உலக ஆசையாகிய மண்ணை இரு கைகளையும் கொண்டு நாமே நம் தலையில் வாரிப் போட்டுக் கொள்கிறோம். நாமே நம்மை கெடுத்துக் கொள்கிறோம் என்பதற்கு இந்த யானை உவமை மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஒரு கை யானை, கீழே குனிந்து காலை நீட்டி அதன் மேல் தன் தலைவனை ஏறுமாறு செய்வித்து முதுகில் ஏற்றிக் கொள்ளும். இந்த நல்ல குணம் ஒரு கை யானைக்கு உண்டு. ஆனால் இருகை யானைகளாகிய நாம் அவ்வாறு தலைவன் முன் பணிந்து அவனை நம்முள் புகுமாறு செய்விக்கத் தவறி விடுகிறோம். வேறு எந்தச் சாதனையையும் நம்மால் செய்து விட முடியாவிட்டாலும் "நீயே கதி" என இறைவன் முன் சரணம் அடைந்தால் போதும். இதனைக் கூடச் செய்யாமல் நாம் வாழ்நாளை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் என வருந்தியே இரு கை யானை உவமையைத் தன் மீது ஏற்றிக் கொண்டு மணிவாசகர் பாடியருளியிருக்கிறார்.

## சதகப் பாட்டு

திருச்சதகத்தில்

"போற்றியென் போலும் பொய்யர் தம்மை யாட்கொள்ளும் வள்ளல் போற்றி நின்பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி" என அடிகள் அருளிச் செய்திருக்கிறார். உவமை உவமேயத்தை விட எப்பொழுதும் சிறப்பாக இருக்கும் 'பவழம்

போல் வாய்" எனச் சொன்னால் பவழத்திற்குள்ள அவ்வளவு சிவப்பு. வாய்க்கு இராது. எனினும் ஓரளவு உவமேயத்தில் சிவப்பு இருப்பதை வைத்துப் பவழம் போன்ற வாய் என உவமிக்கின்றோம்.

மேற்கண்ட பாடலில் பொய்யர்களுக்கு உவமை யாகச் சுவாமிகள் தன்னையே எடுத்துக் காட்டுகிறார். உவமையாக எடுத்துக் காட்டப்படும் தான் உலகிலுள்ள ஏனைப் பொய்யர்கள் எல்லாரையும் விட மிகப் பெரிய பொய்யன் என்பதை முதற்கண் உணர்த்துகிறார். மிகப் பெரிய பொய்யனாக தான் இருந்தும் தானுட்பட்ட பொய்யர்களை இறைவன் ஆட்கொண்டதற்கு காரணம் யாராக இருக்கும் எனச் சிந்திக்கிறார். அக்காரணத்தை "வள்ளல்" என்னும் சொல்லால் வெளிப்படுத்துகிறார். இறைவனை கருணை வள்ளல் என யாவரும் சொல்லுகிறோம். நல்லவர்களை அவன் ஆட்கொள்ளுவது கடமை யாகுமேயன்றி கருணையாகாது. பெரும் பொய்யர் களை ஆட்கொண்டால் தான் அவனை கருணை வள்ளல் என்பது மெய்ப்பிக்கப்படும். தன் கருணையை உலகினர்க்கு மெய்ப்பிப்பதற்காகவே தன் போன்ற பொய்யர்களை இறைவன் ஆட்கொண்டு இருக்கிறான் எனச் சொல்கின்றார். இப்படிச் சொன்னதும் அவருக்கு ஒரு பயம் உண்டாகி விடுகிறது. உலகில் தன் கருணையை மெய்ப்பிப்பதற்கு ஆட்கொண்டு விட்டு பின்னர் இவன் உண்மையில் தகுதி உடையவன் அல்லன் என நிராகரித்து விட்டால் என் செய்வது? அவன் நிராகரிக்க நினைத்தாலும் அவன் திருவருட் சக்தி அவ்வாறு நிராகரிக்க விடாது என நம்புகிறார். திருவருள் சக்தியை நிராகரிக்க விடாது என நம்புகிறார். திருவருட் சக்தியை அருளாளர்கள் "திருப்பாதம்" எனச் சொல்வது வழக்கம். அத் திருப்பாதம் தன்னை விட்டு நெகிழ்ந்து போய்விடக் கூடாது என்று கருதியே

*"போற்றி நின்பாதம் போற்றி"*

- எனக் கூறுகிறார்.

பாதத்தை நடுவில் வைத்து முன்னும் பின்னும் சொல்லி அது நழுவிப் போய்விடாத படி பாதுகாக் கிறார். இஃது எவ்வளவு சுவையாக இருக்கிறது என்பதைக் கூற வேண்டுவதில்லை.

## நாடக அடியாரும் சுடர்மணியும்

திருச்சதகத்தில் வரும் "நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே" என்னும் பாடலில் வரும்

நாடக அடியார் பற்றியும் நீத்தல் விண்ணப்பத்தில் வரும் "அடற்கரி போல் ஐம்புலன்களுக்கஞ்சி" என்னும் பாடலில் வரும் சுடர் மணி பற்றியும் பண்டிதமணி அவர்கள் மிகச் சிறந்த நயம் காட்டி எழுதியிருக்கிறார்கள்.

## விரைவதே குற்றம்

*"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து*
*நானடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும்*
*விரைகின்றேன்"*

என்னும் பாடலுக்கு அவர்கள் கூறும் நயம் பின்வருமாறு:-

அடியார்கள் நடுவில் அவர்களைப் போல் நானும் ஓர் அடியானாக நடிக்கிறேன். ஆனால் நடிக்கின்ற நான் முத்திப் பெரும் வீட்டில் நடுப் பங்குபெற ஆசைப்பட்டு விரைகின்றேன்.

அடியார்கள் நடுவுள் நான் ஓர் அடியான் போல நடிப்பதில் ஒரு பயன் உண்டு. அவர்கள் என்னை நோக்கி ஆசீர்வதிப்பார்கள். போலி அடியாரா? மெய்யடியாரா? என்பதை ஆய்வது அவர்கள் வழக்கமில்லை. திருநீறிட்ட எல்லாரையும் அவர்கள்

அடியாராகவே கொண்டு வழிபடுவார்கள். அந்த வழிபாட்டு வலிமையால் நானும் மெய்யடியாராக நாளடைவில் மாறி விடுவேன். அவர்கள் வழி பாட்டிற்கு இத்தகைய ஆற்றல் உண்டு. இமயம் சேர்ந்த காக்கை பொன்னிறம் அடைவது போல அடியாரோடு சேர்ந்த நானும் அடியாராகிவிடுவேன். ஆனால் அதற்கு நாள் பல ஆகும். மெல்ல மெல்ல தான் நான் அடியாராக மாற இயலும் அதுவரைக்கும் பொறுத்து இராமல் விரைந்து வீடடைய முயல்வது தான் என் மீதுள்ள தவறாகும். நடிப்பது தவறில்லை. விரைவது தான் தவறு" இவ்வாறு பண்டிதமணி அவர்கள் விளக்கம் எழுதியுள்ளார்கள். அடியார் களின் அருளாசிக்கு எவ்வளவு வலிமையுண்டு என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

### கத்தரிக்காய் கதை

வீரசைவ மடத்திற்கு தலைவராக விளங்கிய வசவதேவர் பெரிய அருளாளர். அவர் மடத்தில் ஒரு சமயம் வீரசைவ அடியார்கட்கு உணவளிக்கப் பட்டது. வீரசைவ சமயத்தைச் சார்ந்தோரே உணவுண் பதற்கு அனுமதிக்கப்பட்டனர். வீர சைவர்கள் என்போர் கழுத்தில் லிங்கம் கட்டியிருப்பார்கள். அந்த அடையாளத்தைப் பார்த்தே வாயிற் காவலர்கள் உள்ளே செல்ல அனுமதி வழங்குவார்கள் வீரசைவ சமயத்தை சார்ந்த இருவர் உணவு உண்பதற்கு செல்ல விரும்பினர். தெருவில் கிடந்த இரண்டு அழுகல் கத்தரிக்காய்களை துணியில் கட்டிலிங்கம் போல கழுத்தில் அணிந்து கொண்டனர் மடத்திற்குள் சென்று பந்தியின் நடுவே அமர்ந்து விட்டனர். அவர்களுக்கு வீர சைவ மடத்தின் சம்பிரதாயம் தெரியாது. வசவதேவர் தீபம் ஏந்திக் கொண்டு ஒவ்வொரு அடியார் முன்னும் வந்து நிற்பார். அப்பொழுது அடியார்கள் தம் கழுத்திலுள்ள இலிங் கத்தை திறந்து காட்ட வேண்டும். இந்நிகழ்ச்சியை கண்ணுற்ற அவ்விருவரும் நடுநடுங்கிப் போயினர். கத்தரிக்காயை காட்டினால் "அடி விழுமே" என அஞ்சினர். வசவதேவர் ஒவ்வொரு அடியார் முன்னும் தீபம் காட்டிக் கொண்டு வந்தார். இவர்களிடத்தே வரும் போது அவர் உள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போகிறது என அவர் உணர்ந்து கொண்டார். "இறைவனே எல்லாம் நல்ல விதமாக நடக்க வேண்டும்" என மனதிற்குள் வேண்டிக் கொண்டு அப்போலி அடியார் முன் தீபத்தை காட்டினார். இருவரும் மிகுந்த பதைப்போடு துணியை அவிழ்த்துக் காட்டினர். கத்தரிக்காய் இரண்டும் சிவலிங்கங்களாக மாறி காட்சியளித்தன. உண்மை அடியார் வேண்டுகோட்கிணங்கி இறைவன்போலி அடியார்களையும் உண்மை அடியாராக ஆக்கி விட்டான். மெய்யடியார் திறத்திற்கு இஃதொரு சான்றாகும். மணிவாசகரும் மெய்யடியார் குழாத்துள் தான் ஒரு பொய்யடியானக வீற்றிருந்தாலும் அவர்கள் அருளாசியால் நாளடைவில் தாம் ஒரு மெய்யடியானாக மாறும் வாய்ப்பு உண்டு என நம்புகிறார். பண்டிதமணி அவர்கள் இந்நிகழ்ச்சியை எடுத்துக் காட்டி உரை எழுதியிருப்பது மிகவும் இன்பம் பயக்கின்றது.

### சாகுந்தல நயம்

*"அடற்கரிபோல் ஐம்புலன்களுக் கஞ்சியழிந்த வென்னை*
*விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க் கல்லால்*
*தொடற்கரியாய் சுடர்மாமணியே சுடுதீச்சுழலக்*
*கடற்கரிதாயெழு நஞ்சமுதாக்கும் கறைக்கண்டனே"*

என நீத்தல்விண்ணப்பத்தில் ஒரு பாடல் வருகிறது. இதில் "விழுத் தொண்டர்க்கல்லால் தொடர்க்கரியாய் சுடர்மாமணியே" என வரும் பகுதிக்குப் பண்டிதமணி அவர்கள் பின்வருமாறு நயம் எழுதியிருக்கிறார்கள். அடியார்களல்லாத ஏனை யோர்க்கு இறைவன் தொடுதற்கரிய நெருப்பாக

விளங்குவான். அடியார்களுக்கு அவன் தொடுதற் குரிய மாமணிச்சுடராக விளங்குவான். நெருப்பச் சுடர் தொடுதற்கரியது. மாமணியாகிய வயிரத்தின் சுடர் தொடுதற்குரியது. - தண்மை மிக்கது.

துஷ்யந்தன் சகுந்தலையை முதன் முதலாக கண்ணுவர் ஆச்சிரமத்தில் கண்டு காதல் கொள்ளுகிறான். முனிவர் பிராமணர், பிராமணப் பெண்ணாகிய சகுந்தலை அரசனாகிய தன்னால் தொடுதற்கரிய சுடர் என நினைக்கின்றான். பின்னர் தோழிமார்களை அவன் வினாவிய போது சகுந்தலைமுனிவரின்வளர்ப்புப்புதல்வியேயாவாள் என்றும், அவளும் அரச குலத்தை சார்ந்தவளே என்றும் தெரிந்து கொள்கிறான். உடனே "அவள் தொடுதற்குரிய வைர மணிச் சுடரே" எனக் கூறுகிறான். இதுபோன்றுதான் மணிவாசகர். அடியாரல்லாதார்க்கு இறைவன் தொடுதற்கரிய சுடர் என்றும், அடியார்க்கு அவன் தொடுதற்குரிய சுடர் என்றும் கூறுகிறார். சாகுந்தலத்திலிருந்து பண்டிதமணி அவர்கள் இதனை எடுத்துக் காட்டி யிருப்பது சுவைமிக்கதோர் இலக்கிய விருந்தாக அமைகிறது.

## மகளிர் விளையாட்டு

மணிவாசகர் மகளிர் விளையாட்டைக்கருவி யாக கொண்டு இலக்கியச்சுவை மிக்க பல பாடல் களை அருளிச் செய்திருக்கிறார். திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருப்பொன்னூசல், திருத்தோணோக்கம் ஆகியவை மகளிர் விளை யாட்டைஅடிப்படையாககொண்டுஇறைவன்புகழை இலக்கியச் சுவைபடச் சொல்லும் பகுதிகளாகும். திருவெம்பாவை மகளிர் விளையாட்டாகுமா? என வினவலாம். ஆண்டாள் திருப்பாவை பாவை நோன்பு பற்றிச் பேசுகிறது. "நெய்யுண்ணோம், பாலுண்ணோம்" என நோன்பு விதிகளை எடுத்துக் கூறுகிறது. கண்ணனைக் கணவனாக பெறுதல் வேண்டும் என்னும் நோக்கில் மகளிர் நோன்பாற்றுவதாக அப்பாடல்கள் குறிக்கின்றன.

## நோன்பும் திருவெம்பாவையும்

திருவெம்பாவையில் நோன்பு பற்றிய குறிப் புக்கள் ஏதுமில்லை. திருவெம்பாவை மகளிர் மழை பெய்தல் வேண்டும், அடியார்களை கணவன் மார்களாகப் பெறுதல் வேண்டும் என நீராடும் முகத்தான் வேண்டுகோள் விடுக்கின்றனரேயன்றி நோன்பு நோற்கவில்லை. அதிகாலையில் மகளிர்கள் எழுந்து எழாத மகளிர்களின் வீட்டுக்குச்சென்று அவர்களை எழுப்பிக் கூட்டிக்கொண்டு இறைவன் புகழைப் பாடிப் பொய்கைக்குச் சென்று நீராடு கின்றனர். என்ற அளவோடு திருவெம்பாவை முடிந்து விடுகிறது. நீராடும் போது "கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோரெம்பாவாய்' எனச்சொல் வதால்அவர்கள்நீரில்பாய்ந்துவிளையாடுகின்றனர் என்பது புலனாகிறது. இதனால் திருவெம்பாவை மகளிரின் நீர்விளையாட்டுப் பாட்டே அல்லாமல் நோன்புப்பாட்டன்று என்பது தெளிவு.

திருவெம்பாவையில் இறைவனைக் கணவனாக பெறுதல் என்னும் குறிக்கோள் இல்லை. அடியார் களைக் கணவராகப் பெற வேண்டும் என்னும் குறிக்கோள் தான் உண்டு. வைணவ சமயத்தில் முத்தி நிலையிலும் அப்பிராகிருதத்திருமேனி ஆன்மாக்களுக்கு உண்டென்றும், அவை அவ் வுடம்பு கொண்டு தம் நாயகனாகிய திருமாலை நுகரும் என்றும் கூறப்படுவதால் திருப்பாவை அக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சைவசமயத்தில் முத்தி நிலையில் ஆன்மாக் களுக்கு எவ்வித உடம்புமில்லை என்றும் இறை வனுடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தை

நுகரும் என்றும் கூறப்படுவதால் திருவெம்பாவை அடியாரைக் கணவராகப் பெறுகின்ற நிலையினையே பேசுகின்றது.

மகளிரின் நீர் விளையாட்டுப் பாட்டை இம்மைப்பயன் வழங்குகின்ற பாடலாகவும், அதே சமயம் இறைவனைப் பற்றிய பல உண்மைகளை உணர்த்தும் பாடலாகவும் மணிவாசகர் அருளிச் செய்திருக்கிறார்.

### பாவையில் வரும் முதல் பாட்டு

திருவெம்பாவையின் முதற்பாட்டு நீர் விளை யாடுவதற்காக அதிகாலையில் விழித்தெழுந்த மகளிர் அவ்வாறு எழாத ஒரு தோழியின் வீட்டின் முன்நின்று பாடுவதாக அமைந்துள்ளது.

*'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்*
*மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொழிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து*
*போதா ரமளியின் மேனின்றும் புரண்டிங்கன்*
*ஏதேனுமாகாள் கிடந்தாள் என்னே என்னே*
*யீதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்"*

அதிகாலையில் விழித்தெழுந்த மகளிர் சிலர் ஒரு தோழியின் வீட்டின் முன் நிற்கின்றனர். அத்தோழி ஆழ்ந்த தூக்கத்தில் தன்னை மறந்து படுக்கையினின்று புரண்டு கீழே கிடக்கிறாள் அவளைப் பார்த்த மகளிருள் ஒரு சிலர் "நாங்கள் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியைப் பாடிக் கொண்டு வருகிறோம். இப்பாடலைக் கேட்டும் நீ தூங்குகிறாய்: உன் செவி செவிடோ" என வினவுகின்றனர்

"வாள்தடங்கண்" என்றால் ஒளி பொருந்திய விசாலமான கண்கள் என்று பொருள். காலை ஒளியைக் காண வேண்டிய கண் இருளில் மூழ்கிக்கிடக்கின்றதே என்னும் குறிப்பில் அப் பெண்ணின் கண்களை 'வாள்தடங்கண்" எனக் கூறுகின்றனர். பெண்களுக்குக்கண்கள்விசாலமாக அமைந்திருக்க வேண்டும் என்பதும் இதனால் பெறப்படுகிறது. "தூங்குகிறாயோ" என்று சொல்வது இங்கிதக் குறைவெனக் கருதி "வளருதியோ" என்கின்றனர். வளர்தலில் ஒரு நுட்பம் உண்டு. நம் உடல் பகல் நேரத்தில் வளர்வதில்லை. தூங்கும் பொழுதுதான் அது வளரும். இதனால் தூக்கத்தைக் கண் வளர்தல் எனச் சொல்லும் மரபு உண்டு. "செவிடோ" என்றால் கேட்பதற்கு நன்றாக இராது. எனவே "வன்செவியோ நின்செவிதான்" என்கின்றனர். இறைவன் புகழைக் கேளாத செவிகள் வன் செவிகள் என்னும் பொருளையும் இது தருகிறது. "திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே" என்னும் இளங்கோவடிகள் வாக்கு ஈண்டு நினைவு கூறத்தக்கது.

*"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத்தலை."*

என்னும் குறளுரையில் பரிமேலழகர் 'தலைமேல் வைத்துக் கூறினாரேனும் இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் பயனில' எனக் குறிப்பிட்டுள்ளார். இது போலவே இறைவன் புகழைக் கேளாத செவிகள் பயனில எனச் செவியின் மேல் வைத்து மணிவாசகர் கூறினாரேனும் இனம் பற்றி வணங்காத தலைகளும் கூப்பாத கரங்களும் பாடாத நாக்களும் வலம் வராத பாதங்களும் பயனில என்பது போதரும்.

இதுவரை எழுப்பச் சென்ற மகளிருள் ஒரு சிலர் மேற்கண்டவாறு சொல்லித் தம் பேச்சை நிறுத்தி விட்டனர். அப்பொழுது அவர்களுள் கூட இருந்த வேறு சில மகளிர் முன்பு பேசியவர்களை பார்த்து நம் தோழியை இவ்வாறு நீங்கள் ஏசக் கூடாது.

அவள் உண்மையில் தூங்கவில்லை. நாம் வீதியில் இறைவன் புகழைப் பாடிக் கொண்டு வந்ததைக் கேட்டதும் மெய்மறந்து இறைவன் நினைவில் ஒன்றிப் படுக்கையினின்றும் புரண்டு கீழே வீழ்ந்து கிடக்கிறாள். இறைவன் புகழ் பாடல்கள் அவளை உருக்கி மெய்மறக்க செய்துவிட்டன. அதனால் அவள் எழுந்து வர முடியாதவளாகச் செயலற்று கிடக்கிறாள் என்று கூறுகின்றனர். தூ ங்குகின்றதற்கு வேறு ஒரு காரணம் கற்பித்து இவ்வாறு அவர்கள் நகையாடிச் சொல்வது உள்ளே படுத்திருப்பவளுக்கு நாணத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை அவள் உடனே எழுந்து தம்முடன் கலந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் இவ்வாறு புகழ்வது போலப் பழித்துப் பேசுகின்றனர். இருவகை உரையாடல்களை ஒரே பாடலில் அமைத்து மணிவாசகர் அருளிச் செய்திருப்பது இலக்கியச் சுவையோடு நகைச் சுவையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

இப்பாடலுக்கு இவ்வாறு உரை கூறாது. "வேறு ஒருத்தி இறைவன் புகழைக் கேட்டு மெய்மறந்து கிடக்கின்றதாகவும் அவ்வாறிருக்க "நீ தூங்குகின்றாயே?" என எழுப்ப வந்த பெண்கள் சொல்வதாக பலர் உரை கூறியுள்ளனர். முதற்பாட்டு முதன்முதல் எழுப்பப்படுகிற பெண்ணைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். மேலும் வேறொருத்தி மெய்மறந்து கிடப்பதை இங்கே சொன்னால் நீயும் அவ்வாறு "மெய்மறந்து கிட" என்னும் பொருளை அறிவுறுத்துமேயன்றி "எழுந்து வா" என்னும் பொருளை அறிவுறுத்தாது. சினமும் நாணமும் உண்டாகும் வண்ணம் நகையாடிப் பேசினால்தான் அவள் எழுந்து வருவாள். இக் குறிப்பில்தான் இப் பாடல் அமைந்திருக்கிறது.

## சத்தியை வியந்தது

பழைய ஏட்டுப் பிரதிகளில் திருவெம்பாவைக்குச் சக்தியை வியந்தது எனத் தலைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு உரையாசிரியர்களில் சிலர் ஒரு சக்தி மற்றொரு சக்தியை எழுப்புவதாக இப்பாடல்கள் அமைந் துள்ளன என்று கூறுகின்றனர். அவ்வாறிருந்தால் இச்சக்திகளின் இலக்கணங்களும் செயற்பாடுகளும் இப்பாடல்களில் குறிப்பு வகையாக பேசப்பட்டிருக்க வேண்டும். மேலும் சக்திகள் அனைவரும் எழுந்த பின்னர் என்ன செய்கின்றனர் என்பதையும் பிற்பகுதியில் பாடல்கள் பேச வேண்டும் இல்லாத தத்துவப்பொருள்களை வலிந்தும் நலிந்தும் புகுத்திப் பார்ப்பது சிறப்பாகாது. இம்மைப்பயனாகிய மழை பொழிதலும் நல்ல கணவரைப் பெறுதலும் இப்பாடற்கண் பேசப் பெறுவதால், மகளிரின் வேண்டுகோள் பாட்டாகவே இவற்றைக் கொண்டு பொருள் காண்பது பொருத்தமாகும்.

## அம்மைக்குரிய தனிப்பாடல்கள்

"சக்தியை வியந்தது" என்பதற்கு உண்மை யான பொருளை உரையாசிரியர்கள் காணத் தவறிவிட்டனர். பன்னிரு திருமுறைகளில் உள்ள பாடல்களை நோக்கினால் ஒரு பாடல் கூட அம்மையைத் தனித்துப் பாடும் நிலையிலும் அமையவில்லை.

*"உண்ணா முலையாள் உடனாகிய*
*அண்ணாமலையான்"*

என இறைவனோடு சாத்தியே அடியார்கள் அம்மையை வாழ்த்தியிருக்கின்றனர். திருவெம் பாவையில் மட்டும் ஒரு பாடலில்

*"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்*
*பாதத்திறம்பாடி ஆடலோ ரெம்பாவாய்"*

என அம்மையைத் தனித்து வாழ்த்தும் திறம் பேசப்பட்டுள்ளது. இதனாலேயே "சக்தியை" வியந்தது எனப் பழைய ஆசிரியர்கள் தலைப்புக்

கொடுத்திருக்கின்றனர். மணிவாசகர் இவ்வாறு அம்மையைத் தனித்துப் பாட அனுமதி கொடுத்த பின்னர்தான் அவளுக்கே உரிய வாழ்த்துப் பாடல்கள் தமிழில் தோன்றியிருக்கின்றன. இன்றும் கூட தமிழில் விநாயகர் முருகன் சிவன் ஆகியோர் மீது தனித்துப் பாடப்பட்டிருக்கும் அளவு அம்மைக்குப் பாடல்கள் இல்லை என்பது நினைக்கத்தக்கது. இக்கருத்துக்களை மகாவித்துவான் அருணை வடிவேல் முதலியாரவர்கள் தாம் எழுதியுள்ள திருவாசகக் குறிப்புரையில் எடுத்துக் காட்டியிருக் கிறார்கள். திருவெம்பாவையில் எழுப்பச் சென்ற பெண்களும் எழுப்பப்படும் பெண்ணும் மாறிமாறி உரையாடுவது இனிய இலக்கிய இன்பத்தை நமக்குத் தருகிறது.

## பாவையில் வரும் மற்றொரு பாட்டு

இன்னொரு பாடலைப் பார்ப்போம்.

*"முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்*
*அத்தனானந்த னமுதனென்றள்ளூறித்*
*தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்*
*பத்துடையீரீசன் பழவடியீர் பாங்குடையீர்*
*புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ*
*எத்தோ நின்னன்புடைமை யேல்லோ மறியோமோ*
*சித்தமழகியார் பாடாரோ நம்சிவனை*
*இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்"*

எழுப்ப வந்த பெண்கள் உள்ளே படுத்திருக்கும் பெண்ணைப் பார்த்து "முத்துப் போன்ற வெள்ளிய பல் வரிசையை உடைய பெண்ணே! நீ எங்களுக்கு முன்னே எழுந்து வந்து அத்தன் என்றும் அமுதன் என்றும் பெருமானை வாயினிக்கப் பேசுவாய். இப்பொழுது தூங்குகிறாய். நீ எழுந்து வந்து உன் வாசற் கதவை திறப்பாயாக" என்று சொல்கிறார்கள். உள்ளே படுத்திருந்த பெண் விழித்தெழுந்து சிறிது நாணத்தோடு அவர்களை பார்த்து "நான் முன்னே எழுந்து வந்திருக்க வேண்டியவள் தான். என்னையறியாமல் தூங்கி விட்டேன். நீங்களெல்லாம் மிகுந்த பக்தி உடையவர்கள். பெருமானுக்கு நீண்ட காலமாக தொண்டர்களாக விளங்குகிறீர்கள். நானோ புதியவள். புதியவளாகிய என் பிழையைப் பொறுத்து ஆட்கொண்டால் அதனால் எந்த பொல்லாங்கும் வரப் போவதில்லை." என்று விடையிறுக்கிறாள். இகழ்ச்சிக் குறிப்பாக நகையாடியே இவ்வாறு சொல்கிறாள். இதனைச் செவியுற்ற வெளியில் நின்ற பெண்கள் இவள் சினத்தோடு பேசுகிறாள் என்று நினைத்து "உன் அன்பு எவ்வளவு பெரியது: எல்லாம் நாங்களறிவோம்" எனக் கூறுகிறார்கள். ஆனால் இந்த விடையையும் உள்ளே இருந்த பெண் இகழ்ச்சி குறிப்பாகவே எடுத்துக்கொள்கிறாள். "நீங்கள் சொல்கிறபடி நான் செவ்வையான பக்தியுள்ளம் படைத்தவளாக இருந்திருந்தால் முன்னரே எழுந்து வந்து எம் பெருமானை பாடியிருக்க மாட்டேனா?" என வினவுகிறாள். அவள் எழுப்பிய அவ்வினா அவள் இன்னும் கோபம் தணியாமலே பேசுகிறாள் என்பதை எழுப்ப வந்தவர்களுக்கு உணர்த்திற்று. அவர்கள் சலித்துப்போய் "இவ்வளவும் எங்களுக்கு வேண்டியதுதான்: நாங்கள் உன்னை இகழ்ந்து விட்டோம் என்ற கருத்தில் பேசுகிறாய். நீ கோபித்துக் கொள்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்." என்று சொல்கிறார்கள். உள்ளே படுத்திருந்தவள் புன்னகையோடு எழுந்து வந்து இவர்களோடு கலந்து கொள்கிறாள். மணிவாசகர் ஒரே பாடலில் இவ்வாறு உரையாடலை அமைத் திருப்பது நகைச்சுவையாகவும் இருக்கிறது. இலக்கியமாகவும் இருக்கிறது. அதிகாலையில் எழுந்து வந்து இறைவனைப் பாட வேண்டும் என்றும் அறிவுறையாகவும் அமைந்துள்ளது. திருவெம்பாவை பாடல்களுக்கு உரை எழுதிய வர்கள் இக் கண்ணோட்டத்தோடு எழுதியிருந்தால் மிகவும் சுவையாக இருந்திருக்கும். திருப்பாவை உரையாசிரியர்கள் பாடல்களை இயல்பான கண்ணோட்டத்தோடு நோக்கி உரை எழுதியிருப்பதால்

அவ்வுரைகள் நம் உள்ளத்தை கவர்கின்றன. சிலவிடங்களில் அவர்களும் தத்துவப் பொருள்களை வலிந்து சொல்லும்போது சுவை குன்றிப்போகிறது. திருவெம்பாவைக்கு இயல்பான கண்ணோட்டத்திலேயே நாம் உரை காண வேண்டும்.

மகளிர் விளையாட்டுக்கள் பலவற்றை கருவியாக கொண்டு மணிவாசகர் பாடியருளிய பகுதிகள் திருவாசகத்தில் நிறைய உள்ளன.

## அம்மானைப் பாட்டு

திருவம்மானையில் அவர் பாடியுள்ள ஒரு பாடல் இறைவனின் பெருங் கருணைத் திறத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

*"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை*
*வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்*
*கல்லைப் பிசைந்து கனியாக்கி தன் கருணை*
*வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனைத்*
*தில்லைநகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்*
*ஒல்லைவிடையானைப் பாடுதுங் காணம்மானாய்"*

முதலில் மணிவாசகர் தம் மனமாகிய கல்லை இறைவன் பிசைந்து பக்தியாகிய சுவையை தருகின்ற பழமாக ஆக்கியிருக்கிறான் என்று சொல்லுகிறார். இது வேறொரு நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது மிகுந்த சுவையைத் தருகிறது. இறைவன் திரிபுர சங்காரத்திற்காகப் புறப்படும் போது மேருமலையாகிய கல்லை வில்லாக்கியிருக்கிறான். கல்லை வில்லாக்கிய அவன் அவ்வில்லை பயன்படுத்தாமல் சிரித்தே திரிபுரத்தை எரித்து விட்டான். சிரித்தே எரிக்கும் ஆற்றலுள்ள இறைவன் கல்லை வில்லாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இறைவன் செயல் வீணாக நடைபெறாது. அப்படியானால் ஏன் கல்லை வில்லாக்கினான்? மணிவாசகனாகிய ஒருவன் பின்னே பிறக்கப் போகிறான்: அவன் மனம் மேருமலையைப் போல் கல்லாக இருக்கும்: அதனைக் கனியாக்க வேண்டும்: அதற்காக மேரு மலையாகிய கல்லை வில்லாக்கிப் பழக வேண்டும் என நினைத்திருக்கிறான். தன் மனத்தை கனியாக்கு வதற்காக நடத்தப்பட்ட ஒத்திகையே திரிபுரசங்காரம் என நினைப்பது போல மணிவாசகரின் இவ்வாக்கு அமைந்திருக்கிறது. இதுதொனிப்பொருளாகும். கனி எக்காலத்திலும் கிடைக்காது. குறிப்பிட்ட பருவங்களில் தான் அது கிடைக்கும். மேலும் நாளடைவில் அழுகிக் கெட்டு விடும். "என் மனத்தை கனியாக்கிய இறைவன் அதனை அப்படியே விட்டு விட்டால் அழுகிக் கெட்டுப் போய் விடுமன்றோ? அதற்காக அவன் மற்றொரு செயலையும் செய்திருக்கின்றான். பழம் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமானால் அதை தேனில் ஊறப் போட்டு வைத்து விட்டால் ஊறுகாய் போல அஃது எப்பொழுதும் அப்படியே இருக்கும். இது போல, "என் மனமாகிய கனியை உன் கருணை வெள்ளமாகிய தேனில் இட்டு கெடாமல் வைத்திருக்கிறாய்" என மணிவாசகர் பேசுகிறார். தேனில் ஊறப் போட்டுப் பழங்களைத் தகரடப்பாக்களில் அடைத்துவைக்கின்றஒருவணிக முறையை மனத்தில் கொண்டு இறைவனும் என் மனமாகிய கனியைக் கருணையாகிய தேனில் உறப் போட்டு வைத்திருக்கிறான் எனச் சொல்வது மிக நயமாக அமைந்திருக்கிறது.

## பக்தி இலக்கியம்

மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் இலக்கியச் சுவை சொல்தோறும் மிளிர்வதைக் காணலாம். தேனாய் அமுதமுமாய் இறைவன் இருக்கிறான் எனப் பாடுவதே இலக்கியச் சுவை தான். இலக்கியச் சுவை இன்றிப் பக்திச் சுவையை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்த முடியாது. சுருங்கச் சொல்லப் போனால் இலக்கியத்தையே மணிவாசகர் பக்தியாக்கி வெளிப்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு பாடலையும் எடுத்துக் கொண்டு இலக்கிய நயங்கள் பலவற்றை வெளிப்படுத்தலாம்.



# திருவாசகத்தில் பக்திச்சுவை

முரு.பழ. இரத்தினம் செட்டியார்

## பக்தி நெறி

மணிவாசகப் பெருமானுக்கு இறைவன் அறிவுறுத்திய நெறி பக்தி நெறிதான் என்பதை அவரே மிகத் தெளிவாக

*"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்*
*பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்*
*சித்தமல மறுவித்துச் சிதுமாக்கி யெனையாண்ட*
*அத்தனெனக் கருளிய வாறார் பெறுவாரச்சோவே"*

எனக் கூறியருளியிருக்கிறார். இப் பாடலில் இறைவன் தனக்கு 'பத்திநெறியறிவித்தான்' என்றும் அப்பத்தி நெறியால் ஆணவம், கன்மம், மாயை என்னும் சித்தமலங்களை அறுவித்தானென்றும் சுவாமிகள் சொல்வதால் சைவ சித்தாந்தம் சொல்லும் நெறி 'பத்திநெறியே' என்பது பெறப்படும்.

## பத்தியும் ஞானமும்

சைவ சித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் கூறப்படும் நான்கு சாதனங்களுள்

சரியை கிரியை யோகம் ஆகிய மூன்றும் பத்தி நெறியே என்றும், ஆனால் இறுதியில் கூறப்படும் ஞானம் அறிவுநெறியே என்றும், ஞானத்தால் தான் வீடு எனச் சிவஞானசித்தியார் சொல்வதால் அன்பு நெறியால் அருளைப் பெற்றாலும் முடிவில் அறிவு நெறியாகிய ஞானத்தால் தான் விடு பெறலாமென்றும் சிலர் சொல்லுவர். இதனாலேயே அன்பு நெறி, அறிவு நெறியென இரு நெறியாகப் பிரித்து அவர்கள் பேசுவதைக் காண்கிறோம். ஆழ்ந்து நோக்கினால் சைவசித்தாந்தத்தில் அன்பு நெறியே அறிவு நெறியென்றும். அன்பு நெறியால் தான் இறைவனை அடைதல் வேண்டும் என்றும் கூறப்பட்டிருப்புது புலனாகும்.

## சிவஞான சித்தியாரும் ஞானமும்

சிவஞான சித்தியாரில் 'ஞானத்தால் வீடு' எனக் கூறும் பாடலில் ஞானம் என்பது திருவடி ஞானமே - அதாவது பதி ஞானமே எனக் கூறப்பட்டுள்ளது. பதிஞானம் என்பது இறைவன் ஞானமேயன்றி, ஆன்மாக்களாகிய நம் ஞானமன்று இதனால் நம்முடைய ஞானத்தால் - அதாவது பசு ஞானத்தால் இறைவனை அடைய முடியாதென்பதும் தெளிவாகிறது. இறைவன் ஞானத்தை ஆன்மா துணையாகக் கொண்டு அவனை அறியும்போது அவன் ஆன்மாவிற்கு செய்து வருகின்ற எல்லையற்ற உதவிகள் இனிது புலனாகும். அவ்வுதவிகளை நினைக்கும் தோறும் ஆன்மாவின் இச்சை அவனிடத்தே மீதூறும். அந்நிலையில் ஆன்மா தன்னை மறந்து இறைவனோடு ஒன்றிப் போய் பேரின்பத்தை நுகரும். ஆன்மாவின் இச்சை மீதூர்தல் என்பது அதன் அன்புப் பெருக்கையே குறித்து நிற்கிறது. அன்புப் பெருக்கினாலன்றி ஆன்மா அவனோடு ஒன்றி முத்திப் பேரின்பத்தை பெற இயலாது. ஆகவே அன்பால்தான் முத்தி சித்திக்கும். ஆன்ம அறிவு அதற்குத் துணை இருக்கும். ஞானம் என்பது பதி ஞானத்தையே குறிக்குமாதலால் ஆன்மாவுக்கு உள்ள ஒரே வழி அந்த ஞானம் துணையாக இறைவனிடத்தே அன்பு செலுத்துதலேயாகும். அன்பால்தான் முத்தி சித்தியாகும் என்பதைச் சிவஞான போதம் பதினோராம் சூத்திரத்தில்

*"அயரா அன்பின் அரன்கழல் செலுமே"*

எனக் கூறுவதன் மூலம் மெய்கண்டார் இனிது புலப்படுத்துகிறார். இதற்கு அவர் எழுதிய அதிகரணத்தில், 'பத்தியினால் மறவாதேத்த அவரது சீபாதத்தை அணையும்' எனக் கூறியிருக்கிறார். அறிவுக்குப் பயன் மறவாமையேயாதலால் இறைவனை மறவாது பத்தியினால் ஒத்த அவனது திருவடிப் பேறு கிட்டும் என மெய்கண்டாரே தெளிவாக சொன்ன பிற்பாடு அறிவு நெறி எனத் தனியாக பிரித்துப் பேசுவது சைவ சித்தாந்தத்திற்குப் பொருந்தாதென்பதைக் கூறவேண்டியதில்லை.

## திருவாசகமும் மெய்கண்டாரும்

மெய்கண்டார் "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்னும் கருத்தைத் திருவாசகத்தில் இருந்துதான் எடுத்திருக்கிறார் திருவாசகம் சென்னிப் பதிகத்தில் மணிவாசகர்

*'யாவராயினும் அன்பரன்றி யறியொணாமலர்ச்*
*சோதியான்'*

எனக் கூறியிருக்கிறார். யாரா இருந்தாலும் - அதாவது ஒருவர் யோகியாக இருந்தாலும் அல்லது ஞான விசாரணை செய்யும் ஞானியாக இருந்தாலும் இறைவனுக்கு அன்பரானாலன்றி அவனை அறிய முடியாதென்பது மணிவாசகர் கருத்தாகும். பதி, பசு, பாசம் பற்றிய ஆய்வும் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய விசாரணையும் அறிவு நெறியைச் சார்ந்தவை எனச் சிலர் கருதுகின்றனர். இவற்றின் சிறப்பியல்புகள் பதி

ஞானத்தால் அன்றி அறிய வாராததலாலும் பொதுவியல்புகள் நிலையாமையை உணர்த்தி நிலைபேறாக உள்ள இறைவனிடத்தே பக்தியை மிகுவிப்பதாலும் பதிஞானம் உலகப் பற்றை நீக்கி அன்பால் இறைவனை சிவகப் பற்றும் நிலையில் தோன்றுவதாலும் பத்தி நெறியின் ஒருவறாகாது இவ்வறிவு விசாரணை சைவசித்தாந்தத்துள் கொள்ளப்படுகிறதென அறிதல் வேண்டும்.

## ஞானம் என்பது அன்பே

பத்தியின் துவக்க நிலை சரியை கிரியை யோகமென்றும் முடிந்த நிலை ஞானமென்றும் கொள்ளப்படும். முழுமையான பத்தியையே சைவம் ஞானமெனச் சொல்கிறதென்பதைச் சேக்கிழார் பெருமான்.

"ஞானம் ஈசன் பாலன்பே" - எனக் கூறுவதன் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

## சுந்தரர் வாக்கு

பத்தியின் துவக்க நிலையில் இறைவனைக் காயத்தால் வணங்கியும் வாயினால் ஏத்தியும் மனத்தால் நினைந்தும் ஆன்மா வழிபடும் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

*"பன்னாள் வாயினாற்கூறி மனத்தினால் நினைந்து*
*பாக்கிலாச் சிரமத்தடிகளை அடிதொழ"*

என இம் மூவகை வழிபாட்டையும் குறிப் பிடுகிறார்.

## சதுரால் முடியாது

மணிவாசகரும் இம் மூவகை வழிபாட்டையும் தேனினும் இனிய தீந்தமிழில் பின்வருமாறு பேசுகிறார்.

*"ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்*
*பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்*
*கோமானின் திருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்*
*சாமாறே விரைகின்றேன் சதராலே சார்வானே"*

"ஆமாறுன் திருவடிக்கே" என்பதை உன் திருவடிக்கே ஆகுமாறு என மாற்றவேண்டும். "என் மனம் உன் திருவடிக்கே ஆகுமாறு குழையேன் என்கிறது" என்பதே இதன் பொருள். மனத்தால் அகம் குழைவதென்பது அவனை நினைத்து நிற்பதாகும். "குழைதல் என்றால் நெகிழ்தல் என்று பொருள். மனம் குழைந்ததும் அன்பு பெருக்கெடுத்தோடும். இதனையே "அன்புருகேன்" என அவர் சொல்கிறார். "உருகுதல் என்றால் பெருக்கெடுத்தோடுதல் என்பது பொருள். பூமாலை புனைதல், திருக் கோயிலில் மெழுகுதல், கூத்தாடுதல் முதலியவை காயத்தின் தொழிலாகும். ஏத்தலும் புகழ்தலும் வாக்கின் தொழிலாகும். மனம் வாக்கு காயம் மூன்றும் அவனிடத்தே ஈடுபடுதல் வேண்டும் என்பதையே எதிர்மறை வகையால் தன்மேலேற்றி அடிகள் கூறியிருக்கிறார். "இவ்வாறு அன்பு நெறியில் நின்று உருகாமல் என் அறிவால் உன்னை அடைந்து விடலாம் என நான் முயல்கின்றேன். அம் முயற்சியில் நான் விரைந்த சாவதற்குரியதாகின்றதேயன்றி உன்னை அடைவதற்கரியதாக இல்லை." என ஈற்றடியில் கூறுகிறார். "சதுரால்" என்றால் அறிவால் என்று பொருள். சார்வானே" என்றால் "எல்லாப் பொருள்களுக்கும் சார்பாக உள்ளவனே என்று பொருள். முன் அடிகளில் அன்பு நிலையை குறிப்பிட்டுபின்னடியில்அறிவுநிலையால்சாவதற்கே விரைகிறேன் என அவர் சொல்வதன் வாயிலாக நம் அறிவால் அவனை அடைய முடியாதென்பதை உணர்த்துகிறார். அன்பைச் சொல்லி அதற்குப் பின்

சதுரால் என சொல்வதால் அன்பு நெறிக்கும் அறிவு நெறிக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தவே இவ்வாறு பேசுகிறார் என்பது தெளிவு "சதுர்" என்பதற்கு உலக ஆரவாரம் எனப் பொருள் கூறுவாருமுண்டு. ஆனால் "அன்புருகேன்" எனச் சொல்லிச் "சதுரால் சாமாறு விரைகின்றேன்" எனக் கூறுவதால் "அன்பால் தான் உய்யலாம், அறிவால் முடியாது" எனப் பொருள் கொள்வதே சிறப்பாகும். "சதுர்" என்றால் சாமர்த்தியம் எனவும் ஒரு பொருள் உண்டு. அறிவு நெறி சாமர்த்திய நெறியேயன்றி அன்பு நெறியைப் போல பயன் தரும் நெறியன்று. சங்கரர் வேதாந்தத்தில் அறிவு நெறி மிகுதியாக எடுத்துப் பேசப்பட்டுள்ளது. அதில் கூறப்படும் விவாதம் சாமர்த்திய வாதமாக இருக்கிறதேயன்றி உண்மை விவாதமாக இல்லை. இதனை உளம் கொண்டே "சதுரால்" என்னும் மணிவாசகர் வாக்கை நாம் சிந்திக்க வேண்டும் "அறிவு நெறி" செருக்கை விளைவிக்குமாதலால் அடிகள் அதனை உயர் நெறியாக கொள்ளவில்லை.

## மனம் மொழி மெய் பற்றி மணிவாசகர்

மனம் மொழி மெய்களால் பக்தியை வெளிப்படுத்துகின்ற சாதனத்தை இன்னொரு பாடலில் மணிவாசகர் மிகஅருமையாக சொல்கிறார்.

*"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்*
*கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி*
*வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்*
*மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார*
*வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை*
*மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்*
*தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்*
*தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"*

"சிந்தனைநின்றனக்காக்கி" என்றால் மனத்தை நின் திருவுருவம் முழுவதையும் நினைப்பதற்காக்கி என்பது பொருள். இறைவன் வடிவில் மனம் அழுந்தி நின்றால் அஃது அவ்வடிவமாகவே ஆகிவிடும். இதனை தியானசித்தி என்று கூறுவர். கண்களை இறைவனின் திருவடித் தாமரை மலர்களுக்கே ஆக்குவதென்பது, புறத்தே உருவத் திருமேனிக் கண் உள்ள திருவடிகளையே பார்த்து நெகிழ வேண்டும் என்பதை குறிக்கும். "வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி" என்றால் வழிபாட்டையும் "அத்திருவடி தாமரை மலர்களுக்கே ஆக்கி" என்பது பொருள். இது காயத்தின் தொழிலாகும். மனத்தின் தொழிலை முதலிற் சொன்னவர் அடுத்துக் காயத்தின் தொழிலை சொல்கிறார். மனம் காயம் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டு நிற்பது வாக்காகும். வாக்கு இவ்விரண்டின் பக்கமும் சாரும். ஒரு சொல்லை சொல்லும் போது அதனை மனத்தால் நினைந்துதான் சொல்ல வேண்டும். வாக்கு மனத்தின் சார்பால் தான் வெளிப்படும். ஆனால் சொல்லை வாயால் தான் சொல்ல வேண்டும். இது வாக்கு காயத்தை சார்ந்தது என்பதை உணர்த்தும். மன வழிபாட்டையும் காய வழிபாட்டையும் சொன்ன மணிவாசகர் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட மொழி வழிபாட்டை இறுதியில் பேசுகிறார். "வாக்கு உன் மணிவார்த்தை காக்கி" என்று கூறுகிறார். இறைவன் புகழை பாடுவதற்காகவே வாக்கைப் பயன்படுத்த வேண்டும். இறைவன் புகழை பாடுகின்ற வாக்குகள் பொருட் செறிவு இல்லாதவையாக இருப்பினும் கூட அவை அவனை நோக்கி கூறப்படுபவையாக இருப்பதால் மணிவார்த்தைகளாகின்றன. "மணி வார்த்தை" என்று சொன்னமையால்தான் மணிவாசகர் என்னும் பெயர் அவருக்கு ஏற்பட்டதோ? என்று நாம் நினைக்க வேண்டியுள்ளது. இவ்வாறு இப்பாட்டில் மனம் மொழி மெய் வழிபாடு பேசப்பட்டிருப்பதை காணலாம்.

## ஞான நிலை

நாம் மேலே கூறியபடி பத்தியின் துவக்க நிலையில் மனம், மொழி, மெய் வழிபாடு ஆகிய இம் மூன்றுமே நிகழும். பத்தியின் உச்சக் கட்டத்தில் இறைவன் பதி ஞானத்தை உணர்த்த ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் அப்பதி ஞானத்தையே கருவியாகக் கொண்டு அன்பு மேலிட இறைவனைப் பற்றும். அஃதே ஞானநிலையாகும். இந் நிலை கூடுவது எளிதன்று. பல பிறவிகளில் செய்த மனம் மொழி மெய்வழிபாட்டால் எடுத்த இப்பிறவிகளில் அவ்வழிபாட்டை முனைந்து நின்று செய்வதாலுமே இது கை கூடும்.

மணிவாசகர் பரமுத்திநிலை தனக்கு விரைவில் கூட வேண்டுமென்று துடிதுடிக்கிறார். இதற்குத் தடையாகத் தன் உடல் இருக்கிறதோ? என்று எண்ணுகிறார். இவ்வுடலைப் போக்கி விடலாமோ? என்ற எண்ணமும் அவருக்கு உதிக்கிறது. இவ்வெண்ணம் மீதூரப் பெற்ற நிலையில் அவர் பாடியுள்ள பாக்கள் நெஞ்சை உருக்குகின்றன.

*"வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி*
*நாயேனை*
*தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற்*
*றதனாலே*
*முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்து நான் முட்டினேன்*
*தலைகீறேன்*
*இனையன் பாவனை இரும்பு கல்மனம் செவி இன்னதென்*
*றறியேனே"*
*"ஓய்விலாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த்*
*தாள் தந்து*
*நாயிலாகிய குலத்திலும் கடைப்படும் என்னை நன்*
*னெறிகாட்டிக்*
*தாயிலாகிய இன்னருள் புரிந்த எனை தலைவனை*
*நனிகாணேன்*
*தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன் செழுங்கடல்*
*புகுவேனே"*

தீயில் விழாமலும் மலையிலிருந்து உருளா மலும் இருக்கின்றேனே? எனஅடிகள் கூறுவது அதி தீவிர பக்தியின் உச்ச நிலையாகும். கண்ணப்பநாயனார் கண்ணைத் தோண்டி அப்பிய செயல் அதி தீவிர பக்தியின் உச்ச கட்ட விளைவேயாகும்.

## உடல் நீக்கம்

உடலை போக்கிக் கொள்ள எண்ணுகின்ற மணிவாசகர் அவ்வாறு செய்யாமைக்கு ஒரு காரணம் உண்டு. குருந்த மரத்தின் கீழ் இருந்த குருநாதர் "நீ இவ்வுலகில் இருந்து பணியாற்றுக"! எனக் கூறி விட்டுச் சென்றிருக்கிறார். அந்த ஆணையை மீற முடியாமல் மணிவாசகர் தவிக்கிறார். மீண்டும் மீண்டும் வேண்டுவதை தவிர வேறு வழியில்லை என நினைக்கிறார். தம் வேண்டுகோளை பின் வருமாறு சொல்கிறார்.

*"பாடவேண்டுநான் போற்றி நின்னையே*
*பாடினைந்துனைந் துருகி நெக்கு நெக்*
*காடவேண்டு நான் போற்றி அம்பலத்*
*தாடு நின் கழற் போது நாயினேன்*
*கூட வேண்டு நான் போற்றி யிப்புழுக்*
*கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்*
*வீட வேண்டு நான் போற்றி வீடுதந்*
*தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே"*

## சாகாக் கலை

வீட்டு நிலையில் ஆன்மாவுக்கு எவ்வித உடலுமில்லை. ஆன்மா வியாபகமாக இறைவ னோடு இரண்டறக் கலந்து நிற்பது தான் வீட்டு நிலை எனக் கூறப்படும். உடலை அழியாமல் நித்தியமாக வைத்துக் கொள்ள வேண்டும் எனக் கருதி அதற்கான சாதனை முறைகளைப் பயில்வோர் சிலர் உண்டு. இச் சாதனை முறைகளுக்கு

சாகாக்கலை எனப் பெயரிட்டுள்ளனர். மரணமிலாப் பெருவாழ்வு எனவும் இதனைக் கூறுவர். ஆனால் மணிவாசகர் இப்பாடலில் "இப்புழுக்கூடு நீக்கி வீடு தந்தருள வேண்டும்" எனச் சொல்வதால் நித்திய தேகக் கொள்கையை அவர் உடன்பட வில்லை என்பது தெளிவாகும். வீட்டு நிலை என்பது எவ்வித உடலும் இல்லாத நிலையே என மணிவாசகர் வாக்கிலிருந்து புலனாகிறது. வள்ளுவப் பெருந்தகையாரும்,

*"மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க*
*லுற்றார்க்கு உடம்பு மிகை"*

எனக் கூறுவது ஈண்டு நினைக்கத்தக்கது. இறவாமை என்பது மீண்டும் பிறவாமையே என்பது மணிவாசகர் கருத்தாகும்.

## திருமேனி ஈடுபாடு

வாதவூரடிகள் உள்ளத்தை கவர்ந்து நின்றவை இறைவனின் இருவகைத் திருமேனிகளாகும். ஒரு திருமேனி குருந்த மரத்தடியின் கீழ் குருநாதனாக வந்து ஆட் கொண்ட திருமேனியாகும். அத் திருமேனி மானிடச் சட்டை போர்த்தி வந்ததாக இருந்தாலும் ஒளிமிக்க திருமேனியாக விளங்கிய தென்பதை மணிவாசகர்

"செந்தாமரை காடனைய மேனித் **தனிச்சுடரே"** எனக் கூறுவதன் வாயிலாக நமக்குணர்த்துகிறார். இத் திருமேனியைப் பலவிடத்தும் சுட்டிப்பாடுகிறார்.

"கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க" எனக் கூறுகிறார். "உருநாமறிய ஓர் அந்தணனாய் வந்தாண்டு கொண்டான்" எனச் சொல்கிறார்.

*"அந்தணனாகி ஆண்டுகொண்டருளி*
*இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்"*
எனப் பேசுகிறார்

*"கண்ணால் யானும் கண்டேன் காண்க*
*அருள்நனி சுரக்கும் அமுதே காண்க*
*கருணையின் பெருமை கண்டேன் காண்க*
*புவனியிற் சேவடி தீண்டினன் காண்க*
*சிவனென யானும் தேறினன் காண்க"*

என முழங்குகிறார். இவையனைத்தும் இத்திரு மேனிபால் அவர் கொண்ட பத்திப் பெருக்கை நமக்கினிது புலப்படுத்தும்.

## சாந்தத் திருமேனி

மற்றொரு திருமேனி இறைவன் குதிரை மேல் வந்த சாந்தத் திருக்கோலமாகும். மணிவாசகர் பொருட்டு இறைவன் காட்டிலுள்ள நரிகளை பரிகளாக்கிப் பாண்டிய அரசன் முன் கொண்டு வந்து நிறுத்துகிறான். அப்பொழுது அவன் ஒரு குதிரை மீது குதிரைச் சேவகர்கள் தலைவனாய் வீற்றிருந்து குதிரைகளை நடை பயில்வித்துக் காட்டுகிறான். அத்திருக்கோலம் மணிவாசகர் உள்ளத்தை பெரிதும் கவர்ந்திருக்கிறது. குருநாதனாக வந்த திருமேனியினும் பார்க்க இத்திருமேனி மீதே மணிவாசகர் அளவற்ற ஈடுபாடு கொள்கிறார்.

*"பெற்றிபிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்*
***கொற்றக் குதிரையின் மேல் வந்தருளித்** தன்னடியார்*
*குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி"*

என இந்நிகழ்ச்சியை அடிகள் குறிப்பிடுகிறார். இவ்விடத்தே ஆராய்ச்சியாளர்கள் வேறுவிதமாக பொருள்கொள்கின்றனர்.

## நரி பரியாக்கிய அற்புதம்

"தன்னடியார் குற்றங்கள் நீக்கி" என மணி வாசகர் இப்பாட்டில் சொல்வதால் நரி பரியாக்கிய நிகழ்ச்சி இவர் பொருட்டு நிகழ்ந்தன்று என்றும் இவருக்கு முன்னே இருந்த யாரோ ஓர் அடியவர் பொருட்டு மிகப் பழங்காலத்தே நடந்துள்ளதென்றும்

அதனால் தான் மணிவாசகர் "தன் அடியார்" எனப் பொதுப் பட கூறுகிறார் என்றும், தான் கண்டதாக இப்பாட்டில் கூறவில்லையென்றும் சொல்கின்றனர். இது பொருந்தாது. திருப் பொன்னூசலில்,

*"ஞாலமிக்க பரிமேல் கொண்டு நமையாண்டான்"*

எனக் கூறுவதால் அடிகள் தன் பொருட்டு நிகழ்ந்ததாகவே இதனைக் குறிப்பிடுகிறார் என்பது புலனாகிறது. இரண்டும் அவர் "நம்மை" எனச் சொல்வதால் இஃதும் பொதுப்பட கூறியதே யன்றித் தன்னைச் சுட்டிக் கூறியுள்ளது என வாதிப்போரும் உண்டு. இவ் வையப்பாடுகளையெல்லாம் போக்கு கின்ற முறையில் திருப்பாண்டிப் பதிகத்தில் மணிவாசகர் பின்வருமாறு பாடியுள்ளார்.

*"பருவரை மங்கை தன் பங்கரைப் பாண்டியற் காரமுதா*
*மொருவரை யொன்றுமிலாதவரைக் கழற்போதிறைஞ்சித்*
*தெரிவர நின்றுருகிப் பரிமேற்கொண்ட சேவகனார்*
*ஒருவரையன்றி யுருவறியா தென்றனுள்ளமதே"*

இப் பாட்டுக்கு அரண் செய்யுமாப் போல "அன்னைப்பத்தில்" பின்வருமாறு பாடுகிறார்.

*"பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரிமேற் கொண்டென்*
*உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்"*

"பரிமேற் கொண்ட சேவகனார் ஒருவரை அன்றி உருவறியா தென்றனுள்ளமதே" என்பதால் அடிகளார் நேரே அவ்வுருவை பார்த்திருக்கிறார் என்பது தேற்றம். "என் உள்ளமதே" என்பதால் இது பொதுப்பட கூறாது தன்னையே கூறியதாக அமைகிறது. அன்னைப்பத்தில் "என் உள்ளங் கவர்வரால்" என்பதால் அஃதும் தன் சொந்த அனுபவத்தையே தோழி கூற்றாகச் சொன்னதாகும் என்பதில் ஐயமில்லை.

## ஏக்க நிலை

கொற்றப் பரிமேல் வந்த கோலம் மணிவாசகர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டமையால் தான் அடிக்கடி அந்நிகழ்ச்சியைப் பாடுகிறார். இவ்வாறெல்லாம் தனக்கு எளிவந்த பெருமான் பின்னர் அவருடன் இருந்த அடியார்களை தீயில் மூழ்கித் தன் அடி சேருமாறு செய்து விட்டுத் தன்னை மட்டும் உலகில் இருக்குமாறு செய்த செயல் அவரால் தாங்க முடியவில்லை. இதனை மணிவாசகர்

*'போரே றெநின் பொன்னகர்வாய் நீபோந்தருளி*
*யிருணீக்கி*
*வாரே றிளமென் முலையாளோ டுடன் வந்தருள*
*வருள் பெற்ற*
*சீரே றடியார் நின்பாதம் சேரக் கண்டும் கண்கெட்ட*
*வூரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா*
*னுலவாதே"*

என்று ஏக்கத்தோடு குறிப்பிடுகிறார். தன்னை உலகில் இருக்குமாறு செய்ததற்கு ஏதோ ஒரு பொய்மை தன்னிடத்தே இருக்க வேண்டும் என்றும் அப் பொய்மையைப் போக்கிக் கொள் வதற்கு ஒரே வழி இறைவனை நோக்கி ஆடிப் பாடி நைந்துருகுவதுதான் என்றும் முடிவு கட்டுகிறார் இவ்வாறு அழுது அழுது பாடிய பாடல்கள் தாம் திருவாசகம் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன.

## அழுது பெறலாமா?

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் "அழுதடி அடைந்த அன்பர்" என்று மணிவாசகரை சுட்டுகிறார். இவ்வழுகை இரண்டு விதமாகும். ஒரு வகை அழுகையை மணிவாசகர் பின்கண்டவாறு சொல்கிறார்.

*"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென்*
*னம்பும்பொய்*
*ஆனால் வினையேன்னழுதால் உன்னைப்*
*பெறலாமே*

*தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு*
*மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே"*

இப்பாடலுக்கு பலர் தவறாகப் பொருள் கண்டுள்ளனர். இரண்டாம் அடியில் "அழுதால் உன்னைப் பெறலாமே" என மணிவாசகர் கூறுகிறார். இவ்வடியை வைத்து "அழுதால் இறைவன் அடியை பெறலாம்" எனப் பலர் சொல்லி வருகின்றனர். ஈற்றடியில் "அருளாய் அடியேன் உனைவந்ததறும் ஆறே" என அடிகள் கூறுவதை சிந்திக்க வேண்டும். "உன்னை அடைவதற்குரிய வழியை அருள் செய்வாய்" என்பது இதன் பொருள். "அடைவதற்குரிய வழி அழுகைதான்" என இரண்டாமடியில் சொல்லி விட்டு ஈற்றடியில் "அடைவதற்குரிய வழியை அருள் செய்வாய்" எனச் சொல்வது பொருத்தமாகுமா? பெறலாமே? என்பதிலுள்ள ஏகாரம் வினாப் பொருட்டு வந்ததாகும் பெறமுடியுமா? என்பது தான் அதன் பொருள். அன்பு பொய்யான பிறகு உன்னைப் பெற முடியுமா? முடியாது "ஆகவே உன்னை வந்தடைகின்ற வழியைச் சொல்" என்பது இப்பாடலின் திரண்ட பொருளாகும். அன்பு பொய்யான பிற்பாடு அழுகின்ற அழுகை பொய் அழுகையேயாகும். துன்பம் வந்த வுடன் பொறுக்க மாட்டாது இறைவனை நோக்கி அழுவோம் துன்பம் நீங்கியதும் அவனை மறந்து விடுவோம். இந்த அழுகை உண்மை அன்பின்றி ஆற்ற மாட்டாது அழுத அழுகையாகும். உண்மை அன்போடு அவனைப் பிரிந்திருப்பதற்கு அஞ்சி உடனே அவனைக் கலக்கவேண்டும் என எண்ணி அழுவது மற்றொரு வகை அழுகையாகும். முன் அழுகை பொய்யழுகை, பின்னழுகை உண்மை யழுகை. அன்போடு உண்மையாக அழுதால் இறைவன் அடியைப் பெறலாம். இதனை மேற் கண்ட பாடலில் அவர் சொல்லவில்லை. வேறொரு பாடலில் சொல்கிறார் அது வருமாறு.

*"அழுகே **னின்பா லன்பா** மனமா யழல் சேர்ந்த*
*மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல் கண்டு*
*தொழுதே யுன்னை தொடர்ந்தா ரோடும் தொடராதே*
*பழுதே பிறந்தேன் என் கொண் டன்னைப் பணிகேனே"*

'அழுகே னின் பாலன் பாமனமாய்' எனச் சொல்வதால் உண்மை அன்போடு அழுதால் ஆண்டவனை அடையலாம் என்பது பெறப்படும் இப்பாடலை வைத்துத்தான் 'அழுதடி அடைந்த அன்பர்' எனச் சொல்ல வேண்டுமேயன்றி முன்னைப் பாடலை வைத்துச் சொல்லக் கூடாது.

## ஒருமைப்பாடு

பத்தி ஒருமை நிலையை அடைய வேண்டு மென்றால் முழுமுதற் பொருளாகிய சிவபெரு மானையே வணங்குதல் வேுண்டும். சிவபெருமான் ஒருவனே இறைவன் என்பதை மணிவாசகர்

*"தென்னாடுடைய சிவனே போற்றி*
*என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"*

என்னும் அடிகளில் தெளிவுபடுத்தி இருக்கிறார். "எந்நாட்டார்க்கும் இறைவன் ஒருவனே தான்: அவனைத் தென்னாடுடைய சிவனே என போற்றுகிறது. என்பது இதன் பொருள்.

## பல தெய்வ வழிபாடு

தமிழ் மக்கள் பலவேறு கோயில்களில் பல்வேறு தெய்வங்களை வைத்து வழிபடுவதைக் காண்கிறோம். அவர்களிடையே சிறு தெய்வ வணக்கமும் உண்டு. அதி தெய்வ வணக்கமும் உண்டு. "நான்முகன், திருமால், அக்கினி தேவன், நவக்கிரகங்கள் முதலியவை அதி தெய்வங்கள் எனப்படும். இந்த அதி தெய்வங்களைத் தேவர்கள் எனப் பொதுவாகக் கூறுகிறோம். முனியாண்டி, மதுரை வீரன், மாரியாயி, காடன், காட்டேரி முதலியவை சிறு தெய்வங்கள் எனப்படும்.

சைவப் பெருமக்கள் சிவபெருமானைத் தவிர வேறு எந்தத் தெய்வங்களையும் வணங்கக் கூடாதென்பது மணிவாசகர் கொள்கையாகும். இதனைக்

*"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடி கெடினும்*
*நள்ளேன் நினதடியா ரொடல்லால் நரகம் புகினும்*
*எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறினிறைவா*
*உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே.*

என்னும் பாடலில் உணர்த்தியிருக்கிறார். "பிற தெய்வங்களை நினைக்க மாட்டேன். என்று சொன்னதோடமையாமல் ஏனைத் தெய்வங்கள் வீடுபேற்றைப் தரமுடியாதவையாகையால் அவை பொய்த் தெய்வங்கள் எனவும் கூறுகிறார்.

*"அத்தேவர் தேவரவர் தேவரென் றிங்ஙன்*
***பொய்த்தேவு** பேசிப் புலம்புகின்ற பூதலத்தே*
*பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றி நின்ற*
*மெய்த்தேவர் தேவர்க்கே சென்று தாய் கோத்தும்பீ"*
என்பது அவர் வாக்கு.

## அருளனுபவங்கள்

சிவபெருமானை மனம் மொழி மெய்களால் உறைப்போடு வழிபட்டமையால்தான் பல்வேறு அருளனுபவங்களை இறைவன் குருநாதனாக வந்து மணிவாசகர்க்கு உணர்த்தியிருக்கிறான்.

*"வண்ணம் தான் அதுகாட்டி வடிவுகாட்டி*
*மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற்றேனைத்*
*திண்ணந்தான் பிறவாமல் காத்தாட் கொண்டான்.*
எனப் பெருமிதத்தோடு அவர் பேசுகிறார்.

*"காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவம் காட்டித்*
*தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி"*

எனக் கூறுகிறார். "தன்னை ஆட் கொண்டதாக" அவர் சொல்வதால் உண்மை அருளனுபவத்தை அவர் பெற்றிருக்கிறார் என்பது புலனாகிறது. சிவானுபவத்தின் முடிந்த நிலை சிவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகர்வதாகும்.

*"அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்"*

என அவர் சொல்வது முத்திப் பேரின்ப நிலையைக் குறிக்கும். இதனையே வீடு பேறு என்றும், பிறவா நிலை என்றும் கூறுவர். மணிவாசகர் அருளனுபவங்களை நேரிடையாக பெற்றிருக்கிறார் என்பது அவர் வாக்குகளால் புலனாவதால் பத்தியால் யாவரும் இந்நிலையைப் பெறலாம் என்பது தெளிவு.

## சீவன் முத்தர்

மணிவாசகர் எடுத்த பிறப்பிலேயே வீடு பேறு பெற்றிருப்பதால் சீவன் முத்தர் என அழைக்கப்படுவார். அவர் தான் வீடு பெற்றேன் என்பதை.

*"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"*

எனச் சிவபுராணத்தில் மிகத் தெளிவாக கூறுகிறார். சீவன் முத்தர்கள் உடலை விடுத்ததும் பர முத்தர்கள் என அழைக்கப்படுவர்.

## பத்தியே உய்யும் வழி

மணிவாசகர் தான் பெற்ற முத்தி அனுபவத்தை தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாக்களால் மிக விளக்கமாக கூறியிருப்பதால் அவர் பாடல் தொட்ட இடம் எல்லாம் பக்தி மணப்பதோடு **பத்தி நெறி** ஒன்றே வீடு பேற்றைத் தரும் என்னும் உண்மையைப் புலப்படுத்து பவனவாகவும் அமைந்து இருக்கின்றன.

வாழ்க மணிவாசகர்!
வாழ்க பத்திநெறி!



# திருவாசக இசை

பேராசிரியர். ஞானாகுலேந்திரன்

பன்னிரு திருமுறையுள் எட்டாந் திருமுறை யாகத் திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவை யாரும் விளங்கும். இவை திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப் பெற்ற பனுவல்கள்.

திருவாசகம் என்ற நூற் பெயர் "திருவுடைய சொற்களால் ஆகிய அருள் நூல்" எனப் பொருள் தரும். இந்நூல் தொகுப்பு சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பகுதிகளையும் அவற்றுள் அடங்கும் 656 பாடல்களையும் கொண்டுள்ளது.

திருவாசகம் இயம்பும்போதே அது இசை யோடு பாடப்பெற்றது என்பதற்குச்

*"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்"*

(சிவபுராணம் 93)

*"பாடவேண்டுநான் போற்றி நின்னையே*

(திருச்சதகம் 100)

*"சோதியை யாம் பாட ..........."*

(திருவெம்பாவை 1)

முதலிய மாணிக்கவாசகர் வாய்மொழிகளே சான்றாகின்றன. இவை பிற்காலத்திலும் இசை யோடு பாடப்பெற்றமையை,

*"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால் ..........."*

என்ற இராமலிங்க அடிகளார் அனுபவ மொழிகள் உணர்த்தும்.

ஆயினும் தேவாரப் பதிகங்களுக்கும் திருப் பாசுரப் பாடல்களுக்கும் பண்ணமைதி குறிக்கப் பெற்றதற்கான ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## சுத்தாங்கமாகப் பாடும் திருவாசகம்

திருப்பெருந்துறை, தில்லை, மதுரை, உத்தர கோசமங்கை ஆகிய திருத்தலங்கள் தோறும் சென்று உள்நெக்குருகிப் பாடிய மாணிக்கவாசகர் பாடல்கள் பக்திச்சுவை நனி சொட்டும் தன்மை வாய்ந்தவை. இவை இக் காலத்தில் பெரும்பாலும் மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப் பெறுகின்றன.

குறித்த ஒரு தாளத்தில் கட்டுப்பட்டு அமைய வேண்டாது பாடுபவர் தம் உணர்ச்சிப் பெருக்கிற்கும் இசையறிவிற்கும் கற்பனை வளத்திற்கும் ஏற்பப் பாடலை எடுத்துக்கொண்ட இராகத்தின் இசை வடிவத்திற்கு அமையப்பாடுவது சுத்தாங்க முறை யாகும். இசையும் சொல்லும் பொருளும் சிதையாமல் பாடலை விரித்து விளக்கிப்பாடுவது சுத்தாங்கப் பாடுமுறைக்கு அழகு தரும். இக்காலத்தில் இப்பாடு முறையை விருத்தமாகப் பாடுதல் என்பர்.

பெரும்பாலான திருவாசகப் பாடல்களை மோ கன இராகத்தில் விருத்தமாகப் பாடுவது மரபு.

மோகன இராகம் சரிகபதச்-சதபகரிச என்ற ஆரோசை அமரோசை கொண்டு, 28ஆவது மேள இராகமாகிய அரிகாம்போதியின் சேய் இராக மாகிறது. விரிவான ஆலாபனைக்கு இடமளிக்கும் இந்த இராகம் பக்திச் சுவையுள் அடங்கும் அன்பு, காதல், கருணை, இரங்கல், அழுகை, ஆத்திரம், வீரம், வீறாப்பு எனப் பல்வேறு உணர்வுகளை வெளிக்காட்ட உதவும் அருமைமிகு இராகமாகும். இந்த இராகத்தின் சுரங்களைப் பண்ணுப் பெயர்த் தால் (கிரக பேதம் செய்தால்) மத்தியமாவதி, இந்தோளம், சுத்தசாவேரி, உதயரவிசந்திரிகா ஆகிய இராகங்கள் பிறக்கும்.

ஐந்து சுரங்களையுடைய மோகன இராக இசை பழைய நாகரிகப் பெருமையுடைய சீனா, யப்பான், கொரியா, சுவீடன் ஆகிய நாடுகளில் இசைக் கப்படுகின்றன. பழந்தமிழ்ப் பண்களில் ஒன்று மோகன இராகம் எனத் துணியலாம். இருந்தும் இந்த இராகத்தின் பழைய பண் பெயர் பற்றி இன்னும் ஆராய்ச்சித் தெளிவு கிடைக்கவில்லை.

நூற்றுமூன்று பண் வரிசையில் மோகன இராகமானது காந்தாரப்பண்[1] என்றும், சாதாரிப் பண்[2] என்றும் கருத்து வேறுபாடுகள் உள. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் காணப் படும் செய்திகளையும் பெரியபுராணத்தில் ஆனாய நாயனார் புராணத்தில் பெறப்படும் செய்திகளையும் நுட்பமாக ஒப்புநோக்கி, அங்கு பெறப்படும் முல்லைப்பண் என்பது இன்றைய மோகன இராகத்தின் வடிவம்[3] என ஆராய்ந்து காட்டுகிறார் பேராசிரியர் எஸ். இராமநாதன்.

## பண்ணாங்கமாகப் பாடும் திருவாசகப்பாடல்கள்

திருவாசகப்பாடல்கள் பொதுவாக மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவது வழக்க மானாலும், தேவார ஆசிரியர் மூவரது பண்களுக்கு

ஒக்கப் பண்ணாங்கமாகப் பாடும் சில திருவாசகப் பதிகங்களும் உள்ளன.

கட்டளைப் பகுப்பு அல்லது சந்த அமைப்பினைக் கொண்டு ஒரு தாளக்கட்டுப்பாட்டுள் அமையப் பாடலைப் பாடுவது பண்ணாங்க முறையாகும்.

*"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும்*
*பொங்கரவம்"*
(திருச்சாழல் 1)

*"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு*
*முயல்வேனை*
(அச்சோபதிகம் 1)

முதலான திருவாசகப்பாடல்கள் பழந்தக்க ராகப் பண்ணமைதியில் நெடுங்காலமாகப் பாடப் பெறுகின்றன. இப்பாடல்களின் பாடுமுறையைச் சம்பந்தரது "போகமார்ந்த பூண்முலையாள்" எனத் தொடங்கும் பழந்தக்கராகத் தேவாரப்பாடலோடு ஒப்புநோக்கிக் காணலாம்.

திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திரு அம்மானை ஆகிய பாடற்பகுதிகள் மகளிர் பலர் சேர்ந்து இறைவன் புகழ் பாடி விளையாடும் விளையாட்டுகளாக அமைகின்றன.

*"கருணைக்கழல் பாடித்தென்னா என்று*
*தெள்ளேணங் கொட்டோமா"*
(திருதெள்ளேணம் 11 - 19)

*"வாயார நாம்பாடிப் பூரித் தகங் குழைந்து*
*பொன்னூ சல்ஆடாமோ:"*
(திருப்பொன்னூசல் (16 - 8)

மேற்காணும் பாடல் அடிகள் பலர் கூடிப் பாடும் முறையில் அமைந்திருக்கும் பாங்கினைத் தெளிவாக உணர்த்துவதைக் கொண்டு இவை தாளக்கட்டுக்குள் அடங்கிய பண்ணாங்கப் பாடல்கள் எனத் தெளியலாம்.

## திருவம்மானைப் பாட்டிசை

இளமகளிர் இசையுடன் பாடியாடும் பல்வரிக் கூத்தாக அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் சில பாடல் வகைகளைக் கூறுகிறார். அவற்றுள் அம்மானை, தெள்ளேணம், சாழல், உந்தி, பொன்னூசல் முதலிய இசைப்பாடல்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

அம்மானைக் காய் கொண்டு விளையாடும் இளைய மகளிர் தம்முள் உரையாடி மகிழும் முறையில் அமைந்த வரிப்பாடலே அம்மானைப் பாட்டாகும். பழங்காலத்தில் இவ்விளையாட்டு "கழங்கு ஆட்டம்" என்றும் இன்றைய வழக்கத்தில் "கழற்சி ஆட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழிலக்கியங்களில் அம்மன் என்னும் சொல் பெண்மையைக் குறிக்கின்றது. ஆக, பெண் களுக்குரிய இவ்விளையாட்டு "அம்மானை" என இடைக்காலங்களில் அழைக்கப் பெற்றிருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் அரசர்கள் பற்றிய கதைகளும் திருவாசகத்தில் தெய்வங்கள் தொடர்பான கதை களும் அம்மானைப் பாடலின் பொருளாய் அமைகின்றன.

திருவாசகத்தில் உள்ள திரு அம்மானைப் பாடல்களை ஆனந்தக் களிப்பு மெட்டில் பாடுவது மரபு. நாட்டுப்புற இசையில் இந்த மெட்டைக் காவடிச் சிந்து இசையில் அதிகமாகக் கேட்கலாம். ஆனந்தக்களிப்பு மெட்டுக்குரிய இராகம் நாதநாமக் கிரியை. இந்த இராகத்தின் பழந்தமிழ்ப் பண் சீகாமரம் என்பதாகும்.

நாதநாமக்கிரியை இராகம் மத்திமஸ்தாயியுள் அமையும் நிஷாதாந்திய இராகமாதலால் இந்த இராகப் பாடல்கள் மத்திம ஸ்ருதியில் இசைக்கப் பெறும். கருணை, சோகம் ஆகிய சுவைகளுக்கு ஏற்ற இந்த இராகம் நாட்டுப்புறப் பாடல்களிலும் கேரள நாட்டுக் கதகளி நடனத்திலும் அதிகம் பயிலப்படும் இசையாகும்.

திரு அம்மானை பாடலொன்றின் மெட்ட மைதி இவ்வாறு அமைகிறது.

**இராகம் : நாதநாமக்கிரியை தாளம் : ஆதி**
**பண் : சீகாமரம்** |$_4$00
**ஆ. சரிகமபதநி**
**அ. நிதபமகரிசநி - 15 வது மேளத்தில் பிறந்தது.**

*செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய*
*பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி*
*எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம்தரமும் ஆட்கொண்டு*
*தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்*
*அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடு அருளும்*
*அங்கருணை வார்கழலே பாடுதும் காண் அம்மானாய்*
(திரு அம்மானை - 1)

;சரீக மா மா பா மா ; / ; கமா பமா / பா. த பமா. //
செங்கண் நெடு மாலும் சென்றிடந்தும் காண்பரிய

;கமாபபா பா தபாத ; / ;கமா பமா/ கமகரி கரிசா //
பொங்கு மலர்ப்பாதம் பூ தலத்தே போந்தருளி

இதே போற பாடலின் அடுத்துவரும் அடிகள் பாடப்பெறும்.

## திருப்பொன்னூசல் பாட்டிசை

ஊஞ்சலில் ஆடும்பொழுது தலைவன் ஒருவனின் புகழைப்பாடும் இசைப்பாட்டு "ஊசல் வரி" ஆகும். சேர மன்னனைப் பாடும் ஊசல்வரிப் பாடல்களைச் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் காணலாம். இதேவகையில் ஊஞ்சலாடும் மகளிர் சிவபெரு மானைப் பாடிப்பரவும் பாடல்கள் திருவாசகத்தில் திருப்பொன்னூசலாக அமைகின்றன.

ஊஞ்சல் பாடல்கள் பொதுவாக ஆனந்த பைரவி இராகத்தில் கோயில் பொன்னூசல் விழாவிலும் கல்யாண ஊஞ்சல் வைபவத்திலும் பாடுவது வழக்கம். மணிவாசகரது திருப்பொன்னூசல் பாடல்களையும் ஆனந்த பைரவி இராகத்தில் பாடுவது மரபாகும். பழமைமிகு இந்த இசை திருவிசைப்பாவில் குறிக்கப்பெறும் சாளரபாணிப் பண் எனக்கொள்ள இடமுண்டு.

திருப்பொன்னூசல் பாடல் ஒன்றின் மெட்ட மைதி இவ்வாறு அமைகிறது.

**இராகம் : ஆனந்த பைரவி**
**தாளம் : ஆதி (திச்ர) நடை** /$_4$00
**ஆ. சகரிகமபதபச்**
**அ. ச்நிதபமகரிச - 20 ஆவது மேளத்தில் பிறந்தது**

*சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக*
*ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து*
*நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு*
*ஊர்ஆகத் தந்தருளும் உத்தர கோசமங்கை*
*ஆரா அமுதின் அருள்தாள் இணைப்பாடிப்*
*போரார்வேல் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ*
(திருப்பொன்னூசல் 1)

கமபபபா மாப மகா / காம கரீ / காரி கமப //
சீ ரார் ப வளங் கால் மு..த்தங் கயிறாக

மாபதபா மகா ரிசா / சகரி கமா / பபம கமா //
ஏ ரா ரும் பொற்பலகை ஏ.றி. இனி த..மர்ந்து

பதபபாம பா ச்ா; / ச்ாக் ரிக்ரி / நிநிநி ச்ாச் //

நாராயணன் அறியா நாண் மலர்த்தாள் நாயடி யேற்கு

பாச் ச்சா பாத பபம / கபம மகரி / கமக ரீசா //

ஊர் ஆகத் தந் தருளும் உத்தர கோச மங்கை...

பாதாப ம பா ச்ா; / ச்ாக் ரிக்ரி / நிநிநி ச்ாச் //

ஆரா அமு தின் அருள் தாளிணை பா..டி..ப்

பாச் ச்சா பாத பபம / கமக மகரி / கமக ரிசா //

போரார்வேல் கண்மடவீர் பொன் ஊசல் ஆடா மோ..

கோயில்களில் அர்த்தசாமக் பூசையின்போது திருப்பொன்னூசல் பாடல்கள் நீலாம்பரி இராக த்தில் சுத்தாங்கமாகப் பாடும் ஒரு வழக்கமுளது. சில கோயில்களில் திருப்பொன்னூசல் பாடல்கள் நவரோசு இராகத்திலும் பாடக் கேட்கலாம். ஆனந்த பைரவி, நீலாம்பரி, நவரோசு ஆகியவை மிகப் பழைமையான இராகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருச்சாழல் பாட்டிசை

வினாவும் விடையும் கலந்த அமைப்பிலான ஒரு பாடல் வகை சாழலாகும். பெண்ணொருத்தி கதையின் ஒரு செயலைப்பற்றி வினா எழுப்ப மற்றைய பெண் அக்கதையில் தோன்றிய முரண் பாட்டை நீக்கி அதன் உட்பொருளை விளக்கி விடை கூறுவாள். இவ்வாறு பெண்கள் இருவர் ஒரு கதை பற்றி வினாவும் விடையுமாக நிகழ்த்திப் பாடும் விளையாட்டினை "நற்சாழல்" என வரிக்கூத்து வகைகளில் ஒன்றாகச் சிலப்பதிகார உரை கூறுகிறது.

ஈழநாட்டு மன்னன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசவைக்க, மாணிவாசகர் கேட்ட வினாக்களுக்கு அப்பெண் கூறிய விடைகளைத் தொகுத்தே திருச்சாழல் இயற்றப்பட்டது என்பது வரலாறு. திருச்சாழல் பாடல்கள் நெடுங்காலமாக ஆரபி இராகத்தில் பாடப்பெற்று வருகின்றன.

திருச்சாழல் பாடல் ஒன்றன் இசையமைப்பு இவ்வாறு அமைகிறது.

**இராகம் : ஆரபி**
**தாளம் : ஆதி** $/_4 00$
**ஆ. சரிமபதச்**
**அ. ச்நிதபமகரிச - 29 ஆவது மேளத்தில் பிறந்தது.**

*மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி*
*சலம்முகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ*
*சலம்முகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்*
*பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ*
(திருச்சாழல் 7)

பாதபமா; ரிமபத பா;/மாபத தச்நித/தபமக ரி சரீ//
மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி

ததபமததச் ரீரீ ;;/ தாரீ ச்ாரீ / ச்நிதப மகரீ //
சலமுகத்தால் அவன்சடையிற் பாயு மது என் னேடீ

அடுத்த இரு அடிகளையும் இதேபோலப் பாடுவர். மிகப் பழைமையான இந்த இராக இசை பழந்தமிழ்ப் பண்களில் "பழந்தக்க ராகம்" என்று அழைக்கப்படுகிறது.

## திருவெம்பாவைப் பாட்டிசை

மார்கழி மாதத்தில் அதிகாலையில் இளம் பெண்கள் தம்மையொத்த மகளிரைத் துயிலெழுப்பிப் பொய்கையில் நீராடி இறைவன் புகழ் பாடி நோன்பிருப்பர். அப்பொழுது நாடு சிறக்க மழை பெய்யவும், நல்ல மணவாளரைப் பெற்றுத் தாம்

வாழவும் இறைவனை வேண்டிப் பாவைப்பாட்டு பாடுவர். மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவெம்பாவைப் பாடல்களைச் சிதம்பரத்தில் மார்கழி மாத்தில் பூபாள இராகத்தில் பண்ணாங்க மாகப்பாடும் முறை நீண்ட காலமாக வழக்கத்தி லுள்ளது. பூபாள இராகம் பழந்தமிழ்ப் பண்ணி சையில் புறநீர்மை என்று அழைக்கப்படும்.

எளிமையான மெட்டில் இசைக்கப்படும் திரு வெம்பாவைப் பாடலொன்று இவ்வாறு அமையக் காணலாம்.

**இராகம் : பூபாளம்**
**தாளம் : ஆதி** $/_4 00$
**பண் : புறநீர்மை**
**ஆ. சரிகபதச்**
**அ. ச்தபகரிச - 15 ஆவது மேளத்தில் பிறந்தது.**

*முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்*
*உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே*
*பாங்காவோம்*
*அன்னவரே எம் கணவர் ஆவார் அவருகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிவெய்வோம்*
*இன்ன வனையே எமக்கு எங்கோன் நல்கு தியேல்*
*என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்*
(திருவெம்பாவை 9)

;சரிகாகா பாபா பா;/ ;கபாதபா / பா; தபகா//
முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

;கபாதபா பகபக கரிரிச;/ ;சரிகாகா / பா; பா;//
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
;பகாபதா ச்ா;ச்சா,/ ;சரீச்சா / ச்சதப தாபா//
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
;பதாச்சா ச்ச் தாபாபா / ;கபாதபா / பகதப ககரிச//
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்

திருவெம்பாவைப் பாடல்களைப் பல்வேறு இராகங்களில் இராகமாலிகையாகவும் சிலர் பாடுவர். இது அண்மைக்காலத்தில் ஏற்பட்ட வழக்கம்.

## திருத்தெள்ளேணப் பாட்டிசை

தெள்ளேணம் என்பது பழந்தமிழ் மகளிர் ஆடி மகிழ்ந்த ஒரு விளையாட்டாகும். இவ் விளையாட்டில் மகளிர் பறை கொட்டிப் பாடுவர் என்றும், நடுவில் ஒரு பெரிய முரசை வைத்துச் சுற்றியிருந்து இரு கைகளிலும் கோல் கொண்டு முரசில் கொட்டிப் பாடுவார் என்றும், சிறிய முறத்தைக் கையில் கொண்டு தானியங்களைத் தெள்ளிக் கொழித்துப் பாடுவர் என்றும் அறிஞர்கள் பலவாறு விளக்கியுள்ளனர்.

மணலைத் தெள்ளிக் கொட்டிப்பாடும் விளை யாட்டு திருத்தெள்ளேணம் என்றும் சிலர் சொல்வர். விளையாட்டின் உண்மை வடிவம் பற்றித் தெளி வில்லையேனும் தெள்ளேணம் ஆடுகையில் தாளநடைக்கு முதன்மை கொடுக்கும் வகையில் மகளிர் பாடலைப் பாடியிருக்கிறார்கள் என்பது மிகத்தெளிவு.

மாணிக்கவாசகரின் திருத்தெள்ளேணத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று பாடப்படுகிறது. " கொட்டு" என்னும் சொல் தாளக் கருவியைக் குறிப்பதோடு கை குவித்தடித்தலையும் குறிக்கும். கைகுவித்தடிக்கும் செயலே பின்னர் கைகும் முதல், கும்முதல், கொப்பி, கொம்மி, கும்மி என மருவி யிருக்கிறது.

திருவாசகத்திலுள்ள திருத்தெள்ளேணப் பாடல்கள் பழைமைமிகு கும்மி மெட்டில் இவ்வாறு இன்றும் சிலரால் பாடப்பெற்று வருகின்றன.

**இராகம் கும்மிமெட்டு** **தாளம் : ஆதி**

*திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை*
*உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்*
*ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்காயிரம்*
*திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமோ.*

ரிபகம சாரீ ரிபமக சாரீ / ரிபமக, சரிக / சாசா சாகா//
திருமா... லும் பன்றி யாய் சென்றுணராத் திருவடியை

ரிகரிச சசசா ரிசரிச சசசா / ரிபமக, சரிக / ரீ கா ரீ கா//
உருநாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்.

அடுத்துவரும் இரு அடிகளும் இதேபோற் பாடப்பெறும்.

பைரவி இராகச் சாயலை கொண்டுள்ள இதன் இசை பழந்தமிழ்க் கௌசிகப் பண் ஆகலாம்

## முடிவுரை

திருவாசகப் பாடல்கள் மோகனம், நாதநாமக் கிரியை, ஆனந்தபைரவி, ஆரபி, நவரோசு, பூபாளம், பைரவி ஆகிய இராகங்களில் நெடுங்காலமாகத் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பெற்று வந்திருக்கின்றன. இந்த இராகங்கள் பழைமை யான இராகங்கள் என்பதோடு, பழந் தமிழ்ப் பண்ணிசைகள் என்றும் இனங்காண முடிகிறது.

மோகன இராகம் முல்லைப்பண் என்றும் நாதநாமக்கிரியை இராகம் சீகாமரப் பண் என்றும் ஆனந்தபைரவி இராகம் சாளர பாணிப்பண் ஆகலாம் என்றும் ஆரபி இராகம் பழந்தக்கராகப்பண் என்றும் நவரோசு இராகம் காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக்கௌவாணம் ஆகிய நான்கு பண்களில் ஒன்று என்றும் பூபாள இராகம் புறமை நீர்மைப்பண் என்றும் அறியப்பட்டுள்ளன.

ஆக திருவாசகப் பாடல்களில் பண் அமைதிக் குறிப்பு, எழுத்து வடிவில் கிடைக்க வில்லையே யெனினும் மரபிசை வழிக் கிடைத்த பாடு முறை யைக் கொண்டு திருவாசகப்பாடல்கள் அதனதனுக் குரிய வரையறுக்கப்பெற்ற பண்களில் பழந்தமிழ் நாட்டில் இசைக்கப்பெற்ற உண்மை உறுதியாகிறது.

## குறிப்புக்கள்


1. ப. சுந்தரேசன், பரிபாடற் பண், 1961, *Dr. R. P. Sethuppillai Silver Commemoration Volume. p. 256*
2. வா. சு. கோமதி சங்கர ஐயர் கருத்து, 1974, பண்ணாராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும் தமிழிசைச்சங்கம், சென்னை, ப. 59
3. எஸ். இராமநாதன், 1981, சிலப்பதிகாரத்து இசைத்தமிழ், பக். 87 - 90



# திருவாசக நிருத்த நாட்டியம்

இசைமணி. கா. சங்கரனார்

**நா**ட்டிலே நாட்டியம் பெருகிவிட்டது படக் காட்சி, பொருட்காட்சி, இன்னவாய பிற விழாக்களிலும் இடம்பெறாத நடனமே கிடையாது. நடைபெறுகின்ற நடனங்களோ பெரும்பாலும் நற்பண்பைஉயர்த வில்லை. கீழ்த்தரப் பாதையிலேயே செல்லுகின்றன. நடன அரங்குகளில் மக்களின் நல்லுணர்வை வளர்ப்பதற்கான ஆடல்பாடல்கள் குறைந்தளவில் தான் கையாளப்படுகின்றன. இந்தநிலைதான் பள்ளிகளிலும் கீழ்த்தர ஆடல் அலைகள் மோதாத அரங்கங்களே இல்லை.

மனிதப்பண்பை வளர்ப்பதுதான் (நடன) கலைப்பயன். பண்பு வளர்வதற்கு அறிவு, உணர்ச்சி, முயற்சி ஆகிய மனக்கூறுகள் (Three phases of mind) ஒன்றுபட்டு இயங்க வேண்டும். இயலால் அறிவுக்கூறும், இசையால் உணர்வுகூறும், இயலும் இசையும் சேர்ந்து பிறக்கின்ற நாடகத்தால் முயற்சிக்கூறும் வளர்ச்சியடைகிறது. இக்கூறுகள் ஒன்றுபட்டு இயங்கவே தமிழை இயல், இசை, நாடகமென முத்திறப்படுத்தினர் இயலிசைப் புலவர்கள்.

நன்னெறிப் பாடல்கள் மலரும் சோலையே முத்தமிழ். மலர்களில் ததும்பம் தேனே திருவாசகம். திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பூவல்லி, திருத்தெள்ளேணம் போன்றவை நன்னெறி புகட்டும் பாடல்கள். இவற்றைக்கொண்டே "நிருத்த நாட்டியம்" அமைக்கப்பட்டிருக்கிறது. நாட்டிய அரங்கிலே ஆடுகின்ற ஆடல்வல்லாருக்கு ஏற்ப திருவாசகப்பாடல்களுக்கு இராகம், தாளம், சுரம் சொற்கட்டுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## நிருத்த நாட்டிய நிகழ்ச்சிக் குறிப்பு

ஆதிரை நன்னாள். காலை நேரத்தை இயற்கையும் பிறவும் அறிவித்துவிட்டன. வீட்டுவாசலைத் தெளித்துக் கோலமிட்டு நீராடப்புறப்படுகின்றாள் கன்னி. இவள் தன் தோழியையும் துயிலெழுப்பிச் செல்கின்றாள். நீராடிய பின் மலர் கொய்ய நந்தவனம் செல்கின்றனர். கொய்த மலரால் மாலை தொடுக்கின்றனர். ஆண்டவனுக்கு அணிவித்து அகம் மகிழ எண்ணுகின்றனர். தேரார்ந்த தெருவெல்லாம் தில்லைநாதன் புகழ்பாடி தெள்ளேணம் கொட்டிக்கோயில் செல்கின்றனர். அயரா அன்பால் ஆண்டவன் முன்பு பாடி ஆடுகின்றனர்.

குறிப்பு : நிறுத்த நாட்டியப் பாடல்களுக்கு உரிய இசைக்குறிப்புக் (Notation) குறியீடுகளும் தற்காலம் வழக்கத்திலிருக்கும் முறையையொட்டி எழுதப்பட்டிருப்பதால் .... குறிப்பின் விபரம் எழுதப்படவில்லை.

### காட்சி 1 - காலைநேரம்

இருள் நீங்கியது. எங்கும் ஒளி பரவிற்று. பூங்குயில் கூவின. கோழி கூவின. பிற பறவையினங்களும் ஒலித்துவிட்டன; சங்குகள் சப்தித்தன; நட்சத்திரங்கள் நீங்கின. இவற்றைக் கருதுக! பெருந்தகையே! சிவபெருமானே! புறவிருள் நீக்க ஞாயிறு எழுந்தது; எங்கள் அகவிருள் நீங்க, எளிவந்தருள்பவனே! அருட்செல்வத்தையருளும் இன்பமலையே! அலைபோல் தோன்றி அடங்குதற்குரிய பெருங்கடலே! எம்பெருமானே எழுந்தருள்க! என்று வேண்டி இக்காட்சி தொடங்குகின்றது.

**இராகம் : பௌளி - விருத்தமாகப் பாடவும்**

*அருணன் இந்திரன் திசைஅணுகினன்; இருள்போய்*
*அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்*
*கருணையின் சூரியன் எழஎழ நயனக்*
*கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்*
*திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்*
*திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே*
*அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே*
*அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.*

**திரை விலகுதல்**

**இராகம் : பௌளி தாளம் : ஆதி**

**(15) ஆ: ச ரி க பதச் அ: ச நிதப கரிச**

*கூவின பூங்குயில் கூவின கோழி*
*குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்*
*ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து*
*ஒருப்படு கின்றது விரப்பொடு நமக்குத்*
*தேவநற் செறிகழல் தாள்இணை காட்டாய்*
*திருப்பெருந் துறைஉறை சிவபெருமானே*
*யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்*
*எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!*

| | O | O |
|---|---|---|
| 1. ; , கா ரி கா பா ; , த பா | ; , கா த பா | ப க த ப க ப க ரி |
| கூ வி ன பூங் கு யில் | கூ வி ன | கோ ழி |
| 2. சா ச ரீ க ரீ சா சா ரீ சா | ; ச ரீ க கா | பா ; தா பா |
| கு ரு கு கள் இ யம் பி ன | இ யம் பி ன | சங் கம் |
| 3. ; , பா க பா தா ச் ச்ா ரி ச்ா | ; ச் ச்ா ரி ச் | ச் த ரி ச் ச் நி த ப |
| ஒ வி ன தா ர கை ஒ ளி | ஒ ளி உ த | ய த் து |
| 4. ; ப த ச் ச்ா ச் த ரி ச் நி த பா | ; க கா த பா | ப க த ப க ப க ரி |
| ஒ ரு ப் படு கி ன் ற து | வி ருப் பொ டு | ந ம க் கு |
| சாரி ‖ கா ரி க பா ; , த பா | ; , கா த பா | ப க த ப க ப க ரி |
| தே வ நற் செறி க ழல் | தாள் இ ணை | கா ட் டா ய் |

இதன் அடியில் வரும் மூன்று வரிகளும், 2, 3, 4 போல் பாடவும்.

| | | |
|---|---|---|
| ; திருப் பெருந் துறை உறை | சிவ பெரு | மா னே |
| ; , யாவரும் அறி வரி யாய் | எமெக் கெளி | யா ய் |
| ; எம் பெருமான் பள்ளி | எழுந் தரு | ளா யே ‖ |

(குறிப்புரை) : குருகுகள் - பறவைகள் (பொதுப் பெயர்); ஓவின - நீங்கின : மறைந்தன ; ஒருப்படு - தோன்றுதல்.

திரை

## காட்சி 2

**நிகழ்ச்சிக் குறிப்பு:**

ஒரு பெண் தன் தோழியை நீராடுவதற்கு அழைக்க வருகிறாள். தோழியோ அயர்ந்து தூங்குகிறாள். தூங்கும் தோழியிடம்: என் கண்பாவை போன்றவளே! எழுந்திரு? இன்று திருவாதிரை; நீராடச் செல்வோம்; வா? (அசையாத தோழியிடம் மீண்டும்)

தோழி! முதலும் முடிவும் இல்லாத சோதி வடிவானவனை, நாங்கள் பாடுவதைக் கேட்டும், கண் விழியாது தூங்குகின்றாயோ! உன் காது என்ன செவிடா! சிலம் பெழுந்த அவர் திருவடிகளை நாங்கள் வாழ்த்திப் பாடினோம்; அவ் வாழ்த்தொலி தெருவெல்லாம் கேட்டது; அதைக்கேட்ட ஒருத்தி விம்மி விம்மி அழுதாள்; தன்னையே மறந்தாள்; படுக்கையினின்றும் புரண்டாள்; கீழே விழுந்தாள்; மூர்ச்சை ஆனாள்; அவள்நிலை அப்படி; எங்கள் தோழியாகிய நீ ! அயர்ந்து தூங்குகின்றாய்; உன் நிலை இப்படி; எழுந்திரு? நேரம் ஆகிறது; நீராடச் செல்வோம்; வா? என்று வேண்டுவதாக இக்காட்சி:

*ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை*
*யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்*
*மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய*
*வாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து*
*போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டிங்கன்*

*ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே ஈதே*
*எந்தோழி பரிசே லோர் எம்பாவாய்!*

(குறிப்புரை) : வாள் தடங்கண் - ஒளிபொருந்திய கண்; வளருதியோ - தூங்குகின்றாயோ; வன்செவி - செவிடு; போதார் அமளி - மலர் நிறைந்த படுக்கை; ஏதேனும் ஆகாள் - பயன் படாமை; என்னே! என்னே! வியப்பு

இராகம்: கேதாரம் தாளம்: ஆதி

(29) ஆ: ச ம க ம பநிச் அ: ச் நிப மக ரிச

| | 1 | 0 | 0 |
|---|---|---|---|
| 1. | ; , ச்ா நி பா ம க ரி ம க ரி சா | ச ரி ரி க ச சா | ச நி ப நீ , சா |
| | ஆ தி யும் அந் த மும் | இ ல் லா அ | ரு ம் பெ ரு ம் |
| 2. | ; ச மா க மா பா , நீ , ச்ா | ச்ா , ரி ச நி பா | பா , நி மா பா |
| | சோ தி யை யாம் பா டக் | கேட் டே யும் | வாள் த டங் கண் |
| 3. | ; , பா ம க ம பா ச்ா ச் நி ச்ா | ச்ா , ரி ச்ா ச்ா | பா , ப நீ ச்ா |
| | மா தே வ ள ரு தி யோ | வன் செ வி யோ | நின் செ வி தான் |
| 4. | சா , ம் க் ரி ச் ச் நி ப ப நீ ச்ா | ரி ச் நி பா , மா | பா , ம க ம பா |
| | மா தே வன் வா ர் க ழல் கள் | வா ழ் த் தி ய | வாழ் த் தொலி போய் |
| 5. | ; , கா ம பா பா , ப பா பா | ; ப நீ ப மா | ம க ரி சா ச சா |
| | வீ தி வாய் கேட் ட லு மே | விம் மி விம் மி | மெ ய் ம் ம றந் து |
| 6. | சா , பா , நீ சா சா சா சா | ; ச ம கா மா | பா , பா , பா |
| | போ தார் அ ம ளி யின் மேல் | நின் றும் பு | ரண் டிங் ஙன் |
| 7. | ; ஏ தேனு மாகாள் கி | ட ந் தாள் என் | னே என் னே |
| 8. | ஈ தே என் தோழி ப | ரி சே லோ ர் | எம் பாவாய் ‖ |

இந்த 7, 8 வரிகளை 3, 4 வரிகளைப்போல் பாடவும். "எம்பாவாய்" என்று பாடி முடிந்த உடன்........ கீழ்க்கண்ட சொற்கட்டுகளைப் பாடி நிறுத்தவும்.

| | 1 | 0 | 0 |
|---|---|---|---|
| 1. | தாம் தரிதஜெணு திமித தகிட தகி | தகிட தகத ஜெணு | தக்கிடதகதிமி தாம் |
| 2. | தகிட தாத ஜெணு தகிடதாத ஜெணு | தகிட தாத ஜெணு | தக்கிடதகதிமி தாம் |
| 3. | தகிட தாத ஜெணு தக்கிட தகதிமி தாம் | தகிடதாத ஜெணு | தக்கிடதகதிமி தாம் |
| 4. | ஷெ | ஷெ | ஷெ |
| 5. | தததிமி , தஜெணு தததிமி , தஜெணு | தா ; தரித்த | , ஜெணுத்த திமித் |
| 6. | த , தாதீங் கிணதொம் தாதீங் கிணதொம் | , தா தீங் கிணதொம் | த்தரி , தஜ்ஜெ |
| 7. | ணு தத்திமி , தாதீங்கிணதொம் தா | கிண தீங்தா தீங் | கிணதொம் தத்தரி தொம் |
| 8. | த - தஜ்ஜெணுத - தத்திமித - தாதீங்கிண | தொம் தாதீங்கிண | தொம் தாதீங்கிண தொம்‖ |

திரை

## காட்சி 3

### பூவல்லி

*இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே*

*துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்*

*அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற*

*புணையாளன் சீர்பாடிப் பூவல்லி பொய்யாமோ.*

காலையில் துயில் நீங்கிய பெண்கள் நீராடச் சென்றனர்.

### நிகழ்ச்சிக் குறிப்பு

நீராடிய பெண்கள் ஆண்டவன் வழிபாட்டிற்கு மலர் கொய்யப் பூஞ்சோலை வருகின்றனர். ஆண்டவன் புகழ்பாடி, பூப்பறிக்கின்றனர்.

(குறிப்புரை): இணை - இரண்டு; ஒப்பு - இறைவன் திருவடிகளுக்குப் பிற ஒப்பாகா; அணையார் புனல் - கரை பொருந்திய நீர்நிலை; புணை - தெப்பம்; பூவல்லி - பூவிற்குரிய முத்திரை பிடிக்கவும்.

இராகம்: உதய ரவிச்சந்திரிகா. தாளம்: ஆதி.

(29) ஆ: ச க ம ப நி ச் அ: ச நி ப ம க ச

| | 1 | O | O |
|---|---|---|---|
| 1. | ச் ச்ா நீ , பா மா நி ப ம க மா | ப நீ பா , மா | ம கா ப ம க சா |
| | இ ணை யா ர் தி ரு வ டி என் | த லை மே ல் | வை த் த னு மே |
| 2. | ச சா கா , மா , ; பா க மா | ; க மா ப நீ | ப மா ப நீ நீ |
| | து ணை யா ன சுற் றங் கள் | அத் த னை யும் | து றந் தொ ழிந் தேன் |
| 3. | ம பா கா , மா ப நீ ச்ா , ச்ா | ; நி ச்ா ச் ச்ா | சா , நி க்ா ச்ா |
| | அ ணை யா ர் பு ன ல் தில் லை | அ ம்ப லத் தே | ஆ டு கின் ற |
| 4. | ; ச் ம்ா க் ச்ா நி பா நீ , ச்ா | ப நி ச் நி பா மா | க மா பா , நீ |
| | பு ணை யா ளன் சீர் பா டி | பூ வல் லி | கொ ய் யா மோ |

(சிட்டை சுரம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | ச்ா ச்ா நி ப ச் நி ப நி ப ப்ா ம க ம | பா , ச் நி ப நீ | ம ப்ா ம க ம பநி |
| 2. | ச்ா ச் நி ச் நி ப ம ப நி ப ம க ப ம க | சா ச ம க ச ப ம | க நி ப ம க ம ப நி |
| 3. | ச் நி ச் கா ச் க் ச் நி ச்ா ப ச் நி ப நி | ம பா ம ப ம க ம | ச கா ச ம க ச நி |
| 4. | ச ம க க ம ப ச் நி நி ச் ச் நி ச் ம் க்ா | , ச் நி ப ச் நீ ப | ம க ச கா ம ப நி ‖ |

"கொய்யாமோ" என்று பாடி முடிந்ததும் மேற்கண்ட சிட்டை சுரத்தைப் பாடி முடிக்கவும்.

*தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்*
*ஊனாடி நாடிவந் துள் புகுந்தான் உலகர் முன்னே*
*நானாடி ஆடிநின் றோலமிட நடம் பயிலும்*
*வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமே.*

(குறிப்புரை) : தேனாடு கொன்றை - வண்டுகள் நாடி அடைகின்ற கொன்றை மலர்; ஊனாடி - மனித உடம்பு (எடுத்தல்); (நான்) நாடி - நான்) அவனைத்தேடி; வானாடர் வான் உலகினர் தலைவன்.

இராகம்: (45) சுப பந்து வராளி. தாளம்: கண்ட சாப்பு.

| | | |
|---|---|---|
| 1. | ச்ா ; ச் நி தா தா | பா ; பா தா பா |
| | தே ன டு | கொ ன் றை |
| 2. | ; ம பா ம கா கா | ரீ ரீ சா ரீ சா |
| | ச டை க்க ணி ந்த | சிவ பெரு மா ன் |
| 3. | ; ச ரி கா ; கா | மா ; மா தா பா |
| | ஊ ன டி | நா டி வந் து |
| 4. | ; ப தா ப பா ; | பா கா மா தா பா |
| | உள் பு குந் தான் | உ ல கர் முன் னே |
| 5. | ; த மா த நீ நீ | ச்ா ; ரீ ச்ா ச்ா |
| | நா ன டி | ஆ டி நின் று |
| 6. | ; ச் ரி க்ா க்ா க்ா | க்ா ம்ா க்ா ரீ சா |
| | ஓ ல மி ட | ந டம் ப யி லும் |
| 7. | ச்ா ; ச் நி தா தா | பா ; பா தா பா |
| | வா ன டர் | கோ வு க் கே |
| 8. | ; ப ம கா கா கா | கா சா ரீ தா தா |
| | பூ வ ல் லி | கொ ய் யா மோ. |

"கொய்யாமோ" என்று பாடின உடன் கீழ்க்கண்ட ஜதியைப் பாடி முடிக்கவும். ||

1. தா தீ தா கத ஜெம்
2. ; தீ தா கத ஜெம்
3. தக தீ தா கத ஜெம்
4. ; தி தா கத ஜெம்
5. தஜ் ஜெம் தரீத்த ஜெம்
6. தா தீ , கிடதக தரிகிட தக
7. ஜெ ஜெ ஜெ
8. ஜெ ஜெ ஜெ ||

*அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி*
*நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்*
*நின்றா ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்*
*பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.*

(குறிப்புரை) : அன்றால நீழற்கீழ் - கல்லால மர நிழலின் கீழ்; அருமறைகள் - (தட்சிணாமூர்த்தி) நான்கு மறைகளை வெளிடப்படுத்துவதற்கான முத்திரை; நின்றார ஏத்தும் -நிறை மனதோடு வழிபடுகின்ற; நிறை கழ்ல் - சிலம்புகளையுடைய அடிகள்; பொன்தாது - மகரந்தப் பொடி.

இராகம் : சாரங்கா. தாளம்: கண்ட சாப்பு.

(65) ஆ: சரிகமபதநிச் அ: ச்நிதபமரிகமரிச

1. ; சா ரீ சா சா பா ; ப ம மா பா
அன் றா ல நீ ழற் கீழ்

2. ; ப தா ப பா பா ம த த ப கா மா பா
அ ரு ம றை கள் தா ன ரு ளி

3. ; ம ப தா ; தா பா ; த த ப ம பா
ந ன் றா க வா ன வர்

4. ம ப த த பா பா பம ரி க மா ரீ ; சா
மா மு னி வர் நா ள் தோ றும்

5. ; ச்ா ச்ா ; ச்ா த நி ச்ா தா பா பா
நின் றா ர ஏ த்தும் நி றை

6. ; ம ப தா பா பா ச்ா ; தா ரீ ச்ா
க ழ லோ ன் பு னை கொ ன் றை

7. ; ச்ா ச் நி க் ரி சா ச் ச் தா ச் ச் நி த பா
பொன் தா து பா டி நாம்

8. ம ப த நி ச்ச தா ப ம ரிக மா ரீ ; ச்ா
பூ வல் லி கொ ய் யா மோ. ||

*சீரார் திருவடித் திண்சிலம்கு சிலம்பொலிக்கே*
*ஆராதே ஆசையதாய் அடியேன் அகம்மகிழத்*
*தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்*
*பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.*

(குறிப்புரை) : தேரார்ந்த வீதி - தேர்கள் நிறைந்த தெரு; சீரார் திருவடி - சிறப்பு மிக்க பாதங்கள்; ஆராத ஆசையதாய் - நிரம்பாத பேரார்வம் உடையோனாய்; பேரானந்தம் - பேரின்பம்; திண்சிலம்பு - பகைவர் மனதில் அச்சம் விளைக்குஞ் சிலம்பு; மெய்ப்பாடு - அச்சக்குறி.

இதன் அடியில் சேர்க்கப்பட்டுள்ள சொற்கட்டு பேரணி நாட்டியத்திற்கென 'நடனாதி வாத்தியங்கள் ரஞ்சனம்' என்னும் நூலில் அமைக்கப்பட்டுள்ளதை இங்குக் கையாளப்பட்டிருக்கிறது.

இராகம்: வசந்தா. தாளம்: ஆதி.

(17) ஆ: ச க ம த நி ச் அ: ச் நி த ம க ரி ச

| | 1 | 0 | 0 |
|---|---|---|---|
| 1. | ச்ா , ச் நி த த நி த மா ம கா மா | மா , நி தா மா | கா , ம கரி சா |
| | சீ ரா ர் தி ரு வ டித் | திண் சி லம் பு | சிலம் பொ லிக் கே |
| 2. | சா , மா க மா மா , த கா மா | க மா தா , தா | ச்ா , நி க் ரி ச்ா |
| | ஆ ரா த ஆ சை ய தாய் | அ டி யேன் அ | கம் ம கி ழ |
| 3. | ச் நி மா தா , நீ , ச்ா ச்ா , ரி ச் | ச் ரீ சா , ச் நி | த மா த நீ ச்ா |
| | தே ரார் ந்த வீ திப் பெருந் | துறை யான் தி | ரு ந டஞ் செய் |
| 4. | ச்ா , ம் க் ரி ரீ ச்ா , நி த ம தா | த நி ச் நி தா மா | க மா தா , நீ ॥ |
| | பே ரா னந் தம் பா டி | பூ வல் லி | கொ ய் யா மோ |

"கொய்யாமோ" என்று பாடி முடிந்ததும் கீழ்க்கண்ட ஜதிகளைச் சொல்லுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தீம்தத் ததீம்த தகதொம் கிடதக | திமித தகிட தக | தகத ததிங் கிண தொம் ॥ |
| 2. | தக்கிடதத்தா கிடதகதீம் ; கிடதக தத்தா கிடதக | தீம் ; தகதிமி | தக ததீங்கிண தொம் ॥ |
| 3. | தத்திமி-திமித-தக தக்கிடகிடதகி தத்தகிடதகி | ததிமி திமித ஜெணு | ததா ததிங்கிணதொம் ॥ |

| | 1 | 0 | 0 |
|---|---|---|---|
| 4. | தா தக்கிடு தக்கிடு கிடதகி ; தக்கிடு தக்கிடு கிடதகி | தத்தத்தக்கிடு தக்கிடு கிடதகி | ; தக்கிடு தக்கிடு கிடதகி |
| | தா தக்கிடு தக்கிடு கிடதகி தத்தத் தக்கிடு தக்கிடு கிடதகி | தக்கிடுதக திக்கிடுதக தக்கிடு | தா ததீங்கிண தொம் ॥ |
| 5. | தா த்ருகுடுதத் தளங்கு தொம் ; த்ருகுடுதத் தளங்குதொம் | தத்த த்ருகுடுதத் தளங்கு தொம் | ; த்ருகுடுதத் தளங்குதொம் |
| | தா த்ருகுடுதத் தளங்குதொம் தத்த த்ருகுடுதத் தளங்குதொம் | த்ருகிடுதத் தளங்கு தொம் த்ருகிடுதத் | தளங்குதொம் த்ருகிடுதத் தளங்கு |
| | திரிகுடு தா திரிகுடு தா திரிகுடுதத்த கிடதகி | தா ; தா தகதின் | , ததின தகஜெணு தகதிமி |
| | தாம் தா தகதின் , தகஜெணு தகதிமி | தாம் தா தகதின் | , ததின தகஜெணு தகதிமி |

(குறிப்புரை): மேற்கண்ட "சீரார் திருவடி" என்ற பாடலை இருவராக ஆடலாம். 1-ஆவது "தீம்தத் ததீம்த" என்று தொடங்கும் சொற்கட்டுக்குப் பலவிதமாக அடைவுகளைப் பிடித்துப் பின் 2. 3. 4. 5 சொற்கட்டுகளை முறையே ஒவ்வொன்றையும் பாடி முடித்து 1-ஆவது சொற்கட்டை பாடிக் கொள்க.

* **பேரானந்தம் :** ஆனந்தத் தாண்டவம். இது 13 வகைக் கூத்துக்களில் "பாண்டரங்கம்" எனப்படுவது. இஃது உலக (நிமித்தம் 12) உற்பத்திக்காகப் பரமசிவன் ஆடியது. இந்த ஆடலைப் "பேரணி" நாட்டியமாக ஆடுவது மரபு.



# திருவாசக மூலப் பதிப்புக்கள்

முனைவர் இரா. சுந்தரமூர்த்தி

சைவ உலகம் போற்றத்தக்கதாகவும் சைவர் பாராயணம் செய்யும் சிறப்புடையதாகவும் இருக்கும் நூல் திருவாசகம். அதனைப் பலரும் கற்று ஓதிப் பயன்பெற வைக்கும் நல்லெண்ணத்தோடு மூலப் பதிப்பு அவ்வப்போது சைவப் பெரியார்களால் வெளியிடப்பெற்று வந்துள்ளது. அவர்களைப்பற்றி வரலாற்று முறையில் ஆராய்வது அந்நூல் பெரிதும் பேணப்பட்டமைக்கு விளக்கம் தரும்.

## முதல் மூலப் பதிப்பு (1835)

1835இல் (சய ஆண்டு. தைத் திங்கள்.) சென்னைக் கல்விச் சங்கத்துச் செந்தமிழ்ப்புலவர் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரும் வித்து வான்கள் சிலரும் திருவாசகத்தின் சுத்த பிரதிகளை வருவித்துப் பரிசோதித்து இம்முதல் மூலப் பதிப்பைப் பதிப்பித்து வெளியிட்டனர். “தஞ்சையில் இருந்த கலாரசிகனான சரபோசி மன்னன் தன்னிடம் தமிழ்ப் புலவராயிருந்த கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரிடம் இவ்வச்சுவேலையை ஒப்புவித்தான்”[1] என்று மு. அருணாசலம் கூறுகிறார். இந்நூலே திருவாசகத்தின் முதல் அச்சுப் படியாகும். இப்பதிப்பைப் பார்த்துப் பிறகுவந்த திருவாசக மூலப் பதிப்புக்கள்

பதிப்பிக்கப் பெற்றுள்ளன. முதல் நூலின் திருந்திய வடிவும், தேசிகர்பால் கொண்டிருந்த பெருமதிப்பும் அப்பதிப்பை அப்படியே ஏற்கும் மன நிலையை மற்றவர்க்கு அளித்தன என்று கருத இடமுள்ளது.

### பி. சிதம்பர முதலியார் மூலப் பதிப்பு; (1892)

1892இல் பி. சிதம்பர முதலியார் திருவாசக மூலப் பதிப்பு நூலைப் பதிப்பித்துள்ளார். பழவேற்காடு சிங்காரவேலு முதலியார் பார்வையிட்டுள்ளார். இம் மூலப் பதிப்பில் மாணிக்கவாசகர் வரலாற்றை நிலை மண்டில ஆசிரியப்பாவில் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் எழுதியுள்ளார். சந்தி பிரிக்காமல் திருவாசக மூலம் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

*"அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க*
*மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*
*யொன்றெ னுக்கொன்று நின்றெழில் பகரி*
*னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன."*[2]

அடிக்குறிப்பில், அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதப் பெற்றுள்ளது; இலக்கணக் குறிப்புக்கள், யாப்புப் பற்றிய விளக்கங்கள் கூறப்பெற்றுள்ளன.

### பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் வெளியீடு

பி. இரத்தினநாயகர் சன்ஸ் வெளியீடாகத் திருவாசக மூலப் பதிப்பு வெளியிடப்பெற்றுள்ளது. சந்தி பிரிக்காமல் பாடல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. நல்ல தமிழ்ப் பயிற்சி உடையவர்களுக்கு இம்மூலப் பதிப்புப் பயன்படும். இம்மூலப் பதிப்பில் மாணிக்க வாசகரின் வரலாற்றுச் சுருக்கம் இணைக்கப் பெற்றுள்ளது. இவ்வரலாறு, செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளது. (எ-டு) "உபதேசப் பொருளை ஐயந்திரிபின்றி அங்கையின் நெல்லிக்கனி போற் பெற்ற வாதவூரடிகள் சிவபெருமானிடத்து அன்பு மேலிட்டு அற்புதமான ஞானப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். அப்பாடல்களைக் கேட்டருளிய கடவுளானவர் திருவுளங்களி கூர்ந்து அவரது திருவாய் மலரினின்று பிறந்த வாசகங்கள், மாணிக்கங்கள் போல் விலையேறப் பெற்றவையாயிருக்கையால் அவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருநாம மளித்து அவரை அத்தலத்திலே வசிக்கும் படி கட்டளையிட்டு மறைந்தருளினார்."[3]

புறநாற்றுப் பாடல்களில் துறை விளக்கம் அமைந்திருப்பது போலத் திருவெம்பாவைப் பாடல்கள் விளக்கம் கூறப்பெற்றுள்ளது. ஒவ்வொரு பதிகத் துக்கும் யாப்பு எழுதப்பெற்றுள்ளது. எங்குப் பாடப் பெற்றது என்னும் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

### சைவசித்தாந்த மகா சமாச வெளியீடு (1941)

1941இல் திருவாசக மூலப்பதிப்பு பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு வெளியிடப்பெற்றது. பின்னர் 1968இல் திருத்தமான மற்றுமொரு பதிப்பும் பதிக்கப் பெற்றது. 1978 ஆண்டுப் பதிப்பில், "திருவாச கத்தின் முக்கியமான தொடர்களை அன்பர்கள் எப்போதும் மனத்திலிருத்துவான் வேண்டித் தடித்த எழுத்திலும் அச்சிட்டுத் திருவருள் கூட்ட இப்போது வெளியிடுகின்றோம்"[4] என்று பதிப்புரையில் கூறப் பெற்றுள்ளது. இப்பகுதியில் தேக்கி நிற்கும் அனுபவங்கள் பலகால் நினைவுகூரத்தக்கன என்பதும் விரைந்து கற்பார் இவற்றையேனும் ஒருமுறை படிப்பது நூலின் அருமை உணர உதவும் என்பதும் தடித்த எழுத்துக்களில் சில அடிகள் பதிப்பிக்கப்பட்டதற்கான காரணங்களாகும் என்று கூறப்பெறுகிறது.

இத்திருவாசக மூலப் பதிப்பு உருவாவதற்கும் பலரின் முயற்சியும் பலரின் பொருளுதவிகளும் காரணங்களாக அமைந்தன.

### எஸ். ராஜம் வெளியீடு; (1956)

மர்ரே நிறுவனத்தார் (எஸ். ராஜம்) தமிழ் நூல்கள் பலவற்றை மூலப் பதிப்புக்களாக வெளி

யிட்டுள்ளனர். 1956இல் திருவாசக மூலப்பதிப்பை வெளியிட்டனர். பதிப்பாசிரியக் குழுவினர் பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்துள்ளனர். இந்நூலின் விலை ரூபாய் ஒன்று ஆர்வமுள்ள எல்லோரும் இதனை வாங்கிப் படிக்கவேண்டும் என்பது வெளியீட்டாளரின் நோக்கமாகும். இப்பதிப்புக்குப் பள்ளியக்கிரகாரம் நீ. கந்தசாமிப்பிள்ளை உதவி செய்துள்ளார். "பாடல்களைப் பிரித்துக் குறியீடுகள் செய்தும், பாடரூப பேதக் குறிப்புக்களை ஒழுங்குப்படுத்தித் தொகுத்து எழுதியும் அவற்றுள் கொள்ளத்தக்க பாடங்களைத் தேர்ந்தும் சொல் விளக்கம், திருவாசகத்துள் காணும் திருப்பதிகள், கதைக் குறிப்புக்கள், முதலியவற்றைச் செவ்வையாக எழுதியும் இப்பதிப்பு நல்ல முறையில் வெளிவரப் பெரிதும் உதவி புரிந்துள்ளார்கள். கைம்மாறு கருதாது உழைத்த திரு. பிள்ளை அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடப்பாடுடையோம்."[5] என்று மர்ரே நிறுவனப் பதிப்புரையில் குறிக்கப்பெற்றுள்ளது. நூலை அச்சிடுங் காலத்தில் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களுக்குப் பதினைந்து தமிழறிஞர்கள் குழுவாக அமைந்து உதவினார்கள். "பல அன்பர்கள் ஒப்புநோக்கி உதவியதனால்தான் திருவாசகத்திற்கு 67 சுவடிகள் பார்க்க முடிந்தது".[6] பல சுவடிகளை ஒப்புநோக்கிச் செய்த ஆராய்ச்சிப் பயனே இப்பதிப்பாகும். திருவாசக மூலப் பதிப்புக்களில் இம்மூலப் பதிப்பு நூல் சிறந்து விளங்குகிறது. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி. உருகுவதற்கு எளிதில் பொருளை உணர வேண்டும். அவ்வாறு உணர்வதற்குப் புத்தகப்பதிப்பு முறை உதவ வேண்டும். பதிப்பின் ஒரே நோக்கம் இலக்கிய இலக்கண அறிவு பெறாதவர்களும் கூட மூல நூலைப் படித்துப் புரிந்து கொண்டு அதில் ஈடுபட வேண்டும்."[7] என்று மு. அருணாசலம், மர்ரே நிறுவனப் பதிப்பின் எளிமைத் திறத்தைப் பாராட்டுகிறார். மிகைப் பாடல்கள், சொல் விளக்கம் பிற்சேர்க்கையாக உள்ளன. இச்சொல் விளக்கம் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயனுடையதாக விளங்கும். இச்சொல் விளக்கம் திருவாசக அகராதி என அமைந்திருக்கிறது. திருவாசகக் கதைக் குறிப்புக்களும் பாட வேறுபாடுகளும், சுவடிகள், புத்தகங்கள் பற்றிய விளக்கமும் இப்பதிப்பின் சிறப்புப் பகுதிகளாகும்.

### சை. சி. நூ. ப. கழக வெளியீடு (1961)

1961இல் சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகத்தின் முதற் பதிப்பாக பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு வெளியிடப்பெற்றது. இந்நூலின் தொகுப்பாசிரியர் ப. இராமநாதபிள்ளை ஆவார். "இந்நூல்கையடக்கமாக உள்ளது ஓதி வழிபடுதற்கும் திருக்கோயிலுக்கும் திருவூர்கட்கும் செல்லும் போது உடன் கொண்டு சென்று வழிபடுதற்கும் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது."[8] என்று இந்நூலின் வெளியீட்டு நோக்கத்தை விளக்குகின்றது. இப்பதிப்பில் திருவாசகத்தை முழுதும் பதிப்பிக்காமல் ஒவ்வொரு பதிகத்திற்கு ஒன்றிரண்டு பாடல்கள் பெரிய எழுத்திலும் எளிய முறையில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

### கையடக்கப் பதிப்பு: (1974)

1974இல் திருவாசக மூலப் பதிப்பு நல்லதொரு கையடக்கப் பதிப்பாகச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. "இந்நூல் உருகா உள்ளத்தையும் உருக்கி உயிர்க்குப் பசுத்துவம் கெடுத்துப் பதித்துவம் அருளவல்லதாகலின், இது செந்தமிழுக்கு அன்பு மறையாய்ப் போற்றப் பெறுகிறது."[9] என்று பதிப்புரை குறிப்பிடுகிறது. பக்தி இலக்கியக் கொள்கை இவ்விடம் விளக்கப் பெறுகிறது. கையடக்கப் பதிப்பு அளவில் சிறிதாக இருப்பதால் நூலை எடுத்துச் செல்வது எளிதாகும்; ஓய்வுப் பொழுதில் படிக்க முடியும்; மனப்பாடம் செய்ய உதவும்.

### திருப்பனந்தாள் காசிமட வெளியீடு: (1975)

திருப்பனந்தாள் காசி மடத்தின் தமிழ்ப்பணிகள் பலவாகும். அவற்றுள் சமய இலக்கிய வெளியீடு

களை உயர்ந்த பணியாகக் கொண்டனர். இருபத் தோராவது அதிபர் தவத்திரு காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் காலத்தில் சமய நூல்கள் பதிப்பிக்கப் பெற்றன. ஆதிகுமரகுருபர சுவாமிகள் இருநூற்று எண்பத்தேழாம் ஆண்டுக் குருபூசை நினைவு வெளி யீடாகத் திருவாசக மூலம் வெளியிடப்பெற்றது.

### திருவாடுதுறை ஆதீன வெளியீடு (1985)

சபாபதி அபிடேக நாளாகிய திருவாதிரைத் திரு நாளில் (05.01.1985)இல் திருநாள் விழா மலராகத் திருவாசக மூலத்தை வெளியிட்டனர். புலவர் சு. வடிவேலன் தம் முகவுரையில், "தேனூறும் செஞ்சொல் திருவாசகம் படிப்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்து பயன்படுத்தும் சிறப்பு வாய்ந்தது"[10] எனக் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் திருவாசக இலக்கியப் பண்பை உணர முடிகிறது.

### மணிமேகலை பிரசுர வெளியீடு; (1986)

மர்ரே நிறுவனம், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை வெளியிட்டது போலவே மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டு வருகிறது; 1986இல் திருவாசக மூலப் பதிப்பை வெளியிட்டது. இப்பதிப்பில் மிகைப் பாடல்கள் சுட்டப்படுகின்றன.

இங்ஙனம் திருவாசகம் மூலப் பதிப்பாக மன்னர் களின் ஆர்வத்தாலும் புலவர்களின் பெருவிழை வாலும் சைவத் தொண்டர்களின் ஈடுபாட்டாலும் வள்ளல்களின் கொடையாலும் கற்பவர்களுக்கு எளிதாக இருக்க வேண்டும் என்னும் கருத்தாலும் திருமடங்களின் சைவத் தொண்டாலும் பாமரர்க்கும் திருவாசக இலக்கியப் பயன் சென்றடைய வேண்டும் என்னும் பரந்த நோக்கத்தாலும் பல காலங்களில் பெரியோர்கள் பலரால் வெளியிட்டது.

## குறிப்புக்கள்

1. மு. அருணாசலம், திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள்,ப.155.
2. பி. சிதம்பர முதலியார் (ப. ஆ), திருவாசகம் மூலம், திருவண்ட்., அடி. 4 ப. 55.
3. திருவாசக மூலம், பி. இரத்தினநாயகர் சன்ஸ் (வெளியீட்டாளர்கள்), ப.9.
4. இரா. சங்கரன், சொ. சீ. சிங்காரவேல், பதிப்புரை, திருவாசக மூலம், ப. 3.
5. எஸ். ராஜம் (வெளியீடு), பதிப்புரை, திருவாசக மூலம், பக் 78.
6. மேற்படி, ப.8
7. மு. அருணாசலம், திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புகள், ப.156
8. ப. இராமநாதபிள்ளை (தொ. ஆ), பதிப்புரை, பன்னிருதிருமுறைப் பெருந்திரட்டு, ப. 6.
9. பதிப்புரை, திருவாசக மூலம், சை. சி. நூ. ப. கழகம், ப. 3
10. சு. வடிவேலன், முகவுரை, திருவாடுதுறை ஆதீன வெளியீடு, திருவாக மூலம் ப.10.



# திருவாசக உரை வரலாறு

முனைவர் இரா. சுந்தரமூர்த்தி

**(திருவாசக உரைகள் நூல் முழுமைக்கும்)**

"தமிழ் இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர் களுக்கு மிகச்சிறந்த இடம் உண்டு. நூலாசிரி யரின் அரிய கருத்துக்களையெல்லாம் உரையாசிரி யர்களின் வாயிலாக அறிந்து இன்புறுகின்றோம்." என்று சு. சக்திவேல் கூறுகிறார். மூல நூலுக்குக் காலந்தோறும் உரைகள் எழுதப் பெற்றுள்ளன. உரைகள் பல் வகையின; பல் திறத்தன உரை வரலாற்றுக்கு உதவுவன. "தமிழ் வரலாற்றில் மூல வரலாறு, உரை வரலாறு என இரு கூறுகள் உள்ளன. பின்னது முன்னதற்கு நிகரானது. தாழ்ந்ததன்று. மூல நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்களையும் போற்றுவது தமிழ் மரபு" என்று கூறுகிறார் இரா. மோகன். திருவாசகத்துக்கு உரை யெழுதிய பெருந்தமிழறிஞர்கள், திருவாசக த்தின் அருமையையும், பெருமையையும் தெரிவித் துள்ளனர். திருவாசக உரைகள், உரையாசிரி யர்களின் நுண்மாண் நுட்பங்களைப் புகல்வன. "வைணவ உலகில், நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழி சிறந்து விளங்குவது போல, சைவ உலகில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம் சிறந்து விளங்குகின்றது. திருவாய்

மொழிக்கும் திருவாசகத்திற்கும் பல உரைகள் தோன்றியுள்ளன.'' என்று மு. வை. அரவிந்தன் மொழிந்ததற்கிணங்கச் சீகாழித்தாண்டவராயர் உரை முதல் இன்று முடியப் பல உரைகள் வெளியிடப் பெற்று வந்துள்ளன. திருவாசகம் முழுமைக்கும் பேருரைகளும் சிற்றுரைகளும் குறிப்புரைகளும் எழுதப்பெற்றுள்ளன; திரு வாசகத்தின் சில பகுதி களுக்குப் பேருரைகளும் சிற்றுரைகளும் எழுதப் பெற்றுள்ளன. பெரும்பாலானவை எளியவுரைகளாக அமைந்து திருவாசக மூலத்தைத் தெளிவாகப் புலப் படுத்துகின்றன. புலப்பாட்டு நெறியைத் திருவாசக உரையாசிரியர்கள் பின்பற்றினார்கள். இவ்வியல் திருவாசக உரை வரலாற்றை விளக்குகிறது.

### ப. வாசுதேவ முதலியார் உரைப் பதிப்பு (1897)

1897இல் திருவாசகமும் சில வித்துவான்களால் இயற்றப்பட்ட உரையும் திருவாதவூரடிகள் புராண வசனம் பட்டாளம் வாசுதேவ முதலியாரால் (சென்னை ப்ரீசர்ச் மிஷன் போர்டிங் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்) வெளியிடப் பெற்றது.

ஞான அனுபவம் பெற்றவரேயன்றி மற்றை யோர் உரை விளக்கம் காணுதல் அரிது. உயர் ஞான அனுபவம் பெற்ற திரு. ஈ. சுந்தரமாணிக்க யோகீசுவரர் தம் ஞான வலிமையால் திருவாசக உண்மை ஞான விளக்க உரையை எழுதிவெளி யிட்டார்.'' என்று ஜோதி இராமசாமி தேசிகர், தம் பதிப்புரையில் பகர்கிறார். மேலும் 'உரை நூலில் கூறப்பட்டிருக்கும் அநேக மகத்தான ஞானரகசியங் களை இவ்வுரையாசிரியர் தம்மால் அமைக்கப்பட்ட பிரம்ம வித்தியா சங்கத்திலுள்ள நூற்றுக்கு அதிகப் பட்ட அங்கத்தினர்களுக்குச் சுருதியின் கருத்துக்கும் யுக்திக்கும் அணு அளவு முரண்படாமல் உபதேசித்து அவர்களின் அனுபவத்திற்கும் கொண்டு வந்திருக் கின்றார்.'' என்று பிரம்ம வித்தியா சங்கத்தின் சிறப்புரை கூறுகிறது. இச்சங்கத்தார்க்கு விளக்கந் தரும் பொருட்டு எழுதப்பட்டுள்ளது. நூலைப் பாடமாக நடத்தி அப்போது தோன்றும் ஐய வினாக்களுக்கு ஏற்பத் தெளிவு தரும் முறையில் உரை எழுத முயலும் என்பதனை இது காட்டுகிறது.

### கா. சுப்பிரமணியபிள்ளை உரை (1933)

1933 ஆங்கிரச ஆண்டு மாசித்திங்களில் சமாஜ மன்றக் கூட்டு வெளியீடாகத் திருநெல்வேலி மணிவாசக மன்றத் தலைவர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். இயற்றிய உரை வெளியிடப்பெற்றுள்ளது.

கா. சுப்பிரமணியபிள்ளை திருவாசகப்பாடலுக்கு உரை என்னும் பகுதியில் திருவாசகத்தின் கருத் துரையை எழுதியுள்ளார். அடுத்துக் குறிப்பு என்னும் பகுதி இடம்பெறுகின்றது. இக்குறிப்புப் பகுதி, விளக்க வுரையாகும். சொற் பொருள் விளக்கமும் இதனுள் அடங்கும்.

மு. வை. அரவிந்தன் "இவர் (கா. சுப்பிர மணியபிள்ளை) உரை பொழிப்புரையாக உள்ளது. மிகத் தெளிவாகச் சொற்பொருளை உணர்த்து கின்றது; யாரும் எளிதில் உணர உதவுகின்றது; சிறந்த வழிகாட்டியாய் உள்ளது. இவ்வுரையில் ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் சித்தாந்தச் செந் நெறியின் கீர்த்தியும் தொட்ட இடம் எல்லாம் பொலிந்து தோன்றுகின்றன.'' என்று பாராட்டுகிறார்; இவ்வுரையின் எளிமையும் தெளிவும் குறிப் பிடத்தக்கனவாகும். உரை ஆசிரியரின் சித்தாந்தப் புலமைக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாம்.

### சீகாழித்தாண்டவராயர் உரை (1954)

1954இல் சீகாழித்தாண்டவராயரின் வியாக்கி யானம் என்னுந் திருவாசக நூலை இரண்டு பகுதி களாக, அடையாறு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் வெளியிட்டு ள்ளது. இதன் பதிப்பாசிரியர் ரா.விசுவநாதையர்

ஆவார். "இவ்வரிய உரைப்பதிப்புக்கு உதவியாயிருந் தவை மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் சேகரித்து வைத்த இரண்டு ஓலைச்சுவடிகளும் ஒரு காகிதப்பிரதியுமேயாகும்." என்றுஐயரின்திருவாசக ஈடுபாட்டினை ரா. விசுவநாதையர் பாராட்டுகிறார். "முதல் நான்கு அகவல்களைக் கொண்ட முதற் பகுதி ஐயரவர்களின் 99 ஆவது பிறந்த நாளும், இந்நூல் நிலையத்தின் 11 ஆவது ஆண்டு விழா நாளுமாகிய இத்தூய நாளன்று அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் திருவாளர் வி. எஸ். தியாகராஜ முதலியார் எம். ஏ. அவர்கள் திருக்கரங்களால் உலகுக்கு வழங்கப் பெறுவது பெரும் பாக்கியமே" என்று ரா.விசுவநா தையர் முதற் பகுதி உரை வெளியிட்ட வரலாற்றைக் கூறுகிறார். பிறந்த நாளினைச் சிறப்புச் செய்ய நூல் வெளியிடும் மரபுள்ளது என்பதனை அறியலாம்.

## உரைவெளியீடு

"அருமை வாய்ந்த ஏட்டுச் சுவடியைச் சேகரித்து வைத்த ஐயரவர்களுக்குச் சைவத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவர்களுடைய நூறாவது ஜன்ம விழா நிகழும் இவ்வாண்டில் (1954) இந்நூல் முழுமையும் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியே" என்று இரண்டாம் பகுதியின் முன்னுரையில் ரா. விசுவநாதையர் மொழிகிறார்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருளந்தித் தம்பிரான், திருவாசக வியாக்கியானங்களை இந்தியப்பல்கலைக் கழகங்களுக்கும், தமிழகக்கல்வி நிலையங்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள்.

## உரையின் காலம்

"திருவாசக அநுபூதி உரை என்னும் திருவாசக வியாக்கியானமாகிய இந்நூல் கலியுகம் 4945, சாலி வாகனம் 1756 செய ஆண்டுத் தைத்திங்கள் பூச நாளில் அம்பலவாணர் திருமுன் தொடங்கப் பெற்று, அதற்கடுத்த மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 26ஆம் நாள் அப்பெருமான் திருமுன்பே அரங்கேற்றப் பெற்றதென்று இந்நூலின் சிறப்புப் பாயிரம் (ப.32) கூறுகின்றது." இச்சிறப்புப்பாயிரம் திருவாசக வியாக்கியானம் முதற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இவ்வியாக்கியானத்தின் "காலம் (சகம் 1786) கி. பி. 1834" என்று மு. அருணாசலம் மொழிகிறார்.

## தாண்டவராயன்

"உரையாசிரியரைப் பற்றி ஏட்டின் முன் பகுதியிலிருந்து கிடைத்த செய்திகள் முதற்பகுதியின் முன்னுரையிலும், சிறப்புப் பாயிரத்திலும் கூறப் பெற்றன. அவ்வேட்டின் இறுதியில் கண்ட ஒரு குறிப்பால் உரையாசிரியரின் முழுப் பெயர் "சீகாழி இராசாத்துரை பிள்ளைக்குப் பிரதி நாமமான தாண்டவராயன்" என்னுங் குறிப்பு வந்துள்ளது என ரா. விசுவநாதையர் குறிப்பிடுகிறார். "இவ் வுரையின் (திருவாசக வியாக்கியானம்) ஆசிரியர் சீகாழித்தாண்டவராயர் என்னும் பெயருடையவர். இவர் திருவாரூரின்கண் பொற்பாத கமல ஆச்சாரிய பரம்பரையில் தோன்றிய சிவ குருநாதரான குரு சுவாமியடிகள் என்னும் பெரியாரிடம் சீடராயிருந்த வரென்று தம்மைக்கூறிக் கொள்கிறார். அப்பெரியார் திருவாரூரில் கோயில் கொண்டருளிய திருப்பரவை யம்மை மீது சிவானந்தமான பிள்ளைத்தமிழ் நூலொன்றும் சைவசித்தாந்தக் கருத்துக்களமைந்த பல பாடல்களும் பாடியிருப்பதாக இவ்வுரை கூறு கின்றது." என்றுரா. விசுவநாதையர் முன்னுரையில் மொழிகிறார். தாண்டவராயர், குருசுவாமியடிகளின் சீடராவார் என்பது இக்குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

## குருவின் உபதேசம்

"குரவரான குருசுவாமி, தம் சீடர் தாண்ட வராயருக்குத் திருவாசகத்துக்குரிய அகத்திய

சூத்திரங்களுக்குச் சம்பிரதாய உபதேச முறைப்படி மொழிப்புரையும் திருவாசகத்துக்கு விளக்கமும் உபதேசித்தார்.'' இப்பகுதிப்பில் அகத்திய சூத்திர ங்கள் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

குருவின் உபதேசத்தால் ''தாண்டவராயர் பத வியாக்கியானம், நுட்பம் விரிவு முதலியவற்றை எழுதினாரென்றும் உரைப்பாயிரம் கூறுகிறது.'' என்று விசுவநாதையர் திருவாசக வியாக்கியானம் முதற் பகுதி முன்னுரையில் காட்டியுள்ளார்.

### பழையவுரை

ச. தண்டபாணிதேசிகர் தம் திருவாசக விளக்க வுரையில் சீகாழித் தாண்டவராயரின் திருவாசக உரைப்பகுதிகளை மேற்கோள்களாகக் கையாள் கிறார். சீகாழித் தாண்டவராயர் உரையைப் ''பழைய உரை'' என்கிறார். பழைய உரையினை'' .... எழுதப்பெற்ற உரைகளுள் பழமையானது திருவாசக அநுபூதியுரை என்ற பெயராலே அறியப் பெறும்'' என்று ச. தண்டபாணி தேசிகர் பாராட்டு கிறார்.

### சீகாழித் தாண்டவராயர் சொல் நடை

''தமிழ் நூலறிவு வாய்க்கப்பெறாத எளிய மாந்தர்களுக்கும் பொருள் விளங்குமாறு சொன் னடை அமைந்து விளங்குகிறது. எனினும் இதன் பொருளாழம் அனுபூதிமான்களுக்கே காண அருமையுடைத்தாயிருக்கிறது.'' என்று ரா. விசுவ நாதையர் குறிப்பிடுகிறார். சீகாழித் தாண்ட வராயரின் உரை எளிமை மிக்க சொற்களால் அமைந்தது எனினும் அதன் பொருண்மை நுணுகி அறிய வேண்டிய ஒன்று என்பது பல்வேறு சிறப்புக்களில் ஒன்றாம். எளிமை கருதி எள்ளலும் அருமை கருதி மயங்கலும் கற்பவர் மேற்கொள்ளும் நிலைகளாம். இங்ஙனம் எள்ளலும் மயங்கலும் போக்கவே இவரது உரை அமைந்தது எனலாம்.

### உரையின் நோக்கம்

''இவ்வுரையின் நோக்கம் சைவசித்தாந்த சிவஞானபோத திருவருள் உண்மை, ஞானத் திருவாசகத்தின் பெருமை பயன் என்பதேயாகும். திருவாசகமேயன்றி நாயன்மார்கள் அருளிய பாடல்கள் யாவுமே சிவஞானபோத உண்மையைத் தெரிவிப்பன என்பது இவ்வாசிரியரின் திடமான கொள்கை. ஸ்ரீ மெய் கண்டார் காலத்தாற் பிற்பட்ட வரேயெனினும் சிவஞானபோதவுண்மை அனாதி யென்பதையும் அவ்வுண்மையே சமயாச்சாரியார் களும் பிற நாயன்மார்களும் தத்தம் நூல்களில் வெளியிட்டருளினர் என்பதையும் நிரூபிப்பதே இவ்வுரை உலகுக்குச் செய்துள்ள பேருதவியாகும்'' என்று ரா. விசுவநாதையர் கூறுகிறார். திருவாச கத்தின் உட்பொருள். சைவசித்தாந்தம் எனத்தெளி யலாம். உரை முழுவதும் இக்கருத்து ஒளிர்கிறது.

### பகுப்பு முறை

''பொருளமைதிக்கு ஏற்றவாறு பதிகத்தின் அடிகளை வகுத்துக் கொண்டு அவற்றிற்குப் பதப் பொருள், நுட்பம், கருத்து, எச்சம் என்பன போன்ற தலைப்புக்களின் கீழ் உரை வகுப்பதும் இவருடைய வழக்கமாகக் காண்கிறது.'' என்று ரா.விசுவநாதையர் கூறுகிறார். சீகாழித்தாண்டவராயர், நுட்பவுரை யென்றும் எச்சவுரையென்றும் புதிதாக வகுத்துக் கொண்டு உரையெழுதுகிறார். இவ்வகையமைப்பு நூல் முழுவதும் இடம் பெறவில்லை. தேவைப்பட்ட இடங்களுக்கு மட்டுமே நுட்ப உரை கூறவேண்டு மெனக் கருதினார் எனத் தோன்றுகிறது. எச்ச உரை என்பது தாம் வகுத்துக் கொண்ட எல்லைகளுக்கு அப்பாலும் தோன்றும் புதிய விளக்கங்களுக்குப் பள்ள மடையாக அமைவது.

### சொற்பொழிவுத்திறன்

''சிலவிடயங்களில் இவர் பிரசங்கம் செய்யும் முறையில் உரையைச் செய்திருக்கின்றபடியால்,

இவ்வுரை இவரால் பலருக்கு உபதேசிக்கப்பட்டிருந் தமையும்புலனாகிறது." எனவரும்இச்செய்தியால் கேள்விச் செல்வமாகச் சீகாழித்தாண்டவராயர் உரை சொல்லப்பட்டு வந்திருக்கிறது என அறியலாம். இந்த உரை சொற்பொழிவு நடையாய் அமைந் துள்ளது.

சீகாழித்தாண்டவராயர், அவையடக்கம் எனும் பகுதியில், "கருத்து, பதம், பொழிப்பு, அகலம், எச்சம், சம்பிரதாய உரை என குரு உபதேசப்படி அடியேன் சொல்வதை மற்றொன்று விரித்த லெனக்கொள்ளாது அநுபூதியெனக் கொண்டு சமய சந்தான ஆச்சாரிமார்கள் திருவாக்குகள் முழுவதும் இந்த திருவாசகத் திருவருட்பயன் அநுபூதியெனக் கொள்க." எனக் கூறுகிறார். உரையின் இயல்பை, அவையடக்கத்தால் சுட்டுவது திட்டமிட்டு உரை எழுதுகின்ற தன்மையை விளக்குவதாகும்.

### க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் உரை (1954)

திருவாசக ஆராய்ச்சிப் பேருரையின் முதற் பதிப்பு 1954இல் (விசய ஆண்டு மாசித் திங்கள்) இலங்கைத் தெல்லிப்பழை மாவிட்டபுரம் பத்மா பதிப்பக வெளியீடாக வந்தது. மாவைக்கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார் என்னும் பண்டித மணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் என்பவர் உரை எழுதியுள்ளார்.

### ஈட்டுரையின் செல்வாக்கும் தாக்கமும்

இராஜ. சிவ. சாம்பசிவசர்மா தம் பதிப்புரையில் "நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திற்கு வைணவப் பெரியோர்கள் கண்ட வியாக்கியானங்களைப் போலச் சைவத்திருமறை ஒன்றற்கேனும் உரை வரையப்பட்டிலதென நின்ற குறையை இவ்வா ராய்ச்சிப் பேருரையாசிரியர் போக்கியுள்ளார்." என்றுரைக்கிறார்.

### பலநாளைய சிந்தனை

க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் தம் முன்னு ரையில் தமது நோக்கங்களை விளக்கியுள்ளார். "திருவாசகம் முழுவதும் உரையெழுதவேண்டு மென்னும் எண்ணம் பல நாள்களாக என்னுள்ளத்தில் வேரூன்றி யிருந்தது" என்று தமது அடிமனத்தில் தோன்றிய ஆர்வத்தை வெளியிட்டுள்ளார்.

### கற்றல், கற்பித்தல்

"திருக்கோவையாரைப் பேராசிரியருரையுடன் ஆராய்ந்து கற்றுங்கற்பித்தும் வந்தமையானும் திருவாசகத்தைப் பலருரைகளோடும் பயின்றமை யானும் அவ்வெண்ணம் உரம் பெறுவதாயிற்று" என்று நவநீதகிருஷ்ண பாரதியார் கூறியுள்ளார்; ஒரு நூலைப் பலகால் கற்றலும் பலர்க்குக் கற்பித் தலும் அந்நூலின் அரிய ஆழ்ந்த பொருள்களை உணர்த்துமாதலின் உரை எழுதும் திறம் அதனால் பெருகும் என அறியலாம்.

### பல்லாண்டு உழைப்பு

இராஜ. சிவ. சாம்பசிவசர்மா "உரையாசிரியர்" எனும் கட்டுரையில் "இத்திருவாசக ஆராய்ச்சிப் பேருரையை ஆறாண்டுகளில் எழுதிநிறைவேற்றி யதாக இவ்வுரையாசிரியர் கூறினும் பல்லாண்டு களாக அரும்பாடுபட்டுள்ளார் என்பதனைத் தேதி யிட்டு எழுதப்பட்ட அவரது ஆராய்ச்சிக் குறிப்புக்கள் எடுத்துக் காட்டு கின்றன" எனக் குறிப்பிடுகிறார். ஓர் உரை நன்கு உருவாகப் பல்லாண்டு கால உழைப்புத் திறன் உறுதுணையாகும் என்பது புலனாகிறது.

### வீரபாகுபிள்ளை உரை (1957)

1957இல் எம். இ. வீரபாகுபிள்ளை, பி. ஏ. எல். டி. (மு. இ. வீரபாகு) அவர்கள் திருவாசகத்துக்கு

எளிய உரை எழுதியுள்ளார். "கருங்கல் மனத்தையும் உருக்கவல்ல திருவாசகத்திற்கு அறிஞர்கள் பலர் உரை எழுதிருக்கிறார்கள். ஆயினும் எல்லோருக்கும் நன்கு விளங்கத்தக்க எளிய உரை ஒன்று வேண்டுமென்பது என்னுடைய நெடு நாளைய நோக்கமாக இருந்தது" என்று மு. இ. வீரபாகுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். முன்னோர் உரையைத் தழுவியே இவ்வெளியவுரை எழுதப் பட்டுள்ளது; தெளிவுரையாக எழுதப்பட்டது. அரிய நூல்களுக்கும் பாமரர் அறிந்து கொள்ளுமாறு எளியவுரை எழுதி வெளியிட வேண்டும் என்ற பிள்ளையவர்கள் பெருநோக்கமே இவ்வுரை வெளி வரக் காரணமாயிற்று.

### பதிப்பு முறை

"பாட்டைப் படிப்பவர்கள் உடனுக்குடன் நேருக்குநேராக உரையையும் தெரிந்து கொள்ளத் தக்கமுறையில் பதிப்பித்தல் படிப்பவர்கட்குப் பேருதவியாக இருக்கும் என்று இடது பக்கத்தில் பாடல்களையும் அதற்கு நேராக வலது பக்கத்தில் உரையையும் பதிப்பித்திருக்கிறேன்." என்று மு. இ. வீரபாகுப்பிள்ளை கூறுகிறார். அருமை உடையதென்று பல நல்ல நூல்களைப் பாமரர் கற்க தயங்கும் நிலை கண்டு அவர்கள் எளிதில் கற்றுப் பொருள் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற இவரது நோக்கம் பிறர்க்கும் வழிகாட்டுவதாக அமைந்தது. இன்றைக்கு எளிய உரை எழுதும் உரையாசிரியர்கள் இம்முறையைப் பின்பற்று கிறார்கள். பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய நூல்களுக்கு இம்முறையில் உரை எழுதப்பட்டும் இப்பதிப்பு முறை, பின்பற்றப்பட்டிருப்பதும் இதன் செல்வாக்கைக் காட்டும்.

### புலியூர்கேசிகன் தெளிவுரை: (1963)

1963 சனவரித் திங்களில் முதற் பதிப்பாகப் புலியூர்க் கேசிகன் திருவாசகத்திற்குத் தெளிவுரை எழுதி வெளியிட்டார். புலியூர்க் கேசிகன் முன்னைய உரையாசிரியர்களைப் பின்பற்றிச் சங்கவிலக்கி யங்களும் பிறவிலக்கியங்களுக்கும் தெளிவுரை யெழுதியுள்ளார். இவரது நோக்கம் மாணாக்கர் களும் மற்றும் ஆர்வலரும் பழந்தமிழ் நூல்களைப் பயிலத் தெளிவுரை தரப்பட வேண்டும் என்பதாம். அந்நோக்கத்துடனேயே திருவாசகத்திற்கும் தெளி வுரை எழுதியுள்ளார்.

### பதிப்பு முறை

திருவாசகத்தின் பாடல்கள் சந்திபிரித்துப் பதிப் பிக்கப்பட்டிருகின்றன. ஒவ்வொரு பாடலின் கீழும் தெளிவுரையெழுதப் பெற்றுள்ளது. திருவெம்பாவை உரை முன்னைய உரையாசிரியர்களைப் பின் பற்றியே எழுதப் பெற்றுள்ளது. தம் புலமை, ஆய்வு ஆகியவற்றை நிலைநாட்டுவதனைவிடக் கற்பார்க்கு எளிதில் உணர்த்தும் வகையில் மரபு வழியான உரையினை எழுத வேண்டும் என்பதே இவரது உரையின் சிறப்பியல்பாம்.

### ச. தண்டபாணி தேசிகர் உரை (1964)

1964இல் ச. தண்டபாணிதேசிகரின் "திருவாசகம் குருவருள் விளக்கம்" என்னும் உரை நூலைத் திருவாடுதுறை ஆதீனம் வெளியிட்டுள்ளது. "திருவாச கத்திற்கு உரை எழுதுதல் கூடாது என்ற மரபு பன்னெடுங் காலமாகச் சமயவுலகில் நிலவிவருகிறது. எந்த நூலுக்கும் உரை காண்பதாயின், நூலாசிரி யனுடைய நிலை-அனுபவம், அவன் கண்ட கண் (அறிவு) - அவனுக்குக் கிடைத்த அகச் சாதனங்கள், புறச்சாதனங்கள் இவை நமக்கும் கிடைக்கப்பெறின் எழுதலாம். திருவாசகமோ அறிவாற் சிவனேயான மாணிக்கவாசகர் அருளியது. அத்தகைய நிலை பெற்றவர்கள் யாரும் எந்நாளிலும் தோன்றியது மில்லை; தோன்றப் போவதுமில்லை. ஆகவே அவர்கள் நூலுக்கு உரை எழுதுதல் கூடாதுதான்.

ஆயினும் சுவாமிகளே சொல்லிய பாட்டின் பொருணர்ந்து சொன்னாலன்றிப் பயனின்று என ஆணை தருகின்றார்கள். பொருளோ, அவரவர் களுடைய அறிவுக்கும் அநுபவத்திற்கும் திருவரு ளுணர்ந்தும் நிலைமைக்கும் ஏற்ற அளவினது" என்று ச. தண்டபாணி தேசிகர் தம் முகவுரையில் விளக்கமாக மொழிகிறார். பாட்டுக்குப் பொருள் உணர்த்தல் இன்றியமையாதது என்று கூறித் திருவாசகத்தைச் சான்று காட்டி விளக்குகிறார்.

## தியாகராசச் செட்டியார்

"மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களின் தலைமாணாக்கரான வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்களைத் திரிசிரபுரம் பட்டாபிராமபிள்ளை அவர்கள் திருவாசகத்துக்கு உரையெழுதித் தர வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். ஒரு நாள் சீரங்கத்துக்குக் காவிரிப் பாலத்தில் தியாகராசச் செட்டியார் அவர்கள் வந்து கொண்டிருந்தபோது பட்டாபிராமபிள்ளை வழக்கம் போல் வற்புறுத்தினார். ஸ்ரீமான் செட்டியார் அவர்கள், என்ன ஐயா! அதற்கு நானா உரை எழுதுவது? திருவாசகம் எங்கே? அதற்கு உரை எழுதுவதற்கு என்னிறவு எம்மாத்திரம்? வேதம் ஆகமம் உபநிஷதம் புராணங்கள் சாஸ்திரங்கள் தெரிந்தாலல்லவோ அதற்கு உரை எழுத முடியும்; இனியும் வற்புறுத்துவீர்களானால் இதோ காவிரியில் விழுந்து உயிரை விட்டுவிடுவேன் என்றார்கள். இச்செய்தியை மகாமகோபாத்யாய ஐயரவர்கள் செட்டியாரவர்கள் வரலாற்றில் குறித்துள்ளார்கள் (பக்கம் 142-145)" என்று ச. தண்டபாணி தேசிகர் தியாகராசச் செட்டியார் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறார். பல்திறப் புலமை யிருந்தால்தாம் திருவாசகத்துக்கு உரையெழுத முடியும் என்பதை இப்பகுதி எடுத்துரைக்கிறது. இவ்வாறு ச. தண்டபாணி தேசிகர் உரை எழுத முடியாத நிலையை நினைத்துப் பார்க்கிறார்.

"திருவாசகத்திற்குப் பதவுரை, பொழிப்புரை முதலியவற்றை எழுதத் தமிழுலகம் தலைப்பட்டது ஏனெனில் மான் அறியாதற்கு ஆடு காட்டி இது போன்றது அது எனத் தெளிவிப்பது போலவும் பெருவிரலளவினதாய் இதயத் தாமரையின் நடுவிலும் ஏற்றிய விளக்குப் போலப் புருவ நடுவிலும் விளங்கும் சிவசோதியைச் சிவயோக சாதனையாற் காணவேண்டியிருக்க அதனை மந்ததரமுள்ள மாணாக்கற்குத் தியான பாவனை யாற் பரிபாகம் பெறுவிக்க ஆசாரியன் உணர்த்துவது போலவும் திருவாசகத்தின் சொற்பொருள்களை ஓரளவுணர்த்தி அநுபவப் பொருளறிதற்கு வழி செய்தல் கருதியேயாம் என்க." என்று ச. தண்ட பாணிதேசிகர் குறிப்பிடுகையில் சொற்பொருள்கள் ஓரளவுதான் கூற முடியும் என்கிறார். இக்காரணம் பற்றியே திருவாசக உரைகள் தோன்றலாயின. தமக்கும் உரையெழுதும் எண்ணம் ஏற்பட்டது என்கிறார்.

## புதிய எழுச்சி

ச. தண்டபாணிதேசிகர் தமக்கு உரையெழுத எழுச்சி எவ்வாறு ஏற்பட்டது? என விளக்கும்பொழுது, "சிவஞான சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், வெள்ளியம்பலவாண முனிவர் போன்றோர் ஆங்காங்குத் தந்த விளக்கங்கள் ஊன்றுகோலாக, எல்லாருடைய கருத்துக்களையும் சேர்த்துப் புதிய உரையும் எழுதலாமே என்ற எழுச்சி" எண்ணம் ஏற்பட்ட நிலையைக் குறிப்பிடுகிறார்.

## குருவருள் விளக்கம் என்னும் உரை

ச. தண்டபாணிதேசிகரின் மாணாக்கர் மெய்யப்பன் அவரது சிறந்த நண்பராக விளங்கினார். அவர் திருவாசகத்துக்கு எளிய பொழிப்புரை வேண்டு மென விண்ணப்பித்துக் கொண்டார். இருபத் தொன்றாவது குருமகா சந்நிதானமும் பேருரை

வேண்டும் என்னும் கருத்தினை வெளியிட்டார். ஆதீனத்தின் ஊக்கத்தால் குருவருள் விளக்கம் என்னும் உரையை ச. தண்டபாணிதேசிகர் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்களிடத்துக் கல்வி பயின்றவர். பண்டு கற்ற அக்கல்விப் பயிற்சி குருவருள் விளக்கம் என்னும் இவ்வுரை எழுத அவர்க்குப் பலவிதம் உதவியது.

### மெய்கண்ட உரை (1967)

1967 இல் திருநெல்வேலி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார், திருவாசகம் - மெய்கண்ட உரையை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளனர்; இந்தியஅரசு, தமிழக அரசுகளின் பொருளுதவி யினால் ஆக்கப் பெற்றன. இதனை பதிப்பித்தவர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

### காலத்தை வென்ற நூல்

17.04.1967 நாளிட்ட அ. உத்தாண்டராம பிள்ளை தம் அணிந்துரையில், "எக்காலத்துக்கும் பொதுவான சமயக் கருத்துக்கள் நிறைந்து நிகழ் கின்ற காரணத்தாலும் எல்லா மக்களும் இறை வனிடம் அன்பைப் பெருக்கி நெஞ்சுருக்கும் முறையிற் பாடல்கள் அமைந்திருக்கும் காரணத் தாலும் திருவாசகம் காலத்தை வென்ற நூல் என்பது தெளிவு" என்று கூறுகிறார்; அன்பின் சிறப்பினைக் கூறும் திருவாசகம், அன்பிற்கு முதன்மை தரும் மக்கள் காலமெல்லாம் வாழும் என்பது உறுதி.

### உரையின்மை

அ. உத்தண்டராமபிள்ளை தம் அணிந் துரையில், "இத்தெய்வத் தமிழ் நூல் (திருவாசகம்) தமிழ் வேதம் மாத்திரமல்ல. அன்புநெறி காட்டும் தமிழ்ப் பேரிலக்கியம், ஞானக் கருவூலம், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் முழுதும் அடங்கிய சாத்திர நூல், பத்திச் சுவையைப் பெருக்கும் தோத்திர நூல். இவ்வரிய நூலுக்குப் பழங்காலத்தில் யாரும் உரை எழுதியதாகத் தெரியவில்லை." என்று வருத்தமுற்றார்.

### முந்தைய உரைகள்

"மறைமலையடிகள் மகாமகோபாத்திய பண்டித மணி மு. கதிரேசன் செட்டியார் முதலியோர் சில பகுதிகளுக்கு உரை எழுதியுள்ளார். யாழ்ப்பாணம் நவநீதகிருட்டிண பாரதியார், போராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலியோரும் உரை எழுதியுள்ளனர். ஆனால் பொதுவாகத் தேவாரத் திருவாசகங்களுக்கு உரை எழுதுவது எளிதல்ல என்ற எண்ணம் பல பெரியோர்களிடம் இருந்தது." என்று அ. உத்தண்டராமபிள்ளை தம் கருத்தைக் குறிப்பிடுகிறார் சமய நூல்களுக்கு உரை எழுவதில் உள்ள எல்லைகளையும் தொல்லைகளையும இது உணர்த்துகிறது.

### பாட்டும் பொருளும்

"மாணிக்கவாசகப் பெருமானே தமது சிவ புராணத்தில், "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுராணத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்று கூறியுள்ளார்" என்னும் கருத்தை அ. உத்தண்டராமபிள்ளை நினைவுபடுத்துகிறார்.

### விரிவுரைகள் இன்றியமையாமை

அ. உத்தண்டராமபிள்ளை "நம்முடைய சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களும் உண்மைகளும் மக்களிடையே போதிய அளவு பரவாதிருப்பதற்கு ஒரு காரணம் நமது சமய நூல்கள் எல்லோருக்கும் விளங்கும்படியான எளிய உரைகள் எளியநடையில் அமைக்கப்படாமையும் நல்ல உரைகள் எழுதப்

படாமையுமே என்று தோன்றுகிறது. ஆங்கில மொழியில் சேக்சுப்பியர், மில்டன் முதலிய பெருங் கவிஞர்களின் காவியங்களும் பாடல்களும் உரை நூல்கள் தோன்றிய பின்னரே மிகச்சிறந்து விளங்கினவாகத் தெரிகிறது. எனவே திருவாசகம் போன்ற அருள் நூல்களுக்கு விரிவுரைகள் மிகமிக இன்றியமையாதன என்பதில் ஐயமில்லை'' என்று கூறுகிறார். பலர்க்கும் விளங்குமாறு எழுதப்பெறும் எளிய உரை வேண்டப்படுவன. பலரும் அணுக அஞ்சும் நூல்களையும், அவற்றின் எளிய உரைகள், கற்றுத் துய்க்க உரியனவாக்கிடும். ஆதலின் உரைகள் பல எழுதுவது அந் நூலைப் பல்லோரும் பயில உதவும் பெரிய தொண்டாகும்.

### மெய்கண்ட உரையின் உரையாசிரியர்கள்

டாக்டர் தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை, பு. சி. புன்னைவனநாத முதலியார், வே. மாணிக்க வாசகம்பிள்ளை, ஆ.அருளப்பன், டாக்டர் இ.மு.சுப்பிர மணியபிள்ளை ஆகியோர் உரையெழுதியுள்ள னர்.'' இவ்வுரையாசிரியர்கள் சைவசமய சாத்திர தோத்திர நூல்களில் மட்டுமன்றிப் பிற தமிழிலக் கியங்களிலும் பிற மொழி இலக்கியங்களிலும் ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவு பெற்ற புலவர்கள்; போப்பையருடைய ஆங்கில மொழிபெயர்ப்பையும் விளக்கங்களையும் நன்கு கற்று அறிந்தவர்கள்'' என்று மெய்கண்ட உரையின் உரையாசிரியர் களை அ. உத்தண்டராம பிள்ளை பாராட்டுகிறார்.

### சுவாமி சித்பவானந்தர் உரை (1968)

1968இல் சுவாமி சித்பவானந்தரின் திருவாசக உரையை, முதற் பதிப்பாகத் திருப்பராய்த் துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் வெளியிட்டுள்ளது. திருப்பராய்த்துறை தபோவன அச்சுப்பள்ளியில் அச்சிடப் பெற்றுள்ளது. இவ்வுரை நூலுக்கு அடுத்த தடுத்து ஐந்துபதிப்புக்கள் வந்துள்ளன. அது மக்களிடம் இந்நூல் பெற்ற செல்வாக்கை உணர்த்தும்.

### உரை அமைப்பு

மூலப் பாடல்கள் சந்தி பிரிக்காமல் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அடுத்ததாகப் பாடலடிகள் சந்திபிரிக்கப் பெற்றுள்ளன. சொற்பொருள்கள் கூறப்பெறுகின்றன. கருத்துரை, விளக்கவுரை எனப்பிரிக்கப் பெறுகின்றன.

### தமிழ் வேதம் எனல்

சித்பவானந்தர், ''சொல் அழகு, பொருள் அழகு ஆகிய இரண்டு அழகும் சேர்ந்து அமைவது நல்ல கவிதை. இவ்விரட்டை அழகு திருவாசகத்தில் உச்ச ஸ்தானம் பெறுகிறது. மேலான கருத்துக்களையும் தத்துவங்களையும் சிறந்த சொல் ஓவியத்தில் பொறிக்குமிடத்து அது வேதம் எனப்படுகிறது. பழங் காலத்தில் தோன்றிய ரிஷிகள் வேதங்களைச் சம்ஸ்கிருதத்தில் தோற்றுவித்தனர். அதனால் வேதங்கள் அம்மொழியிலேயே இருக்க வேண்டும் என்னும் நியதி இல்லை. பரத்தை அடையப் பெருமக்கள் தாங்கள் அனுபூதியில் கண்டறிந்த உண்மைகளை எம்மொழியில் எழுதி வெளியிட்டாலும் அது வேத மாகிறது. கணிதத்தை எம்மொழியில் எழுதிவைத் தாலும் அது கணிதமே. இன்னிசையை எம்மொழி யில் வெளிப்படுத்தினாலும் அது இன்னிசையே. அங்ஙனம் பரத்துவம் எம்மொழியில் பகரப்பெறினும் அது வேதமே திருவாசகத்தைத் தமிழ் மொழியில் அமைந்த வேதம் எனலாம். திருவாசகத்தைத் தமிழ் வேதம் எனக் காட்டவும் நாட்டவும் முயலும் திறன் இதனால் வெளிப்படுகிறது.

### அருள் நாட்டம்

''திருவாசகத்துக்கு விளக்கம் வழங்கியவர்களில் பெரும்பான்மையோர் சொல் அழகிலேயே கருத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் முயற்சி பாராட்டத் தக்கது. அதற்கேற்றபயனும் உண்டு. ஆனால் ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்கள் சொல் அழகிலேயே

திருப்தி யடைந்திருக்க மாட்டார்கள். நா வறண்டு போய் தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பவர்கள் தண்ணீரைப் பற்றிய அழகான வர்ணனையில் திருப்தியடைய மாட்டார்கள். பருகுவதற்குச் சேற்றுத் தண்ணீராவது சிறிது கிடைத்தால் போதுமென்று அவர்கள் இங்குமங்கும் தேடித் திரிவார்கள். அதே விதத்தில் அருள் நாட்டம் கொண்டிருப்பவர்களுக்கு அருள் தாகத்தை வளர்க்கும் தன்மையதாய்த் திருவாசகம் அமைந்திருக்கிறது. அருள் நாட்டத்தின் கூறுகளைத் தெளிவுபடுத்துவது இந்நூலின் நோக்க மாகும்'' என்று சுவாமி சித்பவானந்தர் அருள் நாட்டத்தை விளக்குகிறார். இவ்வாறு தத்துவ விளக்கம் அருள்நெறி நாட்டலும் இவரது உணர காட்டலும் தோற்றுவதற்குக் காரணங்களாகும்.

### ஒப்பீட்டாராய்தல்

இடைக் காலத்தில் தோன்றிய ரிஷிகளில் ஒருவர் மாணிக்கவாசகர். தம்முடைய சாதன வகைகளையும் அனுபூதியின் படித்தரங்களையும் அவர் நன்கு விளக்கியிருக்கிறார். அவருடைய கூற்றுக்களை உபநிஷதங்களின் கூற்றுக்களோடு ஒப்பிட்டு ஆராய்வது சிறந்ததொரு ஆராய்ச்சியாகும். அதன் மூலம் தத்துவ விளக்கம் மேலும் மேலும் நமக்குத் தெளிவையுண்டு பண்ணும். உண்மையை மனிதன் மாற்றவோ, திரிவுப்படுத்தவோ முடியாது'' என்று சுவாமி சித்பவானந்தர் திருவாசகக் கருத்துக் களை உபநிடதக் கருத்துக்களொடு ஒப்பிட்டு ஆராய முனைகிறார்.

### ப. இராமநாதபிள்ளை உரை (1969)

1969 மேத்திங்களில் ப. இராமநாதபிள்ளையின் ''திருவாசகம் தெளிவுரை''யைத் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் முதற்பதிப்பாக வெளியிட்டுள்ளது. ''செந்தமிழ்த் திருமாமறைகளிற் கொண்டுள்ள பேரார்வத்தால் அளவிறந்த சிந்தாந்த மேற்கோள்களுடன் மிக விரிந்து பெரியதோர் அகலவுரையாய் அமைந்தது.'' என்று தம் உரையை அகலவுரை என்கிறார்.

''மேற்கோள் பாட்டுக்கள் அனைத்தும் நூல் விளக்கத்துடன் முழுப்பாட்டாகவே அமைந்துள்ளன. அத்திருப்பாட்டுக்கள் ஏறத்தாழ முன்னூற்றைம் பதுக்கு மேலாகும். இவை கொண்டு சித்தாந்த நுணுக்கங்களை ஓரளவு தெளியவுணரலாமென எண்ணுகிறேன்.'' என்று தம் உரையின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். உரையாசிரியர் ப. இராமநாத பிள்ளை திருமுறைகளிற் பேரார்வங்கொண்டவராக விளங்குகின்றார். திருவாசக உரைப்பணிக்குத் திருமுறைகளின் பயிற்சி வேண்டும். திருமுறைப் பயிற்சி, சமயக் குரவர்களின் அநுபூதிகளை ஒப்பிட்டு உணரும் வாய்ப்பினை ஏற்படுத்தும். இராமநாதபிள்ளை அவர்களின் திருமுறை ஈடுபாடு, அவர்க்கு உரை எழுதப் பலவிதமும் உதவியது எனலாம்.

### மொழிபெயர்ப்பு

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளி யிட்ட திருவாசகப் பதிப்புரையில், ''திருவாசகத்தின் அருமை பெருமைகளை உள்ளவாறுணர்ந்து கைக் கொண்டுள்ள ஜி.யூ. போப் முதலிய வேற்று நாட்டுச் சான்றோர் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்து உயிர் உய்வதற்கேதுவாகிய வழிபாட்டு நூலாகப் போற்றினர்'' என்று கூறப்படுகிறது. திருவாசகத்தின் உண்மைப் பொருளை உணர்த்த காரணமே ஜி.யூ. போப் அவர்களை மொழிபெயர்க்குமாறு தூண்டி உணருமாறு செய்தது எனலாம். மொழி பெயர்ப்பினைக் கூட ஒரு வகையில் உரைப் பணிக்கு உவமையாகக் கூற முடியும். எவ்வாறு எனில் சொற்களுக்குள்ள ஆழ்ந்த பொருளைப் பலகால் நினைத்து மொழிபெயர்க்கும் மொழி பெயர்ப்பாளன் அச் சொல்லின் கன பரிமாணங்

களை உணர்ந்த பிறகே தன் பணியைத் தொடங்கு கின்றான். எனவே மனத்தளவில் பாடல்களின் உரையை உணர்கின்றான். பின்பு திட்டமிட்டு மொழிபெயர்ப்புக்குரிய சொற்களையும் மரபுகளையும் தேடுகின்றான். சொற்களின் மேம்போக்கான பொருளை விட அதன் ஆழமான பொருளும் அது உணர்த்தும் அனுபவங்களும் மொழிபெயர்ப்பில் இடம் பெறுமாறு செய்பவனே சிறந்த மொழி பெயர்ப்பாளனாகிறான். இங்ஙனம் சொல்லின் திட்ப நுட்பம் காணல், அனுபவம் தேடல் ஆகிய தன்மைகளால் மொழிபெயர்ப்பாளனும் ஒரு வகையில் உரையாசிரியரின் தகுதி பெறுகிறான். "சித்தாந்த நுணுக்கங்கள் முழுவதும் அமையக் கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை அவர்களைக் கொண்டு எழுதுவித்து வெளி யிடுகின்றோம். என்று பதிப்புரை குறிப்பிடுகிறது. "தனித்தமிழ்த் திருமாமறைப்படி தெய்வ வழிபாடி யற்ற வேண்டிய குறிப்புக்களும் ஆங்காங்குத் தரப்பட்டுள்ளன. அவை திருக்கோவில் வழிபாட்டி னர்க்குப் பெருந்துணையாகும்" எனப் பதிப்புரை கூறுகிறது; இவ்வுரை, வழிபாடு செய்வோர்க்கு உதவவே எழுதப்பட்டிருக்கிறது என்பதை இப்பகுதி உணர்த்துகிறது; தனித்தமிழுரையாக எழுதப் பட்டிருக்கிறது.

### ப. இராமநாதபிள்ளை உரை (1969)

ப. இராமநாதபிள்ளை உரையெழுதிய திருவா சகம் தெளிவுரை (கையடக்கப் பதிப்பு), முதற்பதிப்பாக 1969 மேத் திங்களில், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பெற்றுள்ளது.

### நூலின் முற்பகுதி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் எழுதிய பதிப்புரை, மாணிக்கவாசகர் திருநாள் பாட்டு, மாணிக்கவாசகர் அகவைப் பாடல், அடிகள் வரலாறு கூறும் புராணங்கள், திருவாசகப் பெருமை, பதிக அட்டவணை, நால்வர் நான்மணி மாலையின் ஒரு பாடல், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் அருளிய ஆளுடையவடிகள் அருள் மாலை, நூற் சிறப்புப் பாடல் ஆகியன இணைக்கப்பெற்றுள்ளன.

### நூலின் பிற்பகுதி

செய்யுள் முதற்குறிப்பு அகர வரிசை இணைக்கப் பெற்றுள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார், தம் பதிப்புரையில் "கழகம் தொடக்க முதலே, அறநூலாகிய "திருக்குறளையும் அன்பு நூலாகிய திருவாசகத்தையும்" மூலப் பாடமாக அழகிய கையடக்கப் பதிப்பாக வெளியிட்டுக் கொண்டு வருகிறது" என்னும் செய்தியைக் குறிப்பிடுகின்றனர். பிறகு தெளிவுரைகளைக் கையடக்கப் பதிப்பாக வெளியிட்டனர். "திருக்குறளுக்கு ஒரு பக்கத்தில் சுருக்கமும் தெளிவும் பொருந்திய பொழிப்புரையும் ஒரு பக்கத்தில் மூலமாக அமைத்துத் "திருக்குறள் தெளிவுரை என்னும் பெயரால் வெளியிட்டுவருகின்றது. இதுபோல் திருவாசகத்துக்கும் தெளிவுரை எழுதி வெளியிடுவதாகும் இந்நூல்" என்னும் செய்தியைப் பதிப்புரை பகர்கிறது.

### மூலம் – உரையமைப்பு

"ஒரு பக்கத்தில் மூலமும் மற்றொன்றில் தெளிவாக பொழிப்புரையும் அமைந்துள்ளன. பொழிப்புரை இனிமையும் தெளிவும் எளிமையும் வாய்ந்தது. கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதபிள்ளை அவர்களால் எழுதப்பட்டது." என்று பதிப்புரை, அமைப்பு வடிவத்தைக் குறிப் பிடுகின்றது.

### பதிப்புரை

கையடக்கப்பதிப்பின் வரலாற்றையும் மாணிக்க வாசர் வரலாற்றையும் திருவாசக நூற் சிறப்பையும் பற்றிய பதிப்புரை தெளிவாக விளக்குகிறது.

### மாணிக்கவாசகர் திருநாள்

*"சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசிமூலம்*
*அத்தரைப் பணிசம் பந்த ரானிமா மகத்திலந்த*
*முத்தமிழ் வாதவூர் முதலியநல் வாடி தன்னிற்*
*சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கைலை சேர்ந்தார்"*

எனும் இப்பாடலில் மாணிக்கவாசகரின் திரு நாள் குறிக்கப்பெற்றுள்ளது.

### மாணிக்கவாசகர் அகவை

*"அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரர்க்குச்*
*செப்பிய நாலெட்டிற் றெய்வீகம் இப்புவியிற்*
*சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்*
*கந்தம் பதினா றறி"*[56]

எனும் இப்பாடல் மாணிக்கவாசகரின் அகவை யும் குறிப்பிடுகிறது.

### அடிகள் வரலாறு கூறும் புராணங்கள்

"(1) திருவுத்தர கோச மங்கைப் புராணம் (2) திருவாதவூரர் புராணம் (3) திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (4) பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம் (5) திருப் பெருங்துறைப் புராணம்" என்று ப. இராமநாத பிள்ளை குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகர் வரலாறு கூறும் ஐந்து புராணங்கள் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

### கையடக்கப் பதிப்பின் பயன்

கையடக்கப் பதிப்பு வெளியிடுவது அந்நூலை எங்குச் செல்லும் போதும் உடன் கொண்டு செல்லும் எளிமை கருதியாகும். வாழ்க்கைப் பயணத்திற்குத் துணை வரும் திருவாசகத்தை விரும்பும் போதெல்லாம் எடுத்துப் படித்து இன்பம் துய்க்கும் அரிய வாய்ப்பு கையடக்கப் பதிப்பினால் கிட்டும். ஒழிந்த நேரமெல்லாம் இறை நினைவோடு கழிக்க விரும்புவார்க்கு இது பெரிதும் உதவும்.

### ஜி. வரதராஜன் உரை (1971)

1971 சனவரித் திங்களில் ஜி. வரதராஜன் எழுதிய திருவாசகம் விரிவுரையை முதற் பதிப்பாகப் பழனியப்பா நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர்.

### உரைநூலமைப்பு

முதற்பகுதியில் தருமையாதீனம் தவத்திரு கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமா சாரிய சுவாமிகளின் ஆசியுரை, திரு. சி. அருணை வடிவேல் முதலியாரின் அணிந்துரை, எளியநடையில் எழுதப்பெற்ற மாணிக்கவாசகர் வரலாற்றுச்சுருக்கம், ஜி வரதராஜனின் முன்னுரை, திருவாசகப்பதிகங் களின் உள்ளுறை ஆகியன இடம் பெற்றுள்ளன.

### உரைப் பகுதி

பாடல்கள் சந்தி பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பதப் பொருள் தனியாகக் கூறப்பெற்றுள்ளது. விளக்கம் என்னும் பகுதியும் உள்ளது. பிற்பகுதியில் பாட்டு முதற் குறிப்பு அகராதி இணைக்கப்பெற்றுள்ளது.

### எளிதில் விளங்குதல்

தருமையாதீனம் தவத்திரு கயிலை சுப்பிர மணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் தம் ஆசியுரையில், "திருவாசகத்தின் பொருளை யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளவேண்டும்." என்று உரையின் நோக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

### பொருளறிதல்

சி. அருணைவடிவேல் முதலியார் தம் அணிந் துரையில், "அன்று அறநெறியின் தலை நூலாகிய

திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதி வெளியிட்ட இவர்கள் (ஜி. வரதராஜன்) இன்று அருள்நெறியின் தலை நூலாகிய திருவாசகத்திற்கு எளிய உரை எழுதி வெளியிடுகின்றார்கள். இவ்வுரை திருவாசகத்தைப் பலரும் பொருளறிந்து ஓதிப் பயன்பெறத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை'' என்று ஜி. வரத ராஜனின் எளிய உரையைப் பாராட்டுகிறார்.

ஜி. வரதராஜன் தம் முன்னுரையில், ''என் ஆசிரியர் மறைமொழிச் செல்வர் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் முன் வந்து (திருவாசகத்தைப்) படிக்க உதவி செய்தார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். படித்த பின்னர்த் திருவாசகத்திற்கு எளிய முறையில் உரை எழுத வேண்டும் என்று எண்ணினேன். இதனை அறிந்த தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நி தானம் அவர்கள், திருவாசகத்துக்கு உரை எழுவது பயனுடையது என்று உற்சாகப்படுத்தினார்கள். அத்துடன் பத்தாண்டுகட்கு முன் குருபூசை நன்னாளில் கூத்தப்பெருமான் சந்நிதியில் தருமையாதீனப் பதிப்பைக் கொடுத்து அசீர்வதித்தார்கள். அந்த ஆணையைச் சிரமேற் கொண்டு நூலுக்கு உரை எழுதத் துணிந்தேன். இக்காலத்துக்கேற்ப எல்லோரும் எளிமையாகப் படித்துப் பயன்பெற வேண்டும் என்று புதவுரையோடு விளக்கவுரையும் சேர்ந்து எழுதினேன். எழுதுங்கால் எனக்கு உறுதுணையாய் இருந்து திருத்தியும் சேர்த்தும் உதவிய தருமையாதீனம் மகா வித்துவான் திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்'' என்று விளக்கு கிறார். ஈடுபாட்டுடன் கற்பவர்க்கு நூலின் அருமை புரியும். அதனைப் பிறர்க்குணர்த்த விழைவார் உரை எழுத ஆர்வங்கொள்ளுவர். பின்பும் தக்கரால் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். அங்ஙனம் ஈடுபாடு, தொடர்ந்த முயற்சி, நல்லோரின் ஆசி, பாராட்டு ஆகியவை உரை நூல்கள் வெளிவரக் காரண மாகின்றன.

**சு. அருளம்பலவனார் உரை (இரண்டாம் பாகம்) (1973)**

1973இல் முதற் பதிப்பாகத் திருவாசக, ஆராய்ச்சி யுரையை சு. அருளம்பலவனார் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துக் காரை நகர் திருமதி வி. அருளம் பலம் வெளியிட்டுள்ளார்.

காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீனம் மெய் கண்ட தேவர் சந்தானம் ஞானப்பீடத்துக் குருமகா சந்நிதானம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிகபரம சாரிய சுவாமிகள் அவர்களின் அருளுரையில் ''இத்திருவாசக உரை சு. அருளம்பலவனார் (உ.ஆ) இதன் முன் வெளிவந்த எல்லாவற்றிலும் மிக்க மேம்பாடுள்ளது. அருளம்பலவனார் கல்லாத நூல் இல்லை. அவர் கற்ற நூலும் உள்ள குறிப்புக்கள் அனைத்தும் இவ்வுரையெழுதுங் குறிக்கோளைச் சார்ந்தனவாகவே இருக்கின்ற உண்மையை நேரில் அறிந்தோம்'' என்றுரைக்கிறார். பன்னூற் பயிற்சியும் கருத்துக்களையும் சொற்களையும் ஒப்பு நோக்கும் திறனும் சொற்களின் ஆழங்காணும் முயற்சியும் இவரது உரைத்திறன் எனக்கொள்ளலாம்.

''இத்திருவாசக உரையை உலகிற்கு வழங்கித் தம் புகழையும் தந்தை புகழையும் யாண்டும் நிகழச் செய்த நம் அன்புருவினார் சிவானந்த நாதனார் எல்லா நலங்களும் வளங்களும் எய்தி இனிது நீடூழி வாழ்க'' என்று தவத்திரு ஞானப் பிரகாச சுவாமிகள் வாழத்துகிறார்கள். சு. அருளம் பலவனாரின் புதல்வர் சிவானந்த நாதனார் முயற்சி யால் இந்நூல் வெளிவந்தது.

கலாநிதி திரு. அ. வேலுப்பிள்ளை அவர்கள் அளித்த பாராட்டுரையில், ''அருளம்பலவனாரின் திருவாசக ஆராய்ச்சியுரை (இரண்டாம் பாகம்) வெளிவருதல் தமிழறிஞருக்கும் சைவ அறிஞருக்கும் பெருமகிழ்ச்சி தரும் செய்தி யாகும். திருவாசகத் துக்குச் சில உரைகள் வெளிவந்துள்ளன அருளம்

பலவனார் அவ்வுரைகளிலே திருப்தி காணாமை யாலே புதிய உரையை எழுதியுள்ளார்" என்று குறிப்பிடுகிறார். புதிய விளக்கங்களைக்காட்டும் விழைவின் வடிவாகவே புத்துரைகள் எழுகின்றன. இவ்வுரை நூல் முழுவதும் உரையாசிரியர் பழந் தமிழ் நூற்சான்றுகளையும் திருமறைச் சான்று களையும் மேற்கோள்களாகக் கையாளுகிறார். தகுதியுடைய ஒருவரால் தகுதியுடைய ஒரு நூல் பெற்ற, தகுதியுடைய உரை இது என்று போற்றும் வகையில் அமைந்துள்ளது.

## ஏ. எஸ். வழித்துணை ராமன் தெளிவுரை (1987)

1987 ஆகஸ்டில் ஏ. எஸ். வழித்துணை ராமன் அவர்கள் திருவாசகம் (அரும்பதவுரை, தெளிவுரை, குறிப்புரையுடன்) தெளிவுரை யெழுதியுள்ளார்கள். சென்னை பாரதி பதிப்பகம் இந்நூலை மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. திருவாசகப் பாடல்கள் சந்தி பிரித்து வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் கீழும் தெளிவுரையெழுதப்பட்டுள்ளது; அரும்பதவுரையும் குறிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

என்றபோது, 'பல தலங்களும் சென்று பாடிக் கோவை ஒன்றும் பாடிவருக' என்றார் என்று கூறும். இவை திருக்கோவையார் பாடப்பட்ட வரலாறு

## பெயர்க் காரணம்

தொல்காப்பியர் தமிழர் தம் குடும்ப வாழ்க்கை யைக்கூற வந்தவர், முதலில் திருமண முறையைக் கூற எண்ணினார். திருமணம் தமிழர்களின் தொழில் வழிப்பிரிவான பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்பவருள் தத்தம் குலத்து ஆடவன் ஒருவனுக்குத் தத்தம் குலத்துப் பெண் ஒருத்தியை மணந்து கொடுக்க, நடத்தப் பெறும் குடும்ப வாழ்க்கை யாவர்க்கும் ஒத்திருத்தலின் அதனை விட்டுவிட்டு, ஒத்த குலத்து ஒருவனும் ஒருத்தியுமோ, வேறுபட்ட குலத்து ஒருவனும் ஒருத்தியுமோ யாருங் காணாவிடத்து எதிர்ப்பட்டு, மனம் ஒருமித்துக் காதல் வயப்பட்டவராய்க் கூடிப் பின் மணந்து, குடும்பம் நடத்தும் வாழ்க்கை பற்றிய சிறப்பாக ஒரு கதைத்தொடர் போல் கோவைப்படுத்தி இலக்கணம் வகுத்தார். பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் நான்கு இயல்களில் விவரித்தார். அவ்விலக்கணத்தை அடியொற்றி மாணிக்கவாசகர் பாடிய நூலே **திருக்கோவையார்**. அவ்விலக்கணம் அகப்பொருள் இலக்கணம் எனப்படும். அகப்பொருள் இலக்கணத் தைத் தொல்காப்பிய வழி நின்று கோவைப்படுத்திப் பாடப்பட்ட நூலாதலின் **கோவை** என்ற பெயராகவே அமைந்தது. தில்லைத் திருச்சிற்றம் பலவாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டதாதலின் **திருச்சிற்றம்பலக் கோவை** என்னும் பெயராயிற்று. திருச்சிற்றம்பலக் கோவையின் சிறப்புக்கருதிப் பின்வந்தவர் 'ஆர்' என்னும் விகுதியைக் கூட்டித் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றனர். அது திருக்கோவையார் என்றும் வழங்கப்படுகிறது. திருவாசகர் அருளிய நூல் திருக்கோவையார் ஆதலின், **கோவைத் திருவாசகம்** என்றும் பிற காலத்தாரால் கூறப்பட்டது.

திருக்கோவையார் நானூறு பாடல்களால் அமைந்தது.

## யாப்பு

திருக்கோவையார் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் பாடப்பட்டது. கலிப்பாவின் இனம் கலித்துறை. அது ஐஞ்சீரடியான் நான்கடி வருவது. நேரசை முதலாகத் தொடங்கும் பாடலில் ஓரடிக்கு ஒற்றெழுத்துக்களை நீக்கி எண்ணப் பதினாறு எழுத்துகளும், நிரையசை முதலாகத் தொடங்கும் பாடலில் ஓரடிக்கு அவ்வாறு எண்ணப் பதினேழ் எழுத்துக்களும் அமையுமாறு பாடப்படுவது கட்டளைக் கலித்துறையென்றும் எழுத்து எண்ணிக்கையின்றி அமைவது கலித்துறை என்றும் கூறப்படும். கட்டளைக் கலித்துறைக்குத் தொல்காப்பிய இலக்கணம் இல்லை. என்றாலும் அவர்க்குப் பின்வந்தோர் பாடல்களில் இயல்பாய் அமைந்தது கண்டு அதனை இலக்கணமாக அமைத்தனர் பின்னோர். காலத்தால் முந்தியவரான மாணிக்க வாசகரே கட்டளைக் கலித்துறை யாப்பை அமைத்தவராகவும் ஆகலாம்.

அவர்க்குப் பின்னர் கோவை நூல் பாடினோர் யாவரும் அதற்குக் கட்டளைக் கலித்துறை யாப்பையே மேற்கொண்டனர். அதன் சிறப்புக் காரணமாகக் கட்டளைக் கலித்துறை, கோவைக் கலித்துறை என்றும் கூறப்பட்டது.

திருவிரட்டைமணிமாலை என்னும் நூல் காரைக்காலம்மையாரால் பாடப்பட்டது. அது கட்டளைக்கலித்துறை முன்னும் வெண்பாபின்னுமாக அமைந்த இருபது பாடல்களையுடையது. காரைக் காலம்மையார், அப்பர், சம்பந்தர் காலங்களுக்கு முற்பட்டவர். மாணிக்கவாசகரால் பாடப் பெறாமை யால் அவர்க்குப் பிற்பட்டவர். அதனால் கட்டளைக் கலித்துறைப் பாக்களுக்கு மூலம் மாணிக்கவாசகரது கட்டளைக் கலித்துறைப் பாக்களே எனலாம்.

திருவாசகத்திலும் கட்டளைக் கலித்துறைப்பாக்கள் உண்டு. அது முன்னர் குறிக்கப்பட்டது.

பாண்டிக்கோவை என்றொரு நூல் இருந்ததாக இறையனார் களவியல் உரையில் அறியப்படுகிறது. இறையனார் களவியல் உரையில் பாண்டிக் கோவைப்பாடல்கள் 326 பாடல்களுள்ளன. அவற்றுக்கு அகப்பொருள் துறைகள் 175 துறைகளேயுள்ளன. பல துறைகளுக்கு ஒவ்வொரு பாடல் இல்லாமல், இரண்டும் மூன்றும் ஐந்துமாகப் பல பாடல்கள் உள்ளன. இப்படியொரு கோவை பாடுவார் யாரும் இலர். உரை படித்து வந்தோர் தாம் தாம் ஒவ்வொரு பாடல் பாடிச் சேர்த்தனராதல் வேண்டும். இடைச் செருகல்களாலேயே 326 பாடல்கள் பெருகின. எனவே பாண்டிக்கோவைப் பாடல்கள் என அவற்றைப் பின்னோர் குறிப்பிட்டாலும் களவியலுரைக்கு உதாரணப் பாடல்களாகப் பிற்காலத்தார் பாடினவே எனலாம். அதனால் உதாரணப்பாடல்களை ஒரு கோவை நூற் பாடல்கள் என்பதற்கில்லை. அதனால் அப்பாடல்கள் கட்டளைக் கலித்துறைக்கு மூலம் ஆகா.

## பொருள்

தெய்வத்தால் உந்தப்பட்டு ஒருவனும் ஒருத்தியும் தனியொரு பொழிலிடத்து யாரும் காணாமல் எதிர்ப்பட்டுத் தம் உணர்விழந்தவராய் ஒருவரையொருவர் இன்றியமையாத அன்பி னராய்க் கூடுவர். அக்கூட்டம் இயற்கைப்புணர்ச்சி எனப்படும்.

அடுத்த நாள் அதே இடத்தில், 'முன் தந்த தெய்வம் இன்னும் தரும்' என வந்து கண்டு கூடுவர். இது இடந்தலைப்பாடு எனப்படும்.

அடுத்த நாள் ஒருவனாகிய அத்தலைவன், தன் பாங்கனிடம் கூறி அவன் துணையால் அப்பொழிலிடம் வந்து அவ்வொருத்தியாகிய தலைவியைக் கூடுவான். இது பாங்கற் கூட்டம் எனப்படும்.

அடுத்தநாள் இனி இவ்வாறு கூடுதல் தகாது என்று தலைவியின் தோழியை நாடி, அவள் கூட்டுவிக்கக் கூடுதல் தோழியிற் கூட்டம் எனப்படும். தோழி உடனே இசையாமல் தலைவியைச் சோதிப்பதும், தானும் தலைவியும் இருக்கும்போது தலைவன் வருவதும் தன்னிடம் பேசுவதும் போவதுமாக இருக்கக் குறிப்பறிந்து உடன்பட்டும் இருவரையும் சேர்த்து வைப்பாள். தோழியால் அவனும் அவளும் பகலிலும் இரவிலும் கூடுவர்.

இவர் தம் கூட்டம் ஊரறிய நேரும் என அஞ்சித் தோழி, உடன் மணந்து கொள்ள வற்புறுத்துவாள். அடிக்கடி வந்து போவதற்குப் பல இடையூறுகள் நேர்வதைச் சுட்டிக்காட்டுவாள் தோழி.

கூட்டத்திற்கிடையே, பொருள் தேடி வந்து மணந்து கொள்வதாகக் கூறித் தலைவன் பிரிதலு முண்டு. பொருள் காரணம் இன்றி வேறு யாதேனும் ஒரு காரணத்தால் அடிக்கடி வராமல்தலைவன் இருத்தலும் நேரும்.

ஊரில் இவர் நடத்தை பற்றி 'அலர்' எழும். அதனால் தோழி இருவரையும் யாரும் அறியாவகை வெளியூர்க்கு அனுப்பி வைப்பாள். அப்படிப் போவது உடன்போக்கு எனப்படும்.

தலைவன் தலைவியை மணம் பேசிவரத் தலைவியின் தமர் இசையாமையால் உடன் போக்கு நிகழ்வதுமுண்டு.

உடன்போக்கைத் தலைவியின் தாயார் (நற்றாய், செவிலித்தாய்) தோழியால் அறிவர்.

உடன்போனவர். தலைவன் ஊரில் மணம் முடித்தலுண்டு. இல்லையேல் மீண்டு வந்து தலைவியின் இல்லில் மணம் முடிப்பர்.

குடும்ப வாழ்க்கையில் தலைவன் பொருள், தூது, காவல் முதலிய காரணங்களாலும் பரத்தைமை காரணத்தாலும் தலைவியைப் பிரிதலுண்டு. பரத்தைமைப் பிரிவால் தலைவிக்கு ஊடல் நிகழும்.

ஊடல் தீர்ந்து கூடல் இல்வாழ்வின் இன்பம். இவையே கோவைப்பாடல்களின் பொருளமைப் பாகும். இவ்வமைப்பை விரிவு படுத்தி 400 துறைகளாகப் பாடப்பட்டதே திருக்கோவையார்.

மேலே கூறப்பட்ட பொருண்மை யாவும் உலகில் ஆங்காங்கு நிகழ்வனவேயாம். அவை ஒரு சேரக் கோவையாக நிகழாமல் தனித்தனியாக நிகழ்வனவாம். அவற்றை ஒழுங்குபடுத்தியமைத்தது இலக்கணமாகும். தனித்தனி நிகழ்ச்சிகள் துறைகள் எனப்படும். அத்துறைகளின் ஒழுங்கே கோவை. அந்நிகழ்ச்சிகள் ஒழுக்கம் எனப்படும். அவை குடும்ப ஒழுக்கங்களாகக் கருதப்படுதலின் அகவொழுக்கம் எனப்படும். இலக்கண நூலார் அகவொழுக்கத்தை **அகத்திணை** என்பர். எனவே, ஆங்காங்கு நிகழும் துறைகளே பின்னர்த் திணைக்குள் அமைக்கப்பட்டன. துறையிலிருந்து திணை எனும் இலக்கணம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இலக்கியம் கண்டு இலக்கணம் அமைத்தனர். பின்னர் இலக்கணம் கண்டு இலக்கியம் அமைக்கும் வழக்கு வந்தது. அதனால் கோவை நூலுக்கும் இலக்கணம் பிற்காலப் பாட்டியல் நூல்கள் கூறுவனவாயின.

"நெறியை முன்னாக வைத்துத் துறையைப் பின்னாக வைத்தல் இக்காலத்தே பழகிவரும் முறை. ஆயினும் தமிழகத் தத்துவச் சான்றோர் மேற்கொண்ட மரபு அதுவன்று. துறையிலிருந்து நெறி வகுக்கப் பெறுகின்றது. இலக்கியத்திலிருந்து இலக்கணம் அமைப்பதுபோல."

என வீரசைவ நூலுடையார் கூறியதும் இங்கு நோக்கத்தக்கது.[1]

திருக்கோவையார்ச் செய்யுள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பெயரில் துறைகள் கூறப் பட்டுள்ளன. அத்துறைகளின் கருத்துக்களைக் கொண்ட இரண்டடிப்பாடல்கள் கொளு என்ற பெயரில் பின்னோரால் கொடுக்கப்பட்டுள்ளன.

## உரை

திருக்கோவையார்க்குப் பேராசிரியர் என்பவரால் சிறந்ததோருரை எழுதப்பட்டுள்ளது. அவர்க்கு முன்னரும் உரையிருந்துளது. எனினும் பேராசிரியர் உரையே சிறந்தது. அருணை வடிவேலர் குறிப்புரை எழுதியுள்ளார். குறிப்புரை என்றாலும் விளக்கமாக அமைந்துளது. இக்காலத்தில் அவ்வப்போது உரையெழு தினாருமுளர்.

## நூற் சிறப்பு

*ஆரணங் காண்என்பர் அந்தணர்;யோகியர்*
*ஆகமத்தின்*
*காரணங் காண்என்பர்; காமுகர் காமநன் னூ*
*லதென்பர்;*
*ஏரணங் காண்என்பர் எண்ணர்; எழுத்தென்பர்*
*இன்புலவோர்;*
*சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச்*
*செப்பிடினே*

எனும் பாடலும்,

*உருவாரும் தமிழ்சங் கத் தடம்பொய்கைத் தோன்றி*
*உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான ஒளியுடைத் தாகி*

*மருவாரும் கிளவியிதழ் நானூறாகி*
*மதுப் பொருள்வாய் மதிப்புலவர் வண்டாய் உண்ணத்*
*தருவாரும் பலியூரின் உலகுய்யக் குனிப்போன்*
*தடங்கருணை யெனுமிரவி தண்கதிரால் அலரும்*
*திருவாத வூராளி திருச்சிற்றம்பலவன்*
*திருவடித்தா மரைசாத்தும் திருவளர்தா மரையே*

என்னும் பாட்டும் திருக்கோவையார்ச் சிறப்புணர்த்தும்.

திருக்கோவையாருக்குத் தனிச்சிறப்புத் தர வேண்டும் என்பதற்காகப் பாடல்களுக்குத் தத்துவப் பொருள்களை வலிந்து காட்டுவாரும் உளர்.

*"நான் இவளாம் பகுதிப் பொறப்புஆர் அறிவார்"*[2] என்னும் தொடர் அத்துவிதத்தைக் குறிக்கும் என்பர். தலைவன் என்பவன் இறைவனாகவும் தலைவி என்பவள் உயிராகவும் கொண்டு 'இறைவனை உயிர் அடைந்தின்புறுதலே தலைவனைத் தலைவி யடைந்து இன்புறுதல்' என்றும், தலைவன் தலைவியையடைய வேண்டிப் பலவாறு வந்து போதல், 'இறைவன் உயிரின் பொருட்டு இரங்கி வந்தாட் கொள்ளுதல்' என்றும் பலவாறு கூறுவர். திருக்கோவையார்ப் பாடல்களில் எங்கும் அப்படித் தத்துவப்பொருள் காணுவதற்கான குறிப்புக்கள் இல்லை. திருக்கோவையார்க்குத் தத்துவப்பொருள் கூறுவதாயின், பிற்காலத் தனவான **தஞ்சைவாணன் கோவை, கோடீச்சுரக்காவை, திருவேங்கைக் கோவை** முதலியவற்றுக்கும் கூறல் வேண்டும். இன்று கரந்தைக் கல்லூரிப் பேராசிரியர் **பால சுந்தரம்** பாடிய **கரந்தைக்கோவை**யும் தத்துவ நூலே எனலாம். எனவே திருக்கோவையார் ஒரு சிறந்த இலக்கிய நூல் என்றளவில் அமைவதே நன்று.

## அகச்சான்று

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தம் வரலாற்று நிகழ்ச்சிகளை வெளிப்படையாகவே கூறியிருப்பதுபோல திருக்கோவையாரில் எங்கும் கூறவில்லை. ஆனால் சில குறிப்புக்கள் சிவபிரான் அவரை ஆட்கொண்டதைத் தெரிவிக்கும்

*"அடிச்சந்தம் மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டு*
*கொண்டுஎன்*
*முடிச்சந்த மாமலராக்கு முன்னோன்"*[3]
*"பொருளா எனைப்புகுந் தாண்டு"*[4]
*"இப்பிறப்பில் அழுந்தாவகை யெனை யாண்டவன்"*[5]
*"அழுந்தேன் நரகத்து யான்என் றிருப்பவந்*
*தாண்டுகொண்ட செழுந்தேன்"*[6]

என வருவன மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்டமைக்குச் சான்றாம்.

*உள்ளம் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன்ஆட்*
*கொள்ளும் அவரில்ஓர் கூட்டந் தந்தான்"*[7]

என்பது குருமணியானவர் மாணிக்க வாசகரை அடியார் கூட்டத்திருக்கச் செய்தமைக்குச் சான்று.

*"எம்மைப்பிடித்துஇன்று ஆண்டு எல்லைதீர் இன்பம்*
*தந்தவன்"*[8]

என்பது குருமணி வலியவந்து ஆண்டதைக் குறிக்கும்.

*"தொழும்பிற் பிரிந்தெனை யாண்ட சிற்றம்பலத்தான்"*[9]
என்பதும் அதுவே.

*"தன்வார் கழல்கள் எனக்களியா நிற்கும்*
*அம்பலத்தோன்"*[10]

என்பது திருவடித் தீட்சையைக் குறிக்கும். மேலும்,

*"சுற்றம் பலம்இன்மை காட்டித் தன்தொல்கழல் தந்த*
*தொல்லோன்"*[11]
என்றதும் காணத்தக்கது.

*புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம்*
*பலம்புகழும்*
*மயலோங் கிருங்களி யானை வரகுணன்*
*வெற்பின்வைத்த*
*கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமும்*
*காட்டிவரும்*
*செயலோங் கெயிலெரி செய்தபின் இன்றோர்*
*திருமுகமே* [12]

இப்பாடல் பாண்டியன் மாணிக்கவாசகர்க்குச் சினந்து அனுப்பிய ஓலைச் செய்தியைக் குறிக்கு மென்பர். தலைவன் தன் அரசனுக்குத் துணையாகச் சென்று போரில் வெற்றி கண்ட பின் தலைவி நினைவுவர, அவள் முகம் வெளிப்படுவதுபோல் கொண்டு கூறியது இப்பாட்டு. "யான் போரில் பகைவர் மதிலை எரியிட்டு வென்ற பின், ஒரு திருமுகம் வெளிப்படுகின்றது. எப்படியெனின், வரகுணபாண்டியன் பிறர் மலையில் பொறித்த மீனையும் (கண்ணையும்) சேரனை வென்று கொண்ட சிலையை (வில்போலும் புருவத்தை), இந்திரக்கோபப்பூச்சி நிறம்போன்ற சிவந்த உதட்டையும் கொண்டு வெளிப்படுகின்றது" என்று தலைவன் கூறினான். இதில், வரகுணன் மாணிக்கவாசகர்க்கு அனுப்பிய திருமுகம் (ஓலை) அவனின் அடையாளமாகிய கயலையும் சிலையையும் கொண்டு கோபத்தையும் காட்டி வந்தது என்ற குறிப்பும் உண்டு.

மேலே கூறப்பட்டன தவிர, வேறு வரலாற்றுச் செய்திகள் காணப்படவில்லை. நரி பரியாக்கியது. வையைக்கரை நிகழ்ச்சி கூறப்படவில்லை. மேலே கூறப்பட்டனவற்றுக்கு மாணிக்கவாசகரின் வரலாற்றோடு தொடர்புபடுத்தாமலும் பொருள் கூறலாம். ஆதலின் அவை குறிப்பாற் பெற வைத்தனவே என்க.

## சில அரிய செய்திகள் இரத்தினசபாபதி

*"சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்*
*சிற்றம்பலத்து மாணிக்கக் கூத்தன்"* [13]

இதில் **மாணிக்கக்கூத்தன்** என்பது இன்று தில்லைப் பிராமணர்களால் பூசிக்கப்பட்டுவரும் இரத்தினசபாபதியைக் குறித்ததாகலாம். மாணிக்க வாசகர் காலத்தில் தில்லைவாழ் அந்தணர்களால் பூசிக்கப்பட்டு வந்த மாணிக்கக் கூத்தனே இன்று இரத்தினசபாபதி என வழங்கப்படுகிறான். (மாணிக்கம் - இரத்தினம்)

## மழைவேண்டி வழிபாடு

தினைப் பயிர்கள் வெயிலில் காய்வது கண்டு கானக்குறவர்கள் மழை வேண்டித் தெய்வத்தைப் பரவுதல் கூறப்பட்டுள்ளது. இது துன்பம் வரும்போதும் தெய்வத்தைப் பரவுதல் என்னும் வழக்கு உண்மையைக் காட்டும்.

*"ஏனற் பசுங்கதிர் என்றூழ்க்கு அழிய எழிலி யுன்னிக்*
*கானக் குறவர்கள் கம்பலை செய்யும் வம்பார் சிலம்பர்"* [14]

என்பது திருக்கோவையார். (கம்பலை - வழிபாட்டாரவாரம்)

## தில்லையைக் கண்டால் முத்தி

திருவாரூரில் பிறந்தால் முத்தி. காசியில் இறந்தால் முத்தி, தில்லையில் சென்று நடராசப் பெருமானைக் கண்டால் முத்தி, திருவண்ணா மலையினை நினைத்தால் முத்தி என்பர்.

*"துவக்கற வறிந்து பிறக்குமா ரூரும்*
*துதைந்திடா தடைந்துகாண் மன்றும்*
*உவப்புடன் சென்று மரிக்குமோர் பதியும்*
*ஒக்குமோ நினைக்குநின் னகரை"* [15]

எனச் சிவப்பிரகாசரும் **சோணசைல மாலையிற்** கூறியது காணலாம். தில்லையைக் கண்டாலே முத்தி என்னும் வழக்கு மாணிக்கவாசகர் காலத்திலேயே இருந்திருக்கலாம். அதற்கேற்ப, *"கனைகடற் செய்தநஞ் சுண்டு* ***கண்டார்க்கம் பலத்தமிழ்தாய் வினைகெடச் செய்தவன்"***[16]

என்றும்,

*"செழுவார் கழல்தில்லைச்* ***சிற்றம்பலவரைச் சென்றுநின்று***
***தொழுவார் வினைநிற்கிலே"***[17]

என்றும் அவர் கூறியது காணலாம்.

## நந்தி

சிவபிரானை நந்தி என்றும் நந்தியே சிவம் என்றும் சொல்வர். நந்தி எனும் சொல்லை முதன் முதலில் ஆண்டவர் மாணிக்கவாசகரே. பின்னரே திருமூலர் முதலியோர் ஆண்டனர். "நந்தி நாமம் நமச்சிவாயவே" என ஞான சம்பந்தரும் ஆண்டார்.

*"நந்தீ வரம் என்னும் நாரணன்"*[18]

என நாரணன் சிவபிரானிடம், 'நந்தியே எனக்கு வரம் அருள்' என வேண்டியதாகக் கூறியது காணலாம்.

**நந்தி** என்பது **ஆநந்தி** என்ற சொல்லின் சிதைவு. ஆநந்தி என்ற சொல் ஆநந்தத்தைச் செய்பவனாகிய சிவபெருமானைக் குறிக்கும். அச் சிவபெருமானின் வேறற நிற்பவரும் அபரசிவம் என்று வேதங்களாற் சொல்லப்படுகின்றவரும் நந்தி யெம் பெருமானேயாவர்"[19]

## திருமால் வரம் கிடந்தது

திருவடியைக் காணாது மீண்ட திருமால், இறைவனிடம் முறையிட, இறைவன் தன் திருவடி யொன்றைக் காட்ட, மற்றதும் காட்டுவாயாக' எனச் சிற்றம்பல முற்றத்தில் வரங்கிடந்தான் என்ற அரிய செய்தியைத் திருக்கோவையாரில், "புரங்கடந்தானடி" எனத் தொடங்கும் பாடல் உணர்த்தும் என்பது முன்னர் கால ஆராய்ச்சியிற் கூறப்பட்டது.

## காக்கைக்குணம் ஐந்து

'குணங்கள் அஞ்சாற் பொலியும் சேட்டைக் குலக்கொடியே"[20] எனக் காக்கைக்குக் குணம் ஐந்து என்றது திருக்கோவையார்.

பிறர் அறியாமல் புணர்தல், மனம் கலங் காமை, காலம் கடவாமல் தன் இடம் அடைதல், தொலைப் பொருளைக் காணுதல், மடியின்மை என்பன அவையென்பர்.

## நாய்க்குணம்

திருவாசகப் பாடலில் தம்மை நாயினும் கடைப்பட்டவராகவே கூறிக்கொண்டார் மாணிக்க வாசகர். நாயை இழிந்ததாகவே கூறினார். நாய்க்குரிய நன்றியை வியந்து,

*"நாய்வயின் உள்ள குணமும் இல்லேன்"*[21]

எனத் தம்மை இழித்துரைத்தது காணலாம்.

## தில்லை கடற்கரையூர்

தில்லை கடற்கரையூராக இருந்திருக்கலாம் என்பதற்குப் பின்வருவன சான்று பகரும்.

ஆண் நண்டு தன் பெண் நண்டுக்கு நாவற்கனி கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

*"......... ஓர் அலவன் தன் சீர்ப்பெடையின்*
*வாய்வீண் டனையதோர் நாவற்கனி நனி நல்கக்கண்டு"*[22]

என்பது காணலாம்.

*"தில்லைக் கானலில் சீர்ப்பெடையோடு அலவன் பயில்வது கண்டு"*[23]

என்று அலவன் (நண்டு) செய்தி கூறப்பட்டுள்ளது.

*"வங்கம் மலிகலி நீர்தில்லை"*[24]

எனக் 'கப்பல் மிகுந்துள கடற்கரைத் தில்லை' யென்றும் கூறப்பட்டுள்ளது.

*"கடல்தில்லை"*[25]
என்றும் ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ளது.

## வீரசைவக் குறிப்பு

*"கூம்பல் அங்கைத் தலத்தன்பர் என்புடுரு கக்குனிக்கும் பாம்பலங் காரப் பரன்"*[26]

என்னும் தொடர்க்கும் இருவகையிற் பொருள் கொள்ளலாம்.

"குவிதலையுடைய அழகிய கைத்தலத்தை யுடைய அன்பரது எலும்பு உருகுமாறு நடமாடும் பாம்பணியுடைய சிவபிரான்'. இப்படிப்பொருள் கூறுவர் யாவரும்.

*"கூம்புதல் (குவிதல்) அல்லாத விரிந்த உள்ளங்கையிடத்து இட்டலிங்கமாகத் தங்கியிருந்து அங்கே நடமிடும் பாம்பலங்காரப் பரமன்"*

என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியாயின் அன்பர் தம் உள்ளங்கையில் இட்டலிங்கப்பெருமானை வைத்துப் பூசித்தலைக்குறித்தார் மாணிக்கவாசகர் எனக் கொள்ளலாம்.

## பிற

திருவாசகத்தில் பல பதிகங்களில் பிற தலங்களை வைப்புத் தலங்களாகக் கூறியதுபோலத் திருக் கோவையாரிலும் குற்றாலம்[27] திருப்பனையூர்[28], மூவல்[29], ஈங்கோய்[30], இடைமருது[31], ஏகம்பம்[32], வாஞ்சியம்[33], வெண்காடு[34], பூவணம்[35] என்னும் தலங்கள் வைப்புத் தலங்களாகக் கூறியுள்ளார் மாணிக்கவாசகர்.

பிள்ளை என்னும் சொல் பெண்பாற்கு ஆளப்பட்டுள்ளது. பெருந்துறைப்பிள்ளை[36] எனத் தலைவியைக் குறித்துள்ளமை காணலாம்.


பெண்பிள்ளையைப் பெண்மகன் என 'ன' கரவொற்றுக் கொடுத்துக்கூறும் வழக்குண்மை தொல்காப்பியத்தால் அறியப்படும்[37]. அதற்கேற்பத் தலைவியை ' வெண்காடனைய பாலன்'[38] என்று கூறியது அரிய ஆட்சியாம். பாலன் - ஆண்மகன். பாலள் என்று கூறப்படவேண்டுவது பாலன் எனக் கூறப்பட்டுள்ளது.


திருக்கோவையார் ஓர் பேரிலக்கியம் என்ப தற்கான சிறப்புக்கள் பலவுடையதாய் விளங்குகிறது. உவகை முதலிய அணிகளும் சொல்லாட்சிகளும் பிறவுமுடையதாய் விளங்குகிறது. விரிக்கிற் பெருகும் ஆதலின் விடுத்து நிறைவுரைக்குச் செல்லுதல் சாலும்.

## குறிப்புக்கள்

1. வீரசைவம் பக்.213
2. திருக்கோவையார் 8
3. திருக்கோவையார் 78
4. மேற்படி 73
5. மேற்படி 124

6. மேற்படி 166
7. மேற்படி 185
8. மேற்படி 230
9. மேற்படி 279
10. மேற்படி 393
11. மேற்படி 346
12. மேற்படி 327
13. மேற்படி23
14. மேற்படி 159
15. சோணசைலமாலை 2
16. திருக்கோவையார் 141
17. மேற்படி 142
18. மேற்படி 163
19. மயிலம் பொம்மபுர ஆதீனம் 18 ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் 26 - 5 - 1940இல் கும்பகோணத்தில் நடைபெற்ற வீரசைவ மகாசபை மகாநாட்டில் நந்திக்கொடியேற்று விழாவில் ஆற்றியவுரை. பக். 5, 6.
20. திருக்கோவையார் 235
21. மேற்படி 343
22. மேற்படி 84
23. மேற்படி. 155
24. மேற்படி
25. மேற்படி
26. மேற்படி. 11
27. மேற்படி. 135
28. மேற்படி. 137
29. மேற்படி. 191
30. மேற்படி. 304
31. மேற்படி. 269
32. மேற்படி. 268
33. மேற்படி. 268
34. மேற்படி286
35. மேற்படி 305
36. மேற்படி. 104
37. தொல். சொல். 164
38. திருக்கோவையார் 286


இந்து சமய ஆய்வரங்கு
"திருவாதவூரரும் சைவத்திருநெறியும்"
18, 19, 20 ஜூலை 2014 - சரஸ்வதி மண்டபம், கொழும்பு 04.
புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்


அங்குரார்ப்பண அரங்கு
18.07.2014 வெள்ளிக்கிழமை
தலைமை
பேராசிரியர் சி.பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
பிரதம விருந்தினர்
தவத்திரு பாலயோகி சுவாமிகள்
தலைவர்,
திருமுருகன் திருவாக்கு திருப்பீடம்,
மலேசியா.
கௌரவ விருந்தினர்
திரு. எம். கே. பீ. திஸாநாயக்கா
செயலாளர்,
புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு.

9.00 மங்கல விளக்கேற்றல்

9.05 தேவாரம்
திருமதி த.ஹம்சானந்தி
இசை ஆசிரியை

9.10 வரவேற்புரை
திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்.
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

9.15 தலைமையுரை
பேராசிரியர் சி.பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

9.30 வாழ்த்துரை
கலாநிதி திரு. ஆறுதிருமுருகன்
தலைவர். அறங்காவலர் சபை.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.தெல்லிப்பழை.

9.40 கௌரவ விருந்தினர் உரை
திரு. எம். கே. பீ. திஸாநாயக்கா
செயலாளர்.
புத்தசாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சு.

9.50 பிரதம விருந்தினர் உரை
தவத்திரு பாலயோகி சுவாமிகள்
தலைவர்.
திருவாக்கு திருப்பீடம்.
மலேசியா.

10.00 சிறப்பு மலர் வெளியீடு

10.10 மாநாட்டுத் தொடக்கவுரை
பேராசிரியர் எஸ். தில்லைநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

அமர்வு 01

தலைமை:பேராசிரியர் எஸ்.தில்லைநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப் பல்கலைக்கழகம்

10.30 மாணிக்கவாசகர் கால தமிழகத்தில் சைவநெறி
பேராசிரியர் சி. பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப்பல்கலைக்கழகம்.

10.50 திருவாசகத்தில் தேவாரத்தின் செல்வாக்கு
பேராசிரியர் பழ.முத்துவீரப்பன்
முன்னைநாள் தலைவர், தமிழ்த்துறை.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம். தமிழ்நாடு.

11.10 திருவாசகம் உணர்த்தும் சைவசித்தாந்த சிந்தனைகள்
பேராசிரியர் ஆர். சீதாலட்சுமி
இந்திய ஆய்வியல் துறை.
மலாயாப் பல்கலைக்கழகம்.

11.25 – 11.30 கலந்துரையாடல்

அமர்வு 02

தலைமை: பேராசிரியர் சி.மௌனகுரு
முன்னைநாள் தலைவர்.
நுண்கலைத்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

11.35 நவீன ஆக்கங்களில் மாணிக்கவாசகர்
பேராசிரியர் எஸ். யோகராஜா
மொழித்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

11.50 மாணிக்கவாசகர் பற்றிய ஆய்வுகள்
முனைவர் அ. சதீஸ்
இணைப்பேராசிரியர்.
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தமிழ்நாடு.

12.05 இலக்கியப்பனுவலாக திருவாசகம்
திரு. க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

12.20 மாணிக்கவாசகரும் பௌத்தமும்
திரு. தம்மிக்க ஜயசிங்க
விரிவுரையாளர், றுகுணு பல்கலைக்கழகம்.

12.35 – 12.45 கலந்துரையாடல்

12.45 மதிய இடைவேளை

அமர்வு 03

தலைமை: பேராசிரியர் வெ. வேங்கடராமன்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
தமிழ்நாடு.

1.30 திருவாசகத்தில் அநுபூதி
திரு வ. குணபாலசிங்கம்
வருகை விரிவுரையாளர்,கிழக்குப் பல்கலைக்கழகம்.

1.45 பிறமதங்கள் பற்றிய மாணிக்கவாசகர் நோக்கு
பேராசிரியர் வி. மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

2.00 ஞானமார்க்கமும் மாணிக்கவாசகரும்
திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

2.15 திருவாசகத்தில் சிவசக்தி தத்துவம்
திரு. போ. சந்திரசேகரம்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2.30 – 2.40 கலந்துரையாடல்

அமர்வு 04

தலைமை:பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2.45 திருவாசகத்தில் சிற்றிலக்கிய வடிவங்கள்
பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப்பல்கலைக்கழகம்.

3.00 திருவாசக யாப்புகள்
திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3.15 கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களில்
திருவாசகத்தின் செல்வாக்கு
திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
தலைவர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

3.25 திருவாசக மொழிநடை
கலாநிதி சுபதினி ரமேஷ்
மொழியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

3.40 – 3.50 கலந்துரையாடல்

அமர்வு 05

தலைமை: பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

3.55 புராணங்களில் மாணிக்கவாசகர்
திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4.10 திருவாசகத்தில் நாட்டாரியற் கூறுகள்
பேராசிரியர் கி. விசாகரூபன்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4.25 திருவாசகத்தில் புராணச் செய்திகள்
பேராசிரியர் வெ.வேங்கடராமன்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

4.40 திருவாசகத்தில் நாடகக் கூறுகள்
பேராசிரியர் சி. மௌனகுரு
கிழக்குப் பல்கலைக்கழகம்.

5.00 – 5.10 கலந்துரையாடல்

## 19.07.2014 – சனிக்கிழமை

**அமர்வு 06**

தலைமை:பேராசிரியர் சி.பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

8.45 ஈழத்து சைவமரபில் திருவாசகம்
பேராசிரியர் மா.வேதநாதன்
தலைவர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9.00 மாணிக்கவாசகர்பாடல்களில்வரலாற்றுத்தடயங்கள்
பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தலைவர். வரலாற்றுத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9.15 மாணிக்கவாசகர் பற்றிய சாசனக் குறிப்புகள்
கலாநிதி வெ.வேதாசலம்
முதுநிலைத் தொல்லியலாளர்.
தொல்பொருள் திணைக்களம். தமிழ்நாடு.

9.30 திருவாசகத்தில் தன் வரலாற்றுக் குறிப்புகள்
செல்வகுமாரி சிவலிங்கம்
விரிவுரையாளர். மொழித்துறை.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

9.45 – 9.55 கலந்துரையாடல்

**அமர்வு–07**

தலைமை:பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தகைசார் பேராசிரியர்.இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

10.00 அகத்திணை மரபில் மணிவாசகர் பாடல்கள்
கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
முதுநிலை விரிவுரையாளர்.
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

10.15 திருவெம்பாவையும் திருப்பாவையும்
பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்
தமிழ்த்துறை. கிழக்குப் பல்கலைக்கழகம்.

10.30 தேநீர் இடைவேளை

10.40 கோவை இலக்கிய மரபில் திருக்கோவையார்
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர். தமிழ்த்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

10.55 – 11.10 கலந்துரையாடல்

**அமர்வு 08**

தலைமை:பேராசிரியர் கலைவாணி இராமநாதன்
முன்னாள் தலைவர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

11.15 திருவாசகத்தில் மாயை
பேராசிரியர் ஏ. என். கிருஷ்ணவேணி
தலைவர். நுண்கலைத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

11.30 மாணிக்கவாசகர் நோக்கில் ஆணவம்
சைவப்புலவர் சின்னராசா ரமணராஜா
விரிவுரையாளர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

11.45 திருவாசகத்தில் முக்திக் கோட்பாடு
திரு. எஸ். துஷ்யந்த்
ஆசிரியர். பெரியகல்லாறு மகா வித்தியாலயம்.


12.00 – 12.10 கலந்துரையாடல்

**அமர்வு 09**

தலைமை:பேராசிரியர் மா.வேதநாதன்
தலைவர். இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

12.15 மாணிக்கவாசகரின் பதிக்கோட்பாடு
திருமதி எஸ். கேசவன்
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

12.30 மாணிக்கவாசகரின் உயிர்க் கோட்பாடு
திரு. ந.சுபராஜ்
விரிவுரையாளர். மொழித்துறை.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



12.45 மாணிக்கவாசகரின் கன்மக் கோட்பாடு
திரு. நி.செல்வமனோகரன்
விரிவுரையாளர்.
இந்துநாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

01.0 - 01.10 கலந்துரையாடல்

01.10 மதிய இடைவேளை

அமர்வு 10

தலைமை: பேராசிரியர் எஸ். ஞானகுமாரன்
மெய்யியல்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


1.50 அறிவாராய்ச்சியியல் நோக்கில் மாணிக்கவாசகர்
திரு. நா. வாமன்
விரிவுரையாளர். இந்துநாகரிகத்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

2.05 திருவாசகத்தில் பிரபஞ்சவியல்
திரு. எஸ். முகுந்தன்
இணைப்பாளர்.
இந்து நாகரித்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

2.20 திருவாசகத்தில் சிவயோகபாவனை
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
ஆசிரியர்.
யாழ்ப்பாணம்.

2.35 மாணிக்கவாசகரும் உபநிடதச் சிந்தனைகளும்
திரு. ச. பத்மநாபன்
விரிவுரையாளர்.
சமஸ்கிருதத்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

2.50 - 3.00 கலந்துரையாடல்



அமர்வு 11

தலைமை:பேராசிரியர் சபா ஜெயராசா
முன்னாள் தலைவர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3.05 திருவாசகத்தில் சிவவடிவங்கள்
பேராசிரியர் வெ.வேங்கடராமன்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.தமிழ்நாடு.

3.20 மாணிக்கவாசகர் படிமங்கள் – ஒருவரலாற்று நோக்கு
கலாநிதி வே.வேதாசலம்
முதுநிலை தொல்பொருள் ஆய்வாளர்.
தொல்பொருள் திணைக்களம். தமிழ்நாடு.

3.35 இசையியல் நோக்கில் திருவாசகம்
திருமதி நிர்மலேஸ்வரி பிரசாந்
விரிவுரையாளர் விபுலானந்தா அழகியல் கற்கை
நிறுவனம் கிழக்குப் பல்கலைக்கழகம்.

3.50 நாட்டிய அளிக்கைகளில் திருவாசகம்
திருமதி சீதாலக்ஷ்மி பிரபாகரன்,
முதுநிலை விரிவுரையாளர். நடனத்துறை.
இராமநாதன் நுண்கலைக்கழகம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4.05 - 4.15 கலந்துரையாடல்

20.07.2014 – ஞாயிற்றுக்கிழமை

அமர்வு 12

தலைமை: பேராசிரியர் சி. பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

8.45 மணிவாசகரின் வாழ்வும் வாக்கும்
மெய்ஞானப்பேற்றுக்குப் படிக்கட்டுக்கள்
கலாநிதி திலகவதி கனகரட்ணம்
தலைவர். இந்திய ஆய்வியல்துறை.
மலாயாப் பல்கலைக்கழகம்.

9.00 அறிவு பற்றி திருவாசகம்
எடுத்தாளும் நுட்பங்கள்
பேராசிரியர் நா. ஞானகுமாரன்
மெய்யியல் துறை.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9.15 திருவாசக சுவடிகள்
முனைவர் ஆ. தசரதன்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். தமிழ்நாடு.

9.30 - 09.45 கலந்துரையாடல்

9.45 தேநீர் இடைவேளை

### அமர்வு 13

தலைமை:
**பேராசிரியர் பழ.முத்துவீரப்பன்**
முன்னைநாள் தலைவர். தமிழ்த்துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.தமிழ்நாடு.

10.05 **திருவாசக உரைகள் (ஈழம்)**
**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
முன்னாள் தலைவர். தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

10.20 **திருவாக உரைகள் (தமிழகம்)**
**திரு. அ. சதீஸ்**
இணைப் பேராசிரியர்.
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
தமிழ்நாடு.

10.35 **திருவாசகப் பதிப்புகள்**
**கலாநிதி நதீரா மரியசந்தனம்**
சிரேஷ்ட விரிவுரையாளர். மொழிகள் துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

10.50 **திருவாசக மொழிபெயர்ப்புகள்**
**திரு. சோ. பத்மநாதன்**
முன்னாள் அதிபர்.
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. பலாலி.

11.05 – 11.15 **கலந்துரையாடல்**

### அமர்வு 14

**தலைமை:திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
இந்து நாகரிகத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

11.25 **திருவாசகத்தில் சிதம்பரம்**
**செல்வி கௌரி புண்ணியமூர்த்தி**
விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

11.40 **மாணிக்கவாசகரும் திருப்பெருந்துறையும்**
**செல்வி பொன்னுத்துரை நிலாந்தினி**
விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

11.55 **திருவாசக திருத்தலங்கள்**
**திருமதி வி.பவநேசன்**
முதுநிலை விரிவுரையாளர். இந்து நாகரிகத்துறை.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

12.10 – 12.20 **கலந்துரையாடல்**

12.30 **மதிய இடைவேளை**

### அமர்வு 15

**தலைமை:பேராசிரியர் ஆர்.சீதாலட்சுமி**
இந்திய ஆய்வியல் துறை.
மலேசிய பல்கலைக்கழகம்.


1.30 **திருவாசகத்தில் விளிகள்**
**பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்**
முன்னைநாள் தலைவர். தமிழ்த்துறை.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.தமிழ்நாடு.

1.45 **திருவாசகத்தில் பக்தி**
**திரு. சிவ. மகாலிங்கம்**
முன்னைநாள்
உதவிப்பணிப்பாளர்.
இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

2.00 **மாணிக்கவாசகரும் முத்துத்தாண்டவரும்**
**திரு. அ.ஆரூரன்**
விரிவுரையாளர்.
கட்புல அரங்காற்றுக் கலைகள்
பல்கலைக்கழகம்.

2.15 – 2.25 **நிறைவு நாள் கலந்துரையாடல்**

4.15 **தேவாரம்**


INVITATION
"Tiruvatavurarum Saivatiruneriyum"
Cultural Programme
19.07.2014 – 20.07.2014
Saraswathy Hall, Bambalapitya, Colombo-4
Ministry of Buddhasasana and Religious Affairs
Department of Hindu Religious and Cultural Affairs

# "Tiruvatavurarum Saivatiruneriyum"

*Cultural Programme*

## 19.07.2014 – Saturday

*Chairperson:*
**Mrs. Shanthi Navukarasan**
Director, Department of Hindu Religious and Cultural Affairs

*Chief Guest:*
**Hon. D.M. Jayaratne**
Prime Minister and Minister of Buddhasasana and Religious Affairs

*Guest of Honour:*
**Hon. M.K.A.D.S. Gunawardana**
Deputy Minister Ministry of Buddhasasana and Religious Affairs

## 20.07.2014 – Sunday

*Chairperson:*
**Vidvan Kalabhushanam**
**Vasantha Vaithiyanathan**

*Chief Guest:*
**Mr. M.K.B. Dissanayake**
Secretary, Ministry of Buddhasasana and Religious Affairs

# PROGRAMME

19.07.2014

| | | |
|---|---|---|
| 5.00 p.m. | - | Lighting the Oil Lamp |
| 5.05 p.m. | - | Recital of Tiruvacakam<br>'Thirumuraikalanithi Kalaimamani' Thiruthani Swaminathan, South India<br>Violin: Dr. B. Pathrinarayanan<br>Mirudangam: Thiruvannamalai T. M. Sivakumar |
| 6.05 p.m. | - | Welcome Address<br>Mr. A. Umamaheswaran<br>Deputy Director, Department of Hindu Religious and Cultural Affairs |
| 6.10 p.m. | - | Benediction<br>Rev. Balayogi Swamigal<br>Head, Thirumurugan Thiruvakku Thirupeedam, Malaysia |
| 6.15 p.m. | - | Address by Chairperson<br>Mrs. Shanthi Navukarasan<br>Director, Department of Hindu Religious and Cultural Affairs |
| 6.20 p.m. | - | Departmental Book Launching Ceremony &<br>Launching of Audio Cassette – "Tiruvacaka Isai"<br>• "Muvar Tamilum Saiva Neriyum"<br>(Compilation of the Seminar Papers, 2013)<br>• Hindu Encyclopaedia – Volume XII<br>• Tirumurukarruppatai - Arumuka Navalar Urai |
| 6.30 p.m. | - | Introduction about the Books<br>Prof. Pala. Muthu Veerappan<br>Former Head – Indian Languages<br>Department of Tamil, Annamalai University, South India |
| 6.45 p.m. | - | Address by Chief Guest<br>Hon. D.M. Jayaratne<br>Prime Minister and Minister of Buddhasasana and Religious Affairs |
| 6.55 p.m. | - | Address by Guest of Honour<br>Hon. M.K.A.D.S. Gunawardane<br>Deputy Minister, Ministry of Buddhasasana and Religious Affairs |
| 7.05 p.m. | - | Address<br>'Centhamil Arasu' Prof. K. Sivakumar, M.E., South India |
| 7.35 p.m. | - | Dance Drama - 'PANNUM BHARATHAMUM'<br>Smt. Vinosree Shangkar and Selvi Sri Varsheni Uma Shangkar<br>Padma Nrithyalaya Arts, Malaysia. |
| 8.00 p.m. | - | Vote of Thanks<br>Mrs. Hemalogini Kumaran<br>Assistant Director, Department of Hindu Religious and Cultural Affairs |

# PROGRAMME

20.07.2014

5.00 p.m. - Lighting the Oil Lamp

5.05 p.m. - Recital of Tiruvacakam
Thirumuraikalanithi Kalaimamani Thiruthani Swaminathan
South India
Violin: Dr. B. Pathrinarayanan
Mirudangam: Thiruvannamalai T. M. Sivakumar

6.05 p.m. - Welcome Address
Mr. M. Sanmuhanathan
Assistant Director, Department of Hindu Religious and Cultural Affairs

6.10 p.m. - Address by Chairperson
Vidvan Kalabhushanam Vasantha Vaithiyanathan

6.15 p.m. - Speech
Centhamil Arasu Prof. K. Sivakumar, M.E.
South India

6.45 p.m. - Speech by Chief Guest
Mr. M.K.B. Dissanayake
Secretary, Ministry of Buddhasasana and Religious Affairs


6.55 p.m. - Dance Drama - "'BHARATHA NRITHYAM'
Smt. Vinosree Shangkar and Selvi.Sri Varsheni Uma Shangkar
Padma Nrithyalaya Arts, Malaysia.

8.00 p.m. - Vote of Thanks
Mr. M.G.Kandeeban
Accountant, Department of Hindu Religious and Cultural Affairs

*You are cordially invited to attend the ceremony*

Department of Hindu Religious and Cultural Affairs
248-1/1, Galle Road
Colombo - 04

**Shanthi Navukarasan**
*Director*


அழைப்பிதழ்
"திருவாதவூரரும் சைவத்திருநெறியும்"
கலையரங்கம்
19.07.2014 – 20.07.2014
சரஸ்வதி மண்டபம், கொழும்பு 04
புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

## "திருவாதவூரரும் சைவத்திருநெறியும்"

கலையரங்கம்

### 19.07.2014 – சனிக்கிழமை

தலைமை
திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

பிரதம விருந்தினர்
கௌரவ டி. எம். ஜயரத்ன
பிரதமர் மற்றும் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்

கௌரவ விருந்தினர்
கௌரவ எம். கே. ஏ. டி. எஸ். குணவர்த்தன
பிரதி அமைச்சர், புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

### 20.07.2014 – ஞாயிற்றுக்கிழமை

தலைமை
வித்துவான், கலாபூஷணம்
வசந்தா வைத்தியநாதன்

பிரதம விருந்தினர்
திரு. எம். கே. பீ. திஸாநாயக்கா
செயலாளர், புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

# நிகழ்ச்சிகள்

19.07.2014

பி.ப 5.00 – மங்கல விளக்கேற்றல்

பி.ப 5.05 – திருவாசக இசை
திருமுறைக்கலாநிதி, கலைமாமணி, திருத்தணி சுவாமிநாதன், தென்னிந்தியா
வயலின்: டாக்டர் பி. பத்திரநாராயணன்
மிருதங்கம்: திருவண்ணாமலை ரி. எம். சிவகுமார்

பி.ப 6.05 – வரவேற்புரை
திரு. ஏ. உமாமகேஸ்வரன்
பிரதிப்பணிப்பாளர், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பி.ப 6.10 – அருளுரை
தவத்திரு பாலயோகி சுவாமிகள்
தலைவர், திருமுருகன் திருவாக்கு திருப்பீடம், மலேசியா.

பி.ப 6.15 – தலைமையுரை
திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பி.ப 6.20 – திணைக்களப் பதிப்புக்களின் வெளியீடு

- "மூவர் தமிழும் சைவநெறியும்"
(2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)
- "இந்துக்கலைக்களஞ்சியம்" – 12 ஆம் தொகுதி
- "திருமுருகாற்றுப்படை" ஆறுமுகநாவலர் உரை

பி.ப 6.30 – நூல் அறிமுகவுரை
பேராசிரியர் பழ.முத்துவீரப்பன்
முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம். தென்னிந்தியா.

பி.ப 6.45 – பிரதம விருந்தினர் உரை
கௌரவ டி. எம். ஜயரத்ன
பிரதமர் மற்றும் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்

பி.ப 6.55 – கௌரவ விருந்தினர்
கௌரவ எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன
பிரதி அமைச்சர், புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

பி.ப 7.05 – சிறப்பு சொற்பொழிவு
பேராசிரியர் கி. சிவகுமார், தென்னிந்தியா

பி.ப 7.35 – நாட்டிய நாடகம்
ஸ்ரீமதி வினோஸ்ரீ சங்கர் – ஸ்ரீவர்ஷினி உமாசங்கர்
பத்மா நிருத்தியாலய கலையகம், மலேசியா.

பி.ப 8.00 – நன்றியுரை
திருமதி ஹேமலோஜினி குமரன்
உதவிப்பணிப்பாளர், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

## நிகழ்ச்சிகள்

20.07.2014

பி.ப 5.00 – மங்கல விளக்கேற்றல்

பி.ப 5.05 – திருவாசக இசை
திருமுறைக்கலாநிதி, கலைமாமணி, திருத்தணி சுவாமிநாதன்,
தென்னிந்தியா

பி.ப 6.05 – வரவேற்புரை
திரு. ம. சண்முகநாதன்
உதவிப்பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

பி.ப 6.10 – தலைமையுரை
வித்துவான் கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன்
ஆன்மீக சொற்பொழிவாளர்

பி.ப 6.15 – சிறப்பு சொற்பொழிவு
பேராசிரியர் கி. சிவகுமார், தென்னிந்தியா

பி.ப 6.45 – பிரதம விருந்தினர் உரை
திரு. எம். கே. பீ. திஸாநாயக்கா
செயலாளர்
புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

பி.ப 6.55 – நாட்டிய நாடகம்
ஸ்ரீமதி வினோஸ்ரீ சங்கர்
ஸ்ரீவர்ஷினி உமாசங்கர்
பத்மாநிருத்தியாலய கலையகம், மலேசியா.

பி.ப 8.00 – நன்றியுரை
திரு. எம். ஜி. காண்டீபன்
கணக்காளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

**இவ் வைபவத்திற் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்!**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248, 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்

# திருவாதவூர் திருமறைந்தார் கோயில்






## மாணிக்கவாசகர் அவதார திருத்தலம்

இங்கு கார்த்திகை மாதத்தில் மாணிக்கவாசகர் முன்னிலையில் சிவனுக்கு சங்காபிஷேகம் செய்யப்படுகிறது.



# திருவாதவூர் மாணிக்கவாசகர் கோயில்




## திருவாதவூர் மாணிக்கவாசகர் கோயில் -மூலமூர்த்தி




# திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில்



# ஆவுடையார் கோயில்







ஆவுடையார் கோயில் - மாணிக்கவாசகர் சிற்பம்





# சிதம்பரம்



## சிதம்பரம் - பொன்னம்பலம்







தமிழ்ச் சூழலில், இலக்கிய மரபிலும் சைவ சமய மரபிலும் பெரும் ஆளுமையாக விளங்குபவர் மாணிக்கவாசகர். 'தமிழ் பக்தியின் மொழி' என்று கருதப்படுவதற்கு முதன்மைக் காரணராக விளங்குபவர்; மொழியாலும் மதத்தாலும் வேறுபட்டவர்களைக்கூட தன் பக்திச் சுவை மிகுந்த பாக்களால் ஆகர்சித்தவர். அவர் பாடியருளிய பக்திப் பனுவல்கள் திருவாசகம் என்ற தொகை நூலாக அமைவுபெற்றுள்ளன. தமிழின் அகத்திணை மரபு தழுவியதான திருக்கோவையார் என்ற நூலும் அவரது படைப்பாகும். அவை இரண்டும் சைவத்திருமுறைத் தொகுதி பன்னிரண்டில் எட்டாவதாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் சைவ சமய மரபிலே சமயகுரவர் நால்வருள் ஒருவராகப் போற்றப் பெறுவர்; சைவஸ்தலங்களுள் 'கோவில்' என்று சிறப்பிக்கப்படுவதான சிதம்பரத்தோடும் இந்துக் கலைமரபின் கொடுமுடியான நடராஜ மூர்த்தத்தோடும் அத்தியந்த இயைபு பெற்றுவிட்டவர். சைவமரபில் கோவிற் கிரியைகளிலும் வீட்டுக்கிரியைகளிலும் அவருடைய பாக்கள் இன்றியமையா அங்கமாகிவிட்டன. எளிமையும் ஓசை இனிமையும் அணிநலங்களும் கருத்தாளமும் நுண்ணிய உணர்ச்சி வெளிப்பாடும் உடையனவான அவரின் பாக்கள் 'திருவாசகம்' எனவும் 'மணிவாசகம்' எனவும் போற்றப்பெறுவன.

'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.'

ISBN 9789559233350

9 789559 233350

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011 2330195